கொக்குவில் நம் ஊர்

உ

கொக்குவில் நம் ஊர்

ஆக்கம்:
கொக்குவில் த. செ. நடராசா
கொக்குவில் சு. நா. பாலகுமார்

விவேகா பதிப்பகம்
1911 கெனடி வீதி இல 100
ஸ்காபரோ ஒன்ராரியோ
கனடா

நூற் குறிப்பு

நூல்: கொக்குவில் நம் ஊர்

மொழி: தமிழ்

பக்கம்: 195

வெளியீடு: விவேகா பதிப்பகம்
1911 Kennedy Road, Scarborough, ON Canada

ஆக்கம்: த. செ. நடராசா
சு. நா. பாலகுமார்

முகப்பு ஓவியம்: விவேகா அச்சகம்

அச்சமைப்பு: நா. பாலகுமார், சாந்தினி பாலகுமார்

அச்சுப்பதிப்பு: விவேகா அச்சகம்

முதற் பதிப்பு: 2009

உள்ளே

	பக்கம
சமர்ப்பணம்	5
விநாயக வணக்கம்	6
அணிந்துரை	7
மதிப்புரை	9
சிறப்புரை	12
தகவுரை (An Appreciation)	18
முன்னுரை	20

இயல் -1-

கொக்குவில் மண்ணின் அமைவிடமும், சிறப்பியல்புகளும்	23

இயல் -2-

கொக்குவில் ஊரின் சான்றோர்கள்.	29

இயல் -3-

வணக்கத் தலங்களும் அவற்றின் வளர்ச்சியும்

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்*	39
காட்டுப்புலம் முருகமூர்த்தி கோயில்	54
மாத்தனை கந்தசுவாமி கோயில்	59
நந்தாவில் கற்புலத்து ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம்*	65
பொற்பதி அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயம்	71
கோணாவளை ஞான வைரவசுவாமி ஆலயம்	75
ஸ்ரீ சாயிதுர்க்கா ஆலயம்	79
தலையாழி ஸ்ரீ ஞானவைரவசுவாமி ஆலயம்	82
மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்*	89
வீரமா பிடாரி அம்பாள் ஆலயம்*	93
ஸ்ரீ வராகி அம்பாள் ஆலயம்*	100
சொர்ண சித்தி விநாயகர் ஆலயம்	105
மணியர்பதி முருகன் ஆலயம்	108
முதலி கந்தசுவாமி கோயில்	111
வேம்படி முருகமூர்த்தி கோயில்	114
கொக்குவில் பரிசுத்த திரித்துவ ஆலயம்*	116

இயல் -4-

பக்கம

கல்விக்கூடங்களும் அவற்றின் வளர்ச்சியும்

கொக்குவில் இந்துக் கல்லூரி*	122
தொழில்நுட்பக் கல்லூரி, கொக்குவில், யாழ்ப்பாணம்.	154
கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை	156
ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை	158
ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை	161
நாமகள் வித்தியாசாலை	164
ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அறநெறிப்பாடசாலை	166
C.C.T.M. தமிழ்க் கலவன் பாடசாலை*	168

இயல் -5-

சனசமூக நிலையங்களும் அவற்றின் வளர்ச்சியும்

மனோன்மணி சனசக நிலையம்	170
சனசமூக நிலையம் - பிரம்படி	173
கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம்	177
கொக்குவில் மத்திய சனசமூக நிலையம்	179
பொற்பதி சனசமூக நிலையம்	185
வளர்மதி முன்னேற்றக் கழகமும், சனசமூக நிலையமும்	187

*உடுக்குறியிடப்பட்ட ஆலயங்கள், கல்விக்கூடங்களின் படங்களை நூலின் இறுதியில் காண்க.

உ

சமர்ப்பணம்



நம் ஊரின் ஆன்மீகத் தலங்களுள் நடுநாயகமாக விளங்கும் புதுக்கோவில் கிருபாகர சிவசுப்பிரமணியப் பெருமான் பொன்னார் திருவடிகளுக்கு.

உ

விநாயக வணக்கம்

சித்தி விநாயகனே தேவேகொக் கூர்வாழும்
அத்தி முகனே அருமருந்தே - முத்திமுதல்
தெள்ளு தமிழ்தருவாய் தேர்வார் திறத்துதிக்கும்
வள்ளலே யென்மனத்து வந்து.

- கொக்குவில் சித்திவிநாயகர் இரட்டை மணிமாலை -

ஒளிரு மொருமா முகத்தானை
யொற்றைத் தந்த முடையானை
யோங்கா ரத்துப் பொருளானை
யொப்பு முயர்வு மில்லானை
வளரும் பேழை வயிற்றானை
வயங்கு புயநான் குடையானை
வலிய கோடு மங்குசமும்
வலக்கை யிரண்டில் வைத்தானை
முளிரிக் கரங்க ளிரண்டகத்து
மோதகம் பாசம் வைத்தானை
மூத்த பிள்ளை யெனவழங்கும்
முக்கண் ணானை முழுமுதலைக்
குளிரும் வயல்சூழ் கொக்கூரிற்
குமரக் கோட்டத் துள்ளுறையுங்
குணேசன் சித்தி விநாயகனைக்
கும்பிட் டென்றுந் தொழுவோமே.

-கொக்கூர்ச் சித்தி விநாயகர் தோத்திர பஞ்சகம்-

உ

சிவமயம்

அணிந்துரை

பேரறிஞர் முருகவே. பரமநாதன்

"சரித்திரத் தேர்ச்சிகொள்"

- பாரதி

வில்வளைவான அமைப்புடைமையாற் குளங்களோடு சேர்ந்த பல தமிழ்ப் பெயர்கள் ஊர்ப்பெயராயின. பொத்துவில், தம்பிலுவில், கொக்குவில், கோண்டாவில், நந்தாவில், இணுவில், மல்வில், மந்துவில் இன்னும் பல இதற்கு உதாரணமாகும். செழிப்பான கியாதி நிறைந்த வரலாற்றுப்புகழ் வாய்ந்த யாழ்ப்பாணக்குடா நாட்டிலமைந்த புகழ்பூத்த ஒரு ஊர் கொக்குவில். கொக்கு ஒரு பறவை, ஒரு பூமரம், குதிரை, மாமரம் என்றெல்லாம் பொருள்படும். முத்துக்குமாரசுவாமிக் கவிராயரின் நாமாந்தரிதைப் பாடலில் "முடிவிலாதுறை சுன்னாகத்தான் வழிமுந்தித் தாவடிக் கொக்குவில்மீதுவர" என்ற தொடர் பொருள் பதிந்த பிரயோகமாகும். காலத்தின் கட்டாயம் ஈழத் தமிழினம் இடம்பெயர்ந்து சேய்மைக்குப் போயினர். அவை சீமைகளாயின. வடஅமெரிக்காவின் கனேடிய நாட்டிற் பல்துறை சார்ந்த தமிழர்கள் வந்து சேர்ந்தனர். அவர்கள் தாம்பிறந்த மண்ணை நேசிப்பவர்கள். பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தன. தாய்த் தமிழ்நாட்டின் மவுசைப் பாரதி பல பார்வையிற் பாடியுள்ளார்.

இந்நோக்கிலே கனடாத் தமிழர்கள் தத்தம் கிராமங்களின் வரலாற்றைப் பொன்னெழுத்துக்களிற் பொறித்துள்ளனர். கொக்குவிலின் மைந்தன் த.செ. நடராசா அவர்கள் நேர்த்தியான வரலாற்று நூலொன்றைப் படைத்துள்ளார். கொக்குவிலின் வரலாற்றுச் சிறப்பு, பூகோள அமைப்பு, மண்ணிற்றவழ்ந்த மாமனிதர்கள், கற்றுவல்லார்கள், கவிஞர்கள், ஆலயங்கள், கல்வி நிலையங்கள், பொதுப்பணி மன்றங்கள், சமூகசேவை நிலையங்கள், அறநெறிப்பாடசாலைகள், விளையாட்டுமன்றங்கள் என்ற பன்முகப் பார்வையில் செந்தமிழாக இந்நூலைத் தந்துள்ளார். இதை ஆற, அமர இருந்து படிக்கும்போது "சாம்பியன் ஒழுங்கை", "ஆடியபாதம் வீதி" போன்ற பெயர்க் காரணங்கள் அங்கே ஆராயப்பட்டுள்ளமை ஆக்கியோரின் ஆன்றவிந்தடங்கிய கொள்கையைப் புலப்படுத்துகின்றது. கிறீத்துவஆலய வரலாற்றை

இலண்டனிலிருந்து பெற்றிருக்கிறார். தன்னோடு அமையாது சு.நா. பாலகுமார் அவர்களின் ஆலோசனைகளையும் பகிர்ந்து கொண்டமையோடு நூலின் எழுத்தமைப்பையும் அவர்மூலம் நிறைவேற்றிக் கொண்டுள்ளார். ஆசிரியரின் பரந்த மனப்பான்மை போற்றற்குரியது. ஈற்றிலே நூலாக்கத்துக்குத் தேவையான தரவுகளை யார்யார் தந்துதவினார்கள் என்பதையும் நன்றியுணர்வோடு சுட்டிக் காட்டி உள்ளார்கள். இவ்விருவரின் முயற்சி போற்றத்தக்கது.

கொக்குவில் பற்றிய நிறைவான ஆவணப்படுத்தும் தொகுப்பாக இந்நூல் விளங்குகின்றது. இவர்களின் பேசும் பேனாவின் தொழிற்பாடு வளரட்டும் என வாழ்த்தியமையும்

ஆழ்கடலான் முருகவே. பரமநாதன்.
"பாரதிகுடிசை"
வல்லிபுரம், புலோலி.
06.06.2009

மதிப்புரை

பேராசிரியர் இளையதம்பி பாலசுந்தரம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - கனடா வளாகம்

ஈழத் தமிழ் மக்கள் தாயக உணர்வோடு மிக உன்னிப்பாகச் செயற்படும் காலக்கட்டத்தில் அங்குள்ள ஓர் ஊர் பற்றிய நூல் வெளிவருவது காலத்தின் தேவையாகிறது. 2002 ஆம் ஆண்டில் நான் கனடாவில் வெளியிட்ட 'ஈழத்து இடப்பெயர் ஆய்வு- யாழ்ப்பாண மாவட்டம்' என்ற நூலிலே ஒவ்வொரு கிராமம் பற்றியும் தனித்தனி நூல் வெளிவர வேண்டும் என்ற கருத்தினைக் குறிப்பிட்டிருந்தேன் அதன் பின்னணியில் பல முயற்சிகள் செயல் வடிவம் பெற்றுவருகின்றன. அந்த வரிசையில் ''கொக்குவில் நம் ஊர் '' என்ற நூல் வெளிவருதல் பாராட்டத்தக்கதாகும்.

ஓர் இனத்தினதும் அந்த இனம் வாழ்ந்த இடத்தினதும் வரலாற்று நூல்கள் மிக முக்கியமானவை என்பதை இப்போது ஈழத் தமிழர்கள் எதிர்கொள்ளும் அரசியல் சிக்கல்கள் நன்கு உணர்த்தியுள்ளன. ஒரு நாட்டின் அரசியல், பொருளியல், சமயம், பண்பாடு, மற்றும் வரலாற்று நிகழ்வுகள் முதலான பல்வேறு விடயங்களையும் உள்ளடக்கியதாகவே ஊர்ப்பெயர்களின் வரலாறு அமைந்திருக்கிறது. எனவே ஈழத்தமிழரின் பூர்வீக வரலாற்றை அறிந்துகொள்வதற்குத் துணையாக ஊர்ப்பெயர் வரலாறும் அமைந்திருப்பதால் அதுபற்றிய ஆய்வுகளும் நூல்வெளியீடுகளும் இடம்பெற வேண்டியது அவசியமாகின்றது.

திருவாளர்கள் த.செ. நடராசா, சு.நா. பாலகுமார் ஆகிய இருவரது கூட்டு முயற்சியினால் எழுதப்பட்டுள்ள 'கொக்குவில் நம் ஊர் '' என்ற நூல் கொக்குவில் பதியின் சமூக, சமய, பண்பாட்டு வரலாற்றை ஆவணப்படுத்தும் ஒரு பதிவேடாக விளங்குகிறது. இந்நூலை எழுதுவதற்கு அவர்கள் அரிதில் முயன்று பல்வேறுபட்ட தரவுகளைத் திரட்டி ஆவணமாகத் தந்துள்ளமை பாராட்டுதலுக்குரியதாகும். இந்நூலினை அவர்கள் ஐந்து பகுதிகளாக வகுத்துள்ளனர். முதலில் ஊரின் அமைவிடம் அதன் உட்பிரிவுகள் என்பன விளக்கப்படுகின்றன. அடுத்து அவ்வூரிற் பிறந்த சான்றோர்கள் பற்றிய குறிப்புகள் திரட்டித் தரப்பட்டுள்ளன. மூன்றாவதாக அவ்வூரில் அமைந்துள்ள ஆலயங்கள் பற்றிய செய்திகள் மிக விபரமாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அடுத்ததாக

அங்குள்ள கல்விக்கூடங்களும் இறுதியாக அவ்வூரிலுள்ள சனசமூக நிலையங்கள், அவற்றினுடைய செயற்பாடுகள் என்பன பற்றிய செய்திகளும் சேகரித்து எழுதப்பட்டுள்ளன.

கொக்கு + வில் = கொக்குவில். கொக்குவிலின் வடக்கே நந்தாவில் என்ற பெருங்குளம் ஒன்று அமைந்துள்ளது. இக்குளத்தில் நிறைந்து காணப்பட்ட கொக்குகள் இவ்வூர்ச் சோலைகளிலும் தங்கியமையால் கொக்குவில் எனப் பெயர் பெற்றது எனக் கொள்ளுதல் பொருந்தும். கொக்குவிலின் அயற்பதியாக ஆனைக்கோட்டை அமைந்துள்ளது. கொக்கு என்பதற்குக் குதிரை என்ற பொருளுமுண்டு. அவ்வகையில் கொக்குவில் பதியுடன் குதிரையைத் தொடர்புபடுத்தலாமோ என்பதும் ஆய்வுக்குரியது. இக்குளத்தின் அருகே நல்லூர் அரசனின் குதிரைப்படைத் தளம் அமைந்துமிருக்கலாம். இது தொடர்பாக ஆ. முத்தத்தம்பிப்பிள்ளை 'யாழ்ப்பாணச் சரித்திரம் -(1933) என்ற நூலிலே,

> "யாழ்ப்பாணக் குடியேற்றம் ஏற்பட்டபோது நல்லூரை அடைந்த இராசகுமாரன் யானைப் பந்தி - குதிரைப் பந்திகளும், யானை, குதிரை ஏற்றச்சவாரி வீதிகளும் செய்வித்து நல்லூரைச் சிறந்த அரசாக்கினான்."

எனக் குறிப்பிட்டிருப்பதும் நோக்கத்தக்கது. இதனை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது, நல்லூரில் ஆனைப்பந்தி என்ற இடம் அமைந்திருப்பது போன்று, நல்லூருக்கு அயலிலுள்ள கொக்குவிலில் குதிரைப் பந்தி அந்நாளில் அமைந்திருக்கலாம் எனவும் எண்ணத் தோன்றுகிறது. மேலும் கொக்குவிலில் வழங்கும் சில குறிச்சிப்பெயர்கள், காணிப் பெயர்கள் சிலவற்றிற் குறிப்பாக, தலையாளி, காலிங்கராயன்புலம், பத்தினிசீமா, ஆனைவிழுந்தான், கொற்றாவத்தை, நல்லாயன்அடைப்பு முதலான பெயர்களின் பின்னிலையிலுள்ள வரலாற்றுச் செய்திகளும் ஆராய்ந்து அறியத்தக்கனவாகும். (இ. பாலசுந்தரம் 'ஈழத்து இடப்பெயர் ஆய்வு - யாழ்ப்பாண மாவட்டம்' - 2002 பக்.104-106).

இந்நூலில் கொக்குவில் பற்றித் தொகுத்துத் தரப்பட்டுள்ள பல்வேறுபட்ட செய்திகள் புலம்பெயர்ந்து வாழும் அவ்வூர் மக்களுக்கே வியப்பைத் தரத்தக்கவகையில் அமைந்துள்ளன. நூலாசிரியர்கள் இருவரும் மிக அரிதில் முயன்று பல்வேறு நிலைகளில் தரவுகளைச் சேகரித்து, அவை காலத்தால் அழிந்து போகாமல்

அவற்றுக்கு எழுத்து வடிவம் கொடுத்துள்ளனர். எதிர்காலச் சந்ததியினரும் இவ்வூர் பற்றி அறிந்து கொள்ளத்தக்க ஓர் ஆவணமாக இந்நூல் விளங்கும் என நம்புகின்றேன். இந்நூல் ஈழத் தமிழர் இல்லங்களில் இடம்பெற வேண்டிய ஒன்றாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே நானும் மனைவியும் பணியாற்றிய காலத்தில் கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள கோணாவளை வீதியில் சுமார் பத்து ஆண்டுகள் வாழ்ந்தோம். அதனால் கொக்குவில் ஊரைப்பற்றி நன்கு அறியக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவ்வூரைப்பற்றி நன்கு அறிந்திருந்த நிலையில் இந்நூலுக்கு மதிப்புரை வழங்குவதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

கலாநிதி. இ. பாலசுந்தரம்
ரொறன்ரோ,
ஜூலாய் 05,.2009

உ

சிறப்புரை

பொ.கனகசபாபதி
முன்னாள் அதிபர் மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை,
யாழ்ப்பாணம்

“கொக்குவில் நம் ஊர்” என்ற நூலினை எழுதிய திரு த. செ நடராசா மற்றும் திரு.சு. நா. பாலகுமார் இருவரும் என்னிடம் நூலினைத் தந்து ‘வாசித்துப் பாருங்கள்’ என்றார்கள். ‘கரும்பு தின்னக் கூலியா’ என்றேன். ‘நீங்கள் ஒரு சிறப்புரை தரவும் வேண்டும்’ என்றார்கள். இதற்கெல்லாம் நான் அருகதை அற்றவன் ஊரும் பேரும் பற்றி விஸ்தாரமாக ஆய்வு நடத்துபவர் பேராசிரியர் பாலசுந்தரம். அவரிடம் போங்களேன் என்றேன். ‘அவரும் தருவதாகக் கூறியுள்ளார்கள்’ என்றார்கள். கொஞ்சம் நிம்மதி. கொஞ்சம் எழுதத் துணிவு.

ஏனைய ஊர்களிலும் பார்க்க எனது இளமைப் பருவம் தொட்டே கொக்குவில் எனக்குப் பரிச்சயமான ஊராகிவிட்டது, ரகுநாதையர் பஞ்சாங்கம் நமது வீட்டின் அத்தியாவசியமான தேவை. இளமைப் பிராயத்தில் வருடாவருடம் அது என்கண்ணில் பட்டதும் முதலில் நான் அதில் பார்ப்பது ஆதாய கந்தாயம். அடுத்து 10 எண்களைக் கொண்ட பெட்டியில் தொட்டுப் பார்த்து இலாப நட்டம். மூன்றாவது இடையிடையே பல்லி சொற் பலன். ஓலை வீடு என்பதால் பல்லிக்குப் பஞ்சமில்லை. இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் கொக்குவிலைப் பற்றி எனக்கு அறிமுகம் செய்து வைத்தது. ஆனால் அந்தப் பெருமகன் தமது சொந்த மனையினை “சோதிட பரிபாலன மடம்” என ஆக்கியதுடன் தான் தேடிய தனங்கள் யாவற்றினையும் அம்மடத்திற்கு ‘ஞாலம் உள்ள அளவு சோதிடம் நிலைத்து நிற்க’ தருமசாதனமாக்கி வழங்கியுள்ளதை இந்த நூலினை வாசித்தே தெரிந்து கொள்ள முடிந்தது.

அடுத்து எனது சகோதரி கொக்குவிலில் திருமணம் செய்தமையால் நான் அங்கு வார இறுதி நாட்களில் செல்லும் பொழுது கொக்குவில் பற்றியும் அங்கே உள்ள பிரபலங்கள் பற்றியும் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. “ கனகலிங்கம் சுருட்டு” எல்லா இடமும் பேசப்படும் விசேட சுருட்டு. அது தவிர செல்லையா அரிசி குத்தும் ஆலை, ஓவர்சியர் இராசதுரை மாத்திரமல்லாமல் குளப்பிட்டி சாத்திரியார் - ‘பூனைக்குட்டிச் சாத்திரியார்’ ஆனவிதம்

பற்றி என் மாமா சொல்லுவார். எல்லாவற்றுக்கும் மேலாக அந்தக் காலத்திலே குளப்பிட்டிச் சந்தியில் உள்ள தேனீர்ச் சாலை பற்றியே எல்லோரும் பேசுவார்கள். மலிவான விலையில் தரமான பண்டங்கள் பெறமுடியும். நியாயமும் நேர்மையும் தருமசிந்தையுமுடைய ஒருவர் நிர்வகித்து வந்தார்.

நந்தாவில் பச்சைப் பசேலென காய்கறித்தோட்டங்களுடன் கண்கவர் காட்சியாகவும் பலசமயங்களில் மழைக்காலங்களில் சமுத்திரம் போன்றும் காட்சியளிப்பதையும் கண்டுள்ளேன். "நாடு விளைந்தால் நந்தாவில் விளையாது" என்பதன் அர்த்தம் புரிந்தது. பழங்காலத்தில் நந்தாவில் கொக்குவிலில் ஒரு பெரிய வாவியாகத் தான் இருந்துள்ளது. கொக்குகள் இருந்தமையால்தான் கொக்குவில் என்ற பெயர் பெற்றதாக இந்நூலாசிரியர்கள் சொல்கிறார்கள்.

பலாலி ஆசிரியகலாசாலை முதன் முதலில் தொடங்கியபோது அதன் அதிபராக விளங்கியவர் திரு சண்முகரத்தினம் அவர்கள். அவர் கொக்குவில் தந்த அற்புத மனிதர். எனது அண்ணர் அவரது அபிமான மாணவர். அவரையே கலாசாலையின் சிரேஷ்ட மாணவர் தலைவராக அதிபர் நியமித்தார் . அண்ணர் திரு சண்முகரத்தினம் பற்றி நிறையவே சொல்வார். அவரது கடமை உணர்வு, கற்பித்தல் பாங்கு மாணவர்களுடன் பழகும் பண்பு, கலாசாலையினை நடத்தும் முறை பற்றி அண்ணர் எடுத்துக் கூறியமையால் அவர்மேல் எனக்கு ஒரு பற்றுதலே ஏற்பட்டது எனலாம். எனக்கு ஆசிரியத் தொழில் புரிய வேண்டும் என்ற அவாவினை ஏற்படுத்துதற்கு அப்பெருமகனாரும் ஒரு உந்து விசையானார் என்றால் மிகையாகாது.

1952ம் ஆண்டினிலே நான் எனது பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்காக திருச்சி அர்ச். சூசையப்பர் கல்லூரியில் சேர்ந்தேன். மேற்படிப்புக்காக இந்தியா செல்வதா விடுவதா என்ற தீர்மானம் எடுப்பதில் காலம் கடத்தி விட்டமையால் கல்லூ ரி தொடங்கி ஒரு வாரத்தின் பின்னரே போய்ச் சேர்ந்தேன். கல்லூ ரியில் இடம் கொடுத்து விட்டார்கள் ஆனால் விடுதிச் சாலையில் இடமிருக்கவில்லை. அங்கேயும் கொக்குவில் தான் எனக்குக் கைகொடுத்தது. சண்முககுமரேசன் என்பவர் நான் தன்னுடன் தங்கலாமென எனது விடுதிச்சாலை பொறுப்பாளர் வண. பிதா செக்குவேராவிடம் கூறினார். நிம்மதியாக அறையுள் பிரவேசித்தேன். போன பின்னர்தான் தெரிந்தது அவர் வேறுயாருமல்லர் நான் பெருமதிப்பு வைத்துள்ள அதிபர் சண்முகரத்தினத்தின் மகன்தான் என்பது. நான் சிறுபிராயத்திலேயே கதைகள் வாசிக்கத் தொடங்கிவிட்டேன். ஆனால் இந்தியா செல்லும் வரை எனது ஆதர்ச எழுத்தாளர்களாக இருந்தவர்கள் கல்கி, தேவன், லக்ஷ்மி,

அனுத்தமா போன்றவர்களே. திரு. சண்முககுமரேசனின் அறை ஒரு குறு நூலகம். அங்கே மு.வ., கி.வா.ஜ, ரா.பி சேதுப்பிள்ளை,

தெ.பொ.மீ போன்ற தமிழ் அறிஞர்களின் நூல்கள் யாவும் காணப்பட்டன. எனக்கு ஒரு புதிய அனுபவம். அவை அத்தனையையும் என்னால் வாசிக்க முடிந்தது. எனது இலக்கிய தேட்டத்திற்கு புதியதொரு புலத்தினைக் காட்டியவர் திரு சண்முககுமரேசன் அவர்கள். அவர் ஆங்கிலம், தமிழ், வடமொழி ஆகிய மூன்று மொழிகளிலும் பட்டதாரியாகி யாழ் மத்திய கல்லூ ரியில் கல்வி கற்பித்தவர். ஆகவே இன்றைய எனது ஆளுமைக்கு கொக்குவில் ஒரு காரணமாயது என்பதில் பெருமை கொள்கிறேன்.

அக்குடும்பத்தவர் கொக்குவில் மாத்தனை கந்தசாமி கோவிலுடன் சம்பந்தப் பட்டவர்கள் என இந்நூலில் இருந்து அறிய முடிகிறது. 1950ல் நடைபெற்ற முத்துக்குமாரசாமி சந்நிதி பிரதிஷ்டை திருமதி சண்முகரத்தினம் குடும்பத்தினராலும் 2000 ஆண்டில் நடைபெற்ற இராஜஇராஜேஸ்வரி அம்பாள் சந்நிதி பிரதிஷ்டை திரு சண்முககுமரேசன் குடும்பத்தினராலும் செய்யப் பட்டவை என்பதை அறிய முடிகிறது.

2004 ல் நான் தாயகம் சென்றிருந்தேன் மிக்க ஆவலுடன் எனது புக்ககத்தைப் பார்க்க விளைந்தேன். தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தருகே அமைந்த இராணுவ அதிகாரியிடம் அனுமதி பெற்று சிப்பாய் ஒருவர் என்னுடன் துணைவர என்புக்ககம் பார்க்கச் சென்றேன். அதன் கோலம் முற்றாகவே மாறி இருந்தது. மக்கள் வாசம் இல்லை. ஆங்காங்கே இராணுவமும் பொலிசாரும் குடும்ப சமேதராக வாழ்ந்தனர். எனது இல்லத்தின் எல்லைச் சுவர் இடித்து விழுத்தப் பட்டு முட்கம்பிச் சுருள்களால் எல்லை போடப் பட்டிருந்தது. அதற்கு அப்பால் ஒருவரும் செல்லமுடியாது. என்றார்கள். “எட்ட நின்று, எட்டிப் பார்” என்றார்கள். எட்டிப் பார்த்தேன், எட்டி எட்டிப் பார்த்தேன். எதனைப் பார்ப்பது? எனது குடில் இருந்தாத்தானே பார்ப்பதற்கு. அது இருந்ததற்கான அறிகுறியே தெரியவில்லை ! தரைமட்டம். அது போகட்டும் எனது பிறந்தகத்தையாவது பார்த்துப் பூரிக்கலாம் என எண்ணி சண்டிலிப்பாய் சென்றேன். கிராமத்தில் சன ஊடாட்டம் இருந்தது. எனது வீடும் பாதுகாப்பாக இருந்தது. வீடு எப்படி இருக்கிறது எனப் பார்க்கலாம் என வீடு நோக்கி ஓடினேன். என்ன கொடுமை! என் வீட்டில் வசிப்பவர்களுக்கு நான் யார் என்பதே தெரியவிலை. புக்ககத்தில் என்வீட்டைக் கண்டுகொள்ள முடியவில்லை. பிறந்தகத்திலோ என் வீட்டில் வசிப்பவர்கள் என்னையே கண்டுகொள்ளவில்லை. அவர்கள் வேறொரு கிராமத்திலிருந்து புலம் பெயர்ந்து அங்கே வந்து வாழ்கின்றனர்.

இந்த அனுபவம் எனக்கு மாத்திரமல்ல உங்களிற் பலருக்கு ஏற்பட்டிருக்கலாம் ஏற்படலாம். "கல்லெறி கண்டு பலதிசை பறந்திடும் புள்ளினம் போல்" எம் மண்ணின் மக்களும் புலம் பெயர்ந்து, பிரித்தானியா, கனடா, டென்மார்க்,பிரான்ஸ்,சுவிஸ், சுவீடன், ஜெர்மனி, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர் போன்ற உலகின் பல்வேறு நாடுகளுக்கும் சென்று வாழ்ந்து வருகிறார்கள். அந்த நாடுகளே இன்று இவர்களுக்கு சொந்த இடமாகிவிட்டன எனினும் இவர்களால் தாம் பிறந்த தாய் மண்ணின் இனிய நினைவுகளை மறந்திட முடியுமா? என்கிறார்கள் நூலாசிரியர்கள். அந்த ஈர்ப்பினால் தாய் மண்ணில் காலடி வைக்கும் நமக்கு ஏற்படும் கோலம் தான் நான் கூறியது. எமது தாய்மண்ணின் பெருமை அதன் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களின் பங்காற்றல் பற்றி இங்கு வாழும் எமது அடுத்தடுத்த தலைமுறையினரும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அங்கே வாழ்கின்றவர்களோ அதற்கு அந்நியர்கள் வேறு வேறு இடங்களில் இருந்து வந்து வாழ்கின்றவர்கள் .ஆகவே அவர்களுக்கும் பெரிதாகத் தெரிந்து கொள்ளும் பாக்கியமில்லை. ஏதாயினும் சிறிதளவிலே, அங்கே அருகில் உள்ளவர்கள் தொடர்ந்து வாழ்பவர்களாயிருந்தால் அவர்களிடமிருந்து சிறிதளவு தெரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

எனவே, இத்தகைய நூல்கள் மிகவும் அவசியமானவை என்றே நான் கருதுகிறேன். அதற்காக நான் திரு. நடராசா அவர்களையும் திரு பாலகுமாரன் அவர்களையும் பாராட்டுகிறேன். இத்தகைய எண்ணம் அவர்கள் மனதில் தோன்றியமைக்காகப் போற்றுகிறேன்.

கொக்குவில் ஒரு கிராமமும் அல்ல நகரமும் அல்ல யாழப்பாண நகரத்தின் எல்லைப் புறத்திலே அமைந்தமையால் நகரத்தின் சில இயல்புகளும் கிராமத்தின் வேறு சில இயல்புகளும் கொண்ட கலவை ஊர். பட்டினத்தின் வசதிகளும் கிராமத்தின் எளிமையும் கொண்ட ஒரு புறநகர். ஊரின் ஊடாக மேற்குப் புறத்திலே காங்கேசந்துறை யாழப்பாண வீதியால் பேருந்துகள் ஓடுகின்றன. மிகவும் சுலபமாக எங்கும் போக முடியும். கிழக்குப் புறத்தே யாழ்ப்பாணம் கொழும்பு செல்லும் புகைவண்டிப்பாதை, கொக்குவிலில் தரிக்கும் இடம். இலங்கை எங்கும் போகக் கூடிய வசதி. கொக்குவில் இந்துக் கல்லூரி நகரத்துப் பாடசாலைகள் எல்லாவற்றுடனும் போட்டிபோட்டு கல்வி, விளையாட்டு, கல்விக்குப் புறம்பான கலைகள் என வாரி வழங்கி வருகிறது . எல்லாவற்றிற்கும் மேலாக வேறு எங்குமே காணமுடியாத தனிச் சிறப்பு கொக்குவிலில் உள்ள கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி. அது பல ஊர் மாணவர்களையும் கொக்குவிலுக்கு வரவழைக்கிறது. தொழிற்றுறைக்

கல்வி வழங்கி அவர்கள் தொழில் பெறக் கூடிய தகமையைக் கொடுத்து வருங்காலத்துக்கான உத்தரவாதத்தினை அளிக்கிறது. வேறு என்ன வேண்டும் கொக்குவில் வளம்பெற? ஆன்ம வளர்ச்சிக்கென எத்தனை ஆலயங்கள், அறிவு வளர்ச்சிக்கென எத்தனை சனசமூக நியைங்கள். மொத்தமாகப் 15 சைவ ஆலயங்களும் ஒரு கிறிஸ்தவ ஆலயமும் (Holy Trinity Church) கொக்குவிலில் உள்ளதாக ஆசிரியர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள். முருகனுக்கான ஆலயங்களின் எண்ணிக்கை ஏழு. விநாயகர் ஆலயம் இரண்டு, வைரவர் ஆலயம் இரண்டு துர்க்கா ஆலயம் ஒன்று வராகி அம்பாள் ஆலயம் ஒன்று மனோன்மணி அம்பாள் ஆலயம் ஒன்று. அவற்றுடன் பிடாரி அம்பாள் ஆலயம் ஒன்றும் உள்ளதை அறிய முடிகிறது. இவை எல்லாவற்றினது தோற்றம் வளர்ச்சி, பராமரிப்பு, புனரமைப்பு, நிர்வாகம், உற்சவங்கள் அவற்றின் உபயகாரர்கள் என அத்தனை விபரங்களையும் அவற்றுடன் சம்பந்தப் பட்டவர்கள் பற்றிய விபரங்கள் இந்நூலினிற்காண முடிகிறது. இச் சீரிய தொண்டினைச் செய்வதற்கு எத்தனை கடின உழைப்பினை எத்தனை மனித மணித்தியாலங்களை இந்நூல் ஆசிரியர்கள் செலவிட்டிருப்பார்கள். ஆலயங்களில் மூன்று ஆலயங்கள் பற்றிக் குறிப்பிட்டே ஆகவேண்டும். சேரன் செங்குட்டுவனது வெற்றிவிழாவில் பங்குபற்றிய இலங்கை மன்னன் கஜபாகு பரிசாகப் பெற்ற கண்ணகி சிலையினை இலங்கைக்கு எடுத்து வந்தபோது அதனை வைத்து வணங்கப்பட்ட இடங்களில் கொக்குவிலின் கற்புலமும் ஒன்று என்கிறார்கள் ஆசிரியர்கள். அங்கே வைத்து வணங்கப் பட்ட கண்ணகி ஆலயமே இப்பொழுது மனோன்மணி ஆலயம் என அழைக்கப்படுகிறது என்கிறார்கள். கஜபாகுவால் கொண்டு வரப்பட்ட கண்ணகி சிலை எனது ஊரில் வைக்கப் பட்ட இடம் அங்கணாக்கடவை. அது கண்ணகி அம்மன் கோவிலாக உள்ளது.

சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி குடியமர்த்திய முதலியார் கொண்டு வந்த போர்த் தெய்வமே பிடாரி என அறிய முடிகிறது. அதனை பாதுகாத்து அந்த ஆலயத்தை பராமரிப்பதற்காக எடுத்த முயற்சிகள் சுவாரஸ்யமான கதை போல உள்ளன. அன்னை பராசக்தியின் திருக்கோலங்களில் ஒன்றில் அருள்பாலிப்பதே வராகி அம்பாள் ஆலயம். இந்நூலாசிரியர்கள் ஆலயங்கள் பற்றி எழுதுகின்ற பொழுது அவைபற்றி ஈழத்தும், தமிழகத்தும் தமிழ்ச் சான்றோர், எழுதிய பாடல்களையும், தேவார, புராணங்களிலிருந்தும் உகந்த பாடல்களையும் எடுத்துத் தந்துள்ளமை நூலின் தனிச் சிறப்பாக அமைகிறது. ஒரேயொரு கிறிஸ்தவ ஆலயமான Holy Trinity Chuch பற்றிய விபரமும், ஆரம்பத்தில் அந்த ஆலயத்தின் நிர்வாகம்

நடத்திய பாடசாலைகள் பற்றிய விபரமும் தரப்பட்டதுடன் ஆங்கே போதகர்களாகப் பணியாற்றிய அத்தனை பேர்களின் பெயர்களும் தரப் பட்டுள்ளன.

பாடசாலைகளைப் பொறுத்த மட்டிலே கொக்குவில் இந்தக் கல்லூரி தவிர ஐந்து ஆரம்பப் பாடசாலைகளும் உள்ளன. அவற்றில் ராமகிருஷ்ணா வித்தியாசாலை 1938ஆம் ஆண்டினிலே சுவாமி விபுலாநந்தர் அவர்களால் திறந்து வைக்கப் பட்டது. கொக்குவில் இந்துக் கல்லூரி பற்றிய விபரம் பெரும் அளவில் தரப்பட்டுள்ளது 2010 அக் கல்லூரி நூற்றாண்டினைக் கொண்டாடவுள்ள சமயத்திலே அது பற்றிய விபரமான குறிப்பினை வெளிநாடுகளிலே வாழ்கின்ற பழையமாணவர் மற்றும் ஏனையோரும் வரவேற்பார்கள். நூலாசிரியர்களுக்கு நன்றி. ஒரு ஊரினது முன்னேற்றம் அங்கு வாழும் குடி மக்களது தேவைகளை நிறைவு செய்வதில் தான் தங்கியுள்ளது. கொக்குவில் ஓரளவிற்குத் தன்னிறைவு பெற்ற ஊரெனலாம். அங்கு வாழும் மக்கள் உலகில் நடக்கும் சம்பவங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும், குடத்துள் விளக்குகளாக இருக்கப்படாது என்ற நோக்கிலே ஆங்காங்கே ஆறு சனசமூக நிலையங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. இந்நூல் ஆசிரியர்கள் அவை ஒவ்வொன்றினைப் பற்றியும் குறிக்கோள், நிர்வகிப்போர், வளர்ச்சிக்குக் காரணமானவர்கள், ஆற்றும் பணிகள், அமைந்த இடங்கள் என எல்லா விபரங்களையும் விவரமாகத் தந்துளார்கள்.

ஆசிரியர்கள் இன்றைய தலைமுறையினர் மாத்திரமல்லாமல் அடுத்த அடுத்த தலைமுறையினரின் நன்றிக்கும் பாராட்டுக்கும் பாத்திரர்களாவார்கள். இத்தகைய சீரிய முயற்சி ஏனைய கிராமத்து மக்களும் அவசியமாகச் செய்யவேண்டும் என்பதே எனது அபிப்பிராயம். இவர்களது செயற்பாடு ஏனையவர்களுக்கு முன்னோடியாக அமையும் என்பது எனது நம்பிக்கை. நூலாசிரியர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

அன்புடன்
பொ.கனகசபாபதி.
26.06.2009.

தகவுரை

An Appreciation

Mrs. Sukirthalakshmy Supramaniam
(Former Vice-Principal, Kokuvil Hindu College)

The book "KOKUVIL NAMMUR" is a priceless possession for those who have it and provides a wealth of information about the village for those who read it. One feels proud and happy to be a Kokuvilite.

The authors of this book, Mr. Sellathurai Nadarajah and Mr. Nagalingam Balakumar have put in a tremendous effort and devoted a lot of their precious time to gather information and collect facts about their village in all its aspects – the location, places of worship, schools, community centres and the great men who contributed to the greatness and richness of the village. **This book is a homage to the great men, a gift to the younger generation who are not born in Kokuvil nor have ever been there and seen it themselves. Reading this book will surely kindle in them a desire to see and enjoy the happy and free life there and know about their roots.** Those who have lived there will relive their pleasant and golden memories. As a Kokuvilite everyone must know about this village, how their parents, grand parents and ancestors lived there and contributed to the prosperity of Kokuvil.

In early days education was the privilege of only a few. There were a few small schools and the people were more inclined to farming and engaging themselves in cottage industries such as cigar-rolling, basket and mat weaving etc. A few great men in Kokuvil felt the need to educate the children and hence built schools. Kokuvil Hindu College (K.H.C.) now stands as an eminent school – a pride of Kokuvil. The many temples contribute a lot to the pious and disciplined life of the people. The community centres engage the youth in healthy activities and help them to lead a peaceful and useful life. They grow up to be good citizens.

The appropriate verses at the beginning of, in between the articles and at the end, invoke the blessings of the deities and add to

the meaning of the articles. Prayers to the deities lead us to a good living. Christians are a few in number and there is a Holy Trinity Church. The school attached to this church, the C.C.T.M. school is the oldest one in Kokuvil. These two religious communities live in amity. There is a long story of K.H.C. an eminent centre of education which we can be proud of. It will grow to still greater heights. The neighbouring feeder schools play an important role to raise the status of K.H.C. The Technical College is another asset to Kokuvil. It has the staff and equipment to develop the various skills in our youths.

Special mention must be made of Mr. S. Velauthapillai of Kokuvil who was a teacher at K.H.C. and acquired a fund of knowledge in Tamil language and literature from Swami Vipulananda. He was Swami's disciple. He has composed the largest number of verses in praise of Lord Kirupakara Sivasubramania Swami the guardian deity of K.H.C. Mr. A. Nagalingam deserves our gratitude for his composition of songs on this deity.

It gives us great joy to read the names of the many eminent people who have contributed a great deal to make Kokuvil a reputable village. Those living among us now are Mr. A. Muthulingam, educated at K.H.C., an ardent member of the "Tamil Literary Garden", Mrs. Saraswathy Packiarajah, the first music teacher at K.H.C. who selected the tune for the College anthem and Mr. Manickam Subramaniam, an old student of K.H.C. and a philanthropist who is helping schools and community centres in Kokuvil.

We all appreciate and commend the immense efforts of the authors for having produced this book which is a legacy to all of Kokuvil.

Mrs. Sukirthalakshmy Supramaniam
Kokuvil
September 7, 2009

உ

ஓம் முருகா

முன்னுரை

"முந்தையெம் மூத்த குடியும் சந்ததியும்
சிந்தை மகிழ்வுற வாழ்ந்ததும் இவ்வூரே
பந்தம் வழுவா உறவுதனை இதயமிருத்தி
சந்தமுடன் வாயார வாழ்த்தி வணங்குவமே"

அடியேன் பிறந்து, தவழ்ந்து, நிமிர்ந்து, நடந்து, உலாவந்த ஊர் கொக்குவில். நம் ஊரின் வரலாற்றினையும், நம் நெஞ்சமெங்கும் நிறைந்திருக்கும் நம் ஊர் மணத்தின் பெருமைகளையும், போர்ச்சூழல் காரணமாக ஊர்விட்டு, உறவுவிட்டு வெளிநாடுகளுக்கு வந்துள்ள நமது வருங்காலச் சந்ததியினரும், நம் ஊரில் குடியேறி தம் ஊர்போல் வாழ்ந்து வருவோரும் அவர்தம் சந்ததியினரும் அறிந்திருக்க வேண்டும் என்பது நம் உள்ளத்தின் நீண்டநாள் ஆசை. அவ்வுணர்ச்சியின் உந்துதலால் நாம் அறிந்தவைகளையும், தெரிந்தவைகளையும் மையமாக வைத்து "கொக்குவில் நம் ஊர்" என்ற கட்டுரை எழுதப்பட்டது.

பல மாதங்களுக்குப் பின்னர் இக் கட்டுரையின் கையெழுத்துச் சுவடியை தட்டச்சுச் செய்வதற்காக அன்பர் நாகலிங்கம் பாலகுமாரிடம் கையளித்தேன். அவரும் எமது ஊரின் மைந்தர், ஊர்ப்பற்று மிக்கவர். அவர் இக் கட்டுரையில் காணப்பெற்ற சில குறை நிறைவுகளை நிவர்த்தி செய்து, சில கருத்துக்களையும் தெரிவித்தார். முக்கியமாக, கொக்குவில் பதியில் உள்ள அனைத்துக் கோயில்கள், பள்ளிக்கூடங்கள், சன சமூக நிலையங்கள் ஆகியவற்றின் தோற்றம், நிர்வாகம், கட்டிடப்பணி, வளர்ச்சி போன்ற வரலாறுகளையும் தேடிப் பெற்று ஆவணப்படுத்தி ஓர் நூலாக வெளிக்கொணர்ந்தால் பயனுள்ளதாக அமையும் என்ற ஆலோசனையை வழங்கியிருந்தார்.

வணக்கத்தலங்கள், கல்விச்சாலைகள், கிராம வளர்ச்சியில் பங்கு பற்றும் சங்கங்கள் இவற்றின் விபரங்களைத் தேடித் திரட்டிச் சான்றுபட எழுதுதல் என்பது மிகவும் கடினமான பணி. எனினும் இப் பணியில் அன்பர் நாகலிங்கம் பாலகுமாரும், நானும் மிகவும் அக்கறையுடன் ஈடுபட்டோம். நாட்கள் பல எடுத்தன. கொக்குவிற் கிராமத்திற் பதினைந்து பெரிய சைவ ஆலயங்களும் மேலும் பல சிறிய ஆலயங்களும், ஒரு கிறிஸ்தவ ஆலயம்,

ஏழு கல்விச்சாலைகள், ஆறு சன சமூக நிலையங்களும் மேலும் பல வாசிகசாலைகளும் உள்ளன. பெரிய சைவ ஆலயங்கள், கிறிஸ்தவ ஆலயம், கல்விச்சாலைகள், சன சமூக நிலையங்கள் ஆகியவற்றின் வரலாறுகளை எழுதுவதற்குப் பலரும் பலவகையில் உதவி உள்ளார்கள். குறிப்பாக இந் நிறுவனங்களின் நிர்வாகத்தினர், முன்னாள் உத்தியோகத்தர்கள், இவற்றுடன் தொடர்புடைய பெருமக்கள், சிவாச்சாரியார்கள், ஊர்ப் பழம்பெரும் குடும்பங்கள் போன்றோர் மூலம் அவரவரது நிறுவனங்கள் பற்றிய தகவல்களை அறியக்கூடியதாக இருந்தது. சில விபரங்கள் இந் நிறுவனங்களின் ஆண்டுமலர், கும்பாபிஷேக மலர், திருப்பணிமலர் வேறும் வெளியீடுகளில் இருந்தும் கிடைத்தன. அன்பர் நாகலிங்கம் பாலகுமார் அவர்களும் தான் கல்வி கற்ற, விளையாடிய கல்லூரி. சனசமூக நிலையங்களின் விளையாட்டுத்துறை பற்றிய விபரங்களை விரிவாக எழுதி உதவியுள்ளார். இவ்வாறு பெற்ற ஆதாரங்களைக் கொண்டு நாம் அறிந்த அளவில் ஒவ்வொரு நிறுவனத்தின் வரலாறும் கூட்டல் குறைத்தலின்றி ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் நிறுவனங்களின் அனைத்து அம்சங்களும் உள்ளடக்கப்பெற்றுள்ளன எனச் சொல்வதற்கில்லை. திரட்டிய தகவல்களே இந்நூலுக்கு மூலாதாரமானதால் சில தப்புத்தவறுகள் இருக்கக்கூடும். எம் மண்ணின் ஊர்ப்புழுதியை மறவாத எம் மக்கள் மன்னிப்பீர்களாக.

நாம் கேட்டுக்கொண்டதற்கமைய தேவைப்பட்ட அனைத்துத் தகவல்களையும், வெளியீடுகளையும் தந்துதவிய அந்தந்த நிறுவனங்களைச் சார்ந்த பெருமக்களின் விபரங்கள் அனைத்தும் நூலின் இறுதியில் உள்ள அட்டவணையிற் தரப்பட்டுள்ளன். அவ் அத்தனை பெருமக்களின் ஆதரவும் கிடைத்திருக்காவிட்டால் இப்பாரிய பணியை எம்மால் நிறைவேற்றியிருக்க முடியாது . அவர்களையெல்லாம் நன்றியோடு நினைவு கொள்கின்றோம்.

செந்தமிழ் இலக்கியச் சிந்தனையாளரும், பல நூல்களின் ஆசிரியரும் "பேரறிஞர்" என பலராலும் பாராட்டப்பட்டு வருபவருமான திரு. முருக வே. பரமநாதன் அவர்கள் இந்நூலைப் படித்து எம் பணியை மனநிறைவுடன் பாராட்டி, ஊக்குவித்து அணிந்துரையும் வழங்கியுள்ளார்கள். அவருக்கு எமது நெஞ்சார்ந்த நன்றிகள்.

கலாநிதி திரு. இ. பாலசுந்தரம் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்து தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி, தற்பொழுது கனடாவில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியராகப் பணிபுரிந்து வருபவர், சிறந்த திறனாய்வாளர், பல நூல்களின் ஆசிரியர், இந் நூலைப்பற்றி எழுதுவதற்கு ஒப்புதல்

அளித்து, வேண்டிய ஆலோசனைகளை வழங்கி, மதிப்புரையும் அளித்துள்ளமையை பெரும் பேறாகக் கருதுகிறோம். யாழ்ப்பாணம் தெல்லிப்பழை, மகாஜனக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்கள், அன்பின் உறைவிடம், தெளிந்த அறிவினர். இந் நூலைக் கண்ணுற்று சிறப்புரை நல்கியுள்ளார்கள். இப் பெருமக்கள் இருவரையும் நன்றியுடன் போற்றி வணங்குகிறோம்.

மேலும் இந்நூலைப் பார்வையிட்டு ஆங்கிலத்தில் தகவுரை எழுதி அளித்துள்ள எமது மதிப்பிற்குரிய நல்லாசிரியையும், கொக்குவில் இந்துக் கல்லூரி முன்னாள் உபஅதிபருமாகிய பெருமாட்டி திருமதி சுகிர்தலட்சுமி சுப்பிரமணியம் அவர்கட்கும் எமது உளம்கனிந்த நன்றி என்றும் உரியதாகுக.

இந்நூல் வெளிவருவதற்கு அடியேனை நாளும் பொழுதும் தூ ண்டியவரும், எனக்குப் பக்கத் துணையாக இருந்து உதவி ஒத்தாசை புரிந்தவரும், கையெழுத்துச் சுவடிகளை பொறுப்புணர்ச்சியுடன் தட்டச்சுச்செய்து கொடுத்தவர்களுமான எனதருமை நண்பர் நாகலிங்கம் பாலகுமாரும் அவரது துணைவியார் சாந்தினி பாலகுமார் ஆகியோருடன் பாலகுமாரின் தந்தையார் திரு சு. நாகலிங்கம் அவர்களுக்கும் இப் பேருதவிக்கு எனது தனிப்பட்ட முறையிலும், கொக்குவில் மக்கள் சார்பிலும் பணிவான வணக்கத்தையும், நன்றியையும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். இந்நூலை உருவாக்க ஊக்குவித்து எனக்கு அன்பும், ஆதரவும் அளித்து வரும் எனது மனைவி, மருமகன், மகள், பேரப்பிள்ளைகள் என்போருக்கும் எனது நன்றியை தெரிவிக்கின்றேன்.

இந்நூலை அழகுற வடிவமைத்து அச்சுப் பதிவு செய்த விவேகா அச்சகத்திற்கு எமது நன்றிகள்.

இறுதியாக இந்நூலை வெளிக்கொணர்வதற்கு சகல வழிகளிலும் உதவி எம்மை ஊக்குவித்த அனைவருக்கும் மீண்டும் எமது நன்றிகள்.

37, Pitchpine Drive,
Scarborough, Ontario
M1X 1Y1
Canada.
(416) 321-5513.

த.செ. நடராசா
ஆடியாமடம்
கொக்குவில்,
இலங்கை.

உ

சிவமயம்

கொக்குவில் நம் ஊர்

இயல் - 1

கொக்குவில் ஊரின் அமைவிடமும் சிறப்பியல்புகளும்.

"விக்கினங்கள் தீர்க்கும் விநாயகனின் தம்பியே!
கொக்குவிலூர் மேவும் குருநாதா! - மிக்கபுகழ்க்
கந்தா! கிருபாகர சிவசுப்பிர மணியா!
தந்தாள், உன்செங்கமலத் தாள்"

- அருட்கவி சி. வினாசித்தம்பி -

தமிழீழத் திருநாட்டின் சிரசாய் விளங்கும் யாழ்ப்பாண மாவட்டத்தின் யாழ் மாநகரசபையின் வடக்கு எல்லையாக இரண்டுகல் (2 மைல்) தொலைவில் அமைந்து விளங்குவது நம் ஊராகிய கொக்குவிற்பதி ஆகும். அந்நாளில் கொக்குப் பறவைகள் இங்குள்ள சோலைகளில் நிறைந்து காணப்பட்டதன் காரணமாக நம் ஊர் கொக்குவில் எனப் பெயர் பெற்றதென்பர். கொக்குவிலை திரு எஸ். சபாரத்தின முதலியார் "கொக்கூர்" என்று தம்முடைய பிரபந்தங்களிலே பலபடப் புகழ்ந்து நிலைபெறச் செய்துள்ளார். கொக்குவிலைச் சேர்ந்த செவ்வேள் அன்பர் திரு செ. வேலாயுதபிள்ளை அவர்கள் "கொக்கூர் குமரன் ஆற்றுப்படை" என்னும் பிரபந்தத்தில் இவ்வூரில் கோயில் கொண்டுள்ள முருகக் கடவுளின் அருட்சிறப்பைக் குறிப்பிடுகையில்

"ஆலும் மருதும் அரசும் வேம்பும்
போலும் * பாதப மாதபத் தணிக்கச்
சூதம் வாழை சுவைப் பலாத்தோப்பும்
சீத வயலும் தோட்டமும் செறிந்து
மக்கள் பசிப்பிணி தணிக்கும் பண்பிற்
தக்கோர் புகழுந் தகைசால்
கொக்கூர்ப் பதியமர் குமரன் தானே"

எனப் பாடியுள்ளது நோக்கற்பாலது.

*பாதபம் - மரங்கள் (தாளினால் நீருண்பவை)

*ஆதபம் - சூரிய வெளிச்சம்.

கொக்குவிலின் எல்லைகளாக வடக்கே தாவடி, கோண்டாவிலும், கிழக்கே திருநெல்வேலியும், தெற்கே வண்ணார்பண்ணையும், மேற்கே ஆனைக்கோட்டையும் அமைந்துள்ளன. யாழ்ப்பாணம்-காங்கேசன்துறை நெடுஞ்சாலை கொக்குவிற் கிராமத்தை ஊடறுத்துச் செல்வதால் நெடுஞ்சாலைக்குக் கிழக்காக, கொக்குவில் கிழக்கென்றும், நெடுஞ்சாலைக்கு மேற்காக கொக்குவில் மேற்கென்றும் இரு கிராமசேவகர்கள் பிரிவாக பிரிக்கப்பட்டிருந்தது. பின்னர் 1990 களில் கோயில்வீதி, பிரம்படி ஒழுங்கை என்பவற்றிற்கு கிழக்காக கொக்குவில் கிழக்கென்றும், நீதிராசா வீதியை அச்சாக கொண்டு அதற்கு மேற்காக கொக்குவில் மேற்கென்றும், இவ்விரண்டிற்கும் இடையேயான பகுதியை கொக்குவில் மத்தி என்றும் மூன்று கிராமசேவகர்கள் பிரிவுகளாக்கப்பட்டு இருந்தன. இன்று அவை மேலும் பல கிராமசேவகர் பிரிவுகளாக்கப்பட்டு அரசாங்கச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடுத்து எமது கிராமத்தின் பிரதான வீதியாக ஆடியபாதம் வீதி அமைந்துள்ளது. இது கொக்குவில் சந்தியிலிருந்து யாழ்-காங்கேசன்துறை நெடுஞ்சாலைக்குக் கிழக்காக திருநெல்வேலி மற்றும் கல்வியங்காடு, செம்மணி ஆகிய கிராமங்களின் ஊடாகச் சென்று சங்கிலியன் வீதியில் முடிவடைகிறது. இவ் வீதி நெடுஞ்சாலைக்கு மேற்காக நீதிராசா வீதியைக் கடந்து யாழ்-மானிப்பாய் விதியை அடைகிறது. கிராமத்தின் தெற்கு எல்லையாக அமைந்துள்ள பூநாறி மரத்தடியிலிருந்து கிழக்கே செல்லும் சபாபதிவீதி ஆனது தலையாளியூடாகச் சென்று பிறவுன் வீதியைக் கடந்து சுடலைவீதிவரை செல்கிறது. பூநாறி மரத்தடியிலிருந்து மேற்காகச் செல்லும் வீதியானது காரைக்காட்டிற்கும் அப்பாற் சென்று நீதிராசாவீதியில் முடிவடைகிறது. குளப்பிட்டிச் சந்தியிலிருந்து மேற்காகச் செல்லும் வீதி (ஆனைக்கோட்டை வீதி) ஆனைக்கோட்டையூடாகச் சென்று யாழ்-மானிப்பாய் வீதியை அடைகிறது. கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு வடக்காக உள்ள குளப்பிட்டி ஒழுங்கை கரவில்லடி ஒழுங்கைவரை செல்கிறது. கரவில்லடி ஒழுங்கையிலிருந்து கிழக்காகச் செல்லும் மணியகாரர் ஒழுங்கை கோயில் வீதியில் முடிவடைகிறது.

அவ்வாறே பிரதான வீதிக்குக் கிழக்காக மூன்றாம் மைல்கல்லில் இருந்து கிழக்காகச் செல்லும் சம்பியன் ஒழுங்கை இரு பிரிவுகளாகப் பிரிந்து ஒன்று நந்தாவிலையும் மற்றையது கோயில் வீதியையும் அடைகின்றன. அவ்வாறே புகையிரதப்பாதைக்குக் கிழக்காக ஆடியபாதம் வீதிக்கு தெற்காப் பிறவுன் வீதியும்,

வடக்காக பொற்பதி வீதியும் அமைந்துள்ளன. நெடுஞ்சாலைக்கு கிழக்காக செல்லும் ஆடியபாதம் வீதியிலிருந்து முதலாவதாக கல்லூரி ஒழுங்கை வடக்காகச் சென்று குளப்பிட்டி ஒழுங்கையிலும், அடுத்து அச்சுக்கூட ஒழுங்கை தெற்காகச் சென்று தலையாளியிலும், அடுத்ததாக கரவேலடி ஒழுங்கை வடக்காகச் சென்று குளப்பிட்டி ஒழுங்கையிலும், அதனையடுத்து பிரம்படி ஒழுங்கை தெற்காகச் சென்று சபாபதி வீதியிலும் அடுத்ததாக கோயில் வீதி வடக்காகச் சென்று உப்புமடம் வீதியிலும் முடிவடைகின்றன. நெடுஞ்சாலைக்கு மேற்காக பிரதான வீதிகளை இணைக்கும் மேலும் பல சிறு வீதிகளும், சிறு ஒழுங்கைகளும் உள்ளன. கொக்குவில் கிராமமானது மணியங்காடு, கேணியடி, குளப்பிட்டி, ஆடியாமடம், கற்புலம், காட்டுப்புலம், கரவில்லடி, நீங்காமூலை, தலையாளி, பிரம்படி, கோணாவளை, பொற்பத்தை, நந்தாவில், மாத்தனை போன்ற பல குறிச்சிகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

கொக்குவில் கிராமத்தின் நடுப்பகுதியாக விளங்கும் ஆடியாமடத்தடியில் முன்நாளில் ஒரு பெரிய கேணியும், மடமும், சுமைதாங்கியும், ஆவுரஞ்சிக் கல்லும், ஆவுண்ணி நீர்த்தொட்டியும் இருந்துள்ளன. இவற்றை ஆடியபாதன் எனும் பெருமகனார் உருவாக்கி வைத்ததால் இந் நிலப்பகுதி இன்றும் ஆடியாமடத்தடி என்றே அழைக்கப்பட்டு வருகின்றது. இன்று இந்நிலப் பிரதேசத்தில் “புதுக்கோயில்” என அழைக்கப்படும் கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியர் கோயிலும், அதன் இருமருங்கிலும் கொக்குவில் இந்துக் கல்லூரியும், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையும் முறையே இடமும் வலமுமாக உள்ளன.

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியர் கோயில் “புதுக்கோயில்” நூற்று எழுபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் இச் சூழலில் வாழ்ந்த சைவநன்மக்களால் தாபிக்கப்பட்டது. முன்னர் கேணி இருந்த இடமே தற்போதய கோயில் தீர்த்தக் கிணறு ஆகும். இங்கு எழுந்தருளியுள்ள ஆறுமுகசுவாமி பெரியதும், அழகோடும் கூடியதாகும். இம் மூர்த்தம் ஆலய முன்றலிலேயே வார்த்து எடுக்கப்பட்டது. மூர்த்தம் வார்த்தெடுக்கப்பட்டபோது அங்கு கூடியிருந்த மக்களில் சிலர் தாம் தாம் அணிந்திருந்த தங்க நகைகளை கழற்றி வார்ப்பில் இட்டு உவகை உற்றதாக அறிகிறோம். இவ் ஆறுமுகப் பெருமானின் தோற்றப் பொலிவை

"தீர்த்தனே! கொக்கூர் சிறக்க அறுமுகத்து
மூர்த்தமாய் வந்த முதல்வனே! - கார்த்திகையார்
பாலூட்ட உண்ட அருட் பாலகா! பாவியேன்
மாலோட்டி ஆண்டருள்வாய் மன்"

என்று எஸ். சபாரத்தின முதலியார் கொக்கூர் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி வெண்பா அந்தாதியில் குறிப்பிட்டுள்ளார். வேறும் பல ஆன்மீக மணங்கமழும் ஆலயங்கள் நம் ஊரிற்கு மகிமை கொடுக்கின்றன. கொக்குவில் பதியில் காங்கேசன்துறை வீதிக்கு மேற்காக மஞ்சவனப்பதி முருகன் ஆலயம், மணியர்பதி சிவசுப்பிரமணியர் ஆலயம், சொர்ணசித்தி வினாயகர் ஆலயம், கேணியடி வராகி அம்மன் ஆலயம், பிடாரி அம்பாள் ஆலயம், சூடுவிழுந்தான் பிள்ளையார் கோயில், முதலி கந்தசாமி ஆலயம், வேம்படி முருகமூர்த்தி ஆலயம், ஐயனார் ஆலயம் ஆகியன உள்ளன. மஞ்சவனப்பதி ஆலயம் பிரசித்தி பெற்றது. இவ்வாலயத்திற்கு திருமுருக கிருபானந்தவாரியார் போன்ற அறிஞர் பெருமக்களால் கதாப்பிரசங்கம், புராண விரிவுரைகள் கண்ட வரலாறும் உண்டு.

கொக்குவில் பதியில் காங்கேசன்துறை வீதிக்கு கிழக்காகப் பொற்பதி விநாயகர் ஆலயம், நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம், மாத்தனை கந்தசுவாமி ஆலயம், காட்டுப்புலம் முருகமூர்த்தி ஆலயம், தலையாளி ஞானவைரவர் ஆலயம், சாயிதுர்க்கா ஆலயம், கோணாவளை வைரவர் ஆலயம் ஆகியன அமைந்து உள்ளன.

கோணாவளை வைரவர் ஆலயத்தில் முன்னர் வேள்வி நடைபெற்று வந்தது. நேர்த்திக்கடன் வைத்த மக்கள் தாங்கள் வளர்த்த ஆட்டுக்கடாக்களையோ, சேவற் கோழிகளையோ இக் கோயிலிற்கு எடுத்துவந்து பலியிடுவர். இவ் வழக்கம் இப்போது நடைமுறையில் இல்லை. நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலயம் வரலாற்றுப்புகழ் பெற்றது. இலங்கை மன்னன் கஜபாகு கண்ணகி அம்மன் சிலையை ஊர்வலமாக எடுத்துச் சென்று தங்கி வழிபட்ட இடங்களில் ஒன்று "கற்புலம்" என்பர். முன்னர் கற்புலத்து கண்ணகி அம்மனே இன்று கற்புலத்து மனோன்மணி அம்பாளாக அருள்பாலித்துக்கொண்டு இருக்கிறாள். இவற்றைவிடக் கொக்குவில் கிராமம் எங்கிலும் பிள்ளையார், முருகன், வைரவர், காளி போன்ற தெய்வங்களுக்கான வேறும் பல சிறு ஆலயங்களும் உள்ளன.

குளப்பிட்டியில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றும், கிறிஸ்த்தவ

ஆரம்பப் பாடசாலை (மடத்துப்புலம்) ஒன்றும் காணப்படுகின்றன. இப்பாடசாலையே கொக்குவில் கிராமத்தில் நிறுவப்பட்ட முதற் பாடசாலையும் ஆகும். இப் பாடசாலையில் கிறிஸ்த்தவ சிறார்களும், சைவச் சிறார்களும் எவ்வித வேறுபாடுமின்றி கல்வி கற்று வருவதுடன் ஒருவருக்கொருவர் உதவியாகவும் இருந்து வருகின்றனர். கிறிஸ்த்தவ தேவாலயத்தில் கிரமமாக திருப்பலிப் பூசைகளும், ஆராதனைகளும், போதனைகளும் இடம்பெற்று வருவதுடன் கிறிஸ்துவின் விசேட தினங்களும் கொண்டாடப்பட்டு வருகின்றன. இவ் ஆலயத்தில் முதல் தமிழ்ப் போதகராக வணக்கத்துக்குரிய சம்பியன் அவர்கள் கடமையாற்றினார். மக்கள் அவர்மீது கொண்ட அன்பினால் அவர் வசித்துவந்த ஒழுங்கைக்கு அவரது பெயரைச் சூட்டினர். அதுவே இன்று "சம்பியன் ஒழுங்கை" என்று அழைக்கப்பட்டு வருகிறது.

கொக்குவில் கிராமத்தில் உள்ள கல்விக்கூடங்களில் கொக்குவில் இந்துக் கல்லூரியும், அதனைச் சார்ந்த கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையும் பிரபல்யமானவை. இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி பெரு விருட்சமாக வளர்ந்து கொக்குவில் "கிராமத்து கொண்மணி மகுடம்" என மிளிர்கின்றது. இக் கல்லூரியின் வளர்ச்சிக்காக முதலாவது தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. செல்லையா அவர்கள் புதுக்கோயிலுக்கு தெற்காக கல்லூரி அமைந்திருக்கும் தனது சொந்தக் காணியையும், திரு. பொன்னுத்துரைப் பத்தர் குளப்பிட்டி ஒழுங்கைக்கு வடக்காக அமைந்திருக்கும் தனது சொந்தக் காணியையும் நன்கொடையாக வழங்கி இருந்தனர். கொக்குவில் மேற்கில் C.C.T.M பாடசாலையும், ஞானபண்டித வித்தியாசாலையும், கொக்குவில் கிழக்கில் இராமகிருஷ்ண வித்தியாசாலை, பொற்பதி வீதியை அண்மித்து நாமகள் வித்தியாசாலையும் இயங்கி வருகின்றன. C.C.T.M பாடசாலை கொக்குவில் பரிசுத்த திரித்துவ ஆலயத்தினரால் ஆரம்பிக்கப்பட்டது. ஞானபண்டித வித்தியாசாலையை தாபித்தவர்கள் பலராலும் போற்றப்பட்டும், மதிக்கப்பட்டும் வந்த இரு பெருமக்கள் சைவைப்புலவர் த. குமாரசுவாமிப் பிள்ளையும், மு. நடராசா உபாத்தியாயரும் ஆவார். இராமகிருஷ்ண வித்தியாசாலை பெரியார் தம்பித்துரையின் அயராத முயற்சியால் கட்டப்பட்டு 1938ம் ஆண்டில் சுவாமி விபுலாநந்தரினால் திறந்து வைக்கப்பட்டது. ஆசிரியர் சங்கத்தின் தலைவராக பதவி வகித்த திரு. இ. கந்தையா உபாத்தியார் இப்பாடசாலைக்கு முதல்வராக நியமிக்கப்பட்டதில் இருந்து இக் கல்விக்கூடம் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. நாமகள் வித்தியாசாலை வைத்தியர் சின்னத்துரை என்பவரால் நிறுவப்பட்டது. இப்பெருமகனார் தன் பகுதி மக்களின் கல்வி வளர்ச்சிக்காக தன் சொந்த நிலத்தையே நன்கொடையாக வழங்கியிருந்தார்.

யாழ்ப்பாணத்திற்கான ஒரேயொரு தொழில்நுட்பக் கல்லூரியும் கொக்குவில் கிழக்கிலேயே அமைந்துள்ளது. தலையாழி ஸ்ரீ ஞான வைரவ ஆலய நிர்வாகத்தினரால் அறநெறிப் பாடசாலை ஒன்றும் நடாத்தப்பட்டு வருகின்றது.

நந்தாவிலிலும், தலையாழியிலும் இரு குளங்கள் இருந்துள்ளன. மாரியில் பெய்யும் மழைநீர் இக்குளங்களை நிரப்பி, மிகையான நீர் ஒல்லாந்தர் காலத்தில் வெட்டப்பட்ட பாரிய வாய்க்கால்கள் வழியாக கடலைச் சென்றடையும். இன்று இக்குளங்கள் தூர்ந்துபோய் இருந்தும் கடும் மழை பெய்யும் காலங்களில் இப் பகுதி பெரு வெள்ளக்காடாகிப் பெருக்கெடுத்து அக்கம் பக்கம் உள்ள வீதிகளையும், வீடுகளையும் மேவிப்பாயும். நந்தாவில் குளத்தை அண்டிய நிலத்தில் நெல் வயல்களும் உண்டு. நந்தாவில் நெல் விளைச்சல் பற்றி "நாடு விளைந்தால் நந்தாவில் விளையாது நந்தாவில் விளைந்தால் நாடு விளையாது" என்ற ஒரு முதுமொழியும் வழக்கில் உள்ளது. இந்நிலப்பிரதேசத்தில் கத்தரி, மிளகாய், வெண்டி போன்ற மரக்கறி வகைகளும் மரவெள்ளி, கருணை போன்ற கிழங்கு வகைகளும் பயிரிடப்படுகின்றன.

ஆரம்பத்தில் சுருட்டுத் தொழிலே கொக்குவிலின் முக்கிய கைத்தொழிலாக இருந்தது. கொக்குவிலின் இரு பகுதிகளிலும் பல சுருட்டுச் தொழிற்சாலைகள் "சுறுட்டுக் கொட்டில்கள்" என்ற பெயரில் இயங்கி வந்தன. இங்கு உற்பத்தி செய்யப்பட்ட சுறுட்டுக்கள் நன்முறையில் பக்குவப்படுத்தப்பட்டு, பெட்டிகளில் முறையாக அடைத்து தென் இலங்கைக்கும், மலையகத்திற்கும் அனுப்பப்பட்டு வந்தன. அன்று மக்களால் விரும்பி வரவேற்கப்பட்டது வை. சி. சி. கு. (V. S.S.K.) சுறுட்டுக்களும், கனகலிங்கம் சுறுட்டுக்களும் ஆகும். வானொலி பாவனைக்கு வருமுன்னர் இச்சுறுட்டுத் தொழிற்சாலைகளில் வசனநடையில் இருந்த கம்பராமாயாணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களை ஒருவர் வாசிக்க மற்றவர்கள் இக்கதைகளைக் கேட்டவண்ணம் தம் தொழிலில் ஈடுபட்டிருப்பர். இதனால் கல்வியறிவு இல்லாதவர்களும் செல்வத்துட் செல்வமான கேள்விஞானமுடையவர்களாய் விளங்கினர். இன்று கொக்குவில் கல்வியில் பெருமுன்னேற்றம் கண்டு பல **கல்வி மான்களையும் வைத்திய கலாநிதிகளையும் சட்டத்துறை நீதித்துறையினரையும் பொறியியலாளர்களையும் இலக்கியவாதிகளையும் வியாபாரிகளையும் தொழில் அதிபர்களையும்** பெரும் எண்ணிக்கையில் கொண்ட ஊராக விளங்குகின்றது.

இயல்-2

கொக்குவில் ஊரின் சான்றோர்கள்

சைவத்திற்கும், தமிழிற்கும், தமிழ்க்கலைகளுக்கும் வளமூட்டிய சான்றோர்களும் இம் மண்ணிற்கு பெருமை தேடித்தந்துள்ளனர்.

அ. சைவப்பெரியார் சி. சிலம்பநாதபிள்ளை:-

இவர் 125 ஆண்டுகட்குமுன் இப்பதியில் வாழ்ந்தவர். வண்ணைநகர் ம. அமரசிங்க உபாத்தியாயரின் மாணாக்கர். இவர் வவுனியா விலுள்ள ஓமந்தை வீரகத்திப்பிள்ளையார்மீது பாடிய "ஓமையந்தாதி" என்னும் பிரபந்தத்திற்கு உடுப்பிட்டி அ. சிவசம்புப் புலவர், சு. சரவணமுத்துப்புலவர், சுன்னாகம் அ. குமாரசாமிப்புலவர் போன்றோர் சிறப்புப்பாயிரம் வழங்கி உள்ளனர். அ. குமாரசாமிப்புலவர் சொல்லிய பாடல் பின்வருமாறு ....

சொல்லரிய வளம்படைத்த ஓமை வாழுந்
தும்பிமுக வைந்துகரத் தோன்ற லுக்கு
மல்லல்பெறும் பொருளமைந்திட் டழகு வாய்ப்ப
மாசறுமோ ரந்தாதி மாலை யீந்தான்
செல்வமிகுங் கொக்குவினா கரிகன் சீர்த்தி
சேர்ந்த சின்னத் தம்பிதவச் செல்வன்கல்வி
வல்லவர்கள் கொண்டாடப் பலநா லாய்ந்து
மகிழ்சிலம்ப நாதகவி வள்ள றானே.

இவர் இயற்றியவேறு சில பிரபந்தங்களாவன ....

1. தலைசை முத்துவிநாயகர் ஆசிரியவிருத்தம் ஞானவைரவர் ஆசிரியவிருத்தம்
2. உரும்பைக் கருணைமுக விநாயகர் ஊஞ்சல்
3. முனீச்சுரத்து வடிவழகிய ஆசிரியவிருத்தம் பதிற்றந்தாதி
4. முனீஸ்வரரூஞ்சல்
5. கிறீஸ்த அஞ்ஞானக்கும்மி மறுப்பு

ஆ. தத்துவஞானமேதை எஸ். சபாரத்தினமுதலியார்.

இவர் ஆறுமுகநாவலரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வாழ்ந்தவர். இலங்கையிலும், இந்தியாவிலும் சைவசித்தாந்தப் பெருமன்றங் களுக்குத் தலைமைதாங்கும் பேறுபெற்றவர். தமிழிலும், ஆங்கி லத்திலும் “இந்துசாதனம்”, “உதயபானு”, “Hindu Organ” போன்ற பத்திரிகைகளில் பெருந்தொகையான சமயசம்பந்தமான கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். இவர் எழுதிய நூல்களில் “Essentials of Hinduism”, “ஈஸ்வர நிச்சயம்”, “பிரபஞ்சவிசாரம்” போன்றவை முக்கியஇடம் பெறுகின்றன. தனது குலதெய்வமான கிருபாகரசிவசுப்பிரமணியசுவாமி மீதும் ஆசிரியவிருத்தம், ஊஞ்சல், மும்மணிக்கோவை, வெண்பாஅந்தாதி, நான்மணிமாலை, சரவண பவமாலை எனப்பல பிரபந்தங்கள் பாடியுள்ளார்.

இ. இசைப்புலவர் த. குமாரசாமிப்பிள்ளை

கொக்குவில் மேற்கில் அமைந்துள்ள ஞானபண்டித வித்தியாசாலைத் தாபகர்களில் இவரும் ஒருவரென முன்னர் குறிப்பிட்டிருந்தோம். இவர் சங்கீதத்திலும், பண்ணிசையிலும் பாண்டித்தியம் பெற்று சைவத்திருமுறைகளை பண்ணோடு ஓத வழிகாட்டியாக இருந்துள்ளார். இராமநாதன் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிவந்த இவர் சிறந்த புராணபடன விரிவுரையாளராகவும், கதாகலாட்சபம் செய்வதிலும் புகழ்பெற்று விளங்கினார். இவர் தனது வழிபடு தெய்வமான மஞ்சவனப்பதி முருகன்மீது ஊஞ்சல், ஏசல் போன்றவைகளும் வேறும்சில பக்திப்பனுவல்களும் பாடியுள்ளார். புலவரின் மகனான கு.குருசாமியும் தந்தையார் வழியைப் பின்பற்றி நல்லதொரு புராணபடன போதகராகவும், சைவப் பிரசங்கியாகவும் விளங்கி குறுகிய காலத்தில் பெரும் புகழை நிலைநாட்டிச் சென்றுள்ளார்.

ஈ. செவ்வேள் அன்பர் செ. வேலாயுதபிள்ளை

சுவாமி விபுலாநந்த அடிகளாரின் மாணாக்கர்களில் இவரும் ஒருவர். இவர் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியராகவும், இலங்கைக் கல்விச்சேவையில் பிரதான அதிகாரியாகவும் பணியாற்றியவர். தமிழிலும், வடமொழியிலும், ஆங்கிலத்திலும் நல்ல பாண்டித்தியம் பெற்றவர். இவரின் கவிதைத் திறமையாற் கவரப்பட்ட சிவங். கருணாலய பாண்டியனார் என்ற பெருமகன் இவரைப் “புலவரே” எனப் பெருமைப்படுத்தி உள்ளார். கொக்குவில் கிருபாகர

சிவசுப்பிரமணியர்மீது ஆராதபக்தி கொண்டு இப்பெருமான்மீதும், இத்தலத்தில் எழுந்தருளியுள்ள மற்றைய பரிவாரமூர்த்திகள் மீதும் திருப்பள்ளிஎழுச்சி, பதிற்றந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, திருவெழுகூற்றிருக்கை, அட்டகம், கலிவெண்பா, நவமணிமாலை, இரட்டைமணிமாலை, ஒருபா ஒருப. ஃது, ஊஞ்சல், ஏசல், ஆற்றுப்படை எனப் பல்வேறுபட்ட பிரபந்தங்கள் 21வரை பாடி மகிழ்ந்துள்ளார். (விபரம் கிருபாகர சிவசுப்பிரமணியசுவாமி கோயில் இலக்கியம் பகுதியில் காணலாம்).

உ. பண்டிதர் மு. சின்னத்தம்பி (எம்.எஸ்.மாஸ்டர்)

எம்.எஸ். மாஸ்டர் என்று அழைக்கப்பட்ட இவர் ஒரு சிறந்த கல்விமான். தனது சொந்த முயற்சியினால் பண்டிதர் பட்டமும், இலங்கைப் பல்கலைக்கழக கலைமாணி (பி.ஏ) பட்டமும் பெற்று உயர்ந்தவர். கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஆசிரியராகவும் பணியாற்றியவர். இவர் தனது இட்டதெய்வமான கொக்கூர் கிருபாகரர்மீது ஊஞ்சல், கலித்துறை அந்தாதி, தேரேறிவந்து எனும் மூன்று பிரபந்தங்கள் பாடிஉள்ளார். இவரது பிள்ளைகளில் ஒருவரான ஸ்ரீ தயாளனும் ஆசிரியராகக் கடமையாற்றிப் பதவிஉயர்வு பெற்று இலங்கையில் வடமாகாண கல்விஇலாகாவில் உயர்பதவி வகிக்கிறார். நாவன்மைமிக்க இவர் சமயச் சொற்பொழிவுகளும், கதாப்பிரசங்கஙகளும் நடாத்தி வருவது சமயத்திற்கும், தமிழிற்கும் ஆற்றப்பட்ட தொண்டாகவே அமைகிறது.

ஊ. காந்தியசேவா சங்கத்து இ. கந்தையா

ஆசிரியராய், அதிபராய், பல சங்கங்களின் தலைவராய் பதவி வகித்து ஊரிற்கும், சைவத்திற்கும் பெரும்பணி ஆற்றியவர்.இவரும் ஒரு கலைமாமணி (பி.ஏ) பட்டதாரி ஆவார். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், சிங்களம், மலையாளம் ஆகிய பன்மொழிகளில் நல்லறிவைப் பெற்றிருந்தார். தனது மொழித்திறனாலும், இதமான பேச்சாலும் மக்களைக் கவர்ந்த கல்விமான். இவர் எழுதிய "இந்து சமய சாரம்" எனும் நூல் இந்துசமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டது. இவர் இயற்கைஎய்தியபோது ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் பாடிய இரங்கற்பாடலைக் கிழே தருகிறோம்.

"அதிபராய் ஆசிரிய ராய்க்கல்வி செல்வந்
ததிபெறவே சேவை செய்தார் தோன்றி - மதிப்புயர்ந்தார்
காந்தீயசே வாச்சங்கம் காத்துவளர் கந்தையா
தீந்தமிழா சாற் சங்கத் தேறு"

எ. தமிழ் இலக்கியப் பயிர் வளர்த்துவரும் அ. முத்துலிங்கம்.

தமிழ் இலக்கிய அறிவில் சிறந்து விளங்கி பல கட்டுரைகள், சிறுகதைகள் எழுதி வருபவர் இவர். கொக்குவில் இந்துக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்றுக் கொண்ட இவர் ஒரு விஞ்ஞானப் பட்டதாரியும் ஆவார். இவரது ஆக்கங்கள் இலங்கை, இந்தியப் பத்திரிகைகளிலும், விஷேட மலர்களிலும் வெளிவந்துள்ளன. ஐக்கிய நாடுகள் சபையினால் கொடுக்கப்பட்ட வேலைகள் நிமித்தம் சூடான், பாக்கிஸ்தான், ஆவ்கானிஸ்தான், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் பணியாற்றிய இவர் அந் நாடுகளின் சுற்றுச் சூழலை வைத்தும் கதைகள் எழுதிப் புகழ் பெற்றுள்ளார். "அக்கா", "திகடசக்கரம்", "வம்சவிருத்தி", "வடக்கு வீதி", "மகாராஜாவின் ரயில்வண்டி" ஆகியன இவர் எழுதி வெளியிட்ட நூல்களில் சிலவாகும். இவர் எழுதிய நூல்களில் சிலவற்றிற்குப் பரிசில்களும், பாராட்டுக்களும் கிடைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். தற்போது கனடாவில் வாழ்ந்து வரும் திரு அ. முத்துலிங்கம் அவர்கள் சர்வதேச தமிழ் இலக்கிய உயர்விற்காக அர்ப்பணித்துச் செயற்படும் "தமிழ் இலக்கியச் சோலை" (Tamil Literary Garden) எனும் நிறுவனத்தில் ஊக்கமாக பணியாற்றி வருகிறார்.

கொக்குவிலில் வாழ்ந்து கர்நாடக இசையையும், பண்ணிசையையும் வளர்த்த பெருமைக்கு உரியவர்கள் "இசைவல்லார்" குப்பிளான் செல்லத்துரை, திருமதி சரஸ்வதி பாக்கியராசா ஆகிய இருவருமாவர்.

ஏ. "இசைவல்லார்" குப்பிளான் செல்லத்துரை

திரு குப்பிளான் செல்லத்தரை தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் உயர்ந்த முறையில் இசைக்கச்சேரிகளும், கதாப்பிரசங்கங்களும் செய்து பெரும் புகழ் ஈட்டியவர். இவரின் அரும்பெரும் தொண்டைப் பாராட்டி 1938ம் ஆண்டில் தூத்துக்குடி சைவசித்தாந்தசபை இவரிற்கு "இசைவல்லார்" என்னும் பட்டமும்

அதன் நினைவுக்குறியாக ஒரு பொற்பதக்கமும் அளித்துக் கௌரவித்துள்ளது.

ஐ. திருமதி சரஸ்வதி பாக்கியராசா

திருமதி சரஸ்வதி பாக்கியராசா அவர்கள் மலேசியாவில் கர்நாடக இசையில் சிறந்து விளங்கி எமது நாட்டிற்கு வந்து தான் கற்ற வித்தையை பலரிற்கும் கற்பித்து வந்தார். இருவரும் வெவ்வேறு காலங்களில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஆசிரியராக கடமையாற்றி உள்ளார்கள். கல்லூரியிலும் தனிப்பட்ட முறையிலும் இவர்களிடம் பாடம் கேட்டவர்கள் அநேகர். இவரின் திறமையை கண்டு இலங்கைக் கல்விச்சபை இவரை யாழ் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியின் முதல்வராகத் தெரிவு செய்தது இங்கு குறிப்பிடத்தக்கது. இவரும் இலங்கை வானொலியிலும், திருச்சி வானொலியிலும் இசைநிகழ்ச்சிகள் நடாத்திப் பிரபல்யம் பெற்று விளங்கினார்.

ஒ. "கலைச்செல்வன்" ஏரம்பு சுப்பையா

நடனக்கலை வளர்த்த பெருமகனார் "கலைச்செல்வன்" ஏரம்பு சுப்பையா அவர்கள் நமது ஊராகிய கொக்குவிலில் மட்டுமல்லாது நடனக்கலையை வட இலங்கை முழுவதும் அறிமுகம் செய்துவைத்த பெருமைக்குரியவர் ஆவர். கூத்து, கும்மி. கோலாட்டம் போன்ற கலைகள் யாழ்ப்பாணத்தில் வளம்பெற்று இருந்ததுபோல் பரதநாட்டியம் அன்று இருக்கவில்லை. திரு ஏரம்பு சுப்பையா அவர்கள் இப் பரதநாட்டியக் கலையைத் தமிழ் நாட்டின் நடன விற்பன்னர்களாகிய கோபிநாத் என்பவரிடம் "கதகளி"நடனமும், மீனாட்சிசுந்தரம்பிள்ளையிடம் பரதநாட்டியமும் கற்றுத் தேர்ச்சி பெற்றிருந்தார். இவர் பல நடன நிகழ்ச்சிகளில் திறமையாகப் பங்கேற்றுச் சிலகாலம் நடிகனாகவும் இருந்துள்ளார். சிறந்த நடன ஆற்றல் பெற்ற இவர் "யாழ் வேம்படி மகளிர் கல்லூரி", "இராமநாதன் மகளிர் கல்லூரி", "கொக்குவில் இந்துக் கல்லூரி" ஆகிய கல்லூரிகளில் நடன ஆசிரியராகப் பணியாற்றி உள்ளார். 1960ம் ஆண்டு திரு ஏரம்பு சுப்பையாவால் அரங்கேற்றப்பட்ட நடன நிகழ்ச்சி ஒன்றில் வவுனியா கலாமன்றம் இவரிற்குக் "கலைச்செல்வன்" என்ற பட்டமளித்துக் கௌரவித்தது. இவர் எழுதி அரங்கேற்றிய நாட்டியநாடகங்களில் "ஊர்வசி", "சுகன்யா", "குறிஞ்சிக்குமரன்"

போன்றவை சிறந்தன ஆகும். இவர் கொக்குவிலில் "கலாபவனம்" என்ற நாட்டியப் பாடசாலையை நிறுவி நடனக்கலை வளர்ச்சிக்கு நற்பணி ஆற்றி உள்ளார். இக் கலாபவனம் நாட்டியப் பாடசாலை இவரது மூத்த புதல்வியாகிய திருமதி சாந்தினி சிவனேசன் தலைமையில் இன்றும் பல மாணவர்களை நடனமணிகளாக மிளிரச் செய்துகொண்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. திரு ஏரம்பு சுப்பையா அவர்களின் நடன ஆற்றலைக் கண்டுகளித்த இணுவையூரைச் சேர்ந்த சபா ஆனந்தன் எனும் பெருமகனார் இவரைப் பாராட்டி "அபிநய அரச கேசரி" எனும் பட்டத்தை வழங்கிப் பெருமைப்படுத்தினார் எனவும் அறிகிறோம்.

ஓ. அருட்கவிமாமணி வே. செல்வநாயகம்

இவரது சொந்த ஊர் நயினாதீவு. திருமண சம்பந்தத்தினால் கொக்குவிலைத் தமது வசிப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து வந்தவர். இளமையிலேயே செய்யுள் இயற்றும் ஆற்றல் கைவரப் பெற்றதால் செய்யுள் பல ஆக்கித் தமிழ்மொழியை வளப்படுத்தியுள்ளார். கவியரங்கம் ஒன்றில் இவர் வழங்கிய செய்யுளின் சிறப்பைப் பாராட்டி அன்றைய நல்லைத் திருஞான சம்பந்த ஆதீன முதல்வர் **'அருட்கவி மாமணி"** என்ற பட்டமளித்து கௌரவித்துள்ளார். இவர் பாடிய செய்யுட்கள், இவர் வணங்கி வழிபட்ட திருத்தலங்களையும், அவற்றில் எழுந்தருளியிருக்கும் தெய்வங்களையும் போற்றும் பிரபந்தங்களாக அமைந்திருக்கின்றன. கதிர்காம வடிவேலர் பதிகம், நயினை ஸ்ரீ நாகபூஷணி பதிகம், நயினை வீரகத்தி விநாயர் பதிகம், நல்லூர் திருவிரட்டை மணிமாலை, கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியர் பதிகம், செல்வச் சந்நிதி உயர் வர்க்க விருத்தம், கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் பதிகம், கொக்குவில் மேற்கு மணியங்காடு சுப்பிரமணியர் உயர் வர்க்க விருத்தம் - திருவூஞ்சல், கொக்குவில் ஸ்ரீ வராகி அம்பாள் திருவூஞ்சல் என்பன இவரால் ஆக்கப்பட்டவையாகும். இவற்றுள் சில பிரபந்தங்கள் பேணப்படாமையால் இல்லாதொழிந்தன. இவரது சகோதரர்களால் நிறுவப்பட்ட யாழ்ப்பாணம் விவேகானந்தா அச்சகம் இவரது காலத்திலிருந்து வழுவில்லாத சுத்தமான பதிப்புக்குப் பெயர்பெற்றிருந்ததும் இங்கு குறிப்பிடத்ததக்கது.

கொக்குவில் ஊர் பலசமூக சேவையாளர்களைப் பெற்றெடுத்துள்ளது.

திரு. த. நீதிராசா

ஊரும், நாடும் புகழும்படி வாழ்ந்த செல்வந்தர் திரு. த. நீதிராசா பிறந்தஊர் கொக்குவில். இவர் பல நிறுவனங்களின் சொந்தக்காரராகவும் அவற்றின் நிர்வாக இயக்குனராகவும் பதவி வகித்தவராவார். இவர் ஒரு சமய சமரச சீலர். தமது செல்வத்தைச் சமய காரியங்களுக்கும், ஏழைகளுக்கும், தருமகாரியங்களுக்கும் தாராளமாக வழங்கிச் செந்தமிழையும், சமயத்தையும் பேணிவளர்த்திட உழைத்த வள்ளல். கொக்குவில் மேற்கில் புரவலர் த. நீதிராசாவின் இல்லம் இருந்த தெருவானது இவரைப் பெருமைப்படுத்தும் வகையில் "நீதிராசா வீதி" யென பெயரிடப்பட்டு இன்றும் அவ்வாறே அழைக்கப்பட்டு வருகின்றது.

திரு. மாணிக்கம் சுப்பிரமணியம்

கொக்குவில் மேற்கில் மாணிக்கம் - பாக்கியம் ஆகியோரிற்கு புதல்வனாகப் பிறந்த இவர் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும், பெரும் வர்த்தகருமாவார். வர்த்தகத்தின்மூலம் தான் திரட்டிய செல்வத்தைத் தான் கல்விகற்ற கொக்குவில் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கும், கொக்குவில் மேற்கு மக்களின் நலனிற்கும் பயன்படும் நோக்கில் வழங்கி உள்ளார். கே.கே.எஸ் வீதியிலிருந்து கிழக்கே செல்லும் ஆடியபாதன் வீதிக்கு வடக்காக சகல வசதிகளும் கொண்ட வகுப்பறைகள் அமைந்த மூன்றுமாடிக் கட்டிடத்தைக் கட்டிக் கொடுத்துள்ளார். இக்கட்டிடம் இன்று 'மாணிக்கம்-பாக்கியம் தம்பதிகளின் ஞாபகார்த்த நூ ற்றாண்டு மண்டபம்" என அழைக்கப்பட்டு வருகின்றது. இவர் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலைக்கும் ஓர் இரண்டுமாடிக் கட்டிடத்தைக் கட்டிக்கொடுத்துள்ளார். அத்துடன் கொக்குவில் மேற்கு ஆனைக்கோட்டை வீதியில் இயங்கி வந்த சனசமூக நிலையத்தை ரூபா 75 இலட்சத்துக்குமேல் செலவு செய்து மாடிக்கட்டிடமாகக் கட்டிக் கொடுத்துள்ளார். இதன் மூலம் இந் நிலையத்திற் தற்பொழுது சுகாதாரப் பகுதியினரால் தாய்-சேய் நலன் காக்கும் பிரிவு, நல்லூர் பிரதேச சபையினரால் இலவச சித்த ஆயுர்வேத வைத்திய சேவை, நூல் நிலையம், வாசிகசாலை, முன்பள்ளி போன்ற நற்பணிகள் இடம் பெறுகின்றன. திரு. மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களையும் அவரது குடும்பத்தினரையும் கௌரவிக்கும் பொருட்டு ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு மற்றும் முன்பள்ளி ஆகிய பிரிவுகளுக்கு "சுப்பிரமணியம் மாலதி ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு, முன்பள்ளி நிலையம்" எனப் பெயரிட்டு அழைக்கப்பட்டு வருகின்றது.

கொக்குவிலில் தோன்றிய அரசியல்வாதிகள்

திரு. ஏ. சபாபதி

1917ல் இலங்கைச் சட்டசபைக்கு இரண்டாவது தமிழ் அங்கத்தவராக நியமிக்கப்பட்ட பெருமைக்குரியவர் நமது ஊரின் மைந்தர் திரு. ஏ. சபாபதி ஆவார். இவர் 30 வருடங்களாக இந்துசாதனப் பத்திரிகையின் ஆங்கில ஏடான **HINDU ORGAN** ஆசிரியராகக் கடமையாற்றினார். இப் பெருந்தகை சைவத்திற்கும், தமிழிற்கும் ஆற்றிய தொண்டுகள் அளப்பில. இவர் இந்துக் கல்லூரி சபையிலும் அங்கத்தவராக இருந்து திரு.சபாரத்தின முதலியாருடன் இணைந்து கொக்குவில் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றி உள்ளார். இவர் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் நிர்வாகியாகவும் கடமை ஆற்றி உள்ளார். இவரை நினைவு கூரும் முகமாகக் கொக்குவிலில் அமைந்துள்ள "சபாபதி வீதியும்", கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், யாழ் இந்துக் கல்லூரியிலும் உள்ள விளையாட்டு இல்லங்களில் "சபாபதி இல்லம்" என்ற இல்லம் இருப்பதுவும் சான்று பகர்கின்றன.

திரு. சி. அருளம்பலம்

நம் ஊரிற்கு அரசியல்துறையில் அணிசேர்த்த இன்னொருவர் திரு சி. அருளம்பலம் ஆவார். இவர் ஒரு வழக்கறிஞர். கொக்குவில் கிராமசபைத் தலைவராகவும் இருந்து பெரும்பணி ஆற்றியவர். பின்னர் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியில் போட்டியிட்டு நல்லூர்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரானார். பாராளுமன்றத்தில் பதவி வகித்த காலத்தில் கொக்குவில் கிராமத்திற்கு தன்னாலான சேவையைச் செய்துள்ளார்.

கொக்குவில் பதியில் இயங்கி வரும் சனசமூக நிலையங்களும் அவ்வவ் குறிச்சியின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் பெரும் பங்கு ஆற்றி வருகின்றன. இவற்றின் செயற்பாடுகள் பற்றிய விபரங்கள் சனசமூக நிலையங்கள் பகுதியில் எடுத்து வரப்பட்டுள்ளன.

எம் ஊரில் அமைந்துள்ள கிராமசபை, மருத்துவச்சாலை, தபாற்கந்தோர் ஆகிய அரசாங்கசேவை நிறுவனங்களாலும் மக்கள் பயனடைந்து வருகின்றனர். மிக நீண்ட காலமாக கொக்குவில் புகையிரத நிலையம் ஓர் புகையிரத முகவர் நிலையமாகவே

கிழக்காக செல்லும் ஆடியபாதம் வீதியும், புகையிரதபாதையும் சந்திக்கும் இடத்தில் இயங்கிவந்தது. இதில் யாழ்தேவி அதிவேக புகையிரதம் தவிர்ந்த ஏனைய புகையிரதங்கள் தரித்துச் செல்லும். பின்னர் திரு சி. அருளம்பலம் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது புதிய புகையிரத நிலையம் அமைக்கப்பட்டு இலங்கையின் வடபகுதிக்கான புகையிரதங்கள்யாவும் தரித்துச் சென்று மக்களிற்கு பெரும் பயனளித்த நிலையமாக விளங்கியபோதும் நாட்டில் ஏற்பட்ட இனமோதல் காரணமாக 1990ம் ஆண்டளவில் புகையிரதசேவை தடைப்பட்டமையால் இந்நிலையமும் செயலிழந்துள்ளது. முன்னர் கொக்குவில் கிராமசபை அமைந்திருந்த கட்டிடத்தில் கிராம நீதிமன்றம் ஒன்றும் இயங்கி வந்துள்ளது.

கொக்குவில் என்றாலே பலருக்கும் ஞாபகம் வருவது "கொக்குவில் இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம்". இப்பஞ்சாங்கத்தை முதன்முதலில் கணித்தவர் சோதிடர் இராமலிங்க முனிவர். 341 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தை அரசுபுரிந்த கூழங்கை ஆரியச் சக்கரவர்த்தி (ஆதாரம்:- இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம்) இவரை இந்தியாவிலிருந்து வரவழைத்திருந்தார். இராமலிங்க முனிவரைத் தொடர்ந்து இவரது வழிவந்தோரினால் இப் பஞ்சாங்கம் கணிக்கப்பட்டு கையெழுத்துப் பிரதியாக ஆண்டுதோறும் வெளிவந்தது. நாளடைவில் கி.பி 1859ல் சந்திரசேகரஐயரின் மகனாகிய இரகுநாதஐயர் தனது இல்லத்தில் "சோதிடப் பிரகாச அச்சுயந்திர சாலையை" நிறுவி பஞ்சாங்கத்தை விரிவாக்கம் செய்தார். பின்னர் இவர் தனது சொந்த மனையை "சோதிடப் பரிபாலன மடம்" என ஆக்கியதுடன், தான் தேடிய தனங்கள் யாவற்றையும் அம்மடத்திற்கே "ஞாலம் உள்ள அளவும் சோதிடம் நிலைத்து நிற்க" தருமசாதனமாக வழங்கி உள்ளார். இத்தகைய பெருமகனாரின் சந்ததியில் தோன்றிய இ. வெங்கடேசஐயர் தமது மூதாதையர் வழிநின்று வாக்கியப் பஞ்சாங்கத்தின் மகிமை குன்றாமல் அன்றுபோல் இன்றும் சோதிடத்தை ஆய்ந்து கணித்து இலங்கை, இந்தியா மட்டுமன்றி தமிழர் வாழும் பிரதேசங்கள் எங்கிலும் பலரும் போற்ற வெளியிட்டு வருகின்றார்.

இவ்வாறெல்லாம் பெருமையுடன் மலர்ந்திருந்த "கொக்கூர்" எனும் நம் கொக்குவில் ஊர் தவிர்க்க முடியாத தமிழ் ஈழத் தாயக விடிவிற்கான போரிற்கும் எண்ணிலடங்கா தலைசிறந்த போராளிகளை வழங்கி தன்னகத்தே பெருமை கொள்கிறது. இதற்கு சான்றாக

தலைவரின் மெய்ப்பாதுகாவலர்களாகவும், இந்திய அமைதிப்படை எமது பிரதேசத்தை ஆக்கிரமித்திருந்தபோது யாழ்ப்பாணம், மானிப்பாய் பகுதிகளுக்கு பொறுப்பாக இருந்து இந்திய அமைதிப்படைக்கு எதிராகக் களமாடி இந்திய அமைதிப்படைக்கு சிம்ம சொப்பனமாக விளங்கி, கூலிப்படையினரால் காட்டிக் கொடுக்கப்பட்டு வீரச்சாவை தழுவிய "இம்ரான் (சச்சிதானந்தன்), பாண்டியன் (ஸ்ரீ)" ஆகியோரின் வீரத்தின் சான்றாக தலைவரின் தமிழ் மறவர் படையணிகளில் எம் ஊரின் மைந்தர்கள் பெயரில் "இம்ரான்-பாண்டியன்" எனும் சிறப்புப் படையணி இருந்ததனைக் கூறலாம்.

இன்று நம் ஊராகிய கொக்குவில் போரின் தாக்கத்தால் நலிவுற்று மாற்றங்கள் பெற்றுக் காணப்படுகின்றது. தொன்றுதொட்டு ஒரே குடும்பமாக சீரும் சிறப்போடும் வாழ்ந்த எம் மக்களிற் பலர் இப்போது இங்கில்லை. "கல்லெறி கண்டு பலதிசை பறந்திடும் புள்ளினம்" போல் எம்மண்ணின் மக்களும் புலம்பெயர்ந்து பிரித்தானியா, கனடா, டென்மார்க், பிரான்ஸ், சுவிஸ், சுவீடன், ஜேர்மனி, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர் போன்ற உலகின் பல்வேறு நாடுகளுக்கும் சென்று வாழ்ந்து வருகிறார்கள். அந் நாடுகளே இன்று இவர்களுக்கு சொந்த இடமாகிவிட்டன. எனினும் இவர்களால் தாம் பிறந்த கொக்குவில் ஊரின் இனிய நினைவுகளை மறந்திட முடியுமா? அதன் விடிவிற்காய் வாழாதிருக்கவும் முடியுமா?

****

இயல் -3

வணக்கத் தலங்களும் அவற்றின் வளர்ச்சியும்

உ

ஓம் முருகா

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் (புதுக்கோயில்)

"பேற்றைத் தவம் சற்றும் இல்லாத என்னைப் பிரபஞ்சம் என்னும்
சேற்றைக் கழிய வழி விட்டவா! செஞ்சடாடவி மேல்
ஆற்றைப், பணியை, இதழியைத், தும்பையை, அம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன் கிருபாகரனே"

- அருணகிரிநாத சுவாமிகள்-

இவ்வாலயம் இற்றைக்கு நூற்று எழுபத்தைந்து வருடங்களுக்கு முன் அதாவது 1830ல் இச் சுற்றாடலில் வாழ்ந்த சைவ நன்மக்களால் தாபிக்கப்பட்டது. இவர்கள் தாங்கள் சுதந்திரமாக இறைவழிபாடு செய்து மனநலம் பெறுவதற்கும் உயிர் மேல்நிலை அடைவதற்கும் "குறைவிலா நிறைவாய் கோதிலா அமுதாய்" விளங்கும் இறைவன் திருக்கோயில் இன்றியமையாதெனக் கருதி இவ் முருகன் ஆலயத்தை அமைத்தார்கள். முருகப்பெருமான் இங்கே "கிருபாகரன்" என்ற திருப்பெயருடன் ஸ்ரீவள்ளி தேவசேனா சமேதராக வீற்றிருந்து அருளாட்சி புரிகிறார்.

தோற்றம்:

ஆரம்ப காலத்தில் திருவாளர்கள் சண்முகம் முருகேசு, வேலாயுதர் முருகேசு, சட்டநாதர், சின்னப்பு, கதிரித்தம்பு. அம்பலவாணர், தாமோதரம்பிள்ளை ஆகியோரைக் கொண்ட ஒரு "பஞ்சகர்த்தா சபை" ஏற்படுத்தப்பட்டு அச்சபையினால் கோவில் அமைக்கும் பொறுப்பு சண்முகம் முருகேசுவிடம் ஒப்படைக்கப்பட்டது. சபையினர் கோயிலை நிறுவுவதற்காக "நினைக்க முடிச்சான்" வளவு எனக் கொக்குவில் தோம்பில் பதியப்பட்டிருக்கும் (பதிவு 1786) காணியின் ஒரு பகுதியை வாங்கித் தர்மசாதனம் செய்துள்ளனர். அத்துடன் சண்முகம் முருகேசுவும் தனது நிலத்தின் ஒரு பகுதியை

வழங்கியுள்ளார். இரு நிலப்பகுதிகளும் இன்று கோயில் நிலங்களாக இருக்கின்றன.

நிர்மாணம்:

சண்முகம் முருகேசுவின் அயராத முயற்சியினால் திருக்கோவிலின் பிரதான அங்கங்களான கருவறை, விமானம், அர்த்த மண்டபம், முன்மண்டபம், விநாயகர் சந்நிதி, திருமஞ்சனக் கிணறு, மடைப்பள்ளி, களஞ்சிய அறை ஆகிய கட்டிடங்கள் கட்டிமுடிக்கப்பட்டன. திருக்கோவிலின் முக்கிய பகுதிகள் உருவானபின் விநாயகப்பெருமான் சிலையும், வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியப்பெருமான் சிலையும் பிரதிட்டை செய்யப்பெற்று கும்பாபிஷேகம் செய்துவைக்கப்பட்டது. அந்நாளில் கொக்குவிலில் வாழ்ந்த பிரபல பஞ்சாங்க கர்த்தாவாகிய இரகுநாதையர் மகாகும்பாபிஷேகத்தை நடாத்திவைத்தார்.

திருப்பணிகள்:

ஊர்மக்களின் உபயங்களாகத் தம்பமண்டபம், வசந்தமண்டபம், சுற்றுமதில், வாகனசாலை, வைரவர் சந்நிதி, கொடித்தம்பம், யாகசாலை, தேர், பெரிய கண்டாமணி இன்னோரன்ன பல்வேறு திருப்பணிகள் காலம்தோறும் நிறைவேற்றப்பட்டு திருக்கோவில் விரிவாக்கம் பெற்றது. 31.03.1966 இல் நடந்தேறிய கும்பாபிஷேகத்தின்போது அமைக்கப்பட்ட வேணுகோபாலர்சந்நிதி, நவக்கிரகசந்நிதி, பழனியாண்டவர் கோயில், மடைப்பள்ளிக்கிணறு, உள்வீதிக் கொட்டகை போன்ற திருப்பணிகளும் ஊர்மக்கள் சிலரின் தனித்தனி உபயங்களாக நிறைவேற்றப்பட்டுள்ளன. சண்டேஸ்வரர்சந்நிதி, பழனியாண்டவர் கோயில் மண்டபம் ஆகிய இரு திருப்பணிகளும் 1986ம் ஆண்டு ஆகமவிதிகளுக்கமையகட்டப்பட்டுள்ளன. 1986ம் ஆண்டு நடைபெற்ற திருக்கோவில் குடமுழுக்கு விழாவை சிவாச்சாரியார் பிரதிஸ்டா சிரோமணி, வேதாகமகிரியாசூடாமணி சாமி விஸ்வநாதக்குருக்கள் தலைமை ஏற்று நடாத்திவைத்தார்.

திருக்கோவில் புதுப்பித்தல்:

திருக்கோவில் விமானங்கள், மண்டபங்கள், கட்டடங்கள் ஆகியவை பழுதடைந்த நிலையில் திருக்கோயிலைப் புதுப்பிக்கும் நோக்கில் 1994ம் ஆண்டு மூலமூர்த்தியும், பரிவாரமூர்த்திகளும் பாலஸ்தாபனம்

செய்யப்பட்டன. திருத்த வேலைகள் ஆரம்பித்து நடந்து கொண்டிருந்த வேளையில் சில எதிர்பாராத சம்பவங்களினாலும், போர்ச்சூழலினாலும் வேலைகள் தடைப்பட்டன. சில நாட்களின் பின்னர் புதிய பரிபாலனசபையின் விடாமுயற்சியாலும், முருகன் அடியார்களின் ஒத்துழைப்பாலும் பின்வரும் திருப்பணிகள் நடந்தேறின.

1. விமானங்கள் புதுப்பித்தல்
2. பிரதான மூன்று மண்டபங்கள் மூடுசாந்துபோட்டு (Cement concrete roof) நிர்மாணித்தல்
3. முத்துக்குமாரசுவாமி, மகாலட்சுமி அம்பாள், தில்லைநடராஜப்பெருமான், தட்சணாமூர்த்தி, பாலமுருகன் ஆகிய பரிவார மூர்த்திகளுக்கு புதிய சந்நிதிகள் அமைத்து ஸ்தாபிக்கப்பட்டன.
4. நவக்கிரகங்களின் சந்நிதி, தேரடிவைரவர் சந்நிதி இடமாற்றம்
5. வசந்தமண்டபம், யாகசாலை, களஞ்சிய அறை யாவும் அழகாகப் புதுப்பிக்கப்பட்டு சீமன்ற் கொங்கிறீற்றினால் கூரையிடப்பட்டமை

ஆகியவை நன்முறையில் நிறைவேற்றப்பட்டன. இதனைத் தொடர்ந்து புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் 10.04.1998 அன்று கோவில் சிவாச்சாரியார் சிவஸ்ரீ சிவதாசக்குருக்களினால் நடாத்திவைக்கப்பட்டது. மலேசியா பொன்னையா (துரைராசா) குடும்ப உபயமாக சமயகுரவர் நால்வருக்கும் சந்நிதி அமைத்து 12.12.2003இல் அப்பெருமக்களுடைய தாமிர விக்கிரகங்களும் திருக்கோவிலில் புதிதாக பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளன. திருமதி பூப்பிள்ளை நடராசா குடும்பத்தின் உபயமாக கோவிலுக்கு 2001ம் ஆண்டு பங்குனி உத்தரத்தன்று வள்ளி தேவசேனா சமேத முருகமூர்த்தி (சிறியது) கும்பாபிஷேகம் செய்து அன்பளிப்புச் செய்யப்பட்டது. திருக்கோயில் ஆரம்பித்த காலத்திற்குப்பின் பலவித திருப்பணிகள் செய்யப்பட்டு ஆலயம் இன்றுள்ள அளவிற்கு பரந்து விரிந்திருக்கிறது.

திருக்கோயில் வீதிகள்:

திருக்கோவிலின் இருமருங்கும் கொக்குவில் இந்துக் கல்லூரியும், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையும் முறையே வடக்கும், தெற்குமாக அமைந்துள்ளன. இதனை

"அருங்கலைகள் பலபயிற்றும் மருங்கூட மிருபாலா
நெருங்கிநிலை கொள்ளவருள் நீடுகிரு பாகரனே"

"ஒருங்கிமன முனைமுயங்க வுன்பாத தாமரைகள்
வருங்கால மென்றுகொலோ வடிவேற்கைப் பெருமானே"

என்று பெரியார் அ. நாகலிங்கம் அவர்களின் பாடல் உணர்த்தி நிற்பதைக் காணலாம்.

ஆலயத்தின் மேற்கு வீதியாகிய காங்கேசன்துறை வீதியின் கிழக்குப் பக்கத்தில் அமைந்த கடைகளும், வடக்கு வீதியில் உள்ள வள்ளியாச்சி கடையும் அடியார்களின் பேராதரவினால் கட்டப்பட்டவை ஆகும். அருகே உள்ள கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் கொக்குவில் வாழ் இளைஞர்களினால் 1979ம் ஆண்டு கட்டடவேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 1980 தை 14ம் நாள் தைப்பொங்கலன்று திறந்து வைக்கப்பட்டது. தெற்கு வீதியில் அந்நாளில் ஆடியபாதன் எனும் பெருமகன் உண்டாக்கிய கேணி இருந்த இடத்திலேயே கோயில் தீர்த்தக்கிணறு அமைந்து இப்பிரதேசத்து முந்திய வரலாற்றை நினைவூட்டி நிற்கிறது. ஆரம்பப் பாடசாலையின் வடக்கு எல்லையிலிருந்து தெற்கு வீதிவரை காங்கேசன்துறை வீதி கிழக்குப்பக்கத்தில் அமைந்த மாடிக்கட்டடமும் மற்றைய கடைகளும் கோவிலின் உடைமைகளாகும்.

உற்சவமூர்த்திகள்:

திருக்கோவிலில் உள்ள வெண்கலத்தினாலான தாமிரஉற்சவமூர்த்திகளும் வெவ்வேறு அடியார்களின் உபயங்களாகும். இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள பெரியதும், அழகோடு கூடியதுமான ஆறுமுகசுவாமி மூர்த்தம் சு. காசிப்பிள்ளை என்பவரால் ஊரிலும், மலேசியாவிலும் பணம் சேர்த்து ஆலய முன்றலில் வார்த்தெடுக்கப்பட்டது. ஆறுமுகமூர்த்தம் வார்ப்பின்போது அங்கு கூடியிருந்த மக்கள் தாம் அணிந்திருந்த நகைகளையும் கழற்றி அவ்வார்ப்பில் இட்டுள்ளனர். இந்நிகழ்ச்சி பற்றி "ஒருமுறையில் உருவான சுவாமி" என எமது மூத்த தலைமுறையினர் ஆறுமுகப்பெருமானைப் போற்றியுள்ளனர். எழுந்தருளிப் பிள்ளையார் காசிப்பிள்ளையின் (பிள்ளைத்தம்பி) தனிஉபயமாகும்.

திருக்கோயில் நிர்வாகம்:

திருக்கோவிலின் நிர்வாகம், நித்தியபூசை ஒழுங்குகள் யாவற்றையும் ஆரம்பத்தில் சண்முகம் முருகேசுவே கவனித்து வந்தார். அவருக்குப்பின் ச. சபாரத்தின முதலியார் இப்பணியை மேற்கொண்டார். அவரைத் தொடர்ந்து வி.கே. ஞானசுந்தரம் தலைமையில் மருதப்பாவும், காசிப்பிள்ளையும் பரிபாலன வேலைகளை மேற்கொண்டனர். வி.கே. ஞானசுந்தரத்தின் மறைவிற்குப்பின் சிறிது காலம் ஆலயக் குருக்களே வழிபடுவோரின் உதவியை நேரில் பெற்று கோயில் பூசைகளை நடாத்தினார். பின்னர் ஊர்மக்கள் ஒன்றுகூடி ஆண்டுதோறும் பரிபாலனசபைகளை நிறுவி கோயிலின் சகல அலுவல்களையும் நிர்வகித்து வந்தனர். பரிபாலனசபைகளில் பிரதான பங்கெடுத்துப் பணியாற்றிய திரு. விசுவலிங்கம், திரு. முத்துத்தம்பி, திரு. இராசரத்தினம், திரு மாணிக்கவாசகர், திரு வினாசித்தம்பி, சின்னத்தம்பி காசிப்பிள்ளை, திரு மருதப்பு, திரு சிற்றம்பலம், திரு செ. நடராசா, திரு சதாசிவம் பொன்னம்பலம், திரு சோமசுந்தரம், திரு ஜெயரெட்ணம், திரு வ. குலசிங்கம், திரு ந. பொன்னம்பலம், திரு பா. சடாட்சரம், திரு த. .பாக்கியராசா, திரு சி. அம்பிகாபதி ஆகியோரின் அர்ப்பணிப்பான தொண்டுகள் பாராட்டத்தக்கவையும், மறக்கமுடியாதவையும் ஆகும். ஆண்டுதோறும் ஏற்படுத்தப்பட்டு வந்த புதுக்கோயில் பரிபாலனசபை 1962ம் ஆண்டு கார்த்திகை 30ம் திகதி (30-11-1962) சங்கஅமைப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. (பதிவு எண் S.149). தற்போது திருக்கோவில் பரிபாலனசபையின் அங்கத்துவ சந்தா ஆயுட்சந்தா ரூபா 1000/= ஆகவும், மாதச்சந்தா ரூபா 5/= ஆகவும் உள்ளன.

திருக்கோவில் சிவாச்சாரியார்கள்:

திருக்கோவிலின் முதல் சிவாச்சாரியாராக இருந்தவர் சின்னப்பா ஐயர் ஆவார். பின்னர் அவரது தம்பியாகிய ஐயாத்துரை ஐயரும் அவரைத் தொடர்ந்து அவரது மருகர் இராசரத்தின குருக்களும் சிவாச்சாரியார்களாக இருந்துள்ளனர். இராசரத்தின குருக்களின் வழித்தோன்றல்கள் பூசைகளை நடாத்தி வரும்பொழுது, இவ்வரன்முறையில் வந்த குமாரசாமிக் குருக்களின் பின் தகுந்த குருக்கள் இருக்கவில்லை. இது பெரும்குறையாக இருந்தபோதும்

கோயில் பூசைகளும், உற்சவங்களும் செவ்வனே நடைபெற பரிபாலனசபையார் அதற்கேற்ற நடவடிக்கைகளை எடுத்திருந்தனர். 1982ம் ஆண்டு தொடக்கம் குமாரசாமிக் குருக்களின் குடும்பத்தில் வந்த சிவஸ்ரீ சிவதாசக்குருக்கள் (ரவி ஐயர்) பொறுப்பாக இருந்து கோயில் பூசைகளை செவ்வனே நிறைவேற்றி வருகிறார்.

திருக்கோவில் நித்தியபூசைகள்:

1957ம் ஆண்டு ஐப்பசி மாதத்திலிருந்து ஆலயத்தில் நித்தியபூசைகள் நான்கு காலப் பூசைகளாக நடைபெறுகின்றன. இவ் நித்தியபூசைகள் அதிகாலை 5:00 மணி (திருவனந்தல்), காலைப்பூசை 9:00 மணி, மத்தியானப்பூசை 12:00 மணி, மாலைப்பூசை 6:00 மணி (சாயரட்டை) ஆகிய நேரங்களில் நடைபெறுகின்றன.

1987ல் இந்திய அமைதிப்படையின் இராணுவ நடவடிக்கையினாலும், 1996ல் யாழ்ப்பாணக் குடிமக்கள் இடப்பெயர்வினாலும் இரு சந்தர்ப்பங்களிலும் கோவில் பூட்டப்படவேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் 14-10-1987 முதல் 22-12-1987 வரையும், 30-10-1995 முதல் 02-05-1996 உள்ள காலப்பகுதிகளில் நித்திய பூசைகளோ விழாக்களோ நடைபெறவில்லை. நீடித்திருந்த நாட்டின் அவலநிலையிலும் கோவில் பூசைகள் எவ்வித இடையூறுமின்றி நடைபெற பன்னிரண்டு முருகன் அடியார்கள் ஒவ்வொரு மாதப்பூசைச் செலவையும் ரூபா 2000/=மாக 2007ம் ஆண்டுவரை ஏற்றுக்கொள்ள முன்வந்தனர். இவ் ஏற்பாடு இப்போது மாதம் ரூபா 6000/= மாக உயர்த்தி நடைமுறையில் உள்ளது.

திருக்கோவில் உற்சவங்கள்:

ஆலயம் நிறுவப்பட்ட காலங்களில் கந்தபுராணப்படிப்பு, அறுபத்துமூவர் குருபூசைகள் சிறப்பாக நடைபெற்று வந்துள்ளன. இவற்றை முன்னின்று நடத்தியவர்களில் திரு.சபாரத்தின முதலியார், திரு.ஐயாத்துரை, திரு.கந்தப்பிள்ளை, திரு.மருதப்பு, திரு.செல்லத்துரை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். பின்னர் வருடாவருடம் அலங்கார உற்சவமும் நல்லமுறையில் நடைபெற்று வந்துள்ளது. 1927ல் கோவில் கொடித்தம்பம், தேர், யாகசாலை ஆகியவை அமைக்கப்பட்ட பின்னர் மகோற்சவ விழாக்கள் ஆரம்பமாயின.

முதன் மகோற்சவத்தை வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் பிரதம குருக்களாக இருந்த வைத்தியநாதக்குருக்கள் தொடக்கிவைத்தார். பத்துநாட்கள் உற்சவத்தில் பிரதான விழாக்களான கொடியேற்றம் திரு.மு.கந்தையா குடும்பத்தினரதும், தேர் திரு.பத்மநாதபிள்ளை குடும்பத்தினரதும், தீர்த்தம் திரு.சிற்றம்பலம் குடும்பத்தினரதும் உபயங்களாகவே அன்றுதொட்டு இன்றுவரை நடந்து வருகின்றன. 1979ல் தேர்த்திருப்பணிச்சபை ஒன்று நியமிக்கப்பட்டு புதிய சித்திரத்தேர் நிர்மாணிக்கப்பட்டது. இரதோற்சவம் இப்போது தனி உபயமாகச் செல்வரெத்தினம் ஸ்ரீராம் (லண்டன்) செய்து வருகின்றார்.

நாட்டின் போர்ச் சூழல் காரணமாக 1987. 1988லும், திருக்கோவில் மூர்த்திகள் பாலஸ்தானம் செய்திருந்தபடியால் 1995, 1996, 1997 ஆகிய காலப்பகுதிகளுமாகிய மேற்கூறிய ஐந்து வருடங்களிலும் ஆலய மகோற்சவங்கள் நடைபெறவில்லை.

திருக்கோவில் வாகனங்கள்:

திருக்கோவிலில் உள்ள வாகனங்களில் முன்னர் பாவனையிலிருந்த பெரிய மயில், பெரிய குதிரை, ஆட்டுக்கடா, சூரன் ஆகியன காத்திரமானவையும், சிறந்த அமைப்புடையனவையுமாகும். இவற்றோடு இன்று சில புதிய வாகனங்களும், புதிய சூரனும் கோவிலின் வழிபடுவோர்களால் உபயங்களாக வழங்கப்பட்டுள்ளன. புதுக்கோவிலில் உள்ள பெரிய சூரனின் தோற்றம் பற்றிக் கோவில் வெளியீடான "பிரபந்தத்திரட்டு-நான்காம் பாகம்" எனும் நூலில் கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"புதுக்கோவிலில் இருக்கும் பழைய சூரன் வேறொரு கோவிலிலும் இல்லாத முறையில் உருவமைப்பில் மிகவும் பெரியதாகவும் அழகுடையதாகவும் விளங்கியது. இது கடந்த நூ ற்றாண்டின் முற்பகுதியில் மா. வேலுப்பிள்ளையின் உபயமாக வட்டுக்கோட்டை ஆசாரியாரால் நிர்மாணிக்கப்பட்டதென்றும், அங்கிருந்து எட்டு (8) ஊர்மக்கள் தோளில் காவிக் கொக்குவிலுக்கு கொண்டுவந்து சேர்த்தார்கள் என்றும் எமது மூத்த தலைமுறையினர் கூறுவர்" முன்னை நாட்களில் இவ்வாலயத்தில் ஐப்பசி மாதத்தில் நடக்கும் மானம்பூ உற்சவத்திற்கு கிருபாகரப்பெருமான் தேவியர் இருவருடனும் பெரிய குதிரைவாகனத்தில் எழுந்தருளி காங்கேசன்துறை

வீதியால் தலையாளி ஞானவைரவர் கோவிலுக்கு வாழைவெட்ட அம்பு போடப்போயத் திரும்புவது வழக்கம். அந்நேரத்தில் கிருபாகரப்பெருமானின் அருள்பொழியும் திருக்கோலத்தையும் பெருமான் ஆரோகணித்திருக்கும் பெரிய குதிரைவாகனத்தின் அழகையும், கெம்பீரத்தையும், தோற்றப்பொலிவையும் கண்டு வியக்காதார் இல்லை.

திருக்கோவிலின் புதிய சித்திரத்தேர்:

திருக்கோவிலின் முன்னைய கட்டுத்தேர் பழுதடைந்த நிலையில் புதியதேர் அமைக்க சித்திரத்தேர் அங்குரார்ப்பணக்கூட்டம் 30-06-1979இல் நடைபெற்றது. அன்று "தேர்த்திருப்பணிச்சபை" என ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இச்சபை இரு செயற்குழுக்களாக இயங்கியது. ஊரில் செயற்பட்ட குழுவில் முக்கிய பங்காற்றியவர்கள் திரு S.P. வேலாயுதபிள்ளை, திரு ஏ. குலசிங்கம், திரு மு. சோமசுந்தரம், திரு சு. .நாகலிங்கம், திரு பொ. தேவராசா ஆகியோராவர். செயற்குழுவின் கொழும்புக்கிளையில் திரு ஏ. சண்முகமும், திரு செ. இரத்தினப்பிரகாசமும் பிரதான பங்கெடுத்துள்ளனர். தேர்த்திருப்பணிச்சபையின் அயரா உழைப்பினாலும், தாயகத்திலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் வாழ்ந்துவரும் மக்களின் பெரிய ஒத்தாசையினாலும் புதிய சித்திரத்தேரும், தேர்க்கொட்டகையும் உருவாக்கம் பெற்றன. புதுக்கோவிலின் சித்திரத்தேர் அறுகோண அமைப்புடனும், பன்னிருயாளிகளும் கொண்டு புதியமுறையில் அமைக்கப்பட்டுள்ளது. புதிய சித்திரத்தேரும், தேர்க்கொட்டகை வேலைகளும் முடிவடைந்தபின் வெள்ளோட்டவிழா 23-05-1983ல் கோலாகலமாக நடந்தேறியது. அதனைத்தொடர்ந்து வருடாவருடம் மகோற்சவ ஒன்பதாம் நாள் நடைபெறும் தேர்த்திருவிழாவன்று ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத ஆறுமுகப்பெருமான் சித்திரத்தேரில் எழுந்தருளி "நையாத மனத்தினையும் நைவித்து" அருள்சொரிந்து வீதியிலே உலாவரும் காட்சி இத்தலத்தின் சிறப்பாகும்.

தேர்த்திருப்பணிமலர்:

வெள்ளோட்டவிழாவன்று பின்நேரம் இரு முக்கிய நிகழ்ச்சிகள் நடந்தேறின. முதலாவதாக மாவட்ட நீதிபதி திரு. கி. பாலகிட்னர் தலைமையில் புதிய சித்திரத்தேரை நிர்மாணித்த

ஸ்தபதி கலாகேசரி திரு ஆ. தம்பித்துரை கௌரவிக்கப்பட்டார். அடுத்து திருமதி அமிர்தாம்பிகை சதாசிவம் தலைமையில் தேர்த்திருப்பணிச்சபையாரால் அற்புதமான "தேர்த்திருப்பணிமலர்" ஒன்று வெளியிடப்பட்டது. மலரின் முதற்பிரதியை பிரபல வாக்கியபஞ்சாங்க கர்த்தாவாகிய பிரம்மஸ்ரீ வெங்கடேஸ்வரஐயர் பெற்றுக்கொண்டார். தேர்த்திருப்பணி மலரின் சிறப்பினை அனுபவித்து அருட்கவி சி.வினாசித்தம்பி பாடிய செய்யுள்களில் ஒன்று:

"திருத்தொண்டுச் செல்வர்கள்! தேர்த்திருப்பணி மலரைக்கற்றுக்
கருத்தினிற் கொக்கூர்க் கந்தன் காட்சியைக் கண்டேன் அன்னான்
தரித்திடு மயிலைக் கண்டேன் தனிக்கொடி யசையக் கண்டேன்
கரத்தினில் வேலைக் கண்டேன் கஜவல்லி வள்ளி கண்டேன்."

என்பதாகும்.

மேலும் காஞ்சிபுரம் க. வச்சிரவேல்முதலியார் "கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியின் தேர்த்திருப்பணி மலர் போற்றிக் கொள்ளத்தக்கது அப்படியே போற்றிக் கொண்டுள்ளேன். இறைவன் சம்பந்தமாக மக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அத்துணைப் பொருளும் அதில் தரப்பட்டுள்ளன. அதைப் பெறுவதற்கு ஒருவர் புண்ணியம் செய்திருத்தல் வேண்டும்" எனக்குறிப்பிட்டுள்ளமையும் நினைவுகொள்ளத்தக்கது.

தேர்த்திருப்பணிமலர் கணக்கால் தேறியபணம், தேரும்,தேர்க்கொட்டகையினதும் பராமரிப்புச் செலவுகளுக்காக "புதுக்கோயில் தேர் நிதி" என்ற நம்பிக்கை நிதிக்கணக்கில் இடப்பட்டுள்ளது. ரூபா 26,000 துடன் ஆரம்பிக்கப்பட்ட இந்நிதி ரூபா 100,000 மாக திரு. இரத்தினப்பிரகாசம் மிகுதிப்பணம் போட்டு உயர்த்தியுள்ளார். அண்மையில் இவரது இளவல் திரு.த.செ. நடராசா இந் நிதிக்கு ரூபா 100,000 அன்பளிப்புச் செய்து, இப்போது இந்நிதி ரூபா 200,000 மாக உள்ளது.

திருக்கோயில் இலக்கியம்:

அடியார்கள் பலர் கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் வீற்றிருந்து அருள்புரியும் மூலமூர்த்தியாகிய ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத கிருபாகரப்பெருமான் மீதும், மற்றும் பரிவார மூர்த்திகளாகிய சித்தி விநாயகர், வேணுகோபாலர்,

தட்சணாமூர்த்தி ஆகியவர்கள் மீதும் பல பக்திப் பனுவல்கள் பாடியுள்ளார்கள். அவையாவன:

கிருபாகரர் மீது பாடப்பெற்றவை:

கொக்குவில் கிருபாகர சுப்பிரமணியர் ஆசிரிய விருத்தம், ஊஞ்சல், எச்சரிக்கை, பராக்கு
ச. சபாரத்தினப்பிள்ளை (குகதாசர்)

கொக்குவில் சிவசுப்பிரமணியர் மும்மணிக்கோவை
ச. சபாரத்தினப்பிள்ளை (குகதாசர்)

கொக்குவில் சிவசுப்பிரமணியர் வெண்பா அந்தாதி
ச. சபாரத்தினப்பிள்ளை (குகதாசர்)

கொக்குவில் சிவசுப்பிரமணியர் நான்மணிமாலை
ச. சபாரத்தினப்பிள்ளை (குகதாசர்)

கொக்குவில் சிவசுப்பிரமணியர் சரவணபவமாலை
ச. சபாரத்தினப்பிள்ளை (குகதாசர்)

கொக்குவில் சிவசுப்பிரமணியர் தோத்திரமாலை
அருட்கவி சி. விநாசித்தம்பி

கொக்குவில் சிவசுப்பிரமணியர் தோத்திரம்
அருட்கவி சி. விநாசித்தம்பி

கொக்குவில் நவரத்தின மணித் தங்கரதமாலை
அருட்கவி சி. விநாசித்தம்பி

கொக்குவில் குமர கிருபாகரர் ஊஞ்சல்
பண்டிதர் மு. சின்னத்தம்பி

கொக்குவில் சிவசுப்பிரமணியர் கலித்துறை அந்தாதி
பண்டிதர் மு. சின்னத்தம்பி

கொக்குவில் சிவசுப்பிரமணியர் தேரேறி வந்து
பண்டிதர் மு. சின்னத்தம்பி

கொக்குவில் கிருபாகரன் தேர் உலா
அ. நாகலிங்கம்

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியர் அந்தாதி
அ. நாகலிங்கம்

கொக்குவில் புதுக்கோயிற் கந்தன் கலம்பகமாலை
அ. நாகலிங்கம்

கொக்குவில் சிவசுப்பிரமணியர் தாண்டகப்பத்து
அ. நாகலிங்கம்

கொக்குவில் வேலன் பாட்டு, சிந்தியற்பத்து,

குறட்பத்து, சைவஉரன், தேவபாணி

அ. நாகலிங்கம

கொக்குவில் புதுத்தேர் அகவல்

பண்டிதர் ச. அமிர்தாம்பிகை

கொக்குவில் ஆறுமாமுகன் அருட்பேராயிரம்

பண்டிதர் ச. சுப்பிரமணியம்

கொக்குவில் கிருபாகரர் திருப்பள்ளியெழுச்சி

செ. வேலாயுதபிள்ளை

கொக்குவில் வேலோன் அருள்வேட்டல்

செ. வேலாயுதபிள்ளை

கொக்குவில் சிவசுப்பிரமணியர்பதிற்றந்தாதி

செ. வேலாயுதபிள்ளை

கொக்குவில் கிருபாகரர் இரட்டை மணிமாலை

செ. வேலாயுதபிள்ளை

கொக்கூர் ஒருபா ஒருப∴து

செ. வேலாயுதபிள்ளை

கொக்குவில் சேவல் விருத்தம்

செ. வேலாயுதபிள்ளை

கொக்குவில் மயில் விருத்தம்

செ. வேலாயுதபிள்ளை

கொக்குவில் வேல் விருத்தம்

செ. வேலாயுதபிள்ளை

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியர் பதிற்றுப் பத்து அந்தாதி

செ. வேலாயுதபிள்ளை

கொக்குவில் முத்துக்குமாரசுவாமி ஊசல்

சாமிநாதஐயர்

கொக்குவில் குமரன் திருவெழு கூற்றிருக்கை

செ. வேலாயுதபிள்ளை

கொக்குவில் குமரன் நவமணிமாலை

செ. வேலாயுதபிள்ளை

கொக்கூர் குமரன் அட்டகம்

செ. வேலாயுதபிள்ளை

கொக்குவில் சிவசுப்பிரமணியர் கலிவெண்பா

செ. வேலாயுதபிள்ளை

கொக்கூர்க் குமரன் ஆற்றுப்படை

செ. வேலாயுதபிள்ளை

கொக்கூர் ஏசல்

செ. வேலாயுதபிள்ளை

கொக்குவில் குரு அருள் வேண்டல்

அ. நாகலிங்கம்

கொக்குவில் கிருபாகரர் முத்தகப்பத்து

அ. நாகலிங்கம்

கொக்குவில் முருகன் கீர்த்தனங்கள்

ச. சண்முககுமரேசன்

கொக்குவில் கிருபாகரர் பக்திப்பாடல்கள்

என். வீரமணிஐயர்

கொக்குவில் திருமுருகன் தாண்டகம்

த. கிருஷ்ணபிள்ளை

கொக்குவில் முத்துக்குமாரசுவாமி பதிகம்

பண்டிதர் ச. சுப்பிரமணியம்

கொக்குவில் முத்துக்குமரன் புகழ்மாலை

பண்டிதர் ச. சுப்பிரமணியம்

கொக்குவில் முருகன் எழுகூற்றிருக்கை

பண்டிதர் ச. சுப்பிரமணியம்

கொக்குவில் சிவசுப்பிரமணியர் பதிற்றுப்பத்து அந்தாதி

பண்டிதர் ச. சுப்பிரமணியம்

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி
கோயில் - மான்மியம்

பண்டிதர் ச. சுப்பிரமணியம

ஸ்ரீசுப்பிரமணிய புஜங்க தோத்திரம்

பண்டிதர் ச. சுப்பிரமணியம்

கொக்குவில் சிவசுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ்

வ. சிவராஜசிங்கம்

கொக்கூர் முருகன் மும்மணிமாலை

உடுப்பிட்டி கா. நீலகண்டன்

சித்திவிநாயகர் மீது பாடப்பெற்றவை:

கொக்குவில் சித்திவிநாயகர் ஆசிரிய விருத்தம்

ச. சபாரத்தினப்பிள்ளை

கொக்குவில் சித்திவிநாயகர் இரட்டை மணிமாலை

அ. நாகலிங்கம்

கொக்குவில் சித்திவிநாயகர் பதிற்றந்தாதி

செ. வேலாயுதபிள்ளை

கொக்குவில் சித்திவிநாயகர் ஒருபா ஒருப∴து

செ. வேலாயுதபிள்ளை

கொக்குவில் சித்திவிநாயகர் திருவூஞ்சற்பதிகம்
செ. வேலாயுதபிள்ளை
கொக்குவில் சித்திவிநாயகர் கலிவெண்பா
செ. வேலாயுதபிள்ளை
கொக்குவில் சித்திவிநாயகர் தோத்திரப் பஞ்சகம்
செ. வேலாயுதபிள்ளை

வேணுகோபலர் மீது பாடப்பெற்றவை:

கொக்குவில் புதுக்கோயில் வேணுகோபாலன் திருவூஞ்சல்
அ. நாகலிங்கம்
கொக்குவில் வேணுகோபாலன் ஒருபா ஒருப∴து
செ. வேலாயுதபிள்ளை

தட்சணாமூர்த்தி மீது பாடப்பெற்றவை:

கொக்குவில் தட்சணாமூர்த்தி தோத்திர ஷட்கம்
பண்டிதர் ச. சுப்பிரமணியம்

பழனியாண்டவர் மீது பாடப்பெற்றவை:

கொக்கூர் ஸ்ரீதண்டபாணிவிருத்தம்
சாமிநாதஐயர்

நடேசர் மீது பாடப்பெற்றவை:

நடேசமகிமா நடராஜமூர்த்தி துதி
பண்டிதர் ச. சுப்பிரமணியம்

இப்பாடல்கள் அனைத்தும் புதுக்கோயில் தொண்டர் குழுவினால் வெளியிடப்பட்ட "மகா கும்பாபிஷேகமலர்", "தேர்த்திருப்பணிமலர்","சித்திரத்தேர் சிறப்பிதழ்", "சண்டேசமலர்", "பிரபந்தத்திரட்டு - நான்கு பாகங்கள்" ஆகியவற்றில் காணலாம். இவற்றைத் தவிர "ஆறுமுகன் அருட்பேராயிரம்", "திருமால் ஆயிரம் திருநாமதுதி", "நால்வர் வழிபாடு" போன்ற நூல்களும் இக் குழுவினரால் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாறு சமயச்சார்பான நூல்கள் வெளிவருவதற்குக் காரணராக அயராது உழைத்து

வருபவரும், கிருபாகரன் பணியே மூச்சாகக் கொண்டு செயற்பட்டு வருபவரும் புதுக்கோயில் தொண்டர் குழுவில் அச்சாணியாக விளங்கி வருபவருமாகிய திரு. செ. இரத்தினபிரகாசத்திற்கு நாம் என்றென்றும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

நிறைவாக சென்ற நூற்று எழுபத்தைந்து ஆண்டுகளில் கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியசுவாமி கோயில் (புதுக்கோயில்) பல பெருமக்களால் (பட்டியலைப் பார்க்க) தனித்தனியே அவ்வப்பொழுது ஒவ்வொரு பகுதியாகக் கட்டப்பெற்றாலும் இன்று கோயில் புதுப்பிக்கப்பெற்று புதுப்பொலிவுடன் பெயரிற்கேற்ப புதுக்கோயிலாகக் காட்சியளிக்கிறது. திருக்கோயில் சிவாச்சாரியார் சிவஸ்ரீ க. சிவதாசக்குருக்கள் கனடா வந்த சமயம் கோயிலுக்கு ஒரு இராஜகோபுரம் அமைக்கவேண்டுமென்று தமது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தி இருந்தார். கோயிலுக்கு தனிச் சிறப்பைக் கொடுப்பது கோபுரமாகும். "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பர். திருக்கோயிலுக்கு ஒரு இராஜகோபுரம் விரைவில் அமைய ஸ்ரீவள்ளி தேவசேனாசமேத கிருபாகரப் பெருமான் பொன்னார் திருவடிகளை போற்றி செய்து வேண்டிக் கொள்கிறோம்.

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியசுவாமி கோயிலின் (புதுக்கோயில்)முதல் திருப்பணிக்குப்பின் குறிப்பிட்ட சில திருப்பணிகள் நிறைவேற்ற உதவியவர்களின் பெயர்ப்பட்டியல்.

பெயர்	திருப்பணி
சபாரத்தின முதலியார் (தாமோதரம் பிள்ளை)	தம்ப மண்டபம்
சபாரத்தின முதலியார் (தாமோதரம் பிள்ளை)	வசந்த மண்டபம்
சபாரத்தின முதலியார் (தாமோதரம் பிள்ளை)	வாகனசாலை
சண்முகம் முருகேசு பெண் பறுவதம்	சுற்று மதில்
ஆ. குட்டித்தம்பி	வைரவர்மூர்த்தி பிரதிட்டை
இராமலிங்கம் ஆறுமுகம்	நவக்கிரக பிரதிட்டை
செ. இரத்தினப்பிரகாசம்	வேணுகோபாலர் பிரதிட்டை
சு. காசிப்பிள்ளை (மக்கள் உதவியால்)	ஆறுமுகசுவாமி பிரதிட்டை
சு. காசிப்பிள்ளை	விநாயகர் உற்சவமூர்த்தி
சண்முகம் முருகேசு	சுப்பிரமணியர் உற்சவமூர்த்தி

வேலாயுதர் முருகேசு — பாலசுப்பிரமணியர் உற்சவமூர்த்தி
போ. அப்பாத்துரை — பழனியாண்டவர் கோயில்
சீனிவாசகம் பெண் ராசாத்தியம்மா — பழனியாண்டவர் மூர்த்தி
வை. சின்னத்தம்பி/மகன் வை.சி. சிவகுரு — உள்வீதிக் கொட்டகை
ச. சங்கரசிவம் — மடைப்பள்ளிக்கிணறு
சின்னத்துரை பெண் வள்ளியாச்சி — வடக்குவீதிக் கடை
வ. கந்தையா — புதிய கண்டாமணி
பத்மநாதபிள்ளை (மக்கள் உதவியால்) — முன்னைய கட்டுத்தேர்
ஆ. க. செல்வரத்தினம் — சண்டேஸ்வரர் பிரதிட்டை
முருகதாஸ் சுப்பிரமணியம் குடும்பம் — மகாலட்சுமி அம்பாள்
என். பி. தேவராசா குடும்பம் — முத்துக்குமாரசுவாமி பிரதிட்டை
வை. சி. அம்பிகாபதி — தட்சணாமூர்த்தி பிரதிட்டை
நடராசா பெண் பூப்பிள்ளை குடும்பம் — வள்ளி தேவசேனாசமேத முருகமூர்த்தி
செ. சுப்பிரமணியம் / கு. இந்திரகுமாரன் — புதிய சூரன்
பொன்னையா குடும்பம் (துரைராசா-மலேசியா)
சமயகுரவர் நால்வர் பிரதிட்டை
திருமதி பாலா சதாசிவம்
ஓட்டினால் கூரை (சீமெந்து கொங்கிறீற்றினால் போடப்பட்ட கருவறையை அண்மித்த மூன்றுமண்டபங்களுக்கும் மேலாக)
செ. இரத்தினப்பிரகாசத்தின் முயற்சி
வசந்தமண்டபம், களஞ்சிய அறை, யாகசாலை புதுப்பித்தல்
கமலா மகேஸ்வரன்
வசந்தமண்டபத் திருக்கதவு (உருக்குக் கம்பியினாலானது)
மல்லாகம் இரத்தினத்தின் மகன் மூர்த்தி
பாலமுருகன் சிலை

"திருவேறு முகங்க ளாறுந் திசையெலாங் கருணைகால
இருபாலும் மங்கை நல்லார் இன்னருள் சுரந்திருப்ப
ஒருவேலைக் கையி லேந்தி ஒளிர்மஞ்ஞை மீத மர்ந்தே
முருகாநீ கொக்கூர் வாழ மூர்த்தியாய் அமைந்தாய் வாழி"

வாழ்க! வையகம் - வளர்க சிவநெறி
****

உ

ஓம் விராட் விஸ்வப்பிரம்மணே நம

கொக்குவில் கிழக்கு காட்டுப்புலம் முருகமூர்த்தி கோயில்

"வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை"

- திருமுருகாற்றுப்படை -

1835ம் ஆண்டு திரு பொன்னையாபத்தர் அவர்களின் சிந்தனையில் விஸ்வப்பிரம்ம குலத்தோர் வணங்கி வழிபாடு செய்வதற்கென உருவாக்கப்பட்டதே இவ்வாலயம். அந்நாட்களில் இப்பிரதேசத்தில் வேம்பு, புளி, இலுப்பை, விளாத்தி, நாவல், மருது, ஆல், அரசு போன்ற பரந்து வளரும் மரங்களும், நெடுத்து வளரும் பனை மரங்களும், கொய்யா, எருக்கு, குண்டுமணி, கோவை, நாவுண்ணி போன்ற மரம், செடி, கொடி, பூண்டு ஆகியனவும் அடர்த்தியாக வளர்ந்து காடுபோன்று காணப்பட்டமையினால் இந்நிலப்பகுதி "காட்டுப்புலம்" என அழைக்கப்படலாயிற்று. இங்கு அமைந்த இவ்வாலயமும் "காட்டுப்புலம் முருகமூர்த்தி கோயில்" எனப் பெயர் கொள்ளலாயிற்று.

ஆலயம் அமைப்பதற்கு முதன்முதலாக திரு. வல்லிபுரப்பத்தர், திரு. கந்தப்பு தருமலிங்கப்பத்தர், திரு. செல்லப்பாப்பத்தர் ஆகியோர் தங்கள் தங்கள் நிலங்களில் ஒவ்வோர் பகுதியை வழங்கியிருந்தனர். திரு. பொன்னையாப்பத்தர் இந்நிலப்பரப்பில் ஓலையினால் வேயப்பட்ட மடாலயம் ஒன்றினை அமைத்தார். அதில் சக்திவாய்ந்த கல்லொன்றினை நிறுவவும் அக்கல்லையே மக்கள் முருகப்பெருமானாக பாவனை செய்து வழிபட்டு வந்தனர். ஆலய பரிபாலனத்தையும் திரு. பொன்னையாப்பத்தரே கவனித்து வந்துள்ளார்.

இம்மடாலயத்தில் ஆவர்த்தன கும்பாபிஷேகங்கள் 1860, 1910 அகிய ஆண்டுகளில் நடைபெற்றுள்ளன. 1940ம் ஆண்டில் திரு. கதிரேசு சின்னத்தம்பிப்பத்தரின் புத்திரனாகிய திரு. பொன்னுத்துரைப்பத்தர் ஆலய நிர்வாகத்தைப் பொறுப்பேற்று

கல்லால் கர்ப்பக்கிரகம், உற்சவமூர்த்திக்கான மண்டபங்களைக் கட்டுவித்தார். கர்ப்பக்கிரகத்தில் மூலமூர்த்தியாக முருகப்பெருமானின் ஞானசக்தியாக விளங்கும் வேலாயுதம் பிரதிஷ்டை செய்யப்பட்டு புனராவர்த்தன கும்பாபிஷேகமும் சித்திரைமாத பூர்வபட்ச புனர்பூசத் திதியில் திரு. பொன்னுத்துரைப்பத்தரால் நிறைவேற்றப்பட்டது. மீண்டும் 1957ம் ஆண்டில் அவர் ஆலய முன்மண்டபத்தை அமைப்பித்தார். இம்மண்டபத்தில் பிள்ளையார், வைரவர் ஆகிய பரிவார மூர்த்திகளையும் பலிபீடத்தையும் பிரதிஷ்டை செய்வித்து முன்னைய கும்பாபிஷேக திதியில் செல்லத்துரைக்குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகமும் செய்து வைத்துள்ளார்.

க. சி. பொன்னுத்துரைப்பத்தரின் மகள் சேனாதிராசா நாகேஸ்வரி தம்பதிகளின் மருமகன் சண்முகராசாப்பத்தர் 1998ம் ஆண்டு ஆலயத்தலைமையை ஏற்று ஊர்மக்களின் உதவியுடன் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. புதிதாக அன்னதான மண்டபம், அடியார்கள் நின்று கும்பிடுவதற்கான மண்டபம் அமைக்கப்பட்டன. திருமஞ்சனக்கிணறு புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. அதுசமயம் ஆலயத்தைச் சுற்றிவாழ்ந்த மக்கள், தெற்காக திரு பொன்னம்பலவாணரின் மகன் திரு. சுப்பிரமணியமும் அவரது சகோதரர்கள் திரு. முத்துலிங்கம், திரு. மார்க்கண்டு ஆகியோரும், ஆலயத்திற்கு மேற்காக திரு. தருமலிங்கப்பத்தரின் மகள் திருமதி சரஸ்வதி நடராசா அவர்களும், ஆலயத்திற்கு வடக்காக கணேசுப்பத்தர் குடும்பமும் தத்தமது நிலத்தின் ஒருபகுதியை வழங்கியதன் மூலம் வெளிவீதியும் அமைக்கப்பட்டது. இத்திருப்பணிகள் யாவும் நிறைவேறிய பின் வெகுதானிய வருடம் சித்திரை மாதம் 18ம் திகதி (1-5-1998) பூர்வபட்ஷ புனர்பூச நட்சத்திரத்தன்று புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. அடுத்து 2006ம் ஆண்டில் நடந்த கும்பாபிஷேகத்தின்போது வசந்த மண்டபம், மணிக்கோபுரத்திற்கருகே வைரவர் மண்டபம், முன்னர் வைரவர் இருந்த மண்டபத்தில், திருமதி வசந்தகோகிலம் சண்முகசுந்தரம் அவர்களது உபயத்தில் இலட்சுமிஅம்பாள் பிரதிஸ்டை ஆகிய பணிகளும் ஊர்மக்கள் உதவியுடன் திரு. சண்முகராசாப்பத்தர் அவர்களால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஆலய நிர்வாகத்தை ஆரம்ப காலத்தில் ஸ்தாபகராக இருந்த திரு பொன்னையாப்பத்தர் அவர்களும் அவரின்பின் அவரது மகன்

மார்க்கண்டுப்பத்தரும் கவனித்து வந்தனர். 1940ம் ஆண்டிலிருந்து திரு க. சி. பொன்னுத்துரைப்பத்தரும் அவரின்பின் மருமகனார் திரு சேனாதிராசாப்பத்தரும் பொறுப்பேற்று நடத்தினர். அடுத்து திருமதி நாகேஸ்வரி சேனாதிராசாவும் பிள்ளைகளும் நிர்வகித்து வந்தனர். இன்று சேனாதிராசா நாகேஸ்வரி தம்பதிகளின் மகள் இராசமனோகரியும் மருமகனார் திரு சுப்பிரமணியம் சண்முகராசாப்பத்தரும் ஆலயத்தை நல்லமுறையில் நடாத்தி வருகின்றனர்.

இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் முருகக்கடவுள் மீது தீராத பக்தி கொண்டிருந்த திரு அப்பாத்துரையும் அவரது துணைவியாரும் தாம் வாழ்ந்த காலம்வரை ஆலயத்தில் தினமும் திருவிளக்கேற்றி வழிபாடுசெய்து வந்துள்ளனர். இன்று அவர்களின் புத்திரன் திரு பஞ்சலிங்கம் மாஸ்டர் அவர்களும் தன்னாலான தொண்டுகளை ஆலயத்திற்கு ஆற்றி வருகின்றார்.

ஆலயத்தில் உள்ள திருவுருவங்களை உபயம் செய்தோர்

கர்ப்பக்கிரகத்தில் வேல் - திரு க. சி பொன்னுத்துரைப்பத்தர்
முன்மண்டபப் பிள்ளையார் - திரு க. சி பொன்னுத்துரைப்பத்தர்
முன்மண்டப இலட்சுமி - திருமதி வசந்தகோகிலம் சண்முகசுந்தரம்
மணிக்கோபுர வைரவர் - திரு க. சி பொன்னுத்துரைப்பத்தர்
உற்சவமூர்த்தி
வள்ளிதேவசேனாசமேத சுப்பிரமணியர்- திரு செல்லத்துரைப்பத்தர்
ஆகியோர் ஆவர்.

1940ம் ஆண்டு சித்திரைமாத பூர்வபட்ஷ புனர்பூசத் திதியில் ஆலயத்தில் வேற்பெருமான் பிரதிஸ்டை செய்யப்பட்ட தினத்தை நினைவுகூர்வு முகமாக ஒவ்வொரு ஆண்டும் இதே திதியில் வேற்பெருமானுக்கு விசேஷட சங்காபிஷேகம், பூசை வழிபாடுகள் நடைபெறும். இதனைத் தொடர்ந்து வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியப் பெருமான் வீதியுலாவருவார். இவ்வீதியுலா ஆலயத்திலிருந்து புறப்பட்டு கருவேலடி ஒழுங்கையூடாகவும், கல்லூரி ஒழுங்கையூடாகவும், பின்னர் குளப்பிட்டி ஒழுங்கையூடாகவும், மீண்டும் கருவேலடி ஒழுங்கையூடாகவும் சென்று ஆலயத்தை மீண்டும் வந்தடையும். ஆலயத்திற்கு வெளிவீதி அமையப்பெற்ற 1998ம் ஆண்டிலிருந்து 10 நாட்கள் அலங்காரத் திருவிழாக்கள் ஆரம்பமாகின.

இத்திருவிழாக்களுள் இறுதிநாள் விழாவாக மேற்கூறிய சங்காபிஷேக உற்சவம் நிகழும். இத்தினத்தில் சுவாமி வெளிவீதி உலாவந்து மகேசுரபூசையும் இடம்பெறும். இச்சங்காபிஷேகத் திருவிழாவை 1940ம் ஆண்டிலிருந்து இன்றுவரை க. சி. பொன்னுத்துரைப்பத்தரின் சந்ததியினரே செய்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். 2006ம் ஆண்டு தொடக்கம்திருவிழா 10 நாட்களும் மகேசுரபூசை நடைபெற்று வருகின்றது.

திருவிழா உபயகாரர்களின் விபரம்:

முதலாம் திருவிழா	-	சுப்பிரமணியக்குருக்களும் சகோதரர் வெங்கடேஸ்வர ஐயரும்
இரண்டாம் திருவிழா	-	தேவராணி செல்வராசா
மூன்றாம் திருவிழா	-	வசந்தகோகிலம் சண்முகசுந்தரம்
நான்காம் திருவிழா	-	கணேஸ் குடும்பம்
ஐந்தாம் திருவிழா	-	இலங்கேஸ்வரன் இரத்தினசபாபதி
ஆறாம் திருவிழா	-	அருள்வேல் கந்தசாமி
ஏழாம் திருவிழா	-	யோகேஸ்வரி ஆனந்தசுந்தரம்
எட்டாம் திருவிழா	-	கோவிந்தர் குடும்பம்
ஒன்பதாம்திருவிழா	-	வேலுப்பிள்ளை செல்வநாயகியும் மகன் கைலேஸ்வரனும்
பத்தாம் திருவிழா	-	சேனாதிராசாபத்தர் குடும்பம்

இவற்றைவிட நவராத்திரி, ஐப்பசி வெள்ளி, கந்தசஷ்டி, திருவெம்பாவை பூசைகளும் உரிய காலங்களில் நடைபெற்று வருகின்றன. ஐப்பசிக் கடைசிவெள்ளி அன்று சுவாமி வெளிவீதி உலாவரும் நாளாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

வைத்தியநாதசின்னப்பாஐயரின் மருமகனான செல்லத்துரைக் குருக்கள் பூசகராக இருந்தபோது காலை, மதியம், சாயந்தரம் எனமூன்றுகாலப் பூசைகள் நித்திய பூசைகளாக நடைபெற்று வந்தன. இவரின்பின் இவரது பேரர்களாகிய வெங்கடேசசர்மா (கோபால ஐயர்) மூன்றுகாலப் பூசைகளையும், விசேட திருவிழாக்களை இவரது சகோதரர் சுப்பிரமணியக் குருக்களும் (கணேச ஐயர்) செய்து வருகின்றனர். இன்று நாட்டில் அசாதாரண சூழல் காணப்படுவதால் இரண்டுகாலப் பூசைகளே நடைபெற்று வருகின்றன. 1957ம்

ஆண்டிலிருந்து நீண்ட காலமாக சுவாமிக்கு அலங்காரம் செய்து வந்தவர் தியாகராசா ஐயர் ஆவார். தற்போது சுப்பிரமணியக்குருக்களே அதனையும் செய்து வருகின்றார்.

தொடர்ந்து ஊர்மக்களின் பணிதொடர காட்டுப்புலம் ஆலயம் ஒளிபெற்று விளங்க கலியுகவரதனாம் முருகப்பெருமான் திருவருள் புரிவாராக.

"அஞ்சு முகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல் தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என்றோதுவார் முன்"

முருகா சரணம்

****

உ

ஓம் முருகா

கொக்குவில் மாத்தனை கந்தசுவாமி கோயில்

"கோடான மேருமலைத் தனமானார்
 கோமாள மாணவலைக் குழலாதே
நாடேறு மேன்மை படைத்திடவேதான்
 நாயேனை யாளநினைத் திடொணாதோ
ஈடேற ஞானமுரைத் தருள்வோனே
 ஈராறு தோள்கள் படைத்திடுவோனே
மாடேறு மீசர்தமக் கினியோனே
 மாதானை யாறுமுகப் பெருமாளே"

- மகா கும்பாபிஷேகமலர்: 2005 -

அடியார்களின் துயர்களைந்து திவ்ய அனுக்கிரகம் சொரிந்து உய்வடையத் தோன்றியது கொக்குவில் மாத்தனை கந்தசுவாமி கோவில். இவ்வாலயம் மிகவும் பழமை வாய்ந்தது. அந்நாட்களில் இந்நிலப்பகுதி சுற்றிலும் மரங்களும், பற்றைகளும் நிறைந்து காணப்பட்டன. இங்கு வளர்ந்திருந்த இலுப்பைமரம், புளியமரம் ஆகிய இரு பெருவிருட்சங்களின் கீழ் முறையே வேலாயுதமும், சூலாயுதமும் அமர்ந்திருந்துள்ளன. இவற்றை முருகப்பெருமானதும், வைரவப்பெருமானதும் அர்ச்சை வடிவத் தோற்றங்களாகக் கருதி மக்கள் வழிபட்டு வந்தார்கள் என முற்காலத்தில் வாழ்ந்த ஊர்ப்பெரியார்கள் தங்கள் பரம்பரையினருக்குக் கூறிவந்துள்ளனர். சைவத் தெய்வ வடிவங்கள் எளிய உருப்பெற்று அருள் பொழிந்த "மகாஸ்தானம்" என்ற இப்பகுதி பெயர்மருவி எங்கள் சுப்பிரமணியப்பெருமான் வைகும் "மாத்தனை" என வழங்கப்பட்டு வருகிறது என்பர். மாத்தனை புண்ணிய தலத்தில் தனது இரு தேவியரோடும் வீற்றிருந்து அடியவர்க்கு அருள்புரிகிறான் சுப்பிரமணியப்பெருமான்.

மக்கள் குறை தீரத் தோன்றிய வேலாயுத, சூலாயுத வடிவங்களுக்கு முதலியார் விசயரட்ணம், தில்லைநாதர் ஆகிய இருவரும் 1784ம் ஆண்டில் "மாத்தனை" என்னும் நிலப்பகுதியில்

இக்கோவிலை அமைத்துள்ளதாக 1892ம் ஆண்டு யாழ் கச்சேரிச் செயலகத்தால் தயாரிக்கப்பட்ட கோயில்களின் பட்டியலில் பதியப்பட்டுள்ளது. இக்கோவிலை முதலியார் முருகேசு தம்பாபிள்ளை நிர்வகித்து வந்துள்ளார். அச்சமயம் இரண்டு காலப் பூசைகளும், பொங்கல் வழிபாடுகளும் நடந்துள்ளன. 1907ம் ஆண்டு முதலியார் முருகேசு தம்பாபிள்ளை கோவில் கர்ப்பக்கிரகம் முதல் அபிடேக மண்டபம் வரை கல்லால் கட்டுவித்து மூலவராக வேலாயுத வடிவத்தை பிரதிஸ்டை செய்து கும்பாபிஷேகமும் நிறைவேற்றியுள்ளார். அன்றுதொட்டு நித்திய, நைமித்திய பூசைகளும் செவ்வனே நடந்து வந்துள்ளன.

காலப்போக்கில் விநாயகர் சந்நிதி, வைரவர் சந்நிதி, வசந்தமண்டபம், முன்மண்டபம், யாகசாலை ஆகியன முறையே திரு. சண்முகரத்தினம் குடும்பத்தினர், திருமதி கந்தையா (அன்னம்), Registrar மகன் கந்தையா, திரு. சிவப்பிரகாசம், ஆராய்ச்சியார்வீடு திருமதி நாகலிங்கம் ஆகியோரால் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றை முன்னின்று நிறைவேற்றி வைத்தவர் முகாமையாளர் டாக்டர் கனகரத்தினம் ஆவார். திருக்கோவில் மேலோங்கி வளரவேண்டும் என்னும் நல்நோக்கத்தில் பரிபாலனசபை ஒன்றை 1947ம் ஆண்டு உண்டாக்கி வைத்த பெருமையும் டாக்டர் கனகரத்தினம் அவர்களையே சாரும். பரிபாலனசபை பொறுப்பேற்ற நாளிலிருந்து இற்றைவரை இவ்வாலயத்தின் கட்டடநிர்மாணப்பணி பல அடியார்களாலும் தொடர்ந்து நடந்துகொண்டே வந்துள்ளது. திருப்பணிகளுக்கு உதவியோர் விபரம்:-

ஆண்டு	திருப்பணி	பெயர்
1950	முத்துக்குமாரசுவாமி பிரதிஸ்டை,சந்நிதி	திருமதி. சண்முகரத்தினம் குடும்பம்
1965	நடேசர்பெருமான் பிரதிஸ்டை, சந்நிதி	திருமதி. சோமஸ்கந்தர் ஆச்சிமுத்து
1967	கொடித்தம்பம்	திரு. குணபாலசிங்கம்
1984	வசந்தமண்டபம் புனர்நிர்மாணம்	திரு. சு. சிவனேசன்
	ஸ்நபனமண்டபம் மாபிள் பதித்தல்	திரு. தர்மலிங்கம் கோணேஸ்வரன்

1987 ஆறுமுகப்பெருமான் சந்நிதி

திரு. த. சிவராசா குடும்பத்தினர்

1987 *வீதிகள் விரிவாக்கத்திற்கு காணிகள்
நன்கொடை வழங்கியோர்

திரு. இராசரத்தினம்,

திருமதி. தம்பித்துரை கனகமணி, பிள்ளைகள்

திருமதி. சண்முகரத்தினம் கனகமுத்து

திரு. செல்லப்பா செல்வராசா

திரு. சு. சிவநேசன்

2000 பூதேவி, ஸ்ரீதேவி சமேத மகாவிஷ்ணு
பிரதிஸ்டை, சந்நிதி

திரு. ஆ. சிவகுமாரன்

இராஜஇராஜேஸ்வரி அம்பாள் பிரதிஸ்டை, சந்நிதி

திரு. சண்முக குமரேசன் குடும்பம்

மேற்குபக்க உள்வீதி சீமெந்தினால் அமைத்தல்

திரு. வி. சிறீதரன்

கிறில்கேற், நீர்த்தாங்கி

திரு. இராசேந்திரம் சந்திரகாந்தன்

சண்டேசுவரர் சிலை பிரதிஸ்டை, சந்நிதி

திரு. சி. சிறீஸ்கந்தராசா

1962ம் ஆண்டு வைகாசி மாதம் ஒரு மகாகும்பாபிஷேசம் நடைபெற்றுள்ளது. பின்னர் சு. சிவனேசன், செல்வன் இரகுதேவன் ஆகிய இருவரும் மேற்கொண்ட அயராத முயற்சியினால் திருப்பணிகள் பல நிறைவு செய்து "மூலஸ்தானத்தில் வேல் இருந்த இடத்தில் புதிதாக ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணிய மூர்த்தியை" பிரதிஸ்டை செய்வித்து, வேல்பெருமானை அருகமைத்து மகாகும்பாபிஷேகம் 09.02.1981 இல் நிகழ்த்தப்பட்டுள்ளது. இதனையடுத்து 02.04.2005 இல் நிறைவேறிய மகாகும்பாபிஷேகம் சிவஸ்ரீ நல்லூர்தாசக் குருக்களினால் நடாத்திவைக்கப்பட்டு ஆலயம் சிறப்புற்று விளங்குகின்றது.

திருக்கோயில் வீதிக்காணியில் ஆலய சிவாச்சாரியாரின் இல்லம் அமைந்துள்ளது. இவ் இல்லம் தம்பித்துரை கனகமணியும் பிள்ளைகளும், வெற்றிவேலு சுப்பையா J.P அவர்களும் அளித்த நிதியுதவியால் கட்டப்பட்டதாகும். கோவிலுக்கு வெளிவீதி அமைப்பதற்காக நாற்புறமும் அமைந்திருந்த காணிகளில் சில நன்கொடையாகவும் சில விலை கொடுத்தும் பெறப்பட்டுள்ளன. (*விபரம் - திருப்பணிப் பட்டியலைப் பார்க்கவும்)

திருக்கோவிலில் உலாவரும் உற்சவ மூர்த்திகளும், ஐம்பொன்னாலான விக்கிரகங்களும் முருகன் அடியார்களால் உபயம் செய்யப்பட்டனவாகும்.

விக்கிரகங்கள்	உபயம்
ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத முத்துக்குமாரசுவாமி	திருமதி. சண்முகரத்தினம்
விநாயகப்பெருமான்	திரு. க. தர்மலிங்கம்
சண்முகப்பெருமான்	திருமதி. சிவராசா சிவநாயகி
சண்டேசுவரர்	திரு. திருமதி. சிவசுப்பிரமணியம் மங்களேஸ்வரி தம்பதிகள்
இராஜஇராஜேஸ்வரி அம்பாள்	திரு. கு. புரந்திரன்
சந்தானகோபாலர்	திருமதி. துரைரட்ணம் புவனேஸ்வரி
மாணிக்கவாசக சுவாமிகள்	திருமதி. ச. தையல்நாயகி

ஆரம்ப காலத்தில் திருக்கோவிலை பராமரித்து வந்தவர் முதலியார் தம்பாப்பிள்ளை. பின்னர் இவரது மருமகன் பண்டிதர் இராமலிங்கமும் அடுத்து டாக்டர் கனகரத்தினமும் கோவில் முகாமையாளர்களாகப் பணிபுரிந்து திருக்கோவிலை நிர்வகித்து வந்துள்ளார்கள். இவ்வாறு முகாமையாளர்களினால் பராமரிக்கப்பட்டு வந்த கோயிலை டாக்டர் கனகரத்தினம் அவர்கள் ஆரம்பித்துவைத்த பரிபாலனசபை 1947ம் ஆண்டிலிருந்து பொறுப்பேற்றது. இப்பரிபாலனசபை காலத்திற்கு காலம் நிர்வாக அங்கத்தவர்களை வருடா வருடம் மாற்றியமைத்து இன்றுவரை கோவிலை நிர்வகித்து வருகின்றது.

அக்காலத்தில் கோயில் பூசகராக அப்பாச்சி ஐயா என்பவர் கடமை புரிந்துள்ளார். இவருக்குப்பின் இவரது தம்பியார் சீனிஐயரும் தொடர்ந்து சீனிஐயரின் மகன் வைத்தீஸ்வரக் குருக்களும் சிவாச்சாரியார்களாகப் பணிபுரிந்து வந்துள்ளனர். தற்போது வேதாகம

கிரியா வித்தகர் சிவஸ்ரீ ந. பாலசுப்பிரமணியக் குருக்கள் ஆலய பிரதம குருவாகத் தனது கடமைகளைச் செவ்வனே ஆற்றிவருகின்றனர்.

முன்பிருந்த வேலாயுத, சூலாயுத வடிவங்களுக்குத் தினத்திற்கு தினம் பொங்கல் பூசை செய்து வழிபட்டு வந்தனர். நித்திய, நைமித்திய பூசைகள் ஆலயம் கல்லினால் கட்டப்பட்ட பின்னர் ஆரம்பிக்கப்பட்டன. பண்டிதர் மு. இராமலிங்கம் முகாமையாளராகப் பதவி வகித்துவந்த காலம் தொடக்கம் மூன்று காலப் பூசைகள் நடைபெற்று வருகின்றன.

திருக்கோவிலில் முதன் முதலாக அலங்கார உற்சவங்கள் பத்து நாட்கள் நடைபெற்றன. கந்தபுராணம், திருவாதவூரர் புராணம் போன்றவை படித்துப் பயன் சொல்லப்பட்டன. புராணபடனத்தினைப் பலர் காப்புக்கட்டி விரதமிருந்து கேட்டு மகிழ்வர். புராணபடன பூர்த்தி விழாவின்போது திருமதி. சண்முகசுந்தரம் கனகமுத்து அம்மையார் அடியார்களுக்கு அன்னதானம் செய்வித்து வந்துள்ளார். தற்போது கந்தபுராணபடனம் திருமதி. வைரமுத்து சவுந்தரம் அவர்களின் உபயமாக நடைபெற்று வருகின்றது.

1967ம் ஆண்டு கொடித்தம்பம் நிறுவப்பட்டபின் ஆனி மாதத்தில் வரும் உத்தர நட்சத்திரத்தை தீர்த்தத் திருவிழா நாளாகக் கொண்டு பன்னிரண்டு தின மகோற்சவங்கள் ஆரம்பமாகின. கொடியேற்றம் டாக்டர் கனகரத்தினம் குடும்பத்தினராலும், தேர் உற்சவம் வெற்றிவேலு சுப்பையா J.P குடும்பத்தினராலும், தீர்த்தோற்சவம் அ. விநாயகமூர்த்தியாலும் நடைபெற்று வந்தது. வெற்றிவேலு சுப்பையா காலமாகவே செல்லையா சுப்பிரமணியம் குடும்பத்தினர் தேர்த்திருவிழா உபயத்தினை ஏற்றுள்ளனர்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை வழிபாடும் வேல் உற்சவமும் சிறப்பாக நடைபெறுகிறது. சித்திரை வருடப்பிறப்பு. வைகாசி விசாகம், ஆவணி விநாயகர் சதுர்த்தி, புரட்டாதி நவராத்திரி, ஐப்பசி கந்தசஷ்டி, மார்கழித் திருவெம்பாவை, தைப்பொங்கல் விழா, மாசி சிவராத்திரி, பங்குனி உத்தரம் ஆகிய விழாக்களும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இத்திருக்கோவிலில் சுவாமி எழுந்தருளி வீதியுலா வரும் வாகனங்களாக மயில், குதிரை, அன்னம், ஆட்டுக்கடா, காராம்பசு,

தாமரைப்பூ ஆகியனவும் மற்றும் பிள்ளையார்சிங்காசனம், சப்பறம், சகடை, சூரனும் மாத்தனை முருகன் அடியார்களின் உபயங்களாகும். மஞ்சம் திரு. சொக்கலிங்கத்தினாலும், பிள்ளையார் தேர் திரு. க. அமிர்தலிங்கத்தினாலும், அமைப்பித்து உதவப்பட்டுள்ளன. முன்னர் கட்டுத்தேர் பாவனையில் இருந்துள்ளது. இன்று வெற்றிவேலு சுப்பையா J. P. அவர்களினதும் பல அன்பர்களினதும் பொருளுதவி கொண்டு நிர்மாணிக்கப்பட்ட அழகிய சித்திரத்தேரில் எம்பெருமானை எழுந்தருளச் செய்து தேர்த்திருவிழா சிறப்புற நடைபெற்று வருகிறது. உள்வீதித்திருவிழா உபயோகத்திற்காக இரு சிறிய இரதங்கள் உள்ளன. ஒன்று திரு. பொ. சிவசுப்பிரமணியத்தினாலும், அடுத்த அலங்கார இரதம் திரு ஜெ. சோமாஸ்கந்தன், கோ. கிருபாகரன் ஆகிய இருவரினாலும் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

அளவையூர் அருட்கவி சி. வினாசித்தம்பி மாத்தனைப்புரமுறை கந்தவேல் முருகன்மீது "திருப்பள்ளியெழுச்சி" என்னும் பிரபந்தம் பாடியுள்ளார். வேறு சிலரும் மாத்தனைப்பெருமானை வழிபட்டுப் பக்திப்பாடல்கள் பாடியுள்ளனர். 2005ம் ஆண்டு மாத்தனை கந்தப்பெருமானுக்கு குடமுழுக்கு விழா எடுத்துப் போற்றியதை முன்னிட்டு "மகா கும்பாபிஷேக மலர்" ஒன்றும் பரிபாலன சபையாரால் வெளியிடப்பட்டுள்ளது.

நிறைவாக மாத்தனைக் கந்தப்பெருமான் கோவில் வளர்ச்சியில் பல அடியார்கள் தங்கள் பங்களிப்பைச் செய்து உதவியுள்ளார்கள். எழிலுடன் விளங்கும் இவ்வாலயத்திற்கு ஓர் இராஜகோபுரமும் கூடிய விரைவில் அமையத் திருவருளை வேண்டி, அவ்வள்ளல் கருணை யாவருக்கும் கிடைக்கக் திருவடியைப் பூசித்து அமைகிறோம்.

"எந்தாயும் எனக்கருள் தந்தையுநீ
சிந்தாகுல மானவை தீர்த்தெனையாள்
கந்தா கதிர்வேலவனே உமையாள்
மைந்தா குமரா மறைநாயகனே"

\- கந்தரநுபூதி

****

உ

ஓம் சக்தி

நந்தாவில் கற்புலத்து
ஸ்ரீ மனோன்மணிஅம்பாள் ஆலயம்

"சுரும்புமுதல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி,
உத்தரியத் தொடித்தோள் போற்றி,
கரும்புருவச் சிலைபோற்றி, கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி,
இரும்புமனம் குழைத்தென்னை எடுத்தாண்ட
அங்கயற்கண் எம்பிராட்டி
அரும்பும் இளநகை போற்றி, ஆரண
நூபுரம் சிலம்பு மடிகள் போற்றி"

- திருவிளையாடற் புராணம் -

நந்தாவில் கற்புலத்து ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம் வரலாற்றுப் பெருமை பெற்றது. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தைப் படைத்த இளங்கோவடிகளின் சகோதரனாகிய சேரன் -செங்குட்டுவன் வடநாட்டு மன்னர்களைப் போரில் தோற்கடித்தான். நாடு திரும்பும்போது கண்ணகி சிலைகள் வடிக்கத் தேவையான பளிங்குக்கற்களைத் தலையில் சுமந்து வருமாறு அம்மன்னர்களைப் பணித்தான்.

இவ் வெற்றியையொட்டி நடந்த சேரநாட்டு விழாவில் இலங்கை மன்னன் "கஜபாகு" கலந்து கொண்டார். அப்போது அன்பளிப்பாக கண்ணகி சிலையொன்று இவருக்கு வழங்கப்பட்டது. இலங்கை மன்னன் கஜபாகு கண்ணகிசிலையை ஊர்வலமாக எடுத்துச் சென்று தங்கி வழிபட்ட இடங்களில் ஒன்று "கற்புலம்" ஆகும். "கற்புலத்தம்மை" என்றும் "கண்ணகிஅம்மன்" என்றும் வழங்கிவந்த பெருமாட்டியே இன்று "கற்புலத்து ஸ்ரீ மனோன்மணி அம்பாளாக" கோயில் கொண்டு இருக்கிறாள்.

இக்கோயில் இருக்கும் தரைப்பிரதேசம் கற்பாறைகள் நிறைந்ததாகக் காணப்பட்டதால் "கற்புலம்" என அழைக்கப்படலாயிற்று. இப்பிரதேசத்தில் இற்றைக்கு ஏறக்குறைய இருநூற்று இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சைவநன்மக்கள் அம்பாளுக்கு ஓர் ஆலயம் அமைக்க முற்பட்டனர். இக் காலப்பகுதியில் திரு. வைத்திலிங்கச்செட்டியார் வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயத்தைக் கட்டுவதற்காக இக் கற்புலத்திலிருந்து கற்களை எடுத்து வந்தார். அவரும் இங்கு வாழ்ந்த வேளாண் பிரபுக்களும் சேர்ந்து கண்ணகி

அம்மனுக்கு இக்கற்புலத்தில் ஓர் ஆலயம் அமைத்தார்கள். அவ்வாறு அமைந்ததே "கற்புலத்துக் கண்ணகி அம்மன்" ஆலயம் ஆகும்.

1920களில் இச் சுற்றாடலில் வாழ்ந்த சில சைவப்பெரியார்கள் இவ்வாலயத்தில் கண்ணகி அம்மனுக்கு மாற்றாக "இராஜஇராஜேஸ்வரி" அம்மனின் சிலையை ஸ்தாபிக்க எடுத்துக் கொண்ட முயற்சியினால் ஊரில் அமைதி குறைந்து காணப்பட்டது. இதனை நிவர்த்திக்கும் பொருட்டு கொக்குவில் திரு. குமாரசாமிப் புலவர், சங்கானை திரு. நாகலிங்கதேசிகர், இந்தியாவிலும் இலங்கையிலும் மதிக்கப்பட்ட திரு. சங்கர சுப்பையர் போன்ற பெருமக்களின் ஆலோசனை பெறப்பட்டு, அறுபத்துமூன்று நாயன்மார்களின் குருபூசைகளைக் கொண்டாடியும், சைவப்பிரசங்கங்களை நிகழ்வித்தும் ஊரில் நல்ல சைவச்சூழல் உருவாக்கப்பட்டது. பின்னர் 1922ம் ஆண்டு ஆலயத்தில் "ஸ்ரீ மனோன்மணி அம்பாள்" சிலை பிரதிஸ்டை செய்யப்பட்டு மகாகும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது. அன்றிலிருந்து இவ்வாலயம் "நந்தாவில் கற்புலத்து ஸ்ரீமனோன்மணி அம்பாள்" ஆலயம் என அழைக்கப்பட்டு வருகிறது. இவ்வாலயம் அமைப்பதற்கு வைத்தியர் திரு அ. சின்னத்துரை அவர்கள் முன்னின்று உழைத்தார்.

அம்பாள் ஆலயத்தினை 1938ல் திரு சி. முத்துவேலு J.P அவர்களைத் தலைவராகவும், திரு இ. சீனிவாசகம் அவர்களைக் காரியதரிசியாகவும், திரு த. பொன்னம்பலம் அவர்களைதத் தனாதிகாரியாகவும் கொண்ட ஒரு ஆலய பரிபாலனசபை நிர்வகித்து வந்தது. பின்னர் 1943ல் இவ்வமைப்பானது தர்மகர்த்தாக்கள் மூவரும் மேலும் பதினைந்து அங்கத்தவர்களும் கொண்ட நிர்வாகசபையாக மாற்றப்பட்டு ஆலயபரிபாலனம் நடந்து வந்துள்ளது. மூன்று தர்மகர்த்தாக்களாக திரு சி. முத்துவேலு, திரு சி. நவரத்தினம், திரு சி. அருளம்பலம் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். இவர்களில் திரு சி. முத்துவேலுவின் மறைவின்பின் திரு. வி. இராசதுரையும் பின்னர் திரு வி. இராசதுரை மற்றும் திரு சி. நவரத்தினம் ஆகியோரின் மறைவின்பின் திரு க. இராமநாதன், திரு செ. ஆறுமுகம் ஆகியோரும் தர்மகர்த்தாக்களாக நியமிக்கப்பட்டனர். அடுத்து இப்பரிபாலன அமைப்பு 1972ல் தர்மகர்த்தாக்கள் மூவரும் அங்கத்தவர்கள் பன்னிருவரும் அடங்கியதான பதினைந்துபேர் கொண்ட பரிபாலனசபையாகப் புனரமைக்கப்பட்டது. இப்போதும் இப்பரிபாலன அமைப்புமுறையே பின்பற்றப்பட்டு வருகின்றது.

ஆலயம் ஆரம்பமான சில காலங்களின் பின்னர் ஆலயவளர்ச்சி குன்றிவரவும் ஆலயம் புனரமைக்கப்பட்டது. 1966ல் மகாகும்பாபிஷேகம் நடந்துள்ளது. இராஜகோபுர வேலைகள் 19.1.1979ம் நாளன்று ஆரம்பிக்கப்பட்டன. அப்பையாவின் தம்பியார் மயில்வாகனத்தினதும், சிவகுரு தாமோதரம்பிள்ளையினதும் உபயங்களாக கோபுரத்தின் இருமருங்கிலும் இரு மணிக்கோபுரங்கள் நிறுவப்பட்டன. ஆலய முன்வாசலில் கட்டப்பட்டிருந்த பழைய கொட்டகை அகற்றப்பட்டு மணிமண்டபமாக அமைக்கப்பட்டுள்ளது. அம்பாள் அடியார்களும் கொக்குவில், கோண்டாவில் பெருமக்களும், வெளிநாடுகளில் வாழ்ந்துவரும் அன்பர்களும் வழங்கிய பணஉதவி கொண்டு இராஜகோபுரம் அழகுற நிர்மாணிக்கப்பட்டு 7.2.1982ல் பெரியார் இ. கந்தையாவின் தலைமையில் இராஜகோபுர கும்பாபிஷேகம் நடைபெற்றது. இந்த இராஜகோபுரம் சுமார் 51 அடி உயரமும் 5 நிலைகளும் 5 கலசங்களும் கொண்டுள்ளது. இதில் முதலாம் அடுக்கில் ஆலய சுற்றுப்பிரகார மூர்த்திகளும், இரண்டாவதில் சப்த மாதாக்களும், மூன்றாவதில் அட்டலட்சுமிகளும், நான்காவதில் சிவன் பார்வதி திருமணமும், கோபுரத்தின் அடிப்புறத்தின் உள்ளே சூரிய சந்திரர்களும், கோபுர வாசலின் இருபுறமும் துவாரசக்திகளும் என இருநூற்று பதின்நான்கு சுதைஉருவங்கள் காட்சி அளிக்கின்றன.

இதனைத் தொடர்ந்து மூலமூர்த்தியும், பரிவார மூர்த்திகளும் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு கோவில் விமானங்கள், மண்டபங்கள் யாவும் திருத்தப்பட்டன. மூலமூர்த்தியாகிய அம்பாளின் கர்ப்பக்கிரகவிமானம் வடக்கே கண்ணகியும், கிழக்கே மனோன்மணியும், தெற்கே அர்த்தநாரீஸ்வரரும், மேற்கே இராஜஇராஜேஸ்வரியும் அமையப்பெற்ற திரிதளவிமானமாக புனரமைந்துள்ளதற்கு திரு. சிவகுரு தாமோதரம்பிள்ளை உதவியுள்ளார். விநாயகர் சந்நிதி, சுப்பிரமணியர் சந்நிதி, வைரவர் சந்நிதி ஆகியவை முறையே சின்னத்துரை சரவணபவானாலும், சுப்பையா தியாகராசாவாலும், கந்தையா சிவானந்தத்தினாலும் புனரமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. கொடித்தம்பப் பிள்ளையார் திரு. பொ. பரராஜசிங்கத்தின் உபயமாக பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளது. இத் திருப்பணிகள் யாவும் நிறைவெய்தியதன்பின் மீண்டும் 3.9.1982ல் ஜீர்ணோத்தாரண - அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

ஆலயத்தில் மேலும் திருப்பணிகள் தொடரப்பட்டு வசந்தமண்டபத்தை திரு கே. இராமநாதனும், நவக்கிரக சந்நிதியை திரு எஸ். இராசையாவும், சண்டேஸ்வரர் சந்நிதியை திரு சிதம்பரநாதனும் அமைத்துக் கொடுத்துள்ளனர். இவற்றைவிட உள்வீதி

சுற்றிவர மூடுகொட்டகை போடப்பட்ட மண்டபமாகவும், மடைப்பள்ளி, ஆலய மதில்கள் போன்றவைகளும் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. மகாகும்பாபிஷேகம் 1991ம் ஆண்டு நிறைவேறியுள்ளது. இத்திருப்பணிகள் அனைத்திற்கும் பக்கபலமாகநின்று உழைத்தவர் திரு பொன்னுத்துரை பரராஜசிங்கம் ஆவார். இவர் கோயிலின் அருகாமையில் வசித்து வந்ததினாலும், சிலகாலம் பரிபாலனசபை உபசெயலாளராகக் கடமை புரிந்ததினாலும், ஆலய வளர்ச்சிக்குப் பெரும்பணியாற்றி இன்று கனடாவிலும் அம்பாளின் தொண்டை கைவிடாது தொடர்ந்து ஆற்றி வருகின்றார். ஆலய வளர்ச்சியில் பெருந்தொண்டாற்றிய இன்னொருவர் திருமதி இ. இராசமணி ஆவார். ஒழுங்கற்றிருந்த உள்வீதி நிலப்பரப்பு முழுவதும் இவரால் சீர்செய்யப்பட்டது. ஆலய வெளிவீதியையும் செப்பனிட்டு நான்கு வீதிகளும் சுத்தமாக விளங்க இவ் அம்மையார் வழிசெய்தார். திரு சி. அருளம்பலம் ஆலய மேற்கு வீதியுடன் முடிவடைந்திருந்த அம்பட்டபாலத்து ஒழுங்கையை நீடித்து கோண்டாவில் உப்புமடம்வீதி வரை சென்றடைய அமைத்துக் கொடுத்துள்ளார். இதனால் ஆலயதரிசனத்திற்கு வருகைதரும் கொக்குவில், கோண்டாவில் அம்பாள் அடியார்கள் பெரும்பயன் பெறுகின்றனர். இன்று இவ்வீதி கோயில்வீதி என அழைக்கப்பட்டு வருகின்றது. மேலும் தொடர்ந்து திருப்பணிகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. இதில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயற்பட்டுக் கொண்டு இருப்பவர் தற்போதய பரிபாலனசபைச் செயலாளர் சின்னத்துரை ஜெயபாலசிங்கம் ஆவார். அண்மையில் நிறைவேறியுள்ள உள்வீதி சுற்றிவர மூடுசாந்துக் கொட்டகையும், கல்யாணமண்டபமும் இவரது அயராத முயற்சியின் பயனாகும்.

ஆலயமுன்றலில் வியாபித்து வளர்ந்திருக்கும் ஆலவிருட்சத்தின் கீழ், ஆலயப் பணியோடு சமூகப் பணியும் ஆற்றிக் கொண்டிருக்கும் கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையம் விளங்குகின்றது. வடக்கு வீதியில் கயிலாய வாகனம், மஞ்சம், சிறியதேர் ஆகியவை தரித்து நிற்கும் கொட்டகைகள் உள்ளன. தெற்கு வீதியில் உள்ள பூந்தோட்டமும், செங்கழுநீர்த் தொட்டியும் நீராவியடி ப. பொன்னையாவின் தொண்டினைப் பறைசாற்றி நிற்கின்றன. கேணி ஊர்ப் பொதுமக்களினதும், இளைஞர்களினதும் அயராத முயற்சியினாலும், அர்ப்பணிப்பான செயற்பாட்டினாலும் உருவானதாகும். ஆலயத்தில் உள்ள பஞ்சலோகத்தினாலான உற்சவ மூர்த்திகள் அம்பாள், விநாயகர். வள்ளி தேவசேனா சமேதசுப்பிரமணியர் ஆகியனவாகும். இவையாவும் மிகவும் பழமைவாய்ந்தவை.

1920ம் ஆண்டில் இவ்வாலயத்தில் இரண்டு நேரப்பூசைகள் மட்டுமே நடந்தன. பங்குனித் திங்களில் பொங்கல் பூசையும் காலப்போக்கில் நவராத்திரி, கந்தசஷ்டி, திருவெம்பாவை நாட்களில் விஷேட பூசைகளும் நடைபெற்று வந்தன. நடராஜசிவாச்சாரியார் அர்ச்சகராக இருந்தபோது உதயகாலப் பூசையும், முத்துக்குமாரசிவாச்சாரியார் காலத்தில் மாதப்பிறப்பு, வெள்ளிக் கிழமைகளில் பூசை மற்றும் திருவிழாக்களும், ஆடி மாதத்தில் இலட்ச அர்ச்சனைகளும் நடைபெற்று வந்தன. பின்னர் ஜெயந்திநாதசர்மா அர்ச்சகராகப் பொறுப்பேற்றதும் உச்சிக்காலப் பூசையும் ஆரம்பமாகி இன்று தினமும் நான்கு காலப்பூசைகள் நடைபெற்று வருகின்றன.

ஆரம்ப காலத்தில் ஆலயத்தின் சிவாச்சாரியாராகச் சின்னத்தம்பி சின்னையரும் அவரின்பின் அவரது குமாரர்களாகிய மார்க்கண்டு ஐயரும், சின்னத்தம்பி ஐயரும் 1942ம் ஆண்டுவரை பூசைகளைச் செய்து வந்தனர். பின்னர் சதாசிவசிவாச்சாரியார் பூசகராகக் கடமையாற்றினார். இவருக்குப்பின் இவரது இளைய சகோதரர் சண்முகநாதசிவாச்சாரியாரும் தொடர்ந்து நடராஜாசிவாச்சாரியாரும் இவரையடுத்து முத்துக்குமாரசிவாச்சாரியாரும் பின்னர் ஜெயந்திநாதசர்மாவும் தற்போது பிரம்மஸ்ரீ ச. சந்தானக்குருக்கள் நித்தியபூசைகளைச் செய்து வருகின்றார்.

அம்பாள் ஆலயத்தில் கந்தபுராணப்படிப்பு நடைபெற்று வந்துள்ளது. தைப்பொங்கல் தினத்திலன்று மனோன்மணி அம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று அம்பாள் வீதியுலாவந்து மறுநாள் குளிர்த்தியும் நடைபெறும். ஆனி மாதத்தில் பத்து நாட்கள் வருடாந்த மகோற்சவம் நடைபெற்று ஆனிப்பறுவப் புண்ணிய நாளில் தீர்த்தோற்சவம் நிகழும். கொடியேற்றம் ஓவசியர் வி. இராசதுரை குடும்பத்தினரதும், தேர் ஆலய நிர்வாகமும் த. இராசதுரை குடும்பமும் இணைந்தும், தீர்த்தம் சி. அருளம்பலம் குடும்பத்தினரதும் உபயங்களாக உற்சவ ஆரம்பகாலம் தொடக்கம் இன்றுவரை நடைபெற்று வருகின்றன. முன்னர் இவ்வுற்சவ காலத்திலெல்லாம் நடைபெற்ற "சின்னமேளம்" என்று அழைக்கப்பட்ட சதுர்க்கச்சேரியைக் கண்டுகளிக்க ஏராளமான மக்கள் கூடுவர். இந்நிகழ்ச்சியால் ஆலயத்தின் புனிதத்தன்மை அழிவதைக் கருதி சதுர்க்கச்சேரிகள் நிறுத்தப்பட்டு பின்னர் சைவப் பிரமுகர்களாலும், தமிழ் அறிஞர்களாலும் கதாப்பிரசங்கங்கள், சமயவிரிவுரைகள் நடைபெற்று வந்துள்ளன.

தேர்த்திருவிழாவின்போது சிறிய தேரில் விநாயகப்பெருமான் முன்செல்ல வள்ளி தேவசேனா சுப்பிரமணியப்பெருமான் இரண்டாவது தேரில் தொடர மூன்றாவதான அழகிய சித்திரத்தேரில் அன்னை மனோன்மணி அம்பாள் ஆரோகணித்து வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்புரியும்காட்சி மகோன்னதமானதாக இருக்கும். ஆலய திருவிழாக் காலங்களில் அம்பாளும் பரிவாரமூர்த்திகளும் வீதியுலாவரும் வாகனங்களாக இடபம், எலி, மயில், சர்ப்பம், குதிரை, காராம்பசு, ஆட்டுக்கடா முதலியவற்றோடு மூன்று தேர்களும், சப்பரம், மஞ்சம், கயிலாயவாகனம் ஆகியவைகளும் உள்ளன.

முன்பிருந்த கட்டுத்தேர் பழுதடையவும் சிலகாலம் சகடையில் காட்டுத்தடியினால் தேர் தற்காலிகமாக அமைத்து தேர்உற்சவம் நடந்தேறியது. 1962ல் புதிய சித்திரத்தேர் அமைப்பதற்காக டாக்டர் ராஜா, மு செல்லையர், பொ. கனகரத்தினம், பொ. பரராஜசிங்கம், M.S. மணியம், இராமநாதன் ஆகியோர் அடங்கிய தேர்த்திருப்பணிச்சபை உருவாக்கப்பட்டது. இச்சபையின் விடாமுயற்சியாலும், ஊர்மக்கள், அம்பாள் அடியார்கள் போன்றோரின் உதவி ஒத்தாசையாலும் சித்திரத்தேர் நிர்மாணிக்கப்பட்டு 1966ல்வெள்ளோட்டம் நடைபெற்றது. இதுவே அம்பாள் வீதியுலாவரும் இன்றைய தேராகும். விநாயகப்பெருமானின் தேர் இராசதுரையாலும், முருகப்பெருமானின்தேர் கனகரத்தினத்தினாலும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. பரராஜசிங்கமும் இராமசாமியும் இணைந்து மஞ்சம் அமைத்துக் கொடுத்துள்ளனர். சப்பரம் தம்பையா குடும்பத்தாரால் அமைத்துக் கொடுக்கப்பட்டது. கைலாயவாகனம் ஊர்மக்கள் உபயமாகும்.

ஆலய வெளியீடாக 17-10-1982ல் மகாகும்பாபிஷேக மலரொன்று வெளிவந்துள்ளது. அம்பாள்மீது பாடப்பெற்ற "கற்புலத்து ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஊஞ்சல் பதிகம்" ஒன்றும் இருப்பதாக அறிகிறோம்.

சிறந்த சக்திபீடமாக விளங்கும் நந்தாவில் கற்புலத்து ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம் வருங்காலத்திலும் சிறப்புற்று வளர அம்பாளின் திருவருளை வேண்டுவோம்.

"நாயகி, நான்முகி, நாராயணி, கைநளின பஞ்ச
சாயகி, சாம்பவி, சங்கரி, சாமளை, சாதிநச்சு
வாயகி மாலினி, வராகி, சூலினி, மாதங்கி, என்று
ஆயகி யாதி உடையாள் சரண் அரண் நமக்கே"

- அபிராமிப்பட்டர்

****

உ
சிவமயம்

கொக்குவில் கிழக்கு பொற்பதி அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயம்

"வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்கிற்பாம்"
- சேக்கிழார் புராணம் -

"வந்தவினை போக்கி வருவினை தவிர்க்கும் விந்தைமிகு தெய்வம் விநாயகர்" என்பர். விநாயகப் பெருமான் "அம்பலவாண வீரகத்தி விநாயகர்" என்ற திருநாமம் தரித்து அருள்பாலிக்கும் தலம் பொற்பதி. சுமார் நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட இத் தலம் கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ளது.

1902ம் ஆண்டு பிற்பகுதியில் இப்பிரதேசம் மனித நடமாட்டம் அற்ற, அடர்ந்த புல் பற்றைகளைக் கொண்ட இடமாகத் தோற்றமளித்தது. இந்தக் காலங்களில் யாழ்ப்பாண அந்தணப் பெருமக்களுக்கு வேதம் கற்பிப்பதற்காக சிவஸ்ரீ ரகுநாதக்குருக்கள், சிவஸ்ரீ சோமாஸ்கந்தக்குருக்கள், சிவஸ்ரீ நடராஜக்குருக்கள் ஆகிய மூன்று அந்தண உத்தமசீலர்கள் இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்தார்கள். இவர்கள் தங்குவதற்கு ஓர் ஆச்சிரமம் அமைக்க இந் நிலப்பரப்பைத் துப்பரவு செய்த சமயம் பூமியிலிருந்து விநாயகர் சிலை ஒன்று கிடைக்கப் பெற்றது. அவ்விடத்தில் முன்பு ஓர் விநாயகர் ஆலயம் இருந்திருக்கலாம் எனக்கருதிய அவ்வூர் மக்கள் அங்கு ஓர் சிறு குடிசையில் அவ் விநாயகர் சிலையை வைத்து வணங்கி வந்தனர். அதனருகே அந்தணப் பெருமக்களின் வேதாகம ஆச்சிரமமும் நிறுவப்பட்டது. புல் பற்றைகளுக்குள் தோன்றிய விநாயகர் ஆதலால் "புல்-பத்தை" விநாயகர் என வழங்கப்பட்டு, நாளடைவில் " பொற்பதி விநாயகர்" ஆக மருவி அழைக்கப்பட்டு வந்துள்ளார்.

காலப்போக்கில் மண் குடிசையிலான கோயிலை, ஆச்சிரமத்தில் கல்வி பயின்ற அந்தணப் பெருமக்களும் குருமார்களும் சேர்ந்து ஆலயமாகக் கட்டியெழுப்பிக் கும்பாபிஷே

கமும் செய்து வைத்தார்கள். பின்னர் 1908ம் ஆண்டு சிவஸ்ரீ நடராஜக்குருக்கள் என்பவரால் 52 சுடர்களுடன் கூடிய பதஞ்சலியும் புலிமுனியும் இணைந்த ஐம்பொன்னாலான நடராஜப் பெருமான் விக்கிரகம் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டு இக்கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. தில்லைஅம்பலத்தது ஆனந்தத் திருநடனம் புரியும் நடராஜர் மூர்த்தம் இங்கு நிறுவப்பட்டதனாலும், விநாயகப் பெருமான் உலோகக் கத்தியால் பூமியைத் தோண்டி கிடைக்கப்பெற்றவரானதாலும் இவ்வாலயம் "பொற்பதி அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயம்" என இன்று பெயர்பெற்று விளங்கி வருகின்றது.

இத்திருக்கோயிலில் காலத்திற்குக் காலம் பொதுமக்களின் அன்பளிப்பும் ஆதரவும் கொண்டு பல திருப்பணிகள் நடந்தேறியுள்ளன. முன் கொட்டகை, கோபுரவாசல், வசந்தமண்டபம் போன்றவை அமைக்கப்பட்டன. உள்வீதி சுற்றிவரத் தூண்கள் நிறுவப்பட்டு, மடைப்பள்ளியும் திருத்தி சீர்செய்யப்பட்டுள்ளது.

1982ம் ஆண்டு மூலமூர்த்திக்கு வலப்பக்கத்தில் திரு. சரவணபவான் குடும்ப உபயமாக இலட்சுமி அம்பாள் சந்நிதியும், இடப்புறம் திரு. பொன்னடியார் குடும்ப உபயமாக முருகப்பெருமான் சந்நிதியும், ஆலய கண்டாமணி கோபுரத்திற்கு அருகே திரு. விஜயகுமார் உபயமாக வைரவப் பெருமான் சந்நிதியும் ஆலய பரிவார மூர்த்திகளாக நிறுவப்பட்டன. கருவறையின் பின் சுவரில் அமைந்துள்ள தட்சணாமூர்த்தியின் எழில் வடிவம் திரு. பாலச்சந்திரனின் உபயமாகும். இத் திருப்பணிகள் யாவும் நிறைவேறிய நிலையில் 1982ம் ஆண்டு சிவஸ்ரீ தியாகராஜக் குருக்கள் தலைமையில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. 1985ம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழலினால் ஆலயம் சேதத்திற்கு உள்ளாகி சிதலமடைந்தது. சிவஸ்ரீ தியாகராஜக்குருக்கள், சிவஸ்ரீ நடராஜக்குருக்கள் ஆகிய இரு அந்தணப் பெருமக்களுடன் பக்தர்களும் கூடி கோயிலை புனரமைக்க ஆரம்பித்தனர். இதில் வெற்றியும் கண்டனர். திரு. சேனாதிராசா குடும்பத்தினர் கொடிமரம் தாபித்துக் கொடுத்திருந்தனர். திரு. பரராஜசிங்கம் சிவதாஸ் குழாய்க்கிணறு ஒன்று அமைத்துக் கொடுத்தார். திரு. சோமலிங்கம் உபயமாக சந்தானகோபாலர் சந்நிதியும் கட்டப்பட்டது.

இறையருளும் பக்தர்களின் கடும் உழைப்பும் ஒன்றுகூடியதன் விளைவாக 1987ம் ஆண்டு ஆவணி மாதத்தில் மகாகும்பாபிஷேகம்

கண்டது இவ்வாலயம். மேற்குறிப்பிட்ட அந்தணப் பெருமக்களின் தலைமையில் வேதாகம சிகாமணி மு. ஜெயந்திநாதக்குருக்கள் அவர்களினால் (12.08.1987 கும்பாபிஷேக விஞ்ஞாபனம்) கும்பாபிஷேகம் நிகழ்த்தப்பட்டது.

பொற்பதி அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய உரிமையும், பரிபாலனமும் தொன்றுதொட்டு அந்தணப்பெருமக்களுக்கே உரியது. ஆலய நித்திய, நைமித்திய பூசைகளையும், உற்சவங்களையும் அவர்களே கவனித்து வருகிறார்கள். அந்தவழியிலே தற்பொழுது சிவஸ்ரீ தியாகராஜக்குருக்கள், சிவஸ்ரீ நடராஜக்குருக்கள் ஆகியோரால் ஆலயம் வழிநடத்தப்படுகிறது. ஆலய பிரதிஷ்ட மகோற்சவ ஆச்சாரியாராக சிவஸ்ரீ நடராஜக்குருக்கள் பதவிவகித்து வருகிறார்.

இத்தலத்தில் ஆரம்ப காலங்களில் இரண்டு நேரப் பூசைகள் நடைபெற்று வந்தன. தற்போது காலை, மதியம், மாலை என மூன்று வேளைகளில் பூசைகள் நடைபெற்று வருகின்றன.

இங்குள்ள பஞ்சலோகத்தினாலான உற்சவத்திருமேனிகள் மிக நேர்த்தியானவை. பின்வரும் விநாயக பக்தர்கள் அவற்றை தத்தமது உபயமாக ஆலயத்திற்கு வழங்கியுள்ளனர்.

ஒருமுக விநாயகர்	- சோமலிங்கம் குடும்பம்
பஞ்சமுக விநாயகர்	- கனகரத்தினம் குடும்பம்
இலட்சுமி அம்பாள்	- சரவணபவான் குடும்பம்
சண்டேஸ்வரர்	-

தைப்பொங்கல் விழா முன்னர் இவ்வாலயத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்துள்ளது.அன்றையதினம் விநாயகப்பெருமான் வீதியுலாப் புறப்பட்டு பொற்பதிவீதி, ஆடியபாதம்வீதி, காங்கேசன்துறைவீதி, உப்புமடம்வீதி வழியாக வலம் வந்து ஊர்மக்கள் அனைவருக்கும் அருள்மழை பொழிந்து மீண்டும் பொற்பதிவீதி வழியாக ஆலயம் வந்தடைவார். 1982ம் ஆண்டு நிகழ்ந்த கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து ஆலயத்தில் 12 நாட்கள் அலங்காரத்திருவிழா நடைபெற்று வந்தது. 1997ம் ஆண்டு முதல் ஆவணி மாதத்து பூரண தினத்தைத் தீர்த்தோற்சவ நாளாகக் கொண்டு 15 நாட்கள் மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. மகோற்சவ 5ம் நாள் மஞ்சத்திருவிழாவும், 6ம் நாள் மாம்பழத்திருவிழாவும், 8ம்

நாள் கைலாச வாகனத்திருவிழாவும், 11ம் நாள் தங்கரதமும், 13ம் நாள் சப்பறத்திருவிழாவும், 14ம் நாள் இரதோற்சவம் என்று அழைக்கப்படும் தேர்த்திருவிழாவும், 15ம் நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

இரதோற்சவத்தன்று தேரில் ஆரோகணித்து உலாவரும் பஞ்சவிநாயகப்பெருமான் திரு. கனகரத்தினம் குடும்பத்தினரால் 1987ம் ஆண்டில் ஆலயத்திற்கு உபயமாக வழங்கப்பட்டிருந்தது. 2002ம் ஆண்டு சித்திரத்தேரும், தேர்முட்டியும் இப்பெருமக்களே நிர்மாணித்துக் கொடுத்துள்ளனர். தேர் உற்சவமும் இவர்கள் உபயமாகவே நடைபெற்று வருகிறது. இனிவரும் காலங்களிலும் திரு. கனகரத்தினம் குடும்பத்தினரே தேர்த்திருவிழாவைச் செய்வார்கள். அவர்களின்பின் அவர்களது மூத்த புதல்வனாகிய திரு சாந்தகுமார் பொறுப்பில் கனகரத்தினத்தின் பிள்ளைகளே பரம்பரையாகத் தேர்த்திருவிழாவைச் செய்து வருவார்கள் எனவும் அறிகிறோம்.
திருவிழாக் காலங்களில் விநாயகர்பெருமான் பவனிவரும் வாகனங்களும் விநாயக அடியார்களின் உபயங்கபளாகும்.

கைலாசவாகனம்	-	திரு. சோமலிங்கம் குடும்பம்
சர்ப்ப வாகனம்	-	திரு. மு. நடராசா
எலி வாகனம்	-	திரு. நல்லையா குடும்ளபம்.
யானை வாகனம்	-	திரு. சண்முகராசா
காமதேனு வாகனம்		
இடப வாகனம்		
பூத வாகனம்		
குதிரை வாகனம்		

அந்தணப் பெருமக்களின் ஆலயமாகிய கொக்குவில் பொற்பதி அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயம் மேலும் சிறப்புப் பெற்று விளங்க அடியவர்கள், அன்பர்கள் அனைவரதும் ஒத்துழைப்பும், பொற்பதியில் அருள்பாலிக்கும் விநாயகப்பெருமான் திருவருட்கடாட்சமும் துணை நிற்பதாக !

பரனே! பலமுனி வோர்தொழு தேத்தப் பயனளித்த
வரனே! பிரமன் பெறுகன் னியரைமணஞ் செய்சர்வே
சுரனே! கொக்குவில் பொற்பதி அம்பலவாண வீரகத்திவிக்ன
கரனே! உனையடைந்தேன் எனைக் காத்தல் கடனினக்கே!

****

உ

சிவமயம்

ஞானவைரவர் துணை

கோணாவளை ஞான வைரவசுவாமி கோவில்

"பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தை யுங்கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்"

- கந்தபுராணம் -

சைவம் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம். அருளும் வகையால் சிவன் ஏற்று நின்ற திருவடிவங்களில் வைரவமூர்த்தமும் ஒன்று. பிரமனின் அகந்தையை அழிக்க வந்த வடிவம் இது என்பது புராண வரலாறு. சாதாரணமான ஒரு மரத்தின் கீழ் சூலவடிவிலும், சைவக் கோவில்களில் பரிவார மூர்த்தியாகவும், சிலவற்றில் மூலமூர்த்தியாகவும் வைரவ வழிபாடு நடைபெற்று வருகிறது. கொக்குவில் கோணாவளையில் எழுந்தருளி அருளாட்சி புரியும் ஞானவைரவப் பெருமான் அப்பிரதேசம் வாழ் மக்களது குலதெய்வம். அவர்களைக் காக்கும் தெய்வமுமாகும்.

முன்னாளில் இந்நிலப்பகுதி தோட்டக்காணிகளாக இருந்தது. இங்கு வாழ்ந்து வந்த அனேகர் அந்தணப் பெருமக்களாவர். தோட்டக்காணி அனைத்திலும் பயன் தரும் தோடை, எலுமிச்சை, வாழை, கமுகு, தினை, குரக்கன் போன்ற பயிர்கள் பயிரிடப்பட்டன. இவ்வாறு குன்றாத பயன் தரும் பயிர்கள் விளைந்த பூமியாகையால் இப்பிரதேசம் "கோணாவளை" (கோணா + வளை) எனப் பெயர் ஏற்பட்டதென்பர். அந்தணப் பெருமக்களில் ஐயாத்துரைஐயர் என்பவரின் முன்னோர் தங்கள் காணியில் ஒரு சூலத்தை வைத்து வைரவரைச் சாத்வீக மூர்த்தியாகக் கண்டு, அதன் மூலம் கதிமோட்சம் பெற வழிபட்டு வந்தனர். சூலம் வைத்த இடத்திலேயே இன்று கோணாவளை ஞானவைரவர் திருக்கோவில் அருளாலயமாகத் திகழ்கின்றது. விவசாயத்தை தமது தொழிலாகக் கொண்டு வாழ்ந்த அந்தணப் பெருமக்கள் அதனால் கிடைக்கும் பயனை அவர்களால் அறுவடை செய்ய முடியாது அல்லலுற்றனர். பயிர்கள் பயன் தரும் வேளைகளில் அவையாவும் மற்றையோரால் திருடப்பட்டுவிடும். இவற்றிற்குக் காரணம் தங்கள் வைரவர்

வழிபாட்டின் குறையெனக் கருதி, தமக்கு ஏற்பட்டு வரும் கெடுதி நீங்க, பூநகரியிலிருந்து வைரவமூர்த்தம் ஒன்றும், திரிசூலம் ஒன்றும் எடுத்து வந்ததாக மூத்த தலைமுறையினர் கூறியுள்ளார்கள். வைரவமூர்த்தம் உக்கிரத்தன்மை கொண்டு விளங்கியதால், இவ் வழிபாட்டாளர் மத்தியில் இம் மூர்த்திக்கு இரத்தப்பலி, மாமிசநிவேதனம் வழங்கும் வழக்கம் இருந்தது. இதன்பிரகாரம் முன்னர் சூலம் வைத்திருந்த இடத்தில் வைரவ விக்கிரகத்தைத் தாபித்து, இரத்தப் பலியிடும் இடத்தில் திரிசூலத்தை நாட்டி ஆண்டுக்கொருமுறை ஆட்டுக்கடா, சேவற்கோழி போன்றவற்றைப் பலியிட்டும், பொங்கல் பூசைகள் செய்தும் வழிபட்டு வந்தனர். இதன் பின்னர் இப் பிரதேச மக்கள் தங்கள் துன்பம், கெடுதி யாவும் நீங்கப்பெற்று மனநிம்மதியுடன் வாழ்ந்துள்ளதாக அறிகிறோம். வைரவ விக்கிரகம் தாபித்தவேளை அதன் அருட்சக்தியூட்டும் யந்திரத்தகடு விக்கிரகத்தின் அடிப்பாகத்தில் வைக்கப்படவில்லை. உக்கிரமான வைரவதேவரானதால் இயந்திரத்தகடு கோவிலின் பின்புறத்திலுள்ள கிணற்றின் அடிப்பாகத்தில் வைத்துக் கட்டப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே இன்றும் கோவிலில் பொங்கல் பூசை ஆரம்பமாவதற்கு முன், முதற்பூசை கிணற்றடியில் நடைபெற்று நீற்றுப்பூசணிக்காய் வெட்டிப் பலியிட்டு வருவதைக் காணலாம். திரிசூலம் அமைந்த இடம் காளியம்மன் பீடமாக மக்கள் போற்றி வணங்கி வந்தனர். 1965ம் ஆண்டில் கோவில்களில் ஆடு, கோழி பலியிட்டுவரும் கொடிய கொள்கையை எதிர்த்து மக்கள் எழுச்சி பெற்ற சமயம் இக்கோவிலில் நடைபெற்று வந்த வெட்டுவேளாண்மை நிகழ்ச்சியும் நிறுத்தப்பட்டது. வைத்தியர் அ. சின்னத்துரை வேள்வியில் உபயோகிக்கப்பட்ட பெரிய கத்தியைப் பெற்று உயிர்ப்பலியை முடிவிற்குக் கொண்டு வந்தார். அன்றிலிருந்து காளியம்மன் பீடம் இன்றைய சாயிதுர்க்கா அம்பாள் வீற்றிருந்து அருளாட்சி புரியும் தலமாக விளங்குகின்றது. தெருவோரத்தில் கோவில் கொண்டுள்ள வைரவசுவாமி ஞானவைரவப் பெருமானாக திருக்காட்சி அளித்து அருள் புரிகிறார்.

கோணாவளை ஞானவைரவசுவாமி திருக்கோவிலும், கோவில் காணியும் ஐயாத்துரைஐயர் பரம்பரைக்குச் சொந்தமானது. அந்த முறையில் கோவில் உரிமையும், பரிபாலனமும் தொன்று தொட்டு அந்தணப் பெருமக்களுக்கே உரியது. நாளடைவில் கோவிலைச் சுற்றியிருந்த அந்தணப் பெருமக்களில் அநேகர் தங்கள் காணிகளை மற்றையோரிற்கு விற்றுவிட்டு அகன்றுவிட்டார்கள். இதனால் கோவில் பரிபாலனமும் பாதிக்கப்பட்டு கோவில் கட்டடங்களும் பாழடைந்த நிலையை எய்தியது. கோவிலில் உயிர்ப்பலி நிறுத்தப்பட்டபின்

ஊர்மக்கள் ஒன்றுகூடி கோவில் பழுதடைந்த நிலைகுறித்து ஆராய்ந்தனர். திருக்கோவிலை பொதுக்கோவில் ஆக்கும் முயற்சியில் வைத்தியர் அ. சின்னத்துரை, ஐ. சண்முகம், பொ. கனகரத்தினம், செ. சின்னத்தம்பி போன்ற பெருமக்கள் ஐயாத்துரைஐயரை அணுகியபோது அவர் அதற்கு சம்மதிக்கவில்லை. எனினும் வைத்தியர் அ. சின்னத்துரையின் விடாமுயற்சியினால் ஐயாத்துரைஐயர் மனம் திருந்தி தங்கள் கோவிலை பொதுக்கோவிலாக்குவதற்கு உரிமை ஒப்பந்தம் எழுதிக் கொடுத்தார். கோவில் பூசை உரிமை ஐயாத்துரை ஐயருக்கும் அவரது சந்ததியினருக்கும் உரிமையாகவே இருந்தது.

1966ஆம் ஆண்டில் பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்ட 12 அங்கத்தவர்கள் அடங்கிய பரிபாலனசபை கோவிலைப் பொறுப்பேற்று பரிபாலித்து வருகின்றது. ஆரம்பத்தில் வைத்தியர் அ. சின்னத்துரை தலைவராகவும், செ. சின்னத்தம்பி செயலாளராகவும், ஐ. சண்முகம் பொருளாளராகவும் பணியாற்றி உள்ளனர். இவர்களுடைய நிர்வாகத்தில் கோவில் புதுப்பிக்கப்பட்டு கர்ப்பக்கிரகம் பொழிந்த கற்களினால் நிர்மாணித்து அனாவர்த்தன மகா கும்பாபிஷேகம் 1967ம் ஆண்டு நடைபெற்றது. திரு. ஐ. சண்முகம் 1980ம் ஆண்டு கோவில் பரிபாலனசபைத் தலைவரானார். இவரது காலத்தில் கோவில் முன் மண்டபம் கோணாவளை ஒழுங்கைவரை கட்டப்பட்டு, வசந்தமண்டபம் அமைத்து கோவில் கட்டிடங்களில் திருத்தவேலைகள் நிறைவேற்றி 1984ம் ஆண்டு புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நிகழ்ந்தது. சிவஸ்ரீ ஜெயந்திநாதசர்மா இக்கும்பாபிஷேகத்தை தலைமை ஏற்று சிறப்பாக நடாத்தி வைத்தார். தற்போது கோவில் பரிபாலனசபை 1987ம் ஆண்டிலிருந்து திரு. பொ. யோகலிங்கம் தலைமையில் நன்முறையில் நடைபெற்று வருகின்றது.

பொ. யோகலிங்கத்தின் அரிய முயற்சியினாலும், ஊர்மக்கள், வெளியூர்மக்கள் ஆகியோரின் உதவி கொண்டும் கோவிலுக்கு முன் அமைந்துள்ள ஒன்றரை பரப்புக் காணியை கோவில் பரிபாலனசபை வாங்கியுள்ளது.

கோவிலின் மேற்கு, வடக்கு வீதிகளின் விரிவாக்கத்திற்கும் திரு. முத்துக்கிருஷ்ணன் தனது காணியின் ஒருபகுதியை நன்கொடையாக வழங்கியுள்ளார். அண்மையில் கோவில் முன் மண்டபத்தில் நவக்கிரக சந்நிதி கட்டப்பட்டுள்ளது. இது திருமதி துரைராஜாவின் உபயமாகும். திருக்கோவில் உற்சவமூர்த்திகளாக ஐம்பொன்னாலான இரு வைரவப்பெருமான் விக்கிரகங்கள் உள்ளன. இவற்றில் ஒன்று

பெரியது. மற்றது சிறியது. திருவிழாக் காலங்களில் வீதியுலா வருபவை இவையாகும்.

முதன் முதலில் வைரவ விக்கிரகம் தாபித்த நாளிலிருந்து கோவிலில் ஒருநேர நித்திய பூசை நடைபெற்று வந்தது. அத்தோடு ஆண்டுதோறும் ஆனி மாதத்தில் பெரிய அளவில் கொண்டாடப்பட்டுவந்த பொங்கற் பூசையும், வெட்டு வேளாண்மையும் முக்கிய நிகழ்வாகும். வைத்தியர் அ. சின்னத்துரை முதல் பொங்கற்பானையை அடுப்பிலேற்றி பொங்கலை ஆரம்பித்து வைப்பார். திருக்கோவிறபூசைகளை ஐயாத்துரைஐயரின் முன்னோர் செய்து வந்தார்கள். தொடர்ந்து ஐயாத்துரைஐயர் அர்ச்சகராகப் பணியாற்றினார். இவரது மகன் பரமசாமிஐயர் அர்ச்சகராகப் பணியாற்ற விருப்பங் கொள்ளாது தங்கள் கோவில்பூசை உரிமையையும் பரிபாலனசபையிடம் விட்டுக்கொடுத்தார். அன்றிலிருந்து பரிபாலனசபையினால் மாதச் சம்பளத்திற்கு நியமிக்கப்பட்ட சிவாச்சாரியார்கள் பூசையைச் செய்து வருகிறார்கள். கோவிலில் இன்று காலை, மாலை என இரு நேரப்பூசைகள் நடைபெறுகின்றன.

திருக்கோயில் பொழிகற்களால் கட்டப்பட்டு முதல் மகாகும்பாபிஷேகம் நிறைவேறிய தைமாத திருவாதிரைத் தினம் ஆண்டுதோறும் பெரிய அளவில் கொண்டாடப்படுகிறது. பத்து நாட்கள் நடக்கும் இவ் அலங்காரப் பெருவிழாவில் ஞானவைரவப்பெருமான் வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்புரியும் காட்சிமிகவும் சிறப்புடையது. ஆரம்பத்தில் இத்திருவிழாக்களின் உபயகாரர்களாக திரு அ. சின்னத்துரை, திரு ஐ. சண்முகம், திரு அரியபுத்திரன், திரு பொ. கனகரத்தினம், திரு செ. சின்னத்தம்பி, திரு மா. கனகசபை, திரு செ. பொன்னையா, திரு செ. கனகசபாபதி, திரு சி. பரமநாதன், திரு முத்துக்குமார் ஆகியோர் தங்களது திருவிழா உபயங்களைச் செய்தனர். தைப்பொங்கல், சிவராத்திரி, நவராத்திரி, திருவெம்பாவை ஆகிய விஷேட விழாக்களும் நடைபெற்று வருகின்றன. வெள்ளிக்கிழமைகளில் சுக்கிரவார பூசையும் தவறாது நடைபெறுகின்றது.

ஞானவைரவப்பெருமான் எழுந்தருளி உலாவரும் வாகனங்களாக நாய், மயில், குதிரை, தாமரைப்பூ ஆகியன உள்ளன. இவையாவும் ஊர்மக்கள் உபயங்களாகும்.

வாகனம்	உபயம்
நாய்	திரு. துளசிகாமணி
மயில்	திரு. பொன்னையா
தாமரைப் பூ	திரு. ஐ. சண்முகம்
குதிரை	பொதுமக்கள்

ஆடியபாத வீதி ஓரத்தில் கோயில் கொண்டுள்ள ஞானவைரவப் பெருமான் மக்களைக் காக்கும் பெருமைக்குரியவர். இப்பெருமான்மேல் நம்பிக்கையும், பயபக்தியும் நிறைந்த மக்கள் கோவில் வாசலைக் கடந்து செல்லும் சமயங்களில் இவ் இறைவனை வந்து வணங்கி உண்டியலில் காணிக்கை இட்டுச் செல்வர். இப்பெருமானை வழிபட்டால் முயற்சிகள் வெற்றி தரும், தடைகள் நீங்கும் என்பது இப்பகுதி மக்களின் நம்பிக்கை. நாமும் எமது வினைகள் தீரவும், வாழ்வில் நற்பலன் பெறவும் ஞானவைரவப்பெருமான் திருக்கடாட்சத்தை வேண்டி வணங்குவோம்.

****

உ

ஓம் சாயிராம்

கொக்குவில் ஸ்ரீ சாயிதுர்க்கா ஆலயம்

"கற்பக வளஞ் சுரக்கும் கருணை நாயகியே போற்றி
நற்பத நலஞ் சுரந்து நாயேனை யாண்டாய் போற்றி
பொற்புயர் கொக்கூர் மேவும் புவன நாரணியே போற்றி
அற்புத சாயி துர்க்கை யம்மையே போற்றி போற்றி"

கொக்குவில் கோணாவளைப் பகுதியில் அமைந்த திரு அ. க. வேலாயுதபிள்ளை அவர்களின் காணியில் பன்னெடுங் காலமாக ஓர் பெரிய வேப்பமரம் வளர்ந்திருந்தது. அவ் விருட்சத்தில் வைரவப்பெருமானும், காளியம்மனும் இருப்பதாக உணர்ந்த அவ்வூர் மக்கள் அவ்விடத்தில் பொங்கல் பூசைகள் செய்து வழிபாடாற்றி வந்தனர். 1983ஆம் ஆண்டளவில் அவ்விடத்தில் அம்மனுக்கு ஓர் ஆலயம் அமைத்து வணங்கப் பக்தர்கள் விரும்பினர். அக் காணியின் உரிமையாளர் தமது குடும்பக் காணியின் ஒருபகுதியை அம்மனுக்குக் கோயில் நிர்மாணிப்பதற்கு நன்கொடையாக வழங்கியிருந்தார். துர்க்கை அம்மன் ஆலயமே ஸ்தாபிக்கப்பட வேண்டுமென திருவுளச்சீட்டு மூலம் முடிவு செய்யப்பட்டு, ஆலய

நிர்மாணிப்புக்கென பரிபாலனசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.
இச்சபை உள்ஊரிலும், பிறஇடங்களிலும் மற்றும் பிறநாட்டிலும் உள்ள அடியார்களின் நிதியுதவியுடன் கோயிலை நிர்மாணித்து, மூலஸ்த்தானத்தில் சாயிதுர்க்காதேவி என்ற பெயர் கொண்ட அழகான விக்கிரகத்தைத் தாபித்தது. பரிவார மூர்த்திகளாக விநாயகரும், பாலமுருகனும் நிறுவப்பட்டனர். கருவறையில் நின்ற கோலத்தில் அமைந்த துர்க்கையம்மனின் விக்கிரகம் மற்றைய விக்கிரகங்களும் யாழ்ப்பாணத்துச் சிற்பாச்சாரியார் ஒருவரால் உருவாக்கப்பட்டன. இவ்வலாயத்தின் பிரதிஸ்ட்டா மகாகும்பாபிஷேகம் 01.07.1984 இல் நவாலியூர் பிரதிஸ்ட்டா சிரோண்மணி ஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

காலவோட்டத்தில் ஆலயம் மெல்ல மெல்ல வளர்ச்சியடைந்து பன்னிரண்டாவது ஆண்டு நிறைவடைந்ததும் 1997 ஆம் ஆண்டின் முற்பகுதியில் சில திருத்த வேலைகளுக்காக பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. அச்சமயம் வைரவரையும் பரிவார மூர்த்திகளில் ஒருவராக நிறுவி திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் மீண்டும் ஒரு மகா கும்பாபிஷேகம் 08.06.1997 இல் வெகு சிறப்பாக நடந்தேறியுள்ளது.
இத் திருக்கோயிலின் பிரதம சிவாச்சாரியாராக 1985 ஆம் ஆண்டிலிருந்து கடமையாற்றும் பிரதிஸ்டா ரத்தினம் சிவ ஸ்ரீ க. சிவதாசக்குருக்கள் ஆலய நைமித்திய கருமங்கள், அபிஷேகங்கள் மற்றும் விஷேட உற்சவங்கள் யாவற்றையும் பத்திசிரத்தையுடன் நிறைவேற்றி வருகின்றார். இவ்வாலயத்தில் ஆரம்ப காலத்தில் காலை, மாலையென இருவேளைப் பூசைகள் நடைபெற்று, தற்போது காலை, மதியம், மாலையென மூன்றுகாலப் பூசைகள் நடைபெற்று வருகின்றன.

01.07.1984 இல் நடைபெற்ற கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து ஆண்டுதோறும் ஆனிப்பூசத்தை ஆரம்ப நாளாகக் கொண்டு பத்து நாட்கள் அலங்கார உற்சவம் நடைபெற்று வந்தது. 1997 ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் பின்னர் ஆடிமாதப் பௌர்ணமி தினத்தைத் தீர்த்தோற்சவ நாளாகக் கொண்டு மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. இரதோற்சவம் பொது உபயமாக நடைபெற்று வருவதால் எல்லா நிலையிலும் உள்ள பக்தர்களும் இவ்விழாவில் பங்கேற்க வசதியாக இருப்பது இவ்வாலயத்தின் சிறப்புத் தன்மையாகும்.

முதலிரண்டு வருடங்களும் நடந்த இரதோற்சவத்தின்போது பிற ஆலயமொன்றில் இரவலாகப் பெறப்பட்ட தேரில் அம்பாள் வீதியுலா வந்துள்ளார். அன்னையின் திருவருட்கடாட்சத்தால் எம்பெருமாட்டிக்கு சித்திரத்தேர் ஒன்று அமைக்கும் திருப்பணிவேலை 1998 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. உள்நாட்டு, வெளிநாட்டு அடியார்கள் பலர் இப்பெரும் பணிக்கு தங்களாலான நிதியுதவியும், பொருளுதவியும் அளித்ததன் காரணமாக சித்திரத்தேர் குறுகிய காலத்தில் உருவாக்கப்பட்டு 22.07.1999 இல் வெள்ளோட்டவிழாக் கண்டது. இச் சித்திரத்தேரை தன் கைவண்ணத்தினால் உருவாக்கியவர் திருநெல்வேலி கலாபூஷணம் திரு ஆறுமுகம் ஜீவரட்ணம் ஆச்சாரி ஆவார். 1999 ஆம் ஆண்டிலிருந்து வருடா வருடம் இரதோற்சவ நாளில் அகிலத்தை ஆளும் அன்னை ஸ்ரீ சாயிதுர்க்காதேவி அலங்காரங்கள் ஒளிவீச இச்சித்திரத்தேரில் எழுந்தருளிப் பவனிவந்து பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார். மற்றைய உற்சவ தினங்களில் எம்பெருமாட்டி சிம்மம், குதிரை, காராம்பசு, அன்னம், சர்ப்பம், தாமரை போன்ற வாகனங்களில் புறப்பட்டு அருட்காட்சி வழங்குகிறாள். இவ்வாகனங்கள் யாவும் அம்பாள் அடியார்களால் செய்து கொடுக்கப்பட்டவையாகும்.

அன்னை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் வருடந்தோறும் ஆங்கிலமாத முதற் செவ்வாய் உற்சவமும், மாசி மகத்தைப் பூர்த்தி நாளாகக் கொண்டு இலட்சார்ச்சனையும், சித்திராபௌர்ணமி தினத்தன்று திருவிளக்குப் பூசையும், ஏனைய உற்சவங்களும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.

****

உ

ஸ்ரீ ஞானவைரவர் துணை

கொக்குவில் தலையாழி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்.

"சுடுகூர் எரிமாலை அணிவர் சுடர் வேலர்
கொடுகூர் மழுவாள்ஒன்று உடையார் விடையூர்வர்
கடுகூர் பசிகாமம் கவலை பிணியில்லார்
வடுவூர் புனல்சூழ்ந்த வடுகூர் அடிகளே"

- திருஞானசம்பந்தர் -

கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம், கோவில் விளங்கக் குடிவிளங்கும் என்பன நம் ஆன்றோரின் அமுத மொழி. இவற்றை மனம்கொண்ட தலையாழிப் பதியின் நான்கு தலைமுறைக்கு முந்திய மூத்த குடிமக்கள் தங்கள் வழிபாட்டிற்காக ஞானவைரவப்பெருமான் ஆலயத்தை அமைத்தனர்.

தலையாழி என்பது யாழ் மாநகரசபையினுள் அடங்கும் வண்ணார்பண்ணையின் வடக்கு எல்லையையும், கொக்குவில் கிராமத்தின் தெற்கு எல்லையையும் ஊடறுத்துச் செல்லும் சபாபதி வீதியின் வடபுறத்தே அமைந்த கொக்குவில் கிராமத்தின் ஓர் குறிச்சியாகும். அன்று வடக்கே ஒரு ஆழமான குளம் இருந்து இப்பகுதியின் பெரும்பாலான மக்களை வெள்ள அபாயத்தினின்றும் காப்பாற்றியது. இப் பகுதியின் வடக்கே தலைப்பகுதியில் இந் நீர்ப்பரப்பு இருந்ததனால் இக் குறிச்சி தலையாழி எனப் பெயர் பெற்றிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. நீர் தேங்கிநிற்கும் பகுதியிலே பனை, தென்னை போன்ற மரங்களும் அதனை அண்டிய பகுதியிலே பனை, தென்னை, கொய்யா, நாவல், விழாத்தி, மா, நெல்லி ஆகிய மரங்களும், அடர்ந்த பற்றைகளும், கோவை போன்ற கொடிகளும் காணப்பட்டன. மரங்கள் கனிதரும் காலங்களில் பறவைகளின் ஒலிகள் தரும் ரீங்காரங்கள் மனதை மயக்கும். வெள்ளம் நிறைந்த காலங்களில் தவளைகளின் ஒலிகள் இரவினில் இப்பதியையே கலங்கடித்துவிடும். நீர் வற்றிய காலங்களில் வெட்டவெளியாக காணும் இந் நிலப்பகுதியில் இக் குறிச்சியை சார்ந்த சிறுவர்கள், பெரியவர்கள் வேறுபாடின்றி எட்டுமூலை, பருந்து, சீனத்தான் போன்ற பட்டங்களை விண்ணேற்றி மகிழ்ந்திருப்பர். இன்று வெள்ளம் தேங்கும்

நிலப்பரப்பின் பெரும் பகுதிகளில் மக்கள் குடியேறியுள்ளனர்.

மேற்கூறிய இயற்கையின் சிறப்பம்சங்களாலும், கல்விமான்களாலும் செழிப்புற்றிருந்த தலையாழியில் அமைக்கப்பட்டிருந்த இந்த ஞானவைரவர் ஆலயம் ஈழத்திலே வைரவப் பெருமானுக்கு அன்று எடுக்கப்பட்ட ஆலயங்களில் மிகப்பெரியது ஆகும். ஆலயம் நிறுவப்பட்ட வருடம் சரியாகக் கூறமுடியாதெனினும் இற்றைக்கு நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்டதெனத் திட்டவட்டமாகக் கூறலாம்.

ஈழத் திருநாட்டில் சைவத்தையும், தமிழையும் காக்கவென 1822ம் ஆண்டு நல்லை நகரில் அவதரித்த நாவலர் பெருமான் இவ்வாலயத்தில் சமயப்பிரசங்கங்கள் ஆற்றியுள்ளார். அவரது சமயப்பிரசங்கங்கள் அன்று கிராமத்துப் பெரும்பகுதி மக்களை புலால்புசியாப் புண்ணியர்களாக மாற்றியது. நாவலர் பெருமானின் சமயாசாரக் கருத்துக்களை ஏற்ற கிராமத்துப் பெரியோர்கள் ஆசாரசீலர்களாக ஆகமவிதிபிசகாது ஆலய நித்திய, நைமித்திய பூசைகளை நடாத்தி வந்தனர். பிற்காலத்தில் கொழும்புத்துறை முனிவர் சிவயோக சுவாமிகளும் அவரது அடியார்களும் இவ்வாலயம் வந்து ஞானவைரவப் பெருமானை தரிசித்துச் சென்றுள்ளனர்.

இப் புனிதர்களின் வருகையினால் புகழ்பூத்த இவ்வாலயத்தை நிறுவியவர்கள், இத் தலையாழிக் குறிச்சியில் தனிச் சிறப்போடு வாழ்ந்து மக்களின் நன்மதிப்பிற்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமானவரும், அன்று யாழ் குடாவில் மிகப்பிரபலமடைந்து விளங்கிய திரு. சரவணமுத்து உடையார் எனும் பெருமகனாரும் அவரது நான்கு சகோதரர்களும், அவரது சகோதரிகளின் கணவன்மாரும் ஆவர். மேலும் யாழ்ப்பாணத்தின் பிரபல சோதிடர் இரகுநாதையர் (வாக்கிய பஞ்சாங்க வெளியீட்டாளர்) அவர்களும் இவ்வாலயத்தை அமைக்க இவர்களுக்கு உதவியாக இருந்துள்ளார். இக்குறிச்சியில் வாழ்ந்த வேறும் பல பெருமக்களும் இவ்வாலயம் அமைக்க உதவியுள்ளார்களென அறியக்கிடக்கிறது. நாவலர் பெருமான் போதித்த ஆலய ஆசாரவிதிகள், ஆகமவிதிகள் ஆகியன கிராம மக்களாலும், அர்ச்சகர்களாலும் நன்கு கடைப்பிடிக்கப்பட்டு ஞானவைரவப் பெருமானுக்கு நித்திய, நைமித்திய பூசைகள் சிறப்புற நடைபெற்று வந்தன. விசேட தினங்களில் தனங்களப்பைச்

சேர்ந்த இராமநாதர் சம்புநாதர் அவர்களாலும் புராணபடனம் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

தமிழ், சமய, சமூகப் பற்றுக்களில் மேலோங்கியவர்களாக விளங்கிய சரவணமுத்து உடையார் குடும்பத்தினர் சரவணமுத்து உடையாரிடமே ஆலய நிர்வாகப் பொறுப்பை ஒப்படைத்தனர். சில ஆண்டுகளுக்குப்பின் உடையாரின் மைத்துனர் திரு. மு. அருணாசலம்பிள்ளை ஆலய நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இவரும் உடையாரை அடியொற்றிப் பத்துநாட்கள் அலங்கார உற்சவம், புராணபடனம் ஆகியவற்றைச் சிறப்பாக நடாத்தி வந்தார். இப் பெரியார் ஆலயத்தின் பணிகள் செவ்வனே நடைபெறும் பொருட்டு தோட்டக்காணிகள், விளைநிலங்கள் ஆகியவற்றை ஆலயத்திற்கு எழுதி வைத்ததோடு ஆலய வடக்கு வீதியில் தனக்குரித்தான காணியில் ஒரு வீட்டையும் கட்டி ஆலயத்தில் கிரியைகள் செய்ய வருவோர் வசதிக்காகவும், அன்னதானம் நடைபெறவும் உதவியுள்ளார்.

ஆலயம் அமைப்பதற்கு ஒத்தாசையாக இருந்தவரும், ஆலய அர்ச்சகரும் பிரபல சோதிடராகவும் விளங்கிய இரகுநாதையர் அவர்கள் வாக்கிய பஞ்சாங்கம் ஒன்றை வெளியிட விருப்பம் கொண்டிருந்தார். இப்பணிக்கு திரு. மு. அருணாசலம்பிள்ளை அவர்களும், ஊர்மக்கள் பலரும் உதவிபுரிந்தனர். இதன்மூலம் சோதிட பரிபாலன மடத்திற்கும் ஆலயத்திற்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி மடத்தின் தொடர்புள்ளவர்களே தொடர்ந்து ஆலய அர்ச்சகர்களாக இருக்க வேண்டும் எனக் கூறப்பட்டது.

திரு. மு. அருணாசலம்பிள்ளைக்குப் பின்னர் அவரது புதல்வர் திரு. அ. சபாபதிப்பிள்ளை தந்தையின் திருத்தொண்டைத் தொடர்ந்தார். திரு. அ. சபாபதிப்பிள்ளை சைவ பரிபாலன சபைத்தலைவராக இருந்து சபை வெளியிட்ட Hindu Organ ஆங்கில ஏட்டின் பிரதம ஆசிரியராக விளங்கினார். இவர் இந்துக் கல்லூரி சபையின் (Hindu College Board)முகாமையாளராகவும் கடமை புரிந்தார். இச்சபையின் கீழ் யாழ்ப்பாணத்தில் முதலில் தாபிக்கப்பட்ட யாழ் இந்துக் கல்லூரியும், அதன் சகோதர பாடசாலைகளாக ஆரம்பிக்கப்பட்ட கொக்குவில் இந்துக்கல்லூரி, உரும்பராய் இந்துக் கல்லூரி, காரைநகர் இந்துக் கல்லூரி ஆகியனவும் இருந்தன. பல்வேறு சமய, சமூக, அரசியல் சங்கங்களின் தலைமைத்துவமும் இவருக்குக் கிடைத்தது. திரு.

சபாபதிப்பிள்ளை அவர்களின் அறிவாற்றலும், ஆளுமைத் திறனும் அன்று இலங்கை சட்டசபையின் ஓர் அங்கத்தவராக நியமனம் பெற அவருக்கு வாய்ப்பளித்தது. அரசியல் செல்வாக்கும் தான் வாழ்ந்த கிராமத்து மக்களின் மதிப்பும் ஞானவைரவப்பெருமான் ஆலயத்தை புத்தொளி பெறச் செய்ய உதவின. மலையாளப் புகையிலை வர்த்தகர்களது உதவி இவரிற்குக் கிடைத்தது. ஆலயத் திருப்பணி வேலைகள் துரிதமாக நடைபெற்றன. திரிசூலத்தை ஆதி வைரவ மூலவராகக் கொண்டிருந்த இவ்வாலயத்தில் இந்தியாவின் காசியிலிருந்து கொண்டு வரப்பட்ட வைரவ மூர்த்தியை மூலவராக இவர் பிரதிஸ்டை செய்தார் என அறியக்கிடக்கிறது. ஆலயம் முன்னரிலும் பார்க்கப் புதுப் பொலிவு பெற்றது. இந்தியாவிலிருந்து கோவிலுக்குகத் தேவையான பொருட்களை எல்லாம் தருவித்து வெகு சிறப்பாக வேதாகம வித்தகர்களான குருமார்களைக் கொண்டு கும்பாபிஷேகம் செய்வித்தார். ஞான வைரவப்பெருமான் ஆலய வரலாற்றில் சபாபதிப்பிள்ளையின் நிர்வாக காலம் ஒரு பொற்காலமெனக் கூறின் அது மிகையாகாது. இப் பெரியாரின் மறைவிற்குப் பின்னர் ஆலய நிர்வாகத்தை அவரின் மகன் திரு. ச. கனகரத்தினம் ஏற்றுக் கொண்டார். இவர் இவ்வாலயத்தைப் பரிபாலிக்கும் காலத்தே சுகவீனமுறவே கோவில் அலுவல்களை செவ்வனே கவனிக்க இயலாதவரானார். இவரின் மறைவிற்குப் பின்னர் நீண்டதொரு காலப் பகுதிவரை இவ்வாலயம் சீராக நிர்வகிக்கப்படாமையினாலும், இலங்கையில் நிலவிவரும் போர்ச் சூழல் காரணமாக இலங்கை விமானப்படையின் குண்டு வீச்சுக்கு உட்பட்டமையினாலும் ஆலயத்தின் பெரும் பகுதிகள் சிதைவுற்றன.

1988ம் ஆண்டு இந்திய அமைதிப்படை இங்கு நிலைகொண்ட வேளை மக்களை ஆலயங்களுக்குள் சென்று தங்கும்படி படையினர் உத்தரவிட்டனர். இப் பகுதி மக்கள் பாதுகாப்புத்தேடி இவ்வாலயத்தில் புகலிடம் தேடிச் செல்லமுடியாது பாழடைந்து இருந்தமையினால் இவ்வாலயத்திற்கு அண்மையாக அமைந்திருந்த வண்ணை காமாட்சி ஆலயத்தில் தஞ்சம் அடைந்தனர். இதன்போதே புதர்களால் மூடீ, சிதைவுண்டு பாழடைந்த ஞானவைரவப் பெருமானின் ஆலயத்தைப் புனரமைக்கும் எண்ணம் உதயமானது. அன்றைய ஆலய பூசகர் கோபாலையா அவர்கள் ஒருசில பெரியோர்களின் சிறு உதவிகளைப் பெற்று திருத்த வேலைகள் செய்ய முன்வந்தார்.

அதற்குப் பத்திராபதிபர் திரு. கதிரவேலுவின் புதல்வர் அமரர்

பரமசாமியும் முன்னின்று உழைத்தார். கும்பாபிஷேக தினத்தன்று 1008 சங்குகள் வைத்து சங்காபிஷேகத்தைச் செய்யும் கொக்குவில் எம். எஸ். துரையின் மகனார் திரு பாலசுப்பிரமணியமும் இவர்களை ஊக்குவித்தார். ஆயினும் சிறுதொகைப் பொருளோடு ஓரிருவர் செய்து முடிக்கும் பணியாக இது இல்லாது பாரிய திருப்பணியாக காணப்பட்டதனால் ஞானவைரவப் பெருமானின் அருள்கொண்டே உயர்வடைந்த திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் ஆலயத்தை முழுமையாகப் புனரமைக்க வேண்டுமென திரு. பரமசாமியிடமும் ஆலய பூசகர் கோபாலையா அவர்களிடமும் கூறிக் கொண்டார். இதனால் தொண்டுள்ளம் கொண்ட பரமசாமியும் மற்றவர்களும் "ஊர் கூடித்தான் தேர் இழுக்கவேண்டும்" என்பதற்கமைய இப்பாரிய பணியை ஆரம்பிக்க தகுந்த ஒருவராக அஞ்சா நெஞ்சர், எண்ணிய எண்ணியாங்கு முடிக்கும் திண்ணியர், ஆசிரியப் பெருந்தகை திரு. நாகலிங்கம் அவர்களை தேர்ந்தெடுத்து தமது உள்ளக்கிடக்கையை ஆசிரியரிடம் வெளியிட்டனர். ஆசிரியரும் தன் வாழ்வில் தாம் பெற்ற பெரும் பாக்கியமாகக் கருதி இப்பணியை ஏற்றுக் கொண்டார். பின்னர் திரு. பரமசாமியும், ஆசிரியர் திரு. நாகலிங்கம் அவர்களும் இணைந்து ஊர்ப் பெரியவர்களையும், வழிபடுநர்களையும் சந்தித்தனர். இதனால் வழிபடுநர் சபை, பரிபாலனசபை என்பன உதயம் பெற்றன. இச் சபைகளினூடாக இவரது அயராத உழைப்பினால் ஆலயம் புதுப் பொலிவும், புதுமெருகும் பெற்றது. புதிதாக நந்தகோபாலரும், முருகனும் பரிவார மூர்த்திகளாக பிரதிஸ்டை செய்யப்பட்டன. அத்துடன் புதிய கண்டாமணிக் கோபுரமும் அமைக்கப்பட்டு பழுதடைந்திருந்த ஏனைய பகுதிகளும் திருத்தி அமைக்கப்பட்டன. 1990ம் ஆண்டு ஆனிமாதம் 4ம் திகதி மகாகும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து மண்டலாபிஷேகமும் நடைபெற்றது.

இன்று இவ்வாலயத்தில் வருடாந்த உற்சவத்துடன் வருடாந்தம் தொண்நூற்றொரு விழாக்கள் நடைபெறுகின்றன.

ஞானவைரவர் ஆலய வளர்ச்சியை பொறுத்தளவில் ஆசிரியர் திரு. நாகலிங்கம் அவர்களது பங்கு மகத்தானது. 1988ல் ஆலய வழிபடுனர் சபையை அமைப்பதில் முன்னின்று உழைத்தார். அன்று தொட்டு 1993ம் ஆண்டில் இறைபதம் எய்தும்வரை நிர்வாகச் செயலாளராகவும், பொருளாளராகவும் இருந்து அரும்பணி புரிந்ததுடன் அலங்காரத் திருவிழா பத்து உட்பட தொண்நூற்றொரு

திருவிழாக்களை ஏற்படுத்திய பெருமைக்கு உரியவர். தொண்டுகளில் ஈடுபட்டால்தான் பக்தி அவர்களை பற்றிக் கொள்ளும் என்பது அவரது அசையா எண்ணம். அதனால் ஆசிரியரும், பரமசாமி அவர்களும் சேர்ந்து அப் பகுதியிலுள்ள துடிதுடிப்பும் உற்சாகமும் செயற்திறனும் கொண்ட இளைஞர்களை ஊக்குவித்து இந்து இளைஞர் மன்றம் ஒன்றை உருவாக்கினர். ஆலய தோட்டம் அமைத்தல், சிரமதானம் செய்தல், தினசரி கருமங்களில் உதவுதல், சமயப்பரீட்சைகள் நடாத்துதல், யாத்திரைகள் மேற்கொள்ளுதல் ஆகியவற்றை அன்று இவர்கள் ஆலய நிர்வாகிகளோடு இணைந்து அவர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு செய்தனர்.

1993ல் ஆசிரியர் நாகலிங்கம் அவர்களின் மறைவின் பின்னர் திரு கதிரவேலு பரமசாமி ஆலயப் பணியின் பெரும் பகுதியை ஏற்றுக் கொண்டு செயற்பட்டார். 22.12.1991 லிருந்து இவர் சிவபதம் அடையும் காலம்வரை (20.12.2000) ஆலய பரிபாலனசபை உறுப்பினராகச் செயற்பட்டார். 1993ம் ஆண்டிலிருந்து நிர்வாகச் செயலாளராகவும் செயற்பட்டு ஆலய திருவிழாக்களை முன்னரைப்போல் நடாத்திவந்தார். அரசியல் சூழலின் இடப்பெயர்வினால் உபயகாரர்கள் இல்லாத போதும் பூசையில் தடங்கல்கள் ஏற்படுதல் கூடாதெனக் கருதி கிராம மக்களின் உதவி கொண்டு சகல பூசைகளையும் நிறைவேற்றி வந்தார்.

விவேகமும், தொண்டுள்ளமும் கொண்ட இந்து இளைஞர் மன்ற இளைஞர் சிலர் கோவில் சூழலில் அமைத்த வாழைத் தோட்டத்தை தான் இருக்கும் வரை பாதுகாத்து மேலும் மடவளவுக்குள்ளும் விஸ்தரித்து ஆலயத்தின் அன்றாட தேவைகளுக்கு வேண்டிய வாழைப்பழத்தை இதிலிருந்து பெற்றதோடு அதன் மூலம் ஆலயத்திற்குச் சிறு வருமானத்தையும் கிடைக்கச் செய்தார். இவர் இருக்கும் வரை இரு தோட்டங்களும் செழிப்புக் குன்றாது காணப்பட்டன. இவர் பராமரித்து வளர்த்த தென்னங் கன்றுகள் இன்று எம்பெருமானின் பூசைத் தேவையின் ஒரு பகுதியை பூர்த்தி செய்கின்றன.

இவரது தொண்டின் துலக்கமாக அமைந்தது ஆலயத்தைச் சுற்றியுள்ள திருவீதியாகும். அனுபவமும், ஆற்றலும், செயற்றிறனும் உள்ளவர்களைக் கொண்டு அவர்களின் ஆலோசனையையும் உதவியையும் பெற்று திருவீதியை அமைத்தார். ஆலயத்தின் உள்ளே

பூச்செடிகளை நடுவித்து நந்தவனத்தின் நடுவே எம்பெருமான் கோவில் கொண்டது போன்றதொரு காட்சியை அடியார்கள் காணும்வண்ணம் செய்தார்.

1995ல் இடப் பெயர்வு ஏற்பட்ட வேளை ஆலய அலுவல்கள் பலவற்றைச் சிறப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த ஆலய பரிபாலன சபை உறுப்பினரும், ஆலய உரிமையாளருள் ஒருவரும், களஞ்சியப் பொறுப்பாளருமாகிய நமசிவாயம் மகேந்திரன் தன்வசமிருந்த ஆலய சாவிக் கொத்தையும், பொறுப்புக்களையும் நிர்வாகச் செயலர் பரமசாமியிடம் ஒப்படைத்துச் சென்றார். ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருந்து செய்த வேலைகள் எல்லாவற்றையும் தனியாளாக இருந்து செய்தார். ஆலயத்துள் அடைக்கலம் புகுந்தவர்களை ஆதரித்ததோடு அவர்களின் உதவியோடு ஆலயத்தையும், அதன் சூழலையும் தூய்மைப்படுத்திப் பராமரித்து வந்தார்.

நிர்வாகச் செயலாளரான திரு. பரமசாமி இறையடி சேர்ந்ததன் பின் 2001ம் ஆண்டு அமைக்கப்பட்ட திருப்பணிச்சபை, குண்டு வீச்சால் சேதமுற்ற பகுதிகளைப் புனரமைத்து கருவறையை அடுத்துள்ள இரு மண்டபங்களையும் புதிதாக அழகுற அமைத்து 12 வருடங்களின் பின்னர் 08.12.2002ல் கும்பாபிஷேகத்தையும் சிறப்புற நிறைவேற்றி உள்ளது. தொடர்ந்தும் ஞான வைரவப்பெருமானின் கிருபையால் அவரது நித்திய, நைமித்திய பூசைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

****

உ

ஓம் முருகா

கொக்குவில் அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் ஆலயம

"நீரகத் தேதனை நினையு மன்பினோர்
பேரகத் தலமரும் பிறவி நீத்திடுந்
தாரகத் துருவமாம் தலைமை யெய்திய
ஏரகத் தறுமுக னடிக ளேத்துவாம் "

- கந்தபுராணம் -

முருகப்பெருமான் இனிதமர்ந்துறையும் அருட்தலங்கள் பலவற்றுள் கொக்குவிற் பதியில் சிறப்புற்றோங்கி மிளிரும் மஞ்சவனப்பதி ஆலயமும் ஒன்றாகும். "மஞ்சலியாடு", "மஞ்சமலியகாடு", "மஞ்சமருதிகாடு" எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டு வந்த இக்கோயில் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளால் "மஞ்சவனப்பதி" என்ற சிறப்புத் திருநாமம் இடப்பட்டு, அது நிலைத்து நின்று இன்று அருளும், ஆன்மீகமும் பொழியும் ஆலயமாக வளர்ந்துள்ளது. தொன்மைவாய்ந்த இத் தெய்வீகத் திருத்தலத்தில் முருகப்பெருமான் வள்ளி தேவசேனா சமேதராக எழுந்தருளி அருள் புரிகின்றார்.

கொக்குவிற் கிராமத்தில் "மஞ்சமருதிகாடு" என்பது ஒரு குறிச்சியின் இடப்பெயராகும். அன்று அவ்விடம் மேட்டு நிலமாகவும், மருதமரங்கள் நிறைந்த சோலையாகவும், அங்கு "அம்பலவாண விநாயகமூர்த்தி" என்ற பெயருடன் ஒரு சிறுகோயிலும் இருந்துள்ளது. அக்கோயிலிற்குமுன் ஒரு கொட்டகையும் அமைக்கப்பட்டிருந்தது. கூரையாவும் ஓலையால் வேயப்பட்டும், தரையைச் சாணத்தால் மெழுகியும் வந்துள்ளனர். அந்தணர் பரம்பரையைச் சாராத சைவமரபில் வந்த ஒருவரே ஒருவேளை பூசையையும் செய்து வந்தார்.

இவ்வாறு மடாலயமாக இருந்த இக்கோயில் 1817ம் ஆண்டில் ஆகம முறைப்படி கற்கோயிலாக அமைக்கப்பட்டது. அதுசமயம் தற்போது விநாயக சன்னிதியில் பரிவாரமூர்த்தியாக பிரதிட்டை செய்யப்பட்டுள்ள ஆதி"அம்பலவாண விநாயகர்" "மஞ்சமூர்த்தி" என அழைக்கப்பட்டுவர, கர்ப்பக்கிரகத்தில் மூலவராக வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியப் பெருமான் மஞ்சவனப்பதி முருகனாக

வீற்றிருக்கிறார் எனக் கர்ணபரம்பரைக் கதையாகக் கூறப்பட்டு வருகிறது.

காலத்திற்கு காலம் தெரிவு செய்யப்பட்ட தர்மகர்த்தா சபை, நிர்வாகசபை, திருப்பணிச்சபை போன்றவற்றின் அங்கத்தவர்கள் தங்கள் சிறந்த பங்கினைச் செலுத்தி கர்ப்பக்கிரகம், மூலமூர்த்தி, மற்றும் பரிவாரமூர்த்திகளைப் பிரதிட்டை செய்தும், அவற்றிற்குரிய சந்நிதிகளை அமைத்தும், ஆலயக் கட்டிடங்களைத் திருத்தியும், வேறும் பல திருப்பணிகளையும் நிறைவேற்றி வந்துள்ளனர். புனராவர்த்தன மகாகும்பாபிஷேகங்கள் 1968, 1989 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்றுள்ளன. அமரர் த. நீதிராசா அவர்கள் 1968ல் நடந்த மகாகும்பாபிஷேகத்தை முன்னின்று நடாத்தியுள்ளார்.

இத்திருக்கோயிலைத் திருத்திப் புனரமைப்பதற்காக 1999ம் ஆண்டில் நியமிக்கப்பட்ட திருப்பணிச்சபையினர், அடியார்கள்மூலம் தனித்தனியாகவும், பொதுநிதியின் அடிப்படையிலும் வைரவர்மணிக்கோபுரம், உட்புற வடக்குப்புறச்சுவர், வாகனசாலை, தீர்த்தக்கேணியைச் சுற்றியுள்ள மதில் போன்ற திருப்பணிகளைச் செய்துள்ளனர். திரு இ. நடராசா உபயமாக ஆலய முன்புற வாயில்பாலம் புனரமைக்கப்பட்டு, காங்கேசன்துறை வீதியிலிருந்து ஆலயம்வரை கல்பதித்து தார்ஊற்றி வீதி செப்பனிடப்பட்டுள்ளது. இவ்வடியாரே 1948ம் ஆண்டில் திரு பொ. தம்பையாவால் கட்டப்பட்ட ஆலய முன்மண்டபத்தைத் திருத்தி மணிமண்டபமாக கட்டவும் உதவியுள்ளார். அமரர் ச.வே. சண்முகம்பிள்ளையினால் 1946ம் ஆண்டு வியாழவரிவரை கட்டப்பட்டிருந்த கோபுரத்தை அத்திவாரமாகக் கொண்டு, உள்ளூர் அடியார்களும், புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் அடியார்களும் சேர்ந்து வழங்கிய நிதிமூலம் பஞ்சதளங்களை உடைய இராஜகோபுரம் சிறப்புற நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இராஜகோபுரத் திருப்பணியில் பெரும் ஈடுபாடு கொண்டு ஆர்வத்தோடு செயற்பட்டவர் ச. சண்முகரத்தினம் ஆவார். இராஜகோபுரத்தின் இருமருங்கிலும் உள்ள மணிக்கூட்டுக் கோபுரங்களில் ஒன்றான பிள்ளையார்கோபுரத் திருப்பணி க.வை. சற்குணத்தினதும் அதற்குரிய கண்டாமணி க.வை. சிவனேசனதும் உபயங்களாகும்.

கோவிலின் உட்பிரகார மண்டபம் கொங்கிறீற்றினால் கட்டிஎழுப்ப இலங்கை அரசாங்க புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சு நிதியுதவி செய்துள்ளது. இத்திருப்பணிகள் யாவும் முடிவுற்று புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பிரதிஷ்டா நூதன இராஜகோபுர பிரதிஷ்டா நவகுண்டபட்ஷ மகாகும்பாபிஷேகம் 13.06.2002இல் நிகழ்த்தப்பட்டுள்ளது. ஆலய பிரதமகுரு பிரதிஷ்டா பூஷணம், சிவாச்சாரியமணி சிவப்பிரம்மஸ்ரீ இரங்க.

வரதராஜக்குருக்கள் இக் கும்பாபிஷேகத்தை நடாத்தி வைத்துள்ளார்.

திருக்கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள சிலாவிக்கிரகங்களும், வெண்கலத்தாலான உற்சவமூர்த்திகளும் அடியார்களால் உபயம் செய்யப்பட்டுள்ளன. கோவில் கற்கோயிலாக அமைக்கப்பட்ட காலம் தொடக்கம் அந்தணமரபில் வந்தவர்களே நித்திய, நைமித்திய கிரியைகளை மேற்கொண்டு வரலாயினர். ஆரம்பத்தில் சிவஸ்ரீ சின்னப்பா ஐயரிலிருந்து தற்போது சிவப்பிரம்ஸ்ரீ இரங்க. வரதராஜக்குருக்கள்வரை அவர்களதுபணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இங்கு ஆதிகாலத்தில் ஒருவேளை மாத்திரமே பூசை இடம்பெற்று வந்தது. தற்போது ஆகமமரபில் ஆறுகாலப் பூசைகளும் இடம்பெற்று வருவதுடன் மகோற்சவ காலத்தில் பத்துத் தினங்களும் விசேட கிரியை வழிபாடுகள் வெகுவிமரிசையாக இடம்பெறுகின்றன. அத்துடன் ஆடிவேல்விழா, கார்த்திகை, சதூர்த்தி, திருவெம்பாவை போன்ற திருவிழாக்களும் இடம்பெறுகின்றன. ஆகமமரபு சாராத வழிபாடுகளாக பிள்ளை விற்றுவாங்கல், முடியிறக்கல், திருமணவிழா போன்றவற்றையும் இறையடியார்கள் நிறைவேற்றி இறையருளை வேண்டி நிற்கின்றார்கள்.

திருக்கோயில் வீதிகளெங்கும் நிழல்தரும் மரங்கள் அடர்ந்து வளர்ந்திருப்பதைக் காணலாம். அழகிய நந்தவனமும் உள்ளது. அழகான அன்னதான மடங்களும் அமைக்கப்பட்டுள்ளன. ஆலயத்தின் வடகிழக்குப் புறமாக அமரர் பொன்னம்பலம் காசிப்பிள்ளையால் கோயிலுக்கெனத் தர்மசாசனம் செய்யப்பட்ட நிலப்பரப்பில் தீர்த்தக்கேணி உள்ளது. இக்கேணியைத் திருமதி சிவஞானவல்லி நவரத்தினம் குடும்பத்தினர் அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இத்திருத்தலத்தில் முருகன், விநாயகருக்கென இரு சித்திரத்தேர்கள் உள்ளன. முருகப்பெருமானின் சித்திரத்தேர் 1935ம் ஆண்டில் ச.வே. சண்முகம்பிள்ளையின் உபயமாக நிர்மாணிக்கப்பட்டது. விநாயகப்பெருமானின்தேர் த. நீதிராசாவின் உபயமாகும். வை. சற்குணம் 1990ம் ஆண்ட சப்பறம் ஒன்றை உருவாக்கி உபகரித்துள்ளார். மயில்வாகனம் ஒன்றும், எலிவாகனம் ஒன்றும் க. நவரத்தினம் குடும்பத்தினரால் செய்து வழங்கப்பட்டுள்ளன. செ. தம்பித்துரை முருகப்பெருமானின் வெள்ளி மயில்வாகனத்தை செய்து வழங்கியுள்ளார்.

மஞ்சவனப்பதி ஆலயத்தின் சிறப்பம்சம் இந்தியா, இலங்கை உட்படப் பல சைவப்பேரறிஞர்கள் இங்கு அருளுரைகள், கதாப்பிரசங்கங்கள் ஆற்றியமையாகும். அந்த வரிசையில்

1916இல் இலங்கை வந்திருந்த சங்கரசுப்பையர், திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள், பன்றிமலைச்சாமி, தருமபுர ஆதீனம் திருஞானசம்பந்தபிள்ளை, கொக்குவில் குமாரசாமிப்புலவர், குப்பிளான் செல்லத்துரை, மணிஐயர் எனப்பட்ட நல்லூர் ஆதீன குருமகாசன்னிதானம் சுவாமிநாதத்தம்பிரான் போன்ற மகான்களைக் குறிப்பிடலாம். வாரியார் சுவாமிகள் பலதடவை இத்தலத்திற்கு வந்து கந்தபுராண விரிவுரை, மகாபாரத விரிவுரை, இராமாயண விரிவுரை, பெரியபுராண விரிவுரையெனப் பலப்பலவாக பலநாட்களாக பல்லாயிர பக்தர்கள் மத்தியில் தொடர்ந்து பிரசங்கமழை பொழிந்து இவ்வாலயத்திற்கு பெருமை தேடித்தந்துள்ளார். இப்பெரியார் தனது நூலொன்றில் "நான் அநேக நாட்கள் பிரசங்கம் செய்த தேவஸ்தானம் ஒன்று உண்டெனில் அது யாழ்ப்பாணம் கொக்குவில் மஞ்சவனப்பதியே ஆகும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

மஞ்சவனப்பதி முருகன்மீது திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளும், கொக்குவில் குமாரசாமிப் புலவரும் பாடல்கள் பாடியுள்ளனர். வாரியார்சுவாமிகள் பாடியவை "மஞ்சவனப்பதி பஞ்சரத்தினப்பா", திருப்புகழ் சந்த மெட்டில் அமைந்த "குகப் புகழ்" ஆகிய இரண்டுமாம். குமாரசாமிப் புலவர் "மஞ்சவனப்பதிகம்", "திருவூஞ்சல்", "ஏசல்" என்பவற்றைப் பாடி உள்ளார். 1989ம் ஆண்டிலும் பின்னர் 2002ம் ஆண்டிலும் நடைபெற்ற இரு கும்பாபிஷேகங்களை முன்னிட்டு இருமுறையும் சிறப்புமலர்கள் வெளியிடப்பட்டுள்ளன. கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம் அப்பெருமானின் அருளினாலும், அநேக சைவப் பெரியார்களின் ஆசியினாலும் சிறப்பாக உருப்பெற்று பிரதான வீதியில் அலங்கார வளைவில் நின்று பார்க்கும் போது கம்பீரமாகக் காட்சி தந்து ஊர் மக்களிற்கு அருளினையும் அள்ளி வழங்கிக் கொண்டு இருக்கிறது. நீறணிந்து நித்தமும் முத்தமிழ் போற்றும் முருகனை வழிபடுவோம். அவன் அருள் பெறுவோம்.

"பஞ்சவனார் பணிசெய்து பணியுந்தெய்வம்
பற்றிநின்றார் பற்றறுக்கும் பற்றில்தெய்வம்
வெஞ்சமணர் களைகளைந்த விசாகதெய்வம்
வேலேந்தும் விமலனென விளங்கும் தெய்வம்
அஞ்சுகன் ஆதியர்பரவ ஆடுந்தெய்வம்
அகத்தியனுக் கருளியெமை ஆளுந்தெய்வம்
மஞ்சவனப் பதியமர்ந்த தெய்வம்போற்றி
வாழ்வாரே பல்லாண்டு வாழ்குவாரே"

- கிருபானந்தவாரியார் சுவாமிகள்

உ

ஓம் சக்தி

அருள் மிகு வீரமா பிடாரி அம்பாள் ஆலயம்

"சொல்லுக் கடங்காவே - பராசக்தி
சூரத்தனங்களெல்லாம்
வல்லமை தந்திடுவாள் - பராசக்தி
வாழி என்றே துதிப்போம்"

- அமரகவி பாரதியார். -

தமிழ் அரசர்களாகிய சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகளால் யாழ்ப்பாணத்தில் ஏழு முதலிமார்கள் குடியிருத்தப்பட்டனர். அவர்களில் ஒருவர் தனது யானைப்படையுடன் அராலித்துறையில் வந்திறங்கினார் என்பது வரலாற்றுச் செய்தி. பின்னர் பெருமளவிலான நெல்வயல்கள் நிறைந்த அராலியைக் கடந்து யானைப்படையின் உணவுக்குத் தேவையான கரும்பு, மா, பலா, தென்னை போன்ற மரங்கள் உள்ள பிரதேசத்திற்கு யானைக்கூட்டத்துடன் வந்து தங்கியுள்ளனர். யானைகள் கொண்டுவரப்பட்ட அல்லது யானைகள் தங்கியிருந்த இடம் என்ற பொருளில் இந்நிலப்பகுதி "ஆனைக்கோட்டை" ஆயிற்றென்பர். இப்பெரியார் இங்கு வரும்போது தம்முடன் கொணர்ந்த போர்த்தெய்வம் என்று கூறப்படும் "பிடாரி அம்மன்" சிலை ஒன்றினை வயல்வெளிமேட்டு நிலத்தில் ஆறு அடி உயரமான ஆறு தூண்களை எழுப்பி அதன்மேல் பீடம் அமைத்து தாபித்தனர். காலப்போக்கில் இயற்கை அனர்த்தங்களினால் இவையாவும் அழிந்து போயின.

அம்மன் அமர்ந்திருந்த வயற்காணி கணபதிப்பிள்ளை குடும்பத்தினருக்கு உரியதாகும். கணபதிப்பிள்ளையின் சந்ததியில் வந்த பொன்னையாப்பிள்ளை அவ் வயற் காணியில் மேடாகக் குவிந்திருந்த மணலை விற்பதற்காக அகழ்ந்த சமயம் பிடாரி அம்மன் சிலையும் கற்றூண்களும் வெளிவந்தன. பொன்னையாப்பிள்ளை பிடாரி அம்மன் சிலையை எடுத்துவந்து கொக்குவில்-ஆனைக்கோட்டை எல்லையில் அமைந்திருந்த தனது பதினாறு பரப்பைக் கொண்ட காணியில் கூரைவேயப்பட்ட கொட்டிலில் வைத்து வழிபாடாற்றி வரலானார். போர்த்துக்கீசர் காலத்தில் பல சைவக் கோயில்கள், அங்கிருந்த சிலைகள், பொருள்பண்டங்கள் யாவும் அவர்களினால் அழித்து நிர்மூலமாக்கப்பட்டன. இதனை அறிந்து அச்சமடைந்த பொன்னையாப்பிள்ளையின் சந்ததியினர் தெய்வத் திருவுருவாகிய

பிடாரி அம்மன் சிலையினை அன்னியர் தீண்டக்கூடாதெனக் கருதி வண்ணார்பண்ணைச் சிவன்கோவில் தீர்த்தக் கேணியில் ஒளித்து வைத்தனர். டச்சுக்காரர் ஆட்சிக்குப்பின் சிவன்கோவில் நிர்வாகிகள் அச்சிலையை ஆலயக்கேணியிலிருந்து எடுத்து வழிவழி உரிமை சான்ற தரகு பொன்னையா என்பவரிடம் கொடுத்துள்ளார்கள். இப்பெரியார் முன்னர் சிலை தாபிக்கப்பட்டிருந்த பதினாறு பரப்புக் காணியில் மடாலயம் எழுப்பி அதில் 1754 ம் ஆண்டில் பிடாரி அம்மன் சிலையை மீண்டும் பிரதிஸ்டை செய்து பராமரித்து வந்துள்ளார். இவ்விடத்திலேயே இன்று பிடாரி அம்மை நிலைகொண்டு "வீரமா பிடாரி அம்பாள்" என எண்ணற்ற குடும்பங்களின் குலதெய்வமாக வணங்கப்பட்டு வருகிறாள்.

திருக்கோவில் கருவறையில் பிடாரி அம்பாள் கண்ணையும், கருத்தையும் கொள்ளை கொள்ளும் அழகின் உருவமாக, வலதுபுறக் கையொன்றில் சூலமும், மற்றொரு கையில் பூரண கும்பமும், இடதுபுறக் கையொன்றில் அக்கினியும், மற்றதில் கபாலமும் கொண்டவாறு சிங்கவாகனத்தில் அமர்ந்து காட்சியளிக்கிறாள். இத்தெய்வச்சிலை மூன்றரை அடி உயரமானது. சிலையின் அடிப்புறத்தில் தமிழ் எழுத்துக்களில் அஎங (873) ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டுள்ளதெனப் பொறிக்கப்பட்டுள்ளதாக அறிகிறோம். அம்பாளின் கையொன்றில் கபாலம் காணப்பட்டமையால் மக்கள் தங்கள் இடர் நீக்க அம்பாளுக்கு நேர்த்தி வைத்து தங்களால் வளர்க்கப்பட்டுவந்த ஆட்டுக்கடாக்களையும், சேவற்கோழிகளையும் ஆண்டுக்கொருமுறை இக்கோவிலுக்கு எடுத்து வந்து பலியிட்டு வந்துள்ளார்கள். நீண்ட காலமாக நடைபெற்றுவந்த இவ்வேள்வி 1970ம் ஆண்டில் நிறுத்தப்பட்டுவிட்டது. வேள்வியில் உயிர்வதைத் தொழிலைப் புரிந்தோர் சாக்கன் கதிரவேலு, வேடன் சின்னத்தம்பி ஆகிய இருவருமாவர்.

1969ம் ஆண்டில் இத்திருக்கோவில் வருமானம் இல்லாமையினால் வளர்ச்சிகுன்றி நித்தியபூசைகளும் நடைபெறமுடியாத நிலையிலிருந்தது. இதனை உணர்ந்த அம்பாளின் அடியார்களாகிய வித்துவான் அ. கந்தையா (ஆசிரியர்), இராசையா புஸ்பராஜா, கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ சோமசுந்தரக்குருக்கள் ஆகிய மூவரும் அன்றைய கோவில் நிர்வாகஸ்தர்களாகிய சிவகுமார் குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து கோவிலை பொதுக்கோவிலாக்குவதற்கு முடிவு செய்தனர். இதன்பிரகாரம்

பத்து அங்கத்தவர்கள் கொண்ட பரிபாலனசபை பொதுமக்களால் அமைக்கப்பட்டு தலைவராக இ. புஸ்பராஜாவும், செயலாளராக வித்துவான் வ. கந்தையாவும், பொருளாளராக வேலுப்பிள்ளை சின்னராசாவும் தெரிவு செய்யப்பட்டனர். 1971ஆம் ஆண்டில் இப்பரிபாலனசபை பொதுமக்களிடம் தலா ரூபா ஐந்து வீதம் பணம் பெற்று மடாலயத்தை ஆகமமுறைப்படி கோவிலாக்கட்ட ஆரம்பித்தது. முதன்முதலாக கர்ப்பக்கிரகம், உற்சவமூர்த்தி மண்டபம், முன்மண்டபம் ஆகியவை கட்டப்பட்டு பரிவார மூர்த்திகளாக ஆலயத்தின் இடதுபுற மூலையில் பிள்ளையாரும், முன்மண்டபத்தின் இடதுபுற மூலையில் வைரவருக்குப் பதிலாக வைரவசூலமும், கர்ப்பக்கிரகத்திற்கு அருகில் சண்டேஸ்வரியும் தாபிக்கப்பட்டன. முதல் மகாகும்பாபிஷேகம் 1975ம் ஆண்டு ஆலய பிரதமகுருவாகிய சிவஸ்ரீ சோமசுந்தரக்குருக்கள் தலைமையில் நடைபெற்றது. தொடர்ந்து பரிபாலனசபையின் முக்கிய அங்கத்தவர்களாகிய இ. புஸ்பராஜா, வித்துவான் வ. கந்தையா, வே. சின்னராசா ஆகியோரின் அயராத முயற்சியினாலும், அம்பாள் அடியார்களின் நிதியுதவியினாலும் ஆலய உள்வீதி இருபதடி உயரமான 52 தூ ண்களைக் கொண்ட ஓட்டினால் வேயப்பட்ட மூடுமண்டபமாக ஆக்கப்பட்டது. கொடித்தம்பம், பலிபீடம், முருகன் சந்நிதி, நடேசர் சந்நிதி,நவக்கிரக சந்நிதி ஆகியவற்றோடு இரு அறைகள் கொண்ட மடைப்பள்ளி, வசந்தமண்டபம் ஆகிய பல்வேறு திருப்பணிகளையும் செவ்வனே நிறைவேற்றி 1980ம் ஆண்டு புனருத்தாரன மகாகும்பாபிஷே கம் இணுவையூர் சிவஸ்ரீ மகாதேவாக்குருக்கள் (அந்தண ஆசிரியர்) தலைமையில் நடைபெற்றுள்ளது.

1991ஆம் ஆண்டு புதிய கண்டாமணிக்கோபுரம் கட்டப்பட்டது. இராஜகோபுரவேலைகள் 2006ஆம் ஆண்டு தைப்பூச நன்னாளில் ஆரம்பமாயின. வெளிநாடுகளில் வாழும் அன்பர்களும் ஊர்ப்பொதுமக்களும் இப்பஞ்சதளகோபுர திருப்பணிக்கு பெரும்பணம் வாரி வழங்கினார்கள். கோபுரத்தில் கோவிலின் வரலாற்றைப் பிரதிபலிக்கும் எண்ணற்ற சிற்பங்கள் அமைந்து விளங்குகின்றன. இறைவியின் பல்வேறு வடிவங்களும் கோபுரத்தில் சிற்பமாகக் காட்சி அளிக்கின்றன. இப்பாரிய திருப்பணி நிறைவெய்தி இராஜகோபுர கும்பாபிஷேகம் பிரதிஷ்டா பிரதமகுரு வேதாகம சிரோண்மணி பிரம்மஸ்ரீ சதா. சுகுமாரக்குருக்கள் (சிவன்கோவில் தேவஸ்தானம், திருநெல்வேலி) தலைமையில் 2007ஆம் ஆண்டு மாசிமாதம் 5ம் திகதி திங்கட்கிழமை நடந்தேறியது.

கோவில் வாசலில் ஓட்டினால் வேயப்பட்டிருந்த முன்மண்டபம் அகற்றப்பட்டு மூடுசாந்தினாலான முப்பத்தாறடி நீளமும் முப்பத்தாறடி அகலமும் உள்ளதும் பதினாறு தூண்களும் உடையதுமான மணிமண்டபம் அமைத்து 2008ஆம் ஆண்டு சித்திரை மாதம் 30ம் திகதி ஆகமவிதிப்படி திறந்து வைக்கப்பட்டது. மணிமண்டபத்தின் உற்புறத்தே சாந்தினால் உருவாக்கி வர்ணம் பூசப்பட்ட வண்ணப்பூக்களும், நடுவே அஷ்டலட்சுமிகளின் சிற்பங்களும் காணப்படுகின்றன. மணிமண்டபத்திற்கு வெளியே வடக்கு, தெற்கு ஆகிய இரு மூலைகளிலும் இரண்டு சிங்கங்கள் படுத்திருக்க நடுவே பிடாரி அம்பாள் சிங்கவாகனத்தில் வீற்றிருக்கும் சிற்பம் காட்சியளிக்கிறது. மண்டபத்தின் இரு கரைகளிலும் அம்பாளின் இருவேறு வடிவங்கள் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளன.

திருக்கோவில் வீதியின் வடக்குச்சுவரை அடுத்துள்ள நான்கு பரப்பளவு நிலத்தில் பூந்தோட்டம், தண்ணீர்த்தாங்கி, தண்ணீர்த்தொட்டி, செங்கழுநீர்த்தொட்டி ஆகியவை 1980ம் ஆண்டில் கட்டப்பட்டுள்ளன. இக்காணிக்கு வடக்காக மேலும் மூன்றரைப்பரப்புக்காணி கோவிலின் உடமையாக உள்ளது. இதில் அன்னதான மண்டபமும், தென்னை மரங்கள் பதினைந்தும் உள்ளன. 1985ஆம் ஆண்டில் மேற்கூறிய நிலப்பரப்பிற்கு வடக்காக அமைந்த நான்கு பரப்புக் காணியை இ. புஸ்பராஜா, இ. யோகராஜா ஆகிய இரு சகோதரர்களும் வாங்கி ஆலயத்திற்கு தர்மசாதனமாக வழங்கியுள்ளனர். இதில் ஏழு கடைகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் இரண்டு கடைகளில் ஒன்று வே. சின்னராசாவும் மற்றொன்று இ. சுப்பிரமணியமும் தங்கள் சொந்தச் செலவில் கட்டியவையாகும். இவ்வேழு கடைகளாலும் பெறப்படும் வாடகை ஆலய நிர்வாக செலவிற்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எதிர்காலத் திருப்பணிகளாக அன்னதானமண்டபத்தை கல்யாணமண்டபமாகவும் பயன்படுத்தத்தக்கவாறு கண்களைக் கவரும் வகையில் பெரிதுபடுத்தியும், ஆலயக்கிணற்றை தீர்த்தக்கேணியாக மாற்றியமைக்கவும் திட்டங்கள் வரையப்பட்டு செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

ஆரம்பகாலத்தில் திருக்கோவில் தரகு பொன்னையாவினால் பராமரிக்கப்பட்டு வந்தது. பின்னர் இவரது மூத்தபுதல்வன் இராசரத்தினமும் (இராசையா), 1969ஆம் ஆண்டிலிருந்து இராசரத்தினத்தின் சகோதரி இரத்தினம் சிவஞானத்தின் மகன் சிவகுமாரும் கோவில் நிர்வாகத்தைக் கவனித்து வந்துள்ளனர்.

1970ஆம் ஆண்டில் திருக்கோவில் பொதுக்கோவிலாக யாழ்ப்பாணக் கச்சேரியிலும், பிரதான நகர்காவலர் நிலையத்திலும் பதியப்பட்ட பின்னர் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட பரிபாலனசபை கோவிலை நிர்வகித்து வருகின்றது.

திருக்கோவில் உற்சவ மூர்த்திகளாக பிடாரிஅம்பாள், விநாயகர், வள்ளி தேவசேனாசமேத சுப்பிரமணியர், நடேசர், சண்டேஸ்வரி ஆகிய மூர்த்தங்கள் உள்ளன. இவையாவும் ஐம்பொன்னால் ஆனவை ஆகும்.

முன்நாட்களில் திருக்கோவில் பூசைகளை அந்தணமரபைச் சாராத சைவமரபில் வந்த ஒருவரே செய்து வந்துள்ளார். 1971ஆம் ஆண்டிலிருந்து சிவஸ்ரீ சோமசுந்தரக்குருக்கள்பூசகராகப் பணிபுரிந்தார். இன்று அவரது புதல்வர் சிவஸ்ரீ சிவகுமாரக்குருக்கள் நித்தியபூசைகளை நன்முறையில் நடாத்தி வருகிறார்.கோயில் நித்திய பூசைகள் மூன்று காலங்களிலும், மற்றும் நைமித்தியபூசைகளும் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன.

இக்கோயில் மடாலயமாக இருந்த காலத்திலும் பின்னரும் வேள்வி அதாவது இரத்தப்பலி இடுதலும், பொங்கல் பூசைகளும் நடைபெற்று வந்துள்ளன. அம்பாளுக்குப் பலியிடும் வழக்கம் இப்போதில்லை. அந்நாட்களில் நவராத்திரி இறுதிநாள் மானம்பூ உற்சவத்தன்று வண்ணை வைத்தீஸ்வரப்பெருமான், தாயார் தையல்நாயகியோடு புறப்பட்டு எழுந்தருளிவந்து, கன்னி வாழை வெட்டி திரும்பவும் சிவன் கோவில் சென்றடைவதும் இங்கு நடந்த இன்னொரு முக்கிய நிகழ்ச்சியாகும். இவ்வாழை வெட்டுத்திருவிழாவும் பல்வேறு காரணங்களினால் தொடர்ந்து நடைபெறாது போய்விட்டது. தரகு பொன்னையா இப்பெருவிழாவிற்காக மானிப்பாய் வீதியில் இருந்து ஆடியபாதம் வீதிவரை சென்றடைந்த கையொழுங்கையை எம்பெருமானின் வாகனம் வரக்கூடியதாக அகலமாக்கி பெருவீதியாக்கினார். எனவே இன்றும் இவ்வீதி “பொன்னையா வீதி” என்று அழைக்கப்பட்டு வருகின்றது. பத்து நாட்கள் அலங்காரத்திருவிழாக்களை இராசரத்தினம் தொடக்கி வைத்து பத்து நாட்கள் விழாவும் இவரால் நடாத்தி வைக்கப்பட்டது. ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் 1980ம் ஆண்டில் ஆரம்பமாகின. பத்து நாட்கள் திருவிழா நடைபெற்று ஆடிப்பூர நன்நாளில் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

திருவிழா உபயகாரர்களின் விபரம்.

முதலாம் திருவிழா (கொடியேற்றம்)	வல்லிபுரம் அருளானந்தம்
இரண்டாம் திருவிழா	வித்துவான் வ. கந்தையா குடும்பம்
மூன்றாம் திருவிழா	சுப்பையா சிவராசா
நான்காம் திருவிழா	திருமதி பத்மராணி ஆறுமுகதாஸ்
ஐந்தாம் திருவிழா	திருமதி பராசக்தி ஐயாத்துரையும், அப்பையா குடும்பமும்
ஆறாம் திருவிழா	திருமதி நளினி ராஜ்குமார்
ஏழாம் திருவிழா	செல்வரட்ணம் குடும்பமும், பொன்னம்பலம் குடும்பமும்
எட்டாம் திருவிழா	தம்பு குடும்பமும், பொன்னப்பா குடும்பமும்
ஒன்பதாம் திருவிழா (தேர்)	தம்பாப்பிள்ளை, பொன்னம்பலம் குடும்பம்
பத்தாம் திருவிழா (தீர்த்தம்)	திருமதி பூமாதேவி நாகரத்தினம்

இவற்றோடு மாத விநாயகர் சதுர்த்தி வழிபாடும், சித்திரா பௌர்ணமி கஞ்சிவார்த்தல் சிறப்புப் பூசையும் நடைபெற்று வருகிறது. தைப்பொங்கல், தைப்பூசம், சிவராத்திரி, நவராத்திரி, கேதாரகௌரி விரதம், கந்தஷட்டி, திருவெம்பாவை ஆகிய விழாக்களும் சிறப்பாக நடைபெறுகின்றன. சித்திரைப் புத்தாண்டு தினத்தில் பிடாரி அம்பாள் சிங்கவாகனத்தில் ஆரோகணித்து கிராம வீதியெல்லாம் உலாவந்து அன்பர்களுக்கெல்லாம் எளிவந்த பிராட்டியாக அருள்செய்து திரும்பவும் கோவிலை வந்தடைவதும் ஓர் அற்புத நிகழ்வாகும். இந்நாளில் அன்னதானமும் நடைபெறும்.

திருவிழாக் காலங்களில் அன்னை பிடாரி வீதியுலா வர எழுந்தருளும் வாகனங்கள் ஊர்மக்கள் உபயங்களாகும்.

வாகனம்	உபயம்
காராம்பசு	கந்தையா இலங்கராசா குடும்பம்
கேடகம்	இரட்ணராசா குடும்பம்
சிங்கம் (ஆடுவது)	சுப்பையா குடும்பம்
குதிரை	தம்பாப்பிள்ளை பொன்னம்பலம் குடும்பம்
கைலாயவாகனம்	சபாரட்ணம் குடும்பம்
சர்ப்பம்(வெண்கலம்)	இராசையா குடும்பம்
பீடம்	தாமோதரம்பிள்ளை கந்தசாமி
ஐந்துதலை நாகம், மயில், கிளி	பொதுமக்கள்

1990ஆம் ஆண்டில் முப்பத்தைந்து அடி உயரமான சப்பறம் திரு. கந்தையாவினால் செய்வித்து வழங்கப்பட்டது. இதே ஆண்டில் புதிய எண்முகச்சித்திரத்தேர் நிர்மாணிக்க பொதுமக்களிடம் நிதி சேகரித்து 1991ஆம் ஆண்டில் வெள்ளோட்டம் நடைபெற்றது. ஆண்டுதோறும் நடைபெற்று வரும் மகோற்சவ ஒன்பதாம் நாள் தேரோட்டவிழாவில் அன்னை பிடாரி இச்சித்திரத்தேரில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள்புரிந்து வருகின்றாள்.

தற்போது ஆலய பரிபாலனசபைத் தலைவராக அப்புத்துரை குமாரவேலுவும் (விரிவுரையாளர்) செயலாளராக வேலுப்பிள்ளை சின்னராசாவும், பொருளாளராக இராசரத்தினம் தயாநிதி (வர்த்தகர்) யும் ஏனைய பரிபாலனசபை அங்கத்தவர்களின் உதவியுடன் ஆலய வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டு வருகின்றனர். இவர்கள் நிர்வாகத்தில் திருவருள்மிகு வீரமா பிடாரி அம்பாள் ஆலயம் மேலும் சிறப்புற்றோங்க கருணைவடிவான அன்னையின் திருவருள் துணைநிற்க வேண்டி வணங்குவோம்.

"மனிதரும், தேவரும், மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே! கொன்றைவார் சடைமேல்
பனிதரும் திங்களும், பாம்பும், பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும்என் புந்தி எந்நாளும் பொருந்துகவே"

- அபிராமிப்பட்டர்

****

உ

ஓம் சக்தி

கொக்குவில் மேற்கு அருள்மிகு ஸ்ரீவராகி அம்பாள் ஆலயம்

"பயரவி! பஞ்சமி! பாசாங்குசை! பஞ்சபாணி! வஞ்சர்
உயிரவி உண்ணும் உயர் சண்டி! காளி! ஒளிரும் கலா
வயிரவி! மண்டலி! மாலினி! சூலி! வராகி! என்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே!"

- அபிராமிப்பட்டர்

இந்த நிலவுலகத்தைச் சிருஷ்டித்து உயிர்களையும் தோற்றுவித்துக் காப்பவள் அன்னை பராசக்தி. பக்தர்களின் விருப்பத்திற்கு ஏற்ப எம்பெருமாட்டி பல திருக்கோலங்களை மேற்கொள்கிறாள். அத்தகைய பல திருக்கோலங்களில் ஸ்ரீ வராகிஅம்பாள் சிறப்பு மிக்கவள். வீரம் நிறைந்த சக்திகளாகிய சப்த மாதாக்களில் ஒருத்தியாகவும் விளங்கி உலகினிக்கு மங்களம் அளிப்பவள் இந்த ஸ்ரீ வராகித்தாய். வராகி என்றால் உலகை அன்பால் வசப்படுத்துபவள் என்பர். வடஇந்தியாவில் காசியருகில் பைரவிகாட் என்னுமிடத்தில் பூமிமட்டத்திற்குக் கீழ் 30 அடி ஆழத்தில் ஆதிவராகியாகவும், வியப்பூட்டும் நுண்கலைச் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாக உள்ள தஞ்சைப் பெருவுடையார் கோவில் பிரகாரத்தில் தனிச் சந்நிதியில் போர்ச் சக்தியாகக் காட்சியளிக்கும் மகாவராகியுமே கொக்குவில் மேற்குப் பதியில் ஸ்ரீ வராகிஅம்பாளாகக் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளாள்.

ஒருசமயம் கொக்குவில் மேற்கில் வசித்து வந்த அம்பாள் உபாசகரான திரு. சுப்பர் சின்னையாவின் கனவில் வராகி அம்பாள் தோன்றி வழங்கிய அருளாணையின்படி அமைந்தது இவ்வாலயம். அன்னை அருளிய வாக்குப்படி திரு. சுப்பர் சின்னையா வராகி அம்பாளுக்குக் கோயில் அமைக்கத் திருவுளப்பட்டு, 1930ம் ஆண்டளவில் ஒரு சிறு கொட்டிலில் காஞ்சுர விருட்சத்தின் கட்டையொன்றை வராகி அம்பாளாக உபாசனை செய்து தினமும் விளக்கேற்றி மலர்தூவி வணங்கி வந்துள்ளார். நாளடைவில் வராகி அம்பாளின் அனுக்கிரகத்தால் அவருக்கு நீடுபுகழும் நிறைசெல்வமும் பெருகவே அன்னை ஸ்ரீவராகிக்கு கல்லால் ஆலயம் எழுப்ப

எண்ணினார். இவருக்கு உறுதுணையாகச் செயற்பட்ட இவரது சகோதரர் திரு. சுப்பர் காசிப்பிள்ளை எண்ணிய கைங்கரியம் செம்மையுற நிறைவேற கொக்குவில் மேற்கில் அமைந்த தனது காணியைத் தானமாகக் கொடுத்து உதவினார். ஆலயத்தின் கட்டிட நிர்மாணப்பணி ஆரம்பிக்கப்பட்டது.

அந்நேரம் ஸ்ரீவராகி அம்பாளின் வடிவ அமைப்புப் பற்றிய விபரம் அறிய முடியாதிருந்தது. எனவே கருவறையில் மூல மூர்த்தியாக நின்றகோலத்தில் காட்சியளிக்கும் ஸ்ரீமீனாட்சி அம்மனின் சிலாவிக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டது. சிலையின் அடியில் திரு. சுப்பர் சின்னையாவினால் வராகி அம்பாளாக வணங்கப்பட்டு வந்த காஞ்சுரங் கட்டையுடன் வராகி அம்பாளுக்குரிய யந்திரத் தகடும் பிரதிஸ்டை செய்யப்பட்டு வராகி அம்பாள் ஆலயமாக கட்டி எழுப்பினார்கள். பரிவார மூர்த்திகளாக விநாயகர், வள்ளி தேவசேனாசமேத சுப்பிரமணியர், வைரவர், சந்தானகோபாலர் ஆகிய தெய்வங்களுக்கும் சந்நிதிகள் கட்டப்பட்டன. மகாகும்பாபிஷேகமும் திரு சுப்பர் சின்னையாவினால் நிறைவேற்றி வைக்கப்பட்டது. இற்றைவரை அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்களே ஆலயத்தின் பல்வேறு பணிகளிலும் தம்மை ஈடுபடுத்தித் தொண்டாற்றி வருகிறார்கள்.

1976ம் ஆண்டு காலப்பகுதியில் திரு சுப்பர் சின்னையாவின் வம்சாவழிவந்த திரு. முத்தையா மார்க்கண்டுவின் மூத்த மருமகன் திரு. சுப்பையா நல்லையா தலைமையில் கோயில் புணருத்தாரண வேலைகள் ஆரம்பமானது. ஆலய நிர்வாகத்தினருடன், அம்பாள் அடியார்களின் உதவி ஒத்தாசையும், காணிக்கைகளும் கொண்டு பல திருப்பணிகள் நடைபெற்றன. முன்னைய கட்டிடங்கள் யாவும் அகற்றப்பட்டு புதிதாக மண்டபங்கள், கருவறை மற்றும் பரிவார மூர்த்திகளின் சந்நிதிகள், விமானங்கள் யாவும் அமைக்கப்பட்டன. சண்டேஸ்வரிக்கும் புதிதாக சந்நிதி கட்டப்பட்டது.

இவ்வாறு கோயில் புதுவடிவம் பெற்றுக்கொண்டு இருக்கையில், எதுவிதமும் மூலமூர்த்தியாக ஸ்ரீவராகி அம்பாளை அமைக்க வேண்டும் என்ற திரு. சுப்யைா நல்லையாவின் எண்ணத்தின் பயனாக இந்தியாவிலிருந்து ஸ்ரீ வராகிஅம்பாளின் திருவுருவ அமைப்புப் பெறப்பட்டது. இவ்வரிய திருவுருவத்தின் அமைப்பைப் பெற உதவியவர்கள் வண்ணார்பண்ணையில் வாழ்ந்த வேதாகம கிரியா சூடாமணி சிவஸ்ரீ சீதாராம சாஸ்திரிகளும்,

இந்திய சிவாச்சாரியார் ஒருவரும் ஆவர். யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த பிரபல சிற்பாசாரியார் திரு. கந்தசாமி என்பவரின் கைவண்ணத்தினால் ஸ்ரீ வராகிஅம்பாள் சிலையும், பஞ்சலோகத்தினாலான விக்கிரகமும் உருவாக்கப்பட்டன. ஆலயத் திருப்பணி வேலைகள் யாவும் பூர்த்தியான பின்னர் கருவறையில் ஸ்ரீ மீனாட்சி அம்மன் வீற்றிருந்த (முன்னர் சுப்பர் சின்னையா வழிபட்ட காஞ்சுரக்கட்டையும், ஸ்ரீ வராகிஅம்பாளின் யந்திரத்தகடும் அமைந்த) இடத்தில் புதிய ஸ்ரீ வராகிஅம்பாள் சிலையை பிரதிஸ்டை செய்தும், ஸ்ரீ மீனாட்சி அம்மனை பிறிதொரு சந்நிதியில் நிறுவியும் மகாகும்பாபிஷேகவிழா 04.04.1977ஆம் நாளன்று மிக விமர்சையாக நடந்தேறியது.

ஸ்ரீ வராகிஅம்பாளின் திருத்தோற்றம் பன்றியின் முகமும் அழகிய பெண்ணுடலும் கொண்டதாகும். இன்னொரு சிறப்பம்சம் இப்பெருமாட்டியின் அபயவரத கரங்கள் ஏனைய தெய்வ மூர்த்தங்கள் போல் வலமிடமாக அமையாமல் இடம்வலமாக காட்சியளிப்பதும் ஓர் அற்புதம். இவ் வராகி அன்னை காண்பவர் கண்ணையும், கருத்தையும் கொள்ளைகொண்டு அமர்ந்த நிலையில் திருவருள் புரிகிறாள்.

திரு. மார்க்கண்டு பரமேஸ்வரன் ஆலய முகாமையாளராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் புதிதாகக் கொடிஸ்தம்பம் நிறுவப்பட்டது. மேலும் ஆலயத்தில் பல திருத்த வேலைகள் நடந்துள்ளன. நவக்கிரக சந்நிதியும் அமைக்கப்பட்டது. பொதுமக்கள், அம்பாள் பக்தர்கள் ஆகியோரின் பேராதரவும், பங்களிப்பும் கொண்டு புதிய சித்திரத்தேர் ஒன்றும் சிற்பசிகாமணி திரு. ஜிவரட்ணம் கைவண்ணத்தினால் நிர்மாணிக்கப்பட்டது. இவ்வாறான பணிகள் நிறைவெய்திய பின் திரு. மார்க்கண்டு பரமேஸ்வரன், திரு. சுப்பையா நல்லையா அகிய இருவரினதும் தலைமையில் இன்னொரு கும்பாபிஷேகம் 10.02.1989ம் நாளன்று நடைபெற்றது.

ஆலயத்தில் உலாவரும் மூர்த்திகளாக விநாயகர், வராகி அம்பாள், மீனாட்சி அம்பாள், வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர், சந்தானகோபாலர், சண்டேஸ்வரி ஆகியன உள்ளன. இவையாவும் பஞ்சலோக விக்கிரகங்களாகும்.

திரு. சுப்பர் சின்னையா தன் வழிபடு தெய்வமான ஸ்ரீ வராகிஅம்பாளுக்கு எடுப்பித்த இவ்வாலயம் அன்னாரின் இறுதி

விருப்பப்படி அவரின் வம்சாவழியினரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. திரு. சுப்பர் சின்னையாவிற்கு மகப்பேறு இல்லாததினால் ஆலய நிர்வாகப் பொறுப்பை அவரது பெறாமகன் திரு. முத்தையா மார்க்கண்டு ஏற்றுக்கொண்டார். இவருக்குப்பின் இவரது மகன் மார்க்கண்டு பரமேஸ்வரனும், தொடர்ந்து இவரது சந்ததியினரும் ஆலயத்தை நன்முறையில் நிர்வகித்து வருகின்றார்கள். இவர்களில் ஆலய நிர்வாகத்தை நல்வழியில் நெறிப்படுத்தி ஆலய வளர்ச்சிக்குப் பக்கபலமாக இருந்து, அயராது உழைத்து ஆலயத்தைப் புதுப்பொலிவுடன் விளங்கச் செய்தவர் திரு. சுப்பையா நல்லையா என்றால் மிகையாகாது.

இவ்வாலயத்தில் தினசரி காலை, உச்சிப்பொழுது, மாலை என மூன்று காலப் பூசைகள் நடைபெற்று வருகின்றன. ஆரம்பத்தில் சிவஸ்ரீ இரத்தினக்குருக்கள் ஆலய பூசகராகக் கடமையாற்றினார். தொடர்ந்து பல சிவாச்சாரியார்கள் பணிபுரிந்தபின் 1977ம் ஆண்டு முதல் இன்றுவரை சிவஸ்ரீ குகதாசக்குருக்கள் ஆலய பிரதம குருவாகக் கடமையாற்றி வருகின்றார்.

ஸ்ரீ வராகித்தாயின் அருள் வேண்டி ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் அநேகம். அவர்களின் ஒத்துழைப்பும், ஆதரவும் பெற்று அந்நாட்களில் நடைபெற்ற அலங்கார உற்சவங்கள் நினைவில் கொள்ளத்தக்கன. பிரசித்தி பெற்ற தவில்-நாதஸ்வர வித்துவான்களின் கச்சேரிகளும், சின்னமேளம் என்று அழைக்கப்பட்ட சதுர்க் கச்சேரிகளும் இவ் உற்சவ நாட்களில் நடைபெற்றன. இரவு உற்சவங்களில் நடாத்தப்படும் வாணவேடிக்கைகள் மற்றும் இசைவாணர்களின் கச்சேரிகளையும் கண்டுகளிக்க கொக்குவிலின் நாலாதிசைகளில் இருந்தும் மக்கள் கூட்டம் அலைமோதும். இங்கு ஆண்டுதோறும் நடைபெறும் பங்குனிக் குளிர்த்தி விழா மிகப் பிரபலமானது. ஸ்ரீ வராகி அம்பாள் முத்துச்சப்பறத்தில் எழுந்தருளி ஆலயச் சுற்றாடல் வீதிகளில் உலாவந்து இறுதியாக ஆனைக்கோட்டை வீதிவழியாக ஆலயத்தை வந்தடைவாள்.

அத்தருணம் தீவர்த்தி ஒளியில் பிரகாசிக்கும் அம்பாளின் அருள்நகையோடு கூடிய திருமுகத்தின் திருவருட் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். அன்றைய தினம் வீதிகள் யாவும் மகர தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு வீடுகள்தோறும் பூரணகும்பங்கள், விசேட மண்டபப்படிகள் வைக்கப்படும். ஊர்வலத்தில் சீனடிசிலம்படி, மயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் போன்றவைகள்

இடம்பெற்று கிராமமே திருவிழாக்கோலம் பூண்டிருக்கும். இவ்விழா பல சிரமத்தின் மத்தியிலும் இன்று பகற்பொழுதில் நடைபெற்று வருகின்றது. விசேட தினங்களாகிய தைப்பூசம், மாசியில் சிவராத்திரி, புரட்டாசியில் நவராத்திரி, கேதாரகௌரி விரதம், மார்கழியில் திருவெம்பாவை போன்ற விழாக்களும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. ஆலய மகோற்சவ விழா சித்திரைப் புத்தாண்டிற்கு பத்து நாட்களுக்கு முன் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்தாம் நாளாகிய சித்திரைப்புத்தாண்டுத் தினத்தன்று அம்பாள் புதிய சித்திரத்தேரில் பவனிவந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கிறாள். தீர்த்தோற்சவம் பதினோராம்நாள் நடைபெறும். கொடியேற்ற உற்சவம் திரு. பூபாலசிங்கம் குடும்பத்தினராலும், இரதோற்சவம் திரு. நல்லையா குடும்பத்தினராலும், தீர்த்தோற்சவம் திரு. நவரத்தினம் குடும்பத்தினராலும் நடாத்தப்படுகின்றன. மற்றைய உற்சவ உபயங்களும் பல்வேறு அம்பாள் அடியார்களால் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

ஆலய திருவிழாக்களில் எம்பெருமாட்டி அமர்ந்து வரும் வாகனங்களாக சிம்மம், மயில், கிளி, ஐந்துதலை நாகம், தாமரைப்பூ, காராம்பசு, சப்பரம் என்பன உள்ளன. இவையாவும் அம்பாள் அடியார்களால் ஆலயத்திற்கு உபயம் செய்யப்பட்டவையாகும். இவ்வாலயம் அமைந்த நிலப்பகுதி முன்னர் வராகிகோயிலடி என அழைக்கப்பட்டு வந்தது. 2008ம் ஆண்டு சித்திரைப் புத்தாண்டில் நடைபெற்ற தேர் உற்சவத்தின்போது இப்பிரதேசம் “வராகிபுரம்” எனப் பெயர்மாற்றம் பெற்று வழங்கிவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

அன்னை ஸ்ரீ வராகி வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு தெய்வம். சோழ, சாளுக்கிய, பல்லவ மன்னர்கள் போருக்குப் புறப்படுமுன் வெற்றி வேண்டி வழிபட்டு வந்த தாயிவள். ஸ்ரீ வராகிஅம்மை நம்பியவரைக் கைவிடமாட்டாள் என்ற நம்பிக்கையில் பக்தர்கள் எம்பெருமாட்டியை வணங்கி, நினைத்த காரியம் நிறைவேறப்பெற்று வருகின்றனர். இன்று நாட்டின் நிலைமை காரணமாக தாமதமாகும் எம்பிராட்டியின் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற வேண்டிய கும்பாபிஷேக விழாவும் கூடிய வரைவில் நிறைவேற அன்னை ஸ்ரீ வராகியின் திருவருளை வேண்டி நிற்கிறோம்.

“நெஞ்சுக்கு நிம்மதி அன்னை வராகியின் சந்நிதி”

****

உ

ஸ்ரீ கணபதி துணை

கொக்குவில் மேற்கு சொர்ணசித்தி விநாயகர் ஆலயம்.

"தந்தி முகத்தனைச் சங்கரன் மைந்தனை
தொந்தி வயிறனைத் தோடணி செவியனை
இந்திர னுக்கருள் ஈந்த இறைவனை
மந்திர ரூபனை நான் மறவேனே'

- சிவயோக சுவாமிகள் -

விக்கினங்கள் தீர்ப்பவனாகவும், தனக்குமேல் தலைவன் இல்லாதவனாகவும், கணங்களுக்கெல்லாம் கணபதியாகவும் விளங்கும் விநாயகப்பெருமான் கோயில் கொண்டுள்ள திவ்ய தலங்கள் பல. அவற்றுள் ஒன்றாகக் கொக்குவில் மேற்கில் அமைதியான கிராமியச் சூழலில் அமைந்துள்ளது ஸ்ரீ சொர்ணசித்தி விநாயகர் ஆலயம். இவ்வாலயம் இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது. ஆதியில் இவ்வாலயம் "மாமரத்தடிப் பிள்ளையார் கோயில்" என அழைக்கப்பட்டு வந்தது. பின்னர் இவ்வாலயம் பனைவடலிகளால் சூழப்பட்டு இருந்தமையால் இங்கு எழுந்தருளியுள்ள பெருமான் "வடலிப்பிள்ளையார்" என்றும், "சொர்ண வடலிப்பிள்ளையார்" என்றும் பெயர்பெற்று அழைக்கப்பட்டு வந்துள்ளார். இன்று இப்புராதன ஆலயத்தில் அருளாட்சி புரிபவர் ஸ்ரீ சொர்ணசித்தி விநாயகப்பெருமான் ஆவார். இத் திருக்கோவில் சுற்றாடலில் "விஸ்வப்பிரம்மகுல" மக்களே பெருமளவில் வசித்து வந்துள்ளனர். ஏனைய கோவில்களைப்போல் இக்கோவிலும் ஒரு சிறு ஓலைக் கொட்டிலில் உருவெடுத்துள்ளது. நாளடைவில் பெரிய ஓலைக் கொட்டகையாக மாற்றம்பெற்று மூன்று காலப்பூசைகளும் ஒழுங்காக நடைபெற்று வந்துள்ளன. நீண்ட காலமாக கோவில் புனர் நிர்மாணப்பணி ஒன்றும் நடைபெற்றிருக்கவில்லை. 1920ம் ஆண்டளவில் கோவிலுக்கு வெளிவீதி அமைத்து கோவிலை விஸ்தரித்துள்ளனர். இவ்வரிய திருப்பணிக்கு திருவாளர்கள் இளையதம்பி கந்தையா, வடலி வேலுப்பிள்ளை, கந்தப்பர் வைத்திலிங்கம் ஆகியோரின் குடும்பங்கள் ஆற்றிய பெரும்பங்கு குறிப்பிடத்தக்கவையாகும்.

இதனைத் தொடர்ந்து 1930ம் ஆண்டளவில் ஆதிமூலம் அதாவது கர்ப்பக்கிருகம் கல்லால் கட்டப்பட்டதுடன் முன்மண்டபம், சுற்றுமதில் ஆகியனவும் சிறப்பாக அமைக்கப்பட்டன. இக்காலகட்டத்திலே திருக்கோவிலின் முன்பாக இருந்த காணியின் மூலையில் காவற்கடவுளாம் "வைரவப்பெருமானுக்கு" ஓர் தனிச்சந்நிதி நிறுவப்பட்டது. இக்கைங்கரியத்தை அடிகோலி அயராது முன்னின்று உழைத்து நிறைவேற்றி வைத்தவர்கள் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த திரு. பொன்னுத்துரை அவர்களும் அவரது குடும்பத்தினருமாவர். இன்று வைரவ சந்நிதானப் பராமரிப்பை ஆலய நிர்வாகம் கவனித்து வருகின்றது.

1952ம் ஆண்டு கோவிலின் பழுதடைந்த பகுதிகள் சீர்செய்யப்பட்டு வசந்தமண்டபமும் அமைக்கப்பட்டு திருக்கோவில் விரிவாக்கம் பெற்றதும் மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தேறியது. இதுவே தனக்கு விபரம்தெரிந்த வயதில் இவ்வாலயத்தில் தான் கண்டு தரிசித்த முதற் கும்பாபிஷேகமென இவ்வரலாற்று விபரங்களைத் தந்துதவிய கலாநிதி திரு. செல்வநாயகம் கணேசலிங்கம் நியூசிலாந்து நாட்டிலிருந்து நினைவுகூருகிறார். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நித்திய, நைமித்திய பூசைகளும், பத்து நாட்கள் அலங்கார உற்சவங்களும் வெகுவிமரிசையாக நடைபெற்று வந்துள்ளன. அக்காலத்திலே இரவுவேளையில் தீவெட்டி வெளிச்சத்தில் விநாயகப் பெருமான் அழகொழுக மக்களுக்கு அருள்பாலித்து வீதிவலம் வரும் கண்கொள்ளாக் காட்சி இன்றும் தனது மனக்கண்ணில் ஊறிநிற்பதாகவும் மிகுந்த பக்தியோடு அவர் குறிப்பிட்டுள்ளார்.

திருக்கோவிலின் மணிக்கூட்டுக் கோபுரஅத்திவாரம் ஏற்கனவே இருந்தபோதிலும் யாது காரணத்தினாலோ நிர்மாணவேலை முற்றுப்பெறாமல் நின்றுபோயிற்று. ஊர்மக்களின் பேரார்வத்தினால் 1971ம் ஆண்டு இம் மணிக்கூட்டுக் கோபுரம் கட்டியெழுப்பப்பட்டு கண்டாமணியும் மேலேற்றப்பட்டது. இப்பெரும்பணியை மேற்கொண்டு நிர்மாணித்து நிறைவேற்றிவைத்த பெருமை திரு. இளையதம்பி செல்வநாயகம் குடும்பத்தினரையே சாரும். இவற்றின்பின் திருக்கோவிலின் மூலவர் விமானமும் கண்ணைக் கவரும் அழகிய சுதைசிற்பங்கள் பொலிவுற்று விளங்க அமைக்கப்பட்டு 1976ம் ஆண்டு இறுதியில் கும்பாபிஷேகம் நிகழ்ந்துள்ளது.

திருக்கோவிலை நன்முறையில் பராமரிக்கும் பொருட்டு 1981ம் ஆண்டு ஊர்மக்களால் நிர்வாகசபை ஒன்று தெரிவு செய்யப்பட்டது. இச்சபை செவ்வனே நடைபெற ஸ்ரீ சொர்ணசித்தி விநாயகர் அருளால் வெளிநாடு சென்றிருந்த இப்பகுதி இளைஞர்கள் தமது உதவி ஒத்தாசைகளை வழங்கியிருந்தனர். இதனால் இன்று இக்கோவிலுக்கென யாழ்ப்பாணம் இலங்கைவங்கி இரண்டாம் கிளையில் ஒரு வைப்புக் கணக்கும் ஆரம்பிக்கப்பட்டு நன்முறையில் பேணப்பட்டு வருவது நினைவுகொள்ளத்தக்கதாகும்.

திருக்கோவில் வளர்ச்சிக்கு உழைத்த பல குடும்பங்களில் திருவாளர்கள் கந்தையா மகாதேவா, செல்வநாயகம் சுந்தரலிங்கம், வேலுப்பிள்ளை சொர்ணலிங்கம், அம்பலம் சிவசுப்பிரமணியம், வைத்திலிங்கம் தியாகராச போன்றோரின் குடும்பங்களின் பணி போற்றத்தக்கதாகும். இவர்களின் அயராத உழைப்பினாலும் விடாமுயற்சியினாலும் ஆலயம் இன்று புதுப்பொலிவுடன் திகழ்கிறது. இவர்களது காலப்பகுதியில் கோவில் மண்டபங்கள் யாவும் அழகுற விரிவாக்கம் பெற்று கொடித்தம்பமும் நிறுவி ஆலயத்தில் ஆகம விதிப்படி மகோற்சவம் நடாத்துவதற்குரிய சேவைகள் அனைத்தும் முடித்து மகாகும்பாபிஷேகப் பெருவிழா 2005ம் ஆண்டு நிறைவே-றியது. அன்றிலிருந்து பதினைந்து நாட்கள் அடங்கிய மகோற்சவ திருவிழாக்களும், மற்றைய அனைத்துப் பூசை வழிபாடுகளும் நன்முறையில் நடைபெற்று வருகின்றன.

சிறிய அளவிலான ஓலைக் கொட்டகையில் வீற்றிருந்த "மாமரத்தடிப் பிள்ளையார்" இன்று வர்ணிக்க முடியாத அளவில் பொலிவும் அழகும் பெற்று ஆலயத்தில் "ஸ்ரீ சொர்ணசித்தி விநாயகர்" என்ற நாமங் கொண்டு எழுந்தருளி இப்பகுதி மக்கள் சீரும் சிறப்பும் பெற்று வாழ துணையாக இருப்பதும் அப்பெருமானின் திருவருளே ஆகும்.

****

உ

ஓம் முருகா

கொக்குவில் மணியர்பதி சிவசுப்பிரமணியர் ஆலயம்

"முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே - ஒருகை முகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்"

- நக்கீரர் -

முருகப்பெருமான் கோயில் கொண்டுள்ள திருத்தலங்களில் ஒன்றாக விளங்குவது வளம்கொழிக்கும் கொக்குவில் கிராமத்தின் மேற்கே உள்ள மணியர்பதி சிவசுப்பிரமணியர் ஆலயம். அந்நாளில் இப்பிரதேசம் காடு மண்டிய பகுதியாக இருந்துள்ளதால் "மணியங்காடு முருகன் ஆலயம்" என்ற பெயரிலும் இவ்வாலயம் அழைக்கப்பட்டு வந்துள்ளது. பல வருடங்களுக்கு முன்னர் சன்னாசியார் என்னும் முருக பக்தரினால் வேலாயுதம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு வழிபட்டு வந்த தலமே இன்று பெரிய அளவில் வளர்ந்து "மணியர்பதி சிவசுப்பிரமணியர் ஆலயம்" எனத் திருநாமம் பெற்றுத் திகழ்கின்றது.

ஆதியில் அடர்ந்த காட்டின் நடுவே வீற்றிருந்த வேலாயுதப் பெருமானை வழிபட்டு வந்த அப்பிரதேச மக்கள் முதன் முதலில் அவர்க்கு ஒரு கருவறையும், மண்டபமும் கட்டியுள்ளனர். கருவறை மேற்குத்திசை நோக்கி அமைந்துள்ளது. பின்னர் மடப்பள்ளியும், வாகனசாலையும் அமைத்து ஆகம விதிப்படி மகாமண்டபம், பலிபீடம், கொடிமரம் போன்றவை நிறுவ அவற்றிற்கு ஏற்ற இடவசதியும் செய்யப்பட்டிருந்தது. அக்காலப் பகுதியில் கருவறைக்குத் தெற்கே செவ்வரத்தை, திருவாத்தி, பவளமல்லி, கொக்குமந்தாரை, மல்லிகை மேலும் பல பூச்செடிகள் அடங்கிய ஓர் அழகிய நந்தவனமும் உண்டாக்கி இருந்தார்கள். காலத்திற்கு காலம் ஆலயத்தில் திருப்பணிகள் நடந்தேறியுள்ளன. 1926ம் ஆண்டளவில் விநாயகர் சந்நிதி திரு. வேலுப்பிள்ளை தம்பு அவர்களால் கட்டிக் கொடுக்கப்பட்டது. 1940களில் திரு. தம்பிநாயகம் குடும்பத்தினர் சந்தானகோபாலர் சந்நிதித் திருப்பணியைச் செய்து நிறைவேற்றி உள்ளனர். வைரவப்பெருமான் சந்நிதியில் திரிசூலம் அமைந்திருந்தது.

1970ம் ஆண்டு பிற்பகுதியில் கோவிலின் கருவறையும் மற்றைய கட்டிடங்களும் பராமரிப்பின்றி சிதலமடையத் தொடங்கின. பழுதடைந்திருந்த கோயிலைத் திருத்திப் புனரமைக்கும் பொருட்டு 1976ல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. புனருத்தாரண வேலைகள் மில்க்வைற் அதிபர் பெரியார் திரு. கனகராசா அவர்கள் தலைமையில் 04.05.1977ல் ஆரம்பமாயின. இச் சந்தர்ப்பத்தில் கர்ப்பக்கிரகத்திலிருந்த வேற்பெருமானை அகற்றி ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத சிவசுப்பிரமணியரின் சிலாவிக்கிரகம் ஆலயத்தின் மூலவராக ஸ்தாபிக்கப்பட்டது. முன்பு அங்கிருந்த பரிவார மூர்த்திகளாகிய விநாயகர், சந்தானகோபாலர் சந்நிதிகளோடு வைரவர், நவக்கிரகங்கள் ஆகியவற்றிற்கும் சந்நிதிகள் அமைத்து மகாகும்பாபிஷேகம் 12.04.1978ல் நடைபெற்றது. 1980ம் ஆண்டளவில் கொடிஸ்தம்பம் நிறுவப்பட்டது. இவற்றின் பின்னர் சிவகாமி அம்பாள் சமேத நடேசப்பெருமான், மகாலட்சுமித்தாயார், சண்டேசுவரர் ஆகியோர் சந்நிதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. ஆலயம் மீண்டும் புனரமைக்கப்பட்டு குடமுழுக்குத் திருவிழா 1988ல் நடைபெற்றது. இன்னுமோர் குடமுழுக்குத் திருவிழா 2001ம் ஆண்டு காலப்பகுதியிலும் நடைபெற்றுள்ளது.

திருக்கோவிலை நிறுவிய சன்னாசியார் பரம்பரையினர் ஆரம்பகாலம் தொடக்கம் ஆலயத்தைப் பராமரித்து வந்துள்ளனர். காலவோட்டத்தில் இவ்வாலயம் பொதுவுடமையாக்கப்பட்டு "பஞ்சகர்த்தா சபையினர்" என்றழைக்கப்பட்ட சபையினரால் பரிபாலிக்கப்பட்டு வந்தது. பின்னர் 1970ம் ஆண்டு "பஞ்சகர்த்தா சபை" யானது "நிர்வாக சபை"யாக மாற்றம் பெற்றது. இந் நிர்வாகசபை வருடம் ஒருமுறை கூடி புதிய அங்கத்தவர்களை தெரிவு செய்து ஆலயத்தை நன்முறையில் நடாத்தி வருகிறது.

திருக்கோவிலில் 1978ம் ஆண்டு நடைபெற்ற மகாகும்பாபிஷேக விழாவையடுத்து பத்து நாட்கள் அலங்கார உற்சவம் நடைபெற்று வந்துள்ளன. இளைஞர்கள் திருவிழாவாக பதினோராம்நாள் பூங்காவன உற்சவம் விளங்கியது. அக்காலகட்டத்தில் சிறந்த மேளக்கச்சேரி, சின்னமேளம் எனப்படும் சதுர்க்கச்சேரி போன்றவை இங்கு நடைபெறும். இந் நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்க பெருந்தொகையான மக்கள் கூடுவர். இச் சதுர்க்கச்சேரிகள் இன்று நிறுத்தப்பட்டு ஆலயத்தில் ஆன்மீக உரைகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. அலங்கார உற்சவமானது 1980ம் ஆண்டு கொடித்தம்பம் நிறுவியதும்

15 நாட்கள் மகோற்சவமாக மாற்றம் பெற்றுள்ளது. மகோற்சவ இறுதி நாளான தீர்த்தோற்சவம் சித்திரை முதன்நாள் புத்தாண்டு தினத்தன்று நடைபெறும். 1983ம் ஆண்டு சித்திரத்தேர்த் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1984ல் வெள்ளோட்டவிழா வெகுசிறப்பாக நடைபெற்றது. தேர் உற்சவத்தன்று ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியப் பெருமான் இத்தேரில் ஆரோகணித்து வீதிவலம் வந்து மக்களுக்கு அருள்பாலிப்பது ஓர் அரிய காட்சியாகும். திருவிழாக் காலங்களில் எம்பெருமானைச் சுமந்துவரும் வாகனங்களாக முதன் முதலில் இருந்தவை மயிலும், இடும்பனுமாகும். பின்னர் வேறும் சில வாகனங்கள் அடியார்கள் உபயமாக ஆலயத்திற்கு அளித்துள்ளதாக அறிகிறோம்.

****

உ

ஓம் கார்த்திகேயா

கொக்குவில் குளப்பிட்டி முதலி கந்தசுவாமி கோயில்

"வரங்கொண்ட உமைமுலைப்பால் மணங்கொண்ட செவ்வாயும்
பரங்கொண்ட களிமயிலும் பன்னிரண்டு கண்மலரும்
சிரங்கொண்ட மறையிறைஞ்சும் சேவடியும் செந்தூரன்
கரங்கொண்ட வேலும் என்றன் கண்ணைவிட்டு நீங்காவே "

- செந்தில் கலம்பகம் -

யாழ்ப்பாணம் கொக்குவில் காங்கேசன்துறை நெடுஞ்சாலையில் அமைந்துள்ள பரிசுத்த திரித்துவ ஆலயத்திற்கு முன்னால் செல்லும் பாதையில் முதலி கந்தசுவாமி கோயில் அமைந்துள்ளது. சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு வாழ்ந்த சமூகத்தினரின் குலதெய்வத் திருக்கோயில் இதுவாகும். அக்காலத்தில் இவ்விடத்தில் தெய்வசாந்நித்தியம் நிறைந்த ஓர் பாரிய முதலி விருட்சம் பன்னெடுங் காலமாக நின்றுள்ளது. அவ்விருட்சத்தில் அம்மையும் அப்பனும் இணைந்து வாசம் செய்து மக்களுக்கு அருள்புரிந்ததாக ஒரு ஐதீகம். 1810 ஆம் ஆண்டளவில் திரு. வல்லிபுரம் என்ற பெரியார் குறிப்பிட்ட முதலி விருட்சத்தின் கீழ் முருகப்பெருமானின் ஞானசக்தியாகிய வேல் உருவம் ஒன்றினை நிறுவி வழிபாடாற்றி வந்துள்ளார். மக்களைக் காக்கும் பெருமைக்குரிய சக்தியாக முதலி விருட்சமும், வேலாயுதப் பெருமானும் விளங்கவே, வேலாயுதப் பெருமானுக்குக் கொட்டில் அமைத்துப் பொங்கல், பூசைகள் நடைபெற்று வந்துள்ளன. தலவிருட்சம் முதலிமரமாக இருந்த காரணத்தினால் அவ் விருட்சத்தின் பெயரால் கோவில் "முதலி கோவில்" என அழைக்கப்பட்டு வந்தது.

திரு. வல்லிபுரத்திற்குப் பின்னர் இவரின் மகன் திரு. முருகேசு கோவில் கருமங்களைக் கவனித்து வந்துள்ளார். இவரைத் தொடர்ந்து இக் கோவிலின் வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்தவர் திரு. வைத்திலிங்கம் ஆவர். இவர் கோயிலுக்கு அருகாமையில் சுண்ணாம்புச் சூளை வைத்து, கோவிலில் முன்பிருந்த கொட்டிலை அகற்றி பெரிய கொட்டகையில் மண்டபம் அமைத்து சீமை ஓட்டினால்

கூரைவேய்ந்து கோயிலைப் புதுப்பித்துக் கட்டினார். மண்டபத்தின் நடுவே மூலமூர்த்தியாக வேற்பெருமானும், வலப்புறம் வைரவ சூலமும் இரண்டிற்கும் நடுவே ஒரு சதுர பீடத்தில் விநாயகப் பெருமானும் ஸ்தாபிக்கப்பட்டிருந்தனர். மணிக்கூட்டுக் கோபுரமும், முகப்புத் தூ ண்களும் திருமதி. செல்லம்மா இராசேந்திர அம்மையாரால் கட்டிக் கொடுக்கப்பட்டிருந்தன.

நாளடைவில் இக் கட்டிடங்கள் பழுதடையத் தொடங்கின. அவ்வப்பொது சிறிய சிறிய திருத்த வேலைகள் நடைபெற்றுக் கோவில்க் கருமங்கள் தடங்கலின்றி நடைபெற்று வந்துள்ளது. அண்மையில் நிர்வாகத்தினரும், பக்தர்களும் சேர்ந்து பழைய கட்டிடங்கள் யாவற்றையும் இடித்து கோவிலை புனரமைப்புச் செய்துள்ளனர். மூலவரான முதலி கந்தசுவாமியார் வேலுருவில் வீற்றிருக்கும் கருவறையும், விமானமும் திரு.மாணிக்கம் சுப்பிரமணியத்தின் உபயமாகும். விநாயகர் சந்நிதியை திரு. சபாபதிராஜா குடும்பத்தினரும், சண்டேஸ்வரர் சந்நிதியை திரு. செல்லையா அவர்களும் கட்டி உதவியுள்ளனர். ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சண்முகர், வைரவர் ஆகியோரிற்கும் தனித்தனிச் சந்நிதிகள் மற்றும் மண்டபங்கள் யாவும் சைவஆகம விதிப்படி அமைக்கப்பட்டு ஆலயம் புதுப்பொலிவுடன் விளங்க மகா கும்பாபிஷேகம் 2004 ஆம் ஆண்டு நடைபெற்றுள்ளது.இத் திருக்கோயில் அமைந்திருக்கும் 18 பரப்புக் காணி திருமதி. செல்லம்மா இராசேந்திர அம்மையாருக்குச் சொந்தமானது. கோயில் உரிமையும், நிர்வாகமும் இவரின் வம்சாவழியினராலேயே மேற்பார்வை செய்யப்பட்டு வருகின்றது. அந்தவகையில் இன்று கோயில் உரிமையாளராக உள்ள திரு. சோமசுந்தரத்தால் நியமிக்கப்பட்ட ஒரு சிறு குழுவினர் கோவிலை வழிநடத்தி வருகின்றனர்.

திருக்கோயில் உற்சவ மூர்த்திகளாக விநாயகர், ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர், சண்முகர், சண்டேஸ்வரர் ஆகியோரைக் காணலாம். ஆரம்ப காலம் தொடக்கம் கோவில் பூசகராக சிவஸ்ரீ பெரியதுரை ஐயரும், பின்னர் இவரின் சகோதரர் சிவஸ்ரீ சின்னத்துரை ஐயரும் கடமையாற்றி உள்ளனர். தற்போது இவரின் பரம்பரையினரில் ஒருவர் நித்திய பூசைகளைச் செய்து வருகின்றார். இவ்வாலயத்தில் காலை, மாலையென இரண்டு நேரப் பூசைகள் நடைபெற்று வருகின்றன. விசேட தினங்களாகிய புதுவருடப்பிறப்பு, சிவராத்திரி, நவராத்திரி, திருவெம்பாவை போன்ற

காலங்களிலும் அபிடேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. முக்கிய நாட்களில் பொங்கல் பூசையும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

திருக்கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் வைகாசி மாதத்தில் அலங்காரஉற்சவம் 15 நாட்கள் பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இத் தினங்களில் ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர் கோயில் வாகனங்களாகிய மயில், கடா போன்றவற்றில் எழுந்தருளி பக்தகோடிகளுக்கு அருட்காட்சி வழங்குகிறார்.

முருகப்பெருமான் "முதலி கந்தசுவாமியார்" என்ற பெயருடன் வீற்றிருந்து அருள் பாலிக்கும் இத் திருத்தலத்தை நாமும் தரிசித்து நலம் பெறுவோமாக!

****

உ

ஓம் முருகா

கொக்குவில் - தாவடி வேம்படி முருகமூர்த்தி கோவில்

"ஆடும் பரி, வேல், அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனி யானை சகோதரனே."

- கந்தர் அநுபூதி

திருக்கோவில்கள் பல இருந்தாலும் இறைவழிபாட்டிற்கு ஏற்ற இடம் காடுகள், பொழில்கள், ஆற்றங்கரைகள், குளக்கரைகள், முச்சந்திகள், மணல்குன்றுகள், நந்தவனங்கள், ஊர்நடுவே உள்ள மரத்தடிகள் எனப் பல இடங்களைக் குறிப்பிடுவர். அந்தவகையில் இற்றைக்குச் சுமார் 150 வருடங்களுக்குமுன் கொக்குவிலுக்கும், தாவடிக்கும் இடையே, எழின் மிகுந்த பிரதேசத்தின் நடுவே, நாகபாம்பு படமெடுப்பதுபோல் ஒரு தெய்வீக வேப்பமரத்தின் அடிப்பகுதியில் வேல் ஒன்று அமையப்பெற்றிருந்தது. இங்கே நள்ளிரவு வேளைகளில் தினமும் பூசை நடைபெறுவதுபோல் மணியோசை, வேதஒலிகள் கேட்பதை அவ்வூர் மக்கள் அவதானித்தும், உணர்ந்தும் வந்துள்ளனர். எனவே அம்மக்கள் ஒன்றுகூடி சக்திவாய்ந்த அவ்வேலுக்கு ஓலையினால் வேயப்பட்ட சிறு கொட்டகை அமைத்து வழிபாடாற்றி வந்தார்கள். ஒருகாலப் பூசையும் பூசகர் ஒருவரால் நிகழ்த்தப்பட்டு வந்தது. வேற்பெருமான் வேப்பமரத்தடியில் கோயில் கொண்டதால் "வேம்படி முருகமூர்த்தி கோவில்" என்று பெயர் வரப்பெற்றது.

1920ம் ஆண்டளவில் அன்பர்களின் ஈடுபாட்டுடன் கற்களால் கட்டப்பட்ட கருவறையில் மூலவராக வேற்பெருமான் பிரதிஸ்டை செய்யப்பட்டார். பின்னர் அவ்வப்பொழுது விநாயகர் சந்நிதி, சந்தானகோபாலர் சந்நிதி முதலியவை நிறுவப்பட்டன. காலப்போக்கில் மண்டபங்கள், தூண்கள், விமானங்கள் அமைக்கப்பட்டு கோவில் படிப்படியாக வளர்ச்சி கண்டது. இவ்வாலயத்தின் முதற் கும்பாபிஷேகம் 1938ம் ஆண்டு காலப்பகுதியில் நடந்துள்ளது. ஊர்மக்கள் பலர் திருக்கோவிலில் திருப்பணியில் தொடர்ந்து உழைத்த காரணத்தினால் கோவிலில் மேலும் பல புனருத்தாரணங்கள்

நிறைவேற்றப்பட்டு 1972ம் ஆண்டிலும், 1988ம் ஆண்டிலும் இரு கும்பாபிஷேகங்கள் நடைபெற்றுள்ளன. இக்காலப்பகுதியில் ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத முத்துக்குமாரர், சண்முகர், சிவலிங்கம், துர்க்கை அம்பாள், மகாலட்சுமி, பழனியான்டவர், நடேசர், கொடித்தம்பப்பிள்ளையார் ஆகியனவும் கோவிலில் கூடுதல் பரிவாரமூர்த்திகளாக நிறுவியுள்ளனர். அத்துடன் கொடித்தம்பம், பலிபீடம், யாகசாலை, வசந்தமண்டபம், மற்றைய மண்டபங்கள், கூடங்கள்யாவும் அமைக்கப்பெற்று திருக்கோவில் பெருமாற்றங்களைக் கண்டது. வேம்படி முருகப்பெருமான் அருளாலும், நிர்வாகத்தினரின் அயரா ஊக்கமும் செயற்பாட்டினாலும் கோயில் பிரகாரங்கள், திருவீதிகள், மதில்கள் யாவும் மேலும் அழகுபெற அமைக்கப்பட்டு 2003ம் ஆண்டளவிலும் மகாகும்பாபிஷேகம் ஒன்றினைச் செய்து முடித்துள்ளனர்.

இத் திருக்கோவில் ஊர்மக்களால் தெரிவு செய்யப்பட்ட "தர்மகர்த்தா சபை"யினால் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தினசரி ஐந்துவேளை பூசைகள் இங்கே நடைபெற்று வருகின்றன. வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆடிப்பூரம், ஆவணிஓணம், திருக்கார்த்திகை போன்ற அனைத்து நாட்களிலும் சிறப்பு ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன.

1972ம் ஆண்டு நிறைவேறிய மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து திருக்கோவிலில் பத்து நாட்கள் அலங்கார உற்சவங்கள் நடைபெற்று வந்தன. இறுதி நாளான பத்தாம் நாள் திருவிழா விசேடமானது. அன்று முருகபக்தர்கள் தீக்குளித்து தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றும் நிகழ்ச்சியைக்காணப் பெருந்திரளான மக்கள் கூடுவர். பின்னர் வேம்படி ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத முருகப்பெருமான் கிராம உலாவந்து, எழுந்தருளி, நாடிவரும் பக்தர்களுக்கு அருட்காட்சிதரும் வைபவமும் இடம்பெறும். இப் பத்துநாட்கள் அலங்காரவிழா இன்று மகோற்சவத்திருவிழாவாக நடைபெற்று வருகின்றன. பதினோராம் நாள் அன்னதானமும் நடைபெறும். வேம்படி முருகனை நாமும் வழிபட்டு நல்லருள் பெறுவோமாக !

****

கொக்குவில் பரிசுத்த திரித்துவ ஆலயம்

The Holy Trinity Church

பரிசுத்த திரித்துவ ஆலயம் கே. கே. எஸ் வீதி கொக்குவிலில் 1880ம் ஆண்டு திரித்துவ ஞாயிறு அன்று தாபிக்கப்பட்டது. திரித்துவ ஞாயிறு அன்று இவ்வாலயம் தாபிக்கப்பட்டமையால் இந்த ஆலயத்திற்கு பரிசுத்த திரித்துவ ஆலயம் என்று பெயர் சூட்டப்பட்டு, அபிஷேகம் செய்யப்பட்டது. கொக்குவில் கிராமத்தில் 1865ம் ஆண்டு மிஷனறிமாரால் சுவிஷேச ஊழியம் ஆரம்பிக்கப்பட்டது. இங்கிலாந்தில் உள்ள Church Missionary Trust Association மூலம் நியமிக்கப்பட்ட வணக்கத்துக்குரிய கோவ் ஹோஸ்லி என்னும் போதகர் இவ்வாலயம் அடங்கலான யாழ் மாவட்ட மேலாளராக நியமிக்கப்பட்டிருந்தார். 15.11.1864ல் பிரசித்த நொத்தாரிசு கொட்பிறிகொக் என்பவர் மூலம் வண.போதகர் சாள்ஸ் டி.மி. ஆதர் அவர்களும், வண.போதகர் டி.எச். புஸ்வெல் அவர்களும் ஊழியம் செய்து கொண்டிருந்த வேளை இவ்வாலய காணியை மிஷனறி பொறுப்பேற்றுக் கொண்டது. ஆலய உறுதி ஆவணங்களின்படி இந்த ஆலய வளவு தோம்பு என்று அழைக்கப்பட்ட நின்னி தோட்ட முடித்தான் (ஆதாரம் 22.06.1890 உறுதி) என்னும் பெயர் கொண்டுள்ளது.

வண. கோவ் ஹோஸ்லி மேலாளராக இருந்தபோது, யாழ்நகரில் வசித்துவந்த பஸ்தியாம்பிள்ளை மானுவேற்பிள்ளை என்பவரும், பஸ்தியாம்பிள்ளை சுவாமிநாதர் என்பவரும் 22.09.1867ல் கையொப்பமிட்டு பிரதம நொத்தாரிசு சாள்ஸ் ஸ்ரெயினரினால் இக்காணி ஆலயத்திற்கு சொந்தமாக்கப்பட்டது. இக்காலத்தில் சிறிய தொகையான கிறிஸ்தவர்களே இக்கிராமத்தில் வசித்து வந்தனர். அதன்பின் 1880ம் ஆண்டு இவ்வாலயம் கட்டிமுடிக்கப்பட்டு முதல் தமிழ்ப்போதகராக வண. சம்பியன் அவர்கள் நியமிக்கப்பட்டார். அக்காலத்தில் ஆலயத்திற்குச் சொந்தமான மிஷன்வளவில் வெள்ளம் நிரம்பி நிற்பதினாலும், சிறிய வசதியற்ற ஓலைக்குடிசையாக இருந்ததினாலும், இவர் ஆலயத்திற்கு வடக்குப்புறமாக ஏறத்தாள நூறுயார் தூரத்தில் உள்ள ஒழுங்கையில் ஒரு வாடகை வீட்டில் வசித்து வந்தார். இவர் சைவ மதத்தவர்களாலும் பெரிதும் மதிக்கப்பட்டார். இவருடைய அன்பும், பண்பும் பலரையும் ஆட்கொண்டிருந்தது. 1880ல் இவ்வாலயம் ஸ்தாபிக்கப்பட்டபின் ஏழுபேருக்கு இவரால்

ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. இவர் வசித்துவந்த ஒழுங்கையில் உள்ள மக்கள் இவரைப் பெரிதும் விரும்பியபடியால் இவருடைய பெயரால் அந்த ஒழுங்கைக்கு "சம்பியன் லேன்" என்னும் பெயர் சூட்டப்பட்டு இன்றும் அவ்வாறே அழைக்கப்பட்டு வருகின்றது.

1880ல் இருந்து 1893 வரை இவ்வாலயத்தில் இவர் சேவை செய்தார். இவருக்குப்பின் வில்லியம் என்னும் போதகர் ஊழியத்துக்காக நியமிக்கப்பட்டார். அதன்பின் 14 போதகர்கள் இவ்வாலயத்தில் சேவை செய்தார்கள். இவர்களில் வண. சோமசுந்தரம் போதகர் அவர்கள் 1932 லிருந்து 1966வரை 34 வருடங்கள் சேவையாற்றியுள்ளார். இக்காலத்தில் திரு. சுப்பிரமணியம் 1917 லிருந்து 1922 வரையும், திரு. மயில்வாகனம் 1928 லிருந்து 1938 வரையம், திரு.டபிள்யு.ஆர். மயிலு 1939 லிருந்து 1956 வரையும் இவ்வாலயத்தில் உபதேசியர்களாக இருந்து சேவை செய்துள்ளனர். இவர்கள் ஒவ்வொரு ஞாயிறும் ஆராதனைகளை நடாத்தியும், சபையின் வேலைகளையும் செய்து வந்தனர். மாதம் ஒருமுறை நல்லூரிலுள்ள பரி.யாக்கோபு ஆலயத்திலிருந்து போதகர்கள் வந்து திருவிருந்து ஆராதனையை நடாத்துவார்கள். நல்லூர் பரி.யாக்கோபு ஆலயப் போதகரே அக்காலத்தில் இவ்வாலயத்திற்கும் பொறுப்பாக இருந்தாரெனினும் இவ்வாலயத்திற்கும் தனியான நிர்வாகசபை இருந்தது. நல்லூர் போதகர் வரும்போது நிர்வாகசபைக்கூட்டம் நடைபெறும். 1956ம் ஆண்டிலிருந்து உபதேசிமார் இல்லாததினால் நல்லூர் போதகர்களே வந்து ஞாயிறு ஆராதனையை நடாத்தி வந்தார்கள்.

யுத்த அட்டூழியத்தால் 1995ம் ஆண்டு அக்டோபர் 30ம் திகதி மக்கள் யாவரும் ஊரைவிட்டு வெளியேறி மீண்டும் சொந்த வீடுகளுக்கு திரும்பியிருந்த வேளையில் அன்றைய ஆலய குருவாக இருந்த வண. ஜெபரெட்ணம் அவர்கள் மேற்படிப்புக்காக அமெரிக்கா சென்றிருந்தார். அச்சமயம் யாழ்ப்பாணத்தில் அங்கிலிக்கன் போதகர்கள் இல்லாமையால் தென்னிந்தியத் திருச்சபையை சேர்ந்த போதகர்களும், வட்டுக்கோட்டை இறையியல் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களும், மெதடிஸ்சபை போதகரும், வண. எஸ். பி. நேசகுமார் போதகர் அவர்களும் இவ்வாலயத்திற்கு வந்து ஆராதனைகளை நடாத்தினார்கள்.

அத்தியட்சகர் அவர்கள் கடைசியாக யாழ்ப்பாணம் வந்தபோது

அங்கிலிக்கன் போதகர்கள் யாழ்ப்பாணம்வர தயங்குவதாகவும், அத்துடன் போதிய தமிழ் போதகர்கள் இல்லை என்பதாலும் ஒவ்வொரு சபையிலும் வாலிபர்கள் போதகர்களாக வரவேண்டும் என கேட்டுக் கொண்டார். அதற்கிணங்க இவ்வாலயத்தில் ஒரு வாலிபரும், மற்றும் ஆலயங்களில் இருந்து இரண்டு வாலிபர்களும் முன்வந்து சேர்ந்துள்ளனர். 1996ல் அமெரிக்கா சென்றிருந்த வண. எஸ்.ஜே. ஜெபரட்னம் போதகர் அவர்கள் மீண்டும் இங்கு வந்து இச்சபையைப் பொறுப்பேற்று 2001ம் ஆண்டுவரை ஆராதனைகளை நடாத்தி வந்தார். வண. ரி.ஜோர்ஜ் அடிகளார் 2004ம் ஆண்டுவரை சேவையாற்றி உள்ளார். தற்போது குருவாக இருக்கும் வண. ஈ. ஏ.ஜெயராஜ் அடிகளார் ஆலயத்தை சிறந்த முறையில் கவனித்து வருகிறார்.

இவ்வாலயத்துடன் சேர்ந்த தெற்குப்பக்கமாக உள்ள மிஷன் காணிக்கும் ஆலயகாணிக்கும் இடையில் சிறிய நடைபாதை அக்காலத்தில் இருந்தது. அந் நடைபாதையைப் பாவித்தவர்கள் தாங்கள் அந் நடைபாதையை ஒழுங்கையாகப் பாவிப்பதற்கு ஆலய நிர்வாகத்திடம் கேட்டபோது ஆலய ஆதீனமும் மனிதாபிமான வசதிக்காக ஆலய காணியில் ஒரு பகுதியைக் கொடுத்து அவர்களின் வசதியான போக்குவரத்துக்கு வழிவகுத்துக் கொடுத்தது. இதன் காரணமாக ஆலயமும் மிஷன் காணியும் ஒழுங்கையால் இன்றும் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்வாலயத்தின் முன்பாக இருக்கும் பாடசாலையும் அதன் அருகிலிருக்கும் வளவும், மடமும் ஆலயத்திற்குச் சொந்தமானதாகும். அவற்றிற்கான உறுதிகள் ஆதீனத்தில் இருக்கின்றபோதும் 100 ஆண்டுகளுக்கு மேலாக பிறர் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள் என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

அக்காலத்தில் இந்த ஆலயத்தின மூலம் எல்லோருக்கும் கல்வி புகட்டவேண்டும் என்ற நோக்கத்தின்பால் நான்கு பாடசாலைகளை இவ்வாலயம் ஆரம்பித்தது. அவையாவன கொக்குவில் மேற்கு C.C.T.M பாடசாலை, கோண்டாவில் C.C.T.M பாடசாலை, எமது ஆலயத்திற்கு முன்பாக உள்ள கொக்குவில் ஸ்ரேசன் C.C.T.M பாடசாலை, கொக்குவில் கிழக்கு C.C.T.M பாடசாலை. காலப்போக்கில் கொக்குவில் கிழக்கு C.C.T.M பாடசாலை இயங்காமல்போக ஏனைய மூன்றும் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டு இப்போதும் C.C.T.M என்னும் பெயருடனேயே இயங்கி வருகின்றன. நீண்ட காலமாக இப்பாடசாலைகளுக்கு கிறிஸ்துவ ஆசிரியர்களே

தலைமை ஆசிரியர்களாக கடமையாற்றி வந்தனரெனினும் இப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றபின் சைவ ஆசிரியர்களும் தலைமை ஆசிரியர்களாகக் கடமையாற்றி வருகின்றனர்.

இவ்வாலயம் காங்கேசன் துறையிலிருந்து கே.கே.எஸ் வீதியில் யாழ்ப்பாணம் வரையில் உள்ள ஒரேஒரு அங்கிலிக்கன் ஆலயமாகும். அத்துடன் இணுவிலிற்கும் யாழ் நகருக்கும் இடையே உள்ள ஒரேஒரு கிறிஸ்துவ தேவாலயமுமாகும். இவ்வாலயத்தில் முன்னர் 29 குடும்பங்கள் இருந்தபோதும் தற்போது நிரந்தரமாக பதினைந்து குடும்பங்களும் தற்காலிக வசிப்பிடமுள்ளவர்களாக வேறு சபையைச் சேர்ந்த 5 குடும்பங்களும் உள்ளனர். இதுவரை இவ்வாலயத்தில் 278 பேர் ஞானஸ்நானம் பெற்றுள்ளார்கள்.

1997ல் ஆலயத்தில் சிறிய திருத்தங்கள் செய்து வர்ணங்கள் பூசப்பட்டபோதும் ஆலய கூரை மரங்கள் உக்கி பழுதடைந்து காணப்பட்டதனால் 2001ம் ஆண்டில் அரசபுனர்வாழ்வு அமைச்சிடமிருந்து ரூபா இரண்டு லட்சமும், அத்தியட்சாதீனத்திடமிருந்து ரூபா இரண்டு லட்சமும், ஆலயப் பணத்திலிருந்தும் மொத்தமாக ஏறக்குறைய ஆறுலட்ச ரூபா செலவு செய்து ஆலயம் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் இன்று திகழ்கின்றது. வண.ஜோர்ஜ் அடிகளாரின் முயற்சியினால் 2004ம் ஆண்டு ஆலய வடக்குப்புறஎல்லை மதில்சுவர் அவ்வீட்டாருடன் சேர்ந்து கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

ஓய்வுநாட் பாடசாலை நீண்ட காலமாக ஞாயிறு காலை ஆராதனைக்கு முன் நடைபெற்று வந்தது. 1993ஆம் ஆண்டு நடைபெற்ற வேதாகம புதிர்ப் போட்டியில் யாழ் மாவட்டத்தில் முதலிடம் பெற்றதும், பின்னர் இரண்டாம் இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. 1995ல் ஏற்பட்ட இடப்பெயர்வால் இது தடைப்பட்டபோதும் மீண்டும் 1997ல் செல்வி எஸ். சறோஜினியால் நடாத்தப்பட்டு வந்த இப்பாடசாலை இவரின்பின் நல்லூர் பரி.யாக்கோப்பு ஆலயத்தைச் சேர்ந்த செல்வி எம். பத்மா அவர்களாலும் பின்னர் 2004ம் ஆண்டில் சிறிதுகாலம் செல்வி துளசிதா அவர்களாலும் நடாத்தப்பட்டு வந்தது. இன்று உரிய ஆசிரியர்கள் கிடைக்காமையினால் இப்பாடசாலை தற்காலிகமாக செயற்பட முடியாதுள்ளது. எனினும் கிறிஸ்மஸ் பிள்ளைகளின் விழா கலைநிகழ்வுகளுடன் நடாத்தப்பட்டு வருகின்றது. இதில் கிறிஸ்தவப்பிள்ளைகளுடன் இந்துமதப்பிள்ளைகளும் ஆர்வத்துடன் பங்குபற்றி வருகின்றனர். 2003ம் ஆண்டில் சபைக்குருவான

வண.ஜோர்ஜ் அவர்களின் முயற்சியினால் முன்பள்ளிப் பாடசாலை செல்வி எம். பத்மாவினால் நடாத்தப்பட்டு வந்தது. இச்சபையைச் சேர்ந்த ஒரு பிள்ளையும், சூழலில் உள்ள நான்கு இந்துமத பிள்ளைகளும் ஆர்வத்துடன் கற்றுவந்தபோதும் ஆசிரியையின் இடமாற்றத்தாலும், நிரந்திர கட்டிடம் இல்லாமையினாலும் இதுவும் தற்காலிகமாக செயற்பட முடியாது உள்ளது. 2001 லிருந்து 2004 வரை இச்சபையைச் சேர்ந்த திரு செல்வநாயகம் அவர்களால் சிறுபிள்ளைகளுக்கான இலவச ஆங்கில வகுப்புகள் நடாத்தப்பட்டு வந்தது. இதில் இச்சபையை சேர்ந்தவர்களும், இந்துமதப்பிள்ளைகளும் கற்றுவந்தனர். ஆசிரியர் திரு. செல்வநாயகம் அவர்களின் பின் ஆலய போதகரம்மா திருமதி. எலிசபேத் ஜோர்ஜ் அவர்கள் தனது பணிக்காலம்வரை வாரத்திற்கு மூன்று நாட்கள் மாலைநேர வகுப்பாக நடாத்திவந்தார்.

ஆலய வளர்ச்சிப்பணியிலும், சமயப்பணிகளிலும் வாலிபர்கள் என்றும் தோள்கொடுத்து வந்துள்ளனர். 1995ம் ஆண்டிற்கு முன்னர் இவ்வாலய வாலிபர்களே சகல விழாக்களையும் நடாத்துவதற்கு முன்னின்று உழைத்துள்ளனர். இவர்களிடையே சிறப்பான பாடகர் குழாமும் உள்ளனர். மேலும் காலை ஆராதனைகளை நடாத்துவதிலும் பெரும்பங்கு வகித்துள்ளனர்.இன்று இவ்வாலய இளைஞர்கள் எண்ணிக்கை குறைவாக இருப்பதினால் இவர்கள் உரும்பராய் பரி.இம்மானுவெல் ஆலய வாலிபர்களுடனும், நல்லூர் பரி.யாக்கோபு ஆலய வாலிபர்களுடனும் இணைந்து நிகழ்ச்சிகளை நடாத்திவருகின்றனர்.

குளப்பிட்டி ஆனைக்கோட்டைவீதியில் வசித்துவந்த இவ்வாலய சபையின் அங்கத்தவராகிய திரு.ஜோசெப் அவர்கள் தான் இறையடி சேர்ந்தபின் தனது வீட்டையும் காணியையும் ஆலயத்திற்கு எழுதித்தருவதாக கூறியிருந்தார். 2005ல் அவர் இறையடி சேர்ந்தபின் அவரது மனைவி திருமதி கிலாடின் ஜோசெப் அவர்கள் ரூபா அறுபது இலட்சம் பெறுமதியான காணியையும், வீட்டையும் சட்டதிட்டங்களுக்கமைய எமது அத்தியட்சாதீனத்திடம் கையளித்துள்ளார். இவர்களால் கையளிக்கப்பட்ட இவ்வாதனத்தில் சில திருத்தவேலைகள் செய்யப்பட்டபின் பல பொதுநல விடயங்களை செய்வதற்கு பாவிப்பதென சபை திட்டமிட்டுள்ளது.

ஆலயத்தில் சேவகம் செய்த போதகர்கள்

ஆண்டு	போதகர்கள்
1880 - 1893	வண. ஜி.டபிள்யு. சம்பியன்
1984 - 1901	வண. சி.ரி. வில்லியம்ஸ்
1902 - 1910	வண. டபிள்யு.ஜே. ஹென்ஸ்மென்
1911 - 1926	வண. என்.ஜி. நந்தானியல்ஸ்
1927 - 1928	வண. வை.டி. சத்தியநாதன்
1928 - 1932	வண. ஜ.எஸ் இரத்னதீகம்
1932 - 1966	வண. எஸ்.எஸ். சோமசுந்தரம்
1967 - 1969	வண. ஆர்.எச்.ஆர். ஹோலி
1970 - 1975	வண. ஜே.ஜே. ஞானப்பிரகாசம்
1976 - 1978	வண. ஜே. சர்வானந்தன்
1979 - 1985	வண. சாம்.டி. ஹோர்சிங்டன்
1986 - 1992	வண. ஐசாக் செல்வரெட்னம்
1993 - 2001	வண. ஈ.ஜே. ஜெபரட்னம்
2001 - 2004	வண. ரி. ஜோர்ஜ்
2005 -	வண. ஈ.ஏ. ஜெயராஜா

****

இயல் 4

கல்விக்கூடங்களும் அவற்றின் வளர்ச்சியும்

கொக்குவில் இந்துக் கல்லூரி

"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

ஒருவருக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். ஏனைய மண், பொன் முதலிய செல்வங்கள் அழியக்கூடியன. ஆதலினால் அவை செல்வங்கள் ஆகா என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. இக்கல்வியை நாம் கற்று விருத்தி செய்வதற்கு பாடசாலையின் பங்கு அளப்பிலதாகும். நாம் கல்வியோடு உடல் நலம், ஒழுக்கம், நற்பழக்கம் போன்ற யாவற்றையும் பேணி வளர்ப்பதற்கும் பாடசாலைகள் உதவுகின்றன.

இந்த வகையில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் வரலாறும் அதன் வளர்ச்சியும் பிரமிக்கத்தக்கது. கொக்குவிலில் உள்ள மூன்றாம் கட்டை என்னும் இடத்தில் காங்கேசன்துறை வீதிக்கு அருகே அமைந்த திரு. அப்பாக்குட்டி அவர்களின் வீட்டின் முன்திண்ணையில் திரு என். செல்லப்பா மாஸ்டர், தாவடியை சேர்ந்த திரு. சோமஸ்கந்தர் ஆகியோரினால் சில மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை, மாணவர் தொகை அதிகரிப்பினால் புதுக்கோவிலின் வடக்கு வீதிக்கு இடமாற்றப்பட்டு "கொக்குவில் இந்துப் பாடசாலை"யாக இயங்கி வந்தது. மேலும் மாணவர் தொகை அதிகரிக்க 1916ம் ஆண்டில் புதுக்கோவிலின் தெற்கு வீதிக்கு அருகே தலைமை ஆசிரியர் திரு. செல்லையா அவர்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட காணிக்கு இடமாற்றம் பெற்று "கொக்குவில் இந்து ஆங்கிலப்பாடசாலை"யாக இயங்கிப் பின் 1941ம் ஆண்டு "கொக்குவில் இந்துக் கல்லூரி"யாக உயர்ச்சி கண்டது. இன்று கொக்குவில் இந்துக் கல்லூரியானது புதுக்கோவிலின் வடக்கு, தெற்கு ஆகிய இரு பக்கங்களிலும் தனக்கான சொந்த வளாகத்தில் இயங்கி வருகின்றது. கல்லூரியின் வளர்ச்சியானது பாடசாலையின் தரத்திலும், உயர் கல்விக்கான வசதிகளிலும், மாணவர் தொகையிலும், ஆசிரியர் தொகையிலும், பாடநெறிகளை கற்பிக்கும் முறைமையிலும், விளையாட்டுத் துறையிலும், பரீட்சைப் பெறுபேறுகளிலும் மிகமிக

உயர் நிலை அடைந்து யாழ் மாவட்டத்திலே ஓர் முதற்தர பாடசாலையாகவும், கொக்குவில் கிராமத்தின் மணிமகுடம் ஆகவும் திகழ்கின்றது. ஆரம்பத்தில் கொக்குவில் இந்துப் பாடசாலையாக இருந்து படிப்படியான வளர்ச்சியின் மூலம் கொக்குவில் இந்துக் கல்லூரியாகப் பரிநாமம் கண்டுள்ளது.

கல்லூரியின் சின்னம் (Logo) ஓம், விளக்கு, சங்கு, சக்கரம், தாமரை, கற்றதொழுகு என்ற வாசகம் என்பவற்றை தன்னகத்தே கொண்டுள்ளது. இங்கு ஓம் என்பது இந்து சமயப் பண்பாட்டில் ஒழுக்கத்தையும், விளக்கு என்பது அறிவை வளர்த்தலையும், சங்கு என்பது மென்மையையும், தூய்மையையும், சக்கரம் என்பது தர்ம சிந்தனையையும், தாமரை என்பது செல்வத்தையும், அழகையும், உயர்வையும், கற்றதொழுகு என்ற வாசகமானது கற்க வேண்டியவற்றை ஐயந்திரிபறக் கற்று அதன்படி ஒழுக வேண்டும் என்பதையும் சுட்டி நிற்கின்றன. கல்லூரியின் கொடியானது 91 செ.மீ உயரமும், 120 செ.மீ அகலமும் ஒவ்வொன்றும் 7 செ.மீ உயரம் கொண்ட 7 வெள்ளை வரிகளையும், 6 சிவப்பு வரிகளையும் கொண்டதாக அமைந்துள்ளது. கல்லூரி கீதம் கணித ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. A. நாகலிங்கம் அவர்களால் இயற்றப்பட்டு சங்கீத ஆசிரியராக கடமையாற்றிய திருமதி சரஸ்வதி பாக்கியராசா அவர்களால் மெட்டமைக்கப்பட்டது. கல்லூரியின் கொடிகீதம் முன்னாள் ஆசிரியரும் தமிழில் மிகவும் புலமை பெற்று விளங்கியவருமாகிய திரு. எஸ். வேலாயதபிள்ளை அவர்களால் (கனடாவில் வதியும்போது) எழுதப்பட்டது.

1926ம் ஆண்டில் 139 ஆண் மாணவர்களாக மட்டுமே இருந்த மாணவர் தொகை 1927ல் 156ஆண்களும், 25 பெண்களுமாக மொத்தம் 181 மாணவர்களுடனும், 1937ல் 210ஆண்களும், 64 பெண்களுமாக மொத்தம் 274 மாணவர்களுடனும், 1940ல் 227ஆண்களும், 74 பெண்களுமாக மொத்தம் 301 மாணவர்களுடனும், 1948ல் 454ஆண்களும், 253 பெண்களுமாக மொத்தம் 707 மாணவர்களுடனும், 1956ல் 786ஆண்களும், 486 பெண்களுமாக மொத்தம் 1272 மாணவர்களுடனும் எனப் பாடசாலை வளர்ந்து இன்று 1800ம் சற்று அதிகமான (இம் மாணவர் தொகை தரம் 6ல் இருந்து தரம் 12 வரை) மாணவர்களுடனும் 79 ஆசியர்களின் கல்வி புகட்டலினூடாகவும் (நிரந்தர ஆசிரியர்கள் 73, தற்காலிக இணைப்பு பெற்று வந்த ஆசிரியர்கள் 03, தற்காலிக ஆசிரியர்கள் 03), பழைய

மாணவர்கள், பழைய மாணவர் சங்கங்கள், பெற்றார் ஆசிரியர் சங்கம், கல்லூரி நலன் விரும்பிகள் ஆகியவற்றின் பங்களிப்புடன் தன் வளர்ச்சிப்பாதையில் வீறுநடைபோட்டு வருகின்றது.

கொக்குவில் இந்து ஆங்கிலப் பாடசாலையின் தலைமை ஆசிரியர்களும், கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர்களும் :-

திரு. E. செல்லையா

கொக்குவில் மண்ணின் மைந்தராகிய இவர் 1910ம் ஆண்டு ஐப்பசி மாதம் ஆரம்பிக்கப்பட்ட கொக்குவில் இந்து ஆங்கிலப் பாடசாலையின் முதலாவது தலைமை ஆசிரியராக 1926ம் ஆண்டுவரை கடமையாற்றினார். இவர் யாழ் இந்துக் கல்லூரி ஆரம்பப் பாடசாலை தலைமை ஆசிரியராக இருந்தபோது யாழ் இந்துக் கல்லூரி சபையினால் கொக்குவில் இந்து ஆங்கிலப் பாடசாலைக்கு தலைமை ஆசிரியராக அனுப்பப்பட்டு, ஆலய வடக்கு வீதியில் ஓலைக் கொட்டகையில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையின் தலைமை ஆசிரியராக பொறுப்பேற்று நடாத்தி வந்தார். இங்கும் மாணவர் தொகையின் அதிகரிப்பை தொடர்ந்து ஆலயத்தின் தென்புறத்தே இருந்த தனது சொந்தக் காணியினை 1916ம் ஆண்டில் நன்கொடையாக வழங்கி அதில் பாடசாலையை அமைத்துத் தலைமை ஆசிரியராக இருந்து பாடசாலையை வழிநடத்திச் சென்றார். இன்று ஆலயத்திற்குத் தென்புறமாக அமைந்திருக்கும் கல்லூரி வளாகம் முழுவதும் அன்னாரதும் அவரது உறவினர்களும் வழங்கிய காணியாகும். மேலும் இப் பாடசாலை வளாகத்திறகுள்ளேயே தமிழ் பாடசாலை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது.

திரு. S. தியாகராசா

திரு. E. செல்லையா அவர்களைத் தொடர்ந்து தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. எஸ். தியாகராசா 1926ம் ஆண்டிலிருந்து 1927ம் ஆண்டு வரை தலைமை ஆசிரியராகக் கடமை ஆற்றினார். இவரது காலப்பகுதியில் "ESLC" என்னும் பரீட்சைக்கு மாணவர்களை தயார்ப்படுத்தும் கனிஸ்டபாடசாலைத் தரத்திற்கு இப் பாடசாலை தரம் உயர்த்தப்பட்டது. இவர் 1927ல் கல்வி அமைச்சினால் கல்வித் திணைக்கள பரிசோதகராகப் பதவிஉயர்வு பெற்றுச் சென்றதனால் குறுகிய காலமே கல்லூரியின் தலைமை ஆசிரியராக இருந்தார்.

திரு. முருகேசு கார்த்திகேசு

இவர் 1927ம் ஆண்டிலிருந்து 1940ம் ஆண்டு வரை தலைமை ஆசிரியராக கடமை ஆற்றினார். 1937ம் ஆண்டு பங்குனி மாதம் இவரது தலைமையில் பாடசாலை வெள்ளிவிழா கொண்டாடியது. இவ் ஆண்டிலேயே முதன் முதலில் பாடசாலை தீக்கு இரையான சம்பவமும் நடந்தது. 1941ம் ஆண்டு தை மாதத்தில் கொக்குவில் இந்து ஆங்கிலப் பாடசாலை கொக்குவில் இந்துக் கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டது. திரு. மு. கார்த்திகேசு 1941ம் ஆண்டிலிருந்து 1942ம் ஆண்டு வைகாசி மாதம் வரை கல்லூரியின் அதிபராக கடமை ஆற்றியதன் மூலம் கொக்குவில் இந்துக் கல்லூரியின் முதலாவது அதிபர் என்ற பெருமைக்கு உரியவரானார். இவர் புலோலி மேற்கு, பருத்தித்துறையை தனது வாழ்விடமாக கொண்டிருந்த போதும் தன் குடும்பத்துடன் கொக்குவிலிலேயே தங்கியிருந்து தனது 14 வருட சேவைக் காலத்தின் பெரும் பகுதியை கல்லூரியின் வளர்ச்சிக்காகச் செலவிட்டார். இவரது காலத்தில் கல்லூரிக்கு முதன்முதலாக சீமெந்தினால் கட்டப்பட்டு ஓட்டினால் வேயப்பட்ட கட்டிடம் கட்டப்பட்டது. அக்கட்டிடத்தில் பொதுவிஞ்ஞான வகுப்பறையும் அமைக்கப்பட்டு விஞ்ஞான பாடமும் கற்பிக்கப்பட்டு வந்தது. 1940ம் ஆண்டு திரு. C. K. கந்தசாமி அவர்கள் கல்லூரியின் முதலாவது விஞ்ஞான பட்டதாரி ஆசிரியராகக் கடமை ஆற்றத் தொடங்கினார். இக் காலத்தில் மாணவர் தலைவர்கள் (Prefects) நியமனம் நடைபெற்றது. சிரேஸ்ட மாணவர் தலைவராக முதன் முதலில் திரு சு. நாகலிங்கம் நியமிக்கப்பட்டார். வருடாவருடம் கல்லூரி சஞ்சிகை ஒன்றை வெளியிடுவதென தீர்மானித்து “Kokuvil Mirror” என்ற பெயருடன் 1941ல் முதல் சஞ்சிகை வெளியானது.

திரு. S. சீனிவாசகம்.

இவர் 1943ம் ஆண்டு மாசி மாதத்திலிருந்து 1946ம் ஆண்டு ஆனி மாதம் வரை அதிபராகக் கடமை ஆற்றினார். இவர் கொழும்பில் அரசாங்க சேவையில் இருந்த கல்லூரியின் பழைய மாணவர்களை ஒன்று திரட்டி கல்லூரியின் வளர்ச்சியில் பழைய மாணவர்களது முக்கியத்துவத்தையும், கல்லூரிக்கான பழைய மாணவர் சங்கத்தினது தேவையையும் எடுத்துக்கூறி 1944ம் ஆண்டு மாசி மாதம் 29ம் நாள் கொ.இ.க.பழைய மாணவர் சங்கத்தை கொழும்பில் நிறுவ வகை செய்தார். கொழும்பு பழைய மாணவர் சங்கமே கொக்குவில்

இந்துக் கல்லூரியின் முதலாவது பழைய மாணவர் சங்கமாகும். இதன் பின்னரே யாழ் பழைய மாணவர் சங்கம் உதயமானது.

திரு. V. நாகலிங்கம்

தலையாழி வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகக் கொண்ட இவர் ஆங்கில இலக்கியத்தில் மிகவும் புலமை பெற்றிருந்தார். இவர் 1946ம் ஆண்டு ஆடி மாதத்திலிருந்து 1949ம் ஆண்டு பங்குனி மாதம் வரை அதிபராகக் கடமை ஆற்றினார். 1948ம் ஆண்டில் கொக்குவில் இந்துக் கல்லூரி "தரம் 1" என்ற உயர்தர நிலைக்கு தரமுயர்த்தப்பட்டது. இவர் அதிபராக இருந்தநாட்களில் புதுக்கோவிலிற்கு வடக்கே இருக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் தற்போதய விளையாட்டு மைதானமும், கல்லூரிக் கட்டிடம் அமைந்திருக்கும் நிலமும் கொள்வனவு செய்யப்பட்டது.

திரு. ஹன்டி பேரின்பநாயகம்.

இவர் 1949ம் ஆண்டு சித்திரை மாதத்திலிருந்து 1960ம் ஆண்டு பங்குனி மாதம் வரை அதிபராகக் கடமை ஆற்றினார். 1949ம் ஆண்டிலிருந்து Higher School Certificate (HSC) மற்றும் சர்வகலாசாலைப் பிரவேசத்திற்கான வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. இவர் அதிபராகப் பதவி ஏற்ற சிறிது காலத்திலே அதாவது 1950ம் ஆண்டில் அதிபர் திரு நாகலிங்கம் அவர்களை கௌரவிக்குமுகமாக "லிங்கா லைட்ஸ்" எனும் பெரும் களியாட்ட விழாவை (Carnival) நடத்தி அதனால் கிடைத்த நிதியினைக் கொண்டு நிலக்கொள்வனவால் கொடுக்க வேண்டி இருந்த கடனைக் கொடுத்தார். 1954ம் ஆண்டில் கல்லூரியின் பெரும்பகுதி மீண்டும் தீக்கிரையானது. கல்லூரிக்கு சீமெந்துக் கட்டிடத்தை கட்டும் நோக்குடன் "கொக்குவில் இந்துக் கல்லூரி கட்டிட நிர்மாணத் திட்டம்" எனும் வேண்டுகோள் பத்திரம் ஒன்றை 24.02.1957ல் வெளியிட்டார். திரு. C. K. கந்தசாமி அவர்கள் உப அதிபராக இருந்து கல்லூரியின் வளர்ச்சிக்கு திரு. ஹன்டி பேரின்பநாயகம் மேற்கொண்ட சகல முயற்சிகளுக்கும் துணைநின்று உதவினார். இவர்கள் இருவரும் மலேசியா சென்று நிதி திரட்டிவந்து விளையாட்டு மைதானத்தை நோக்கி இருக்கும் கல்லூரிக்கான முதலாவது மூன்றுமாடிக் கட்டிடத்தை கட்டுவதற்கு அயராது உழைத்தனர். இவரை பெருமைப்படுத்தும் நோக்கில் "ஹன்டி பேரின்பநாயகம் கட்டிடம்" என இக்கட்டிடம் இன்றும் அழைக்கப்பட்டு

வருகின்றது. இக் கட்டிடத்தின் கீழ்த்தளத்தின் கிழக்காக இரசாயன விஞ்ஞான கூடமும், மேற்காக பௌதீக விஞ்ஞான கூடமும் அமைந்துள்ளன.

திரு. **C. K.** கந்தசாமி

இவர் 1960ம் ஆண்டு சித்திரை மாதத்திலிருந்து 1970ம் ஆண்டு மார்கழி மாதம் வரை அதிபராகக் கடமையாற்றினார். 1940ம் ஆண்டில் கல்லூரியில் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராகக் கடமையாற்றத் தொடங்கி அதிபர் பதவி தன்னை நாடி வந்தபோதும் முதுமைக்கும் அனுபவத்திற்கும் வழிவிட்டு தனக்குரிய காலம் வரும்போது உபஅதிபராகவும் பின்னர் அதிபராகவும் உயர்வு பெற்று கல்லூரியின் வளர்ச்சியில் அபார பங்களிப்பைச் செய்தார். திரு. ஹண்டி பேரின்பநாயகத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட மூன்றுமாடிக் கட்டிடம் இவரது தலைமையில் 1961ம் ஆண்டு தை மாதம் 27ம் திகதி திறந்து வைக்கப்பட்டது. இந்த வைபவத்தின்போது **"The story of the storeys"** என்னும் நூலை முன்னாள் அதிபர் திரு. ஹண்டி பேரின்பநாயகம் வெளியிட்டார். பாடசாலையின் ஆசிரியர்களும், பழைய மாணவர்களும், ஊர்மக்களும் இவர்மீது வைத்திருந்த மதிப்பும், நம்பிக்கையும் இவரது முயற்சிகளுக்கு பேருதவியாக அமைந்திருந்தன. இவரது காலத்திலேயே ஹண்டி பேரின்பநாகம் கட்டிடத்துடன் இணைத்து கிழக்குப்புறமாக கட்டப்பட்ட மூன்றுமாடிக் கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டு கட்டிடவேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இன்று இக் கட்டிடம் சி.கே. கந்தசாமி கட்டிடம் என அழைக்கப்பட்டு வருகின்றது.

திரு. **C**. குணபாலசிங்கம்

இவர் 1971ம் ஆணடு தை மாதத்திலிருந்து 1971ம் ஆண்டு வைகாசி மாதம் வரை பதில் அதிபராகக் கடமையாற்றினார்.

திரு. **P. S**. குமாரசாமி

இவர் 1971ம் ஆண்டு ஆனி மாதத்திலிருந்து 1972ம் ஆண்டு வைகாசி மாதம் வரை அதிபராகக் கடமையாற்றினார்.

திரு. மாணிக்கவாசகர் மகாதேவா

இவர் கொக்குவில் ஆங்கிலப் பாடசாலையை ஆரம்பித்து வைப்பதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர்களில் ஒருவரான சபாரத்தினமுதலியாரின் பேரன் என்பதுடன் கொக்குவில் மண்ணின் மைந்தரும் கல்லூரியின் பழைய மாணவருமாவார். இவர் 1972ம் ஆண்டு ஆனி மாதத்திலிருந்து 1980ம் ஆண்டு மார்கழி மாதம் வரை கல்லூரியின் அதிபராகப் கடமையாற்றினார். கல்லூரியின் அதிபராக பதவிவகித்த முதலாவது பழைய மாணவன் என்ற பெருமை இவரைச் சாரும். திரு .சி. கே. கந்தசாமி அதிபராக இருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கட்டிடமாகிய (ஹன்டி பேரின்பநாயகம் கட்டிடத்துடன் இணைத்து) கிழக்குப்புறமாக உருவாக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டிடவேலைகள் இவரது காலத்திலே நிறைவேற்றப்பட்டன. ஆரம்பத்தில் இக் கட்டிடத்தின் கீழத் தளத்தில் மாணவர் படிப்பகமும் (Study room), இரண்டாம் தளத்தில் உயிரியல் விஞ்ஞான கூடமும், மூன்றாம் தளத்தில் நூல் நிலையமும் அமைந்திருந்தன. ஆனால் இன்று கட்டிடத்தின் கீழ்த்தளத்தில் வகுப்பறைகளும், ஒரு தேனீர் உணவகமும் அமைந்துள்ளன. இவரது காலத்திலேயே புதுக்கோயில் ஆலயத்தின் வடக்கு வீதியுடன் அமைந்திருந்த கட்டிடம் மாடிக் கட்டிடமாக கட்டப்படுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இன்று இக்கட்டிடம் மகாதேவா கட்டிடம் என அழைக்கப்பட்டு வருகின்றது.

திரு. அ. பஞ்சலிங்கம்

மண்ணின் மைந்தனான இவர், இக் கல்லூரியிலேயே திரு. C. K. கந்தசாமி, திருமதி. சுகிர்தலட்சுமி சுப்பிரமணியம் ஆகியோரிடம் கல்வி கற்றவர். இவர் விஞ்ஞானப் பட்டதாரியாகி இக் கல்லூ ரியில் ஆசிரியராக சேவையாற்றத் தொடங்கினார். பின்னர் உப அதிபராகப் பதவி உயர்வு பெற்று, கல்லூரி அதிபராக 1981ம் ஆண்டு தை மாதத்திலிருந்து 1991ம் ஆண்டு பங்குனி மாதம் வரை கடமையாற்றினார். நிர்வாக மேலதிக பயிற்சிக்காக கல்வித் திணைக்களத்தினால் வடமாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டு புதுடில்லிக்கு அனுப்பப்பட்ட ஒரேயொருவர் இவராவர். இவர் அதிபராக இருந்த காலத்தில் இவர் மட்டுமே வடமாகாணத்தில் முதல்தர அதிபராக காணப்பட்டார். நிர்வாகச் செயற்பாட்டில் குறைகூற வரும் பெற்றோர்களை கனிவுடனும், மரியாதையுடனும் வரவேற்று அவர்களது குறைகளை ஆராய்ந்து அதற்கான தகுந்த

விளக்கங்களை வழங்கி, வெளியிலிருந்து வரும் நிர்வாகப் பிரச்சனைகளை இலகுவாகக் கையாளும் வல்லமை கொண்டவராகக் காணப்பட்டார். மேலும் ஆசிரியர்கள் மத்தியில் ஆசிரியர்கள் பாடநெறிகளை கற்பிக்கச் செல்லும் முன்னர் அவைபற்றிய நல்ல தெளிவுடன் வகுப்பறைகளுக்கு செல்ல வேண்டும் என்ற இறுக்கமான நிலைப்பாட்டையும் கொண்டிருந்தார். 1987ல் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்த இந்திய அமைதி காக்கும் படையினால் கல்லூ ரிக்கு பெரும் சேதம் ஏற்பட்டிருந்தது. இதனைக் கண்டு பெரிதும் மனம் கலங்கிப்போனார். எனினும் பழையமாணவர் சங்கங்களினதும், ஊர்மக்களதும், நலன்விரும்பிகளினதும் ஆதரவைப் பெற்று கல்லூ ரியை பழைய நிலையிலும் பார்க்க மேம்பாடடையச் செய்தார். இவர் நோர்வே, லண்டன், கனடா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்து அந்நாடுகளில் இருக்கும் கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்களுடன் நெருங்கிய தொடர்புகளை மேற்கொண்டு கல்லூரிக்கு அருகிலிருக்கும் காணிகளைக் கொள்வனவு செய்து கல்லூரி வளாகத்தை விரிவாக்கம் செய்துள்ளார். மேலும் புதுக்கோவிலுக்கு வடக்குப்புறமாக இருக்கும் வளாகத்தின் வடக்கு மற்றும் கிழக்குபுறக் கட்டிடங்களுடன் அதிபர் திரு. மா. மகாதேவா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட தெற்குபுறக் கட்டிடத்தையும் மாடிக்கட்டிடங்களாக மாற்றி அமைத்துள்ளார். தென்புற கட்டிடத்தின் கீழ்த்தளத்தில் கல்லூரி வாசலிற்குக் கிழக்காக அதிபர் காரியாலயமும் மேற்காக வகுப்பறைகளும் அமைந்துள்ளது. கட்டிட மேல் தளத்தில சில வகுப்பறைகளுடன் பழைய மாணவர் சங்கங்களின் உதவியுடன் ஓர் கேட்போர் கூடத்தையும் அமைத்துள்ளார். இன்று இக் கேட்போர்கூடம் "பஞ்சலிங்கம் கேட்போர்கூடம்" என்றே அழைக்கப்பட்டு வருகின்றது. திருமதி சொரூபி இராமகிருஷ்ணன் தனது தந்தையார் திரு. தேவராசா பெயரால் பாடசாலைக்கு நன்கொடையாக வழங்கிய காணியில் பெண்களுக்கான ஒரு வலைப்பந்தாட்டத் திடலை அமைத்ததுடன் அக்காணியில் இருந்த வீட்டின் பெரும்பகுதியை ஒரு சிறுவர் நூ லகமாக ஓய்வுபெற்ற பொறியியலாளர் திரு. ஆர். நடராசா அவர்களின் ஆதரவுடன் அமைத்துள்ளார். இச் சிறுவர் நூலகம் "ஹன்டி பேரின்பநாயகம் சிறுவர் நூலகம்"என அழைக்கப்பட்டு வருகின்றது. இக் கட்டிடத்தின் ஒரு பகுதியில் பழைய மாணவர் சங்கம் இயங்கி வருகின்றது.

திரு. இ. மகேந்திரன்

இவர் 1991ம் ஆண்டு சித்திரை மாதத்திலிருந்து 1996ம் ஆண்டு தை மாதம் வரை கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றினார். உரும்பராயை வதிவடமாகக் கொண்டிருந்த இவர் கல்லூரி ஆசிரியராக 1960ம் ஆண்டில் சேவையாற்றி உள்ளார். அந் நேரத்தில் இவர் பாடநெறிகளை மாணவர்களுக்கு கற்பித்தலுடன் நின்றுவிடாது, திரு. V. சிவசுப்பிரமணியம் ஆசிரியர் (V.S மாஸ்டர் என அழைக்கப்பட்டவர்) குழுச்சாரணர் ஆசிரியராக (Group Scout Master) இருந்தபோது சாரணர் ஆசிரியராகவும் கடமையாற்றிச் சாரணர் பாடசாலை வளாகத்திலும், யாழ் பழைய பூங்காவிலும், கசோர்னா கடற்கரையிலும், கிளிநொச்சியிலும் பாசறைகள் அமைத்துப் பாசறைத் தீ நிகழ்ச்சிகள் பல நடத்தி பாராட்டுக்களையும், பரிசில்களையும் பெற்றுக் கொடுத்துள்ளார்.. மேலும் குறிப்பாக அகில இலங்கைப் பாடசாலைகள் மட்டத்தில் 1965ம், 1969ம் ஆண்டுகளில் அதிகளவிலான (1965ல் 21 இராணிச் சாரணர்கள்) இராணிச் சாரணர்களை உருவாக்கினார். இன்று வரை இது முறியடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் கல்லூரியின் சாரணர்குழு இராணிச்சாரணர் கொடியையும், சமூகசேவை வெற்றிக் கிண்ணத்தையும் தேசாதிபதியிடமிருந்து பெற காரணமாக இருந்தார். அன்று இவரது வழிகாட்டலில் வளர்க்கப்பட்ட இச் சாரணர் அமைப்பு இன்று 100க்கு மேற்பட்ட சாரணர்களைக் கொண்டதாக வளர்ச்சி அடைந்துள்ளது. மேலும் கல்லூரியில் மாணவர் இராணுவப் பயிற்சி அமைப்பை உருவாக்கி (Cadet) இலங்கை தியத்தலாவ எனும் இடத்தில் அமைந்துள்ள இராணுவ பயிற்சி முகாமில் பாசறைப் போட்டிகளில் பங்குகொள்ள வைத்தார் (இவர் அதிபராக இருந்த காலத்தில் யாழ் மாவட்ட சாரணர் ஆணையாளராகவும் கடமையாற்றினார்). அத்துடன் பாடசாலைகளுக்கு இடையிலான பேச்சுப் போட்டிகளுக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தி அவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் கொடுத்து அவர்கள் தங்கப்பதக்கங்களை வென்றெடுக்க உறுதுணையாக இருந்ததுடன் கல்லூரிக்கும் பெருமை சேர்த்தார். விளையாட்டுத் துறையில் குறிப்பாக எமது கல்லூரியின் பழைய மாணவரும் விளையாட்டுத்துறை ஆசிரியருமான திரு. V. கணேசலிங்கம் அவர்களுடன் துணைநின்று உதைபந்தாட்டம், தடகளம் என்பவற்றில் சிறந்த வீரர், வீராங்கனைகளை உருவாக்கி அகில இலங்கை மட்டத்திலும், யாழ் பாடசாலைகள் மட்டத்திலும்

சாதனைகளும், விருதுகளும் பெறச் செய்தார் (பாடசாலையின் விளையாட்டுத்துறையின் அரிய சாதனைகளின் விபரங்கள் கட்டுரையின் இறுதியில் காணலாம்). இவர் அதிபராக இருந்த காலத்தில் தமிழ் மன்றம், சமூகக்கல்வி மன்றம், விஞ்ஞான மன்றம், ஆங்கில மன்றம் என்பவற்றை உருவாக்கினார். சமூகவியல் மன்றம் மூலம் "வணிகச்சுடர்" என்ற சஞ்சிகை ஆசிரியர் வேலாயுதபிள்ளை தலைமையில் இன்றும் வெளியிடப்பட்டு வருகின்றது. 2003ம் ஆண்டு கல்விசார் சகல பிரிவுகளிலும் பிரமாண்டமான கண்காட்சி நடாத்தப்பட்டது. இக்கண்காட்சியை காண்பதற்காக யாழ்ப்பாணந்தில் உள்ள சகல பாடசாலைகளிலும் இருந்து ஆசிரியர்கள், மாணவர்கள் வந்திருந்தனர். இக்கண்காட்சி கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்களால் மட்டுமே நடாத்தப்பட்டது. கல்லூரியின் தென்புற வளாகத்தின் கிழக்குபுறமாக அமைந்துள்ள இரண்டுமாடிக் கட்டிடம் இன்று இவரது பெயரால் திரு.ஆர். மகேந்திரன் கட்டிடம் என அழைக்கப்பட்டு வருகின்றது. இவர் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தை விஸ்தரிப்பதற்காக காலம் சென்ற திரு. பொன்னுத்துரைப் பத்தரினால் கொள்வனவு செய்யப்பட்டு கல்லூரிக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட குளப்பிட்டி பள்ளக்காணியை நிரவும் முயற்சியில் ஈடுபட்டார். இதன்போது அரைவாசி வேலைகள் நிறைவடைந்த நிலையில் இவர் யாழ் இந்துக் கல்லூரிக்கு அதிபராக மாற்றம் பெற்றுச் சென்றதனால் இம்முயற்சி நிறைவு பெறாமற் போயிற்று.

திரு. T. கணேசபிள்ளை

இவர் 1996ம் ஆண்டு ஆனி மாதம் 24ம் நாளிலிருந்து 1996 ஆண்டு புரட்டாதி மாதம் 24ம் நாள் வரை பதில் அதிபராக கடமையாற்றினார்.

திரு. பொ. கமலநாதன்

இக் கல்லூரியின் பழைய மாணவராகிய இவர் 1996ம் ஆண்டு புரட்டாதி மாதம் 25ம் நாளிலிருந்து 2007ம் ஆண்டு வைகாசி மாதம் வரை அதிபராகக் கடமையாற்றினார். இவர் மாணவர்களுக்குக் கணினி பற்றிய அறிவை வழங்க வேண்டும் என்ற நோக்கில் திரு

சி.கே.கந்தசாமி அவர்களின் பிள்ளைகளின் நிதிப்பங்களிப்பு மற்றும் பழைய மாணவர் சங்கங்களின் உதவியுடன் ஓர் கணனி கற்போர் கூடத்தை அமைப்பதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வந்தார். எனினும் இவர் ஓய்வு பெறும்போது இதற்கான கட்டிட வேலைகள் நிறைவடையவில்லை.

திரு. அ. அகிலதாஸ்

இவர் 2007ம் ஆண்டு புரட்டாதி மாதம் 14ம் நாளிலிருந்து அதிபராகக் கடமையாற்றி வருகின்றார். கணனி மற்றும் ஆங்கில அறிவை மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் முன்னாள் அதிபர் திரு பொ. கமலநாதனினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட கற்போர்கூடம் (Learning Centre) இவரின் நிர்வாகத்தில் பூர்த்தி செய்யப்பட்டு 2008ம் ஆண்டு தை மாதம் 22ம் நாள் திறந்து வைக்கப்பட்டது. இக் கட்டிடம் திரு. C. K. கந்தசாமி அவர்களின் பெயரால் "கந்தசாமி படிப்பகம்" என்று அழைக்கப்பட்டு வருகின்றது. இப் படிப்போர் கூடத்திற்கு தேவையான தளபாடம், கணனி மற்றும் பராமரிப்புக்கான செலவுகளை பிரித்தானியா, கனடா ஆகிய நாடுகளில் உள்ள பழைய மாணவர் சங்கங்கள் வழங்கி வருகின்றன. இவரின் நிர்வாகத்தின் கீழ் இரசாயனவியல் ஆய்வுகூடமானது கணினி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூடமாக மாற்றியமைக்கப்பட்டு மாணவர்கள் இன்று பல்லூடக தொழில்நுட்ப வசதியுடன் (Multi - media) இரசாயனகல்வியை கற்கக்கூடிய வசதி கொண்டதாக 2008ம் ஆண்டு தை மாதம் 22ம் நாள் திறந்து வைக்கப்பட்டது. கல்லூரியின் விஸ்தீரணத்தை கருத்தில் கொண்டு நிர்வாக தொடர்பாடல்களை இலகுபடுத்தும் நோக்குடன் உள்ளக தொடர்பாடல் (Inter com) மற்றும் உள்ளக தகவல்பரிமாற்ற மையம் ஆகியன 2008ம் ஆண்டு தை மாதம் 22ம் நாள் திறந்து வைக்கப்பட்டது. ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் வசதி கருதி கல்லூரியின் தென்புற வளாகத்திலும், வடபுற வளாகத்திலும் நவீன வசதிகளுடன் கூடிய இரண்டு புதிய சிற்றூண்டிச் சாலைகளும் மேலும் அழகிய முகப்புத் தோற்றத்தைக் கொண்ட அதிபருக்கான அலுவலகமும் 2008ம் ஆண்டு தை மாதம் 22ம் நாள் திறந்து வைக்கப்பட்டது. கல்லூரியின் பழைய மாணவியும் பிரபல சட்டத்தரணியுமான செல்வி ஞானலோஜினி அவர்கள் தனது தந்தையார் காலம் சென்ற வைத்தியக்கலாநிதி சிவஞானம் அவர்களின் ஞாபகார்த்தமாக 5 இலட்சத்து 55ஆயிரம் ரூபா செலவில் நுழைவாயில் முகப்பை அழகிய வடிவில் அமைத்துக் கொடுத்துள்ளார். இன்று கல்லூரியின் விளையாட்டு மைதானம்

அதிபர் திரு. அ. அகிலதாசின் முயற்சியால் பழைய மாணவர் சங்கங்களின் ஆதரவுடன் புனரமைக்கப்பட்டு வருகின்றது. கல்லூரியின் மையப்பகுதியில் உள்ளகசூழலை அழகாகவும். மாணவர்களின் கற்றல் சூழலைப் பசுமையாக்கி இதமான உணர்வை ஏற்படுத்தும் நோக்குடனும் அழகிய பூந்தோட்டமும் அமைக்கப்பட்டுள்ளன.

இக் கல்விக்கூடத்தில் ஆசிரியராகப் பணியாற்றியோர் பலர். அத்தனை ஆசிரியர்களும் தங்கள் பணியைச் சிறப்பாகவே ஆற்றியுள்ளனர். ஆசிரியர்களில் சிலர் தங்கள் சிரமத்தைப் பாராது மாணவர்களில் கூடிய கவனமெடுத்து தனிப்பட்ட முறையில் கல்வி புகட்டி அவர்களை மேல்நிலைக்கு உயர வைத்துள்ளார்கள். ஆசிரியர்களின் போதனை முறையின் திறமையால் மாணவர்கள் இறுதியாண்டுத் தேர்வுகளிலும், அரசாங்க சோதனைகளிலும் நல்ல பெறுபேறுகள் பெற்று அதிக அளவிலான மாணவர்கள் பல்கலைக் கழகம் சென்று ஆசிரியர்களுக்கும், கல்விக்கூடத்திற்கும் பெருமை தேடிக்கொடுத்துள்ளனர். 2006ம், 2007ம் ஆண்டுகளின் புள்ளி விபரங்கள் நோக்குவோமாயின் இவ்வாண்டுகளில் க.பொ.த சாதாரன பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் முறையே 201ம், 204ம் ஆவர். இதில் க.பொ.த உயர்தர வகுப்பிற்கு தகுதி பெற்றோர் 2006ல் 173 மாணவர்களும், 2007ல் 167 மாணவர்களும் ஆவர். 2006ம் ஆண்டு பரீட்சையில் 9A 6 பேரும், 8A 5 பேரும், 7A 4 பேரும், 6A 10 பேரும், 5A 12 பெரும் பெற்றுள்ளனர். 2007ம் ஆண்டுப் பரீட்சையில் 10A 6 பேரும், 9A 8 பேரும், 8A 13 பேரும், 7A 10 பேரும், 6A 10 பேரும், 5A 10 பெரும் பெற்றுள்ளனர். அவ்வாறே 2006, 2007 ஆகிய ஆண்டுகளில் க.பொ.த உயர்ரப் பீட்சையில் தோற்றியோர் முறையே 331ம், 283ம் ஆகும். இவர்களில் பல்கலைக் கழக அனுமதிக்கு தகமை பெற்றோர் முறையே 210ம், 167ம் ஆவர். எனினும் வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தோர் 2006ம் ஆண்டில் 43 மாணவர்களும், 2007ம் ஆண்டில் 50 மாணவர்களும் ஆவர். 2007ம் ஆண்டில் இரண்டு மாணவர்கள் மூன்று பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றுள்ளனர். இப் பெறுபேறுகள் ஆசிரியர்களின் கற்பிக்கும் திறனையும், கல்லூரியின் வளர்ச்சியையும் கோடிட்டு காட்டுவதுடன் மாணவர்கள் கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர் என்பதில் நாம் பெருமை கொள்ளலாம். இக் கல்விக்கூடத்தில் கல்வி கற்ற அனேகர் இன்று புகழ்பூத்த கல்விமான்களாகவும், வைத்திய கலாநிதிகளாகவும், பொறியியலாளர்களாகவும், பட்டயக் கணக்காய்வாளர்களாகவும், சட்டத்துறை நீதித்துறையினராகவும், இலக்கியவாதிகளாகவும்,

வர்த்தக முகாமையாளர்களாகவும் இலங்கையிலும், புலம்பெயர் நாடுகளிலும் வாழ்ந்து வருகின்றார்கள்.

கல்லூரி நிர்வாகத்தின் பல்வேறு வளர்ச்சிக் கூறுகளாக கல்லூரியில் பெண்கள் வழிகாட்டிகள் குழு (Girls Guides) 1952ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. ஆசிரியைகள் செல்வி. ஞானபாக்கியம் ஞானசுந்தரம் (திருமதி ஞா. பாலசுப்பிரமணியம்), செல்வி. எம். தம்பு ஆகியோர் அதன் வழிநடத்துனர்களாக இருந்து வந்தனர். பின்னர் செல்வி நாகேஸ்வரி விஜயரட்ணம் (திருமதி நா. துரைசிங்கம்), திருமதி. எஸ் ஏகாம்பரம், செல்வி நித்தியலட்சுமி நாகலிங்கம் (திருமதி நி. குணபாலசிங்கம்), செல்வி கனாகாம்பிகை மயில்வாகனம் (திருமதி க. திருநாவுக்கரசு), செல்வி மனோரமா, திருமதி சி. குணரட்ணம் ஆகியோர் வழிநடத்திச் சென்றனர். இன்றும் இது இயங்கிவருகின்றது. திரு. அ. பஞ்சலிங்கம் அதிபராக இருந்தபோது திருமதி. நவரட்ணத்தினால் ஆரம்பிக்கப்பட்ட Girls Band Group ஆனது செல்வி பாலசுப்பிரமணியத்தினால் பயிற்றுவிக்கப்பட்டு ஆசிரியை திருமதி சி. குணரட்ணம் அவர்களால் வழிநடத்தப்பட்டு வந்தது. இன்று திருமதி புனிதவதி மகேஸ்வரன் இதனை வழிநடத்திச் செல்கின்றார். அத்துடன் திரு இ. மகேந்திரன் அதிபராக இருந்தபோது ஆரம்பிக்கப்பட்ட Boys Band Group திரு. அமலதாசினால் பயிற்றுவிக்கப்பட்டு வழிநடத்தப்பட்டது. இன்று இவ்விரு குழுக்களும் சிறப்பாக செயற்பட்டு வருகின்றன.

கல்லூரியில் இடம்பெற்ற சில வரலாற்று நிகழ்வுகள் :-

1948ல் அண்ணல் மகாத்மா காந்தியின் அஸ்தி அடங்கிய பேழை கீரிமலையில் சங்கமமாக்க எடுத்துச் சென்ற சமயம் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படுமென பாரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன. ஆனால் ஊர்வலம் பூநாறிமரத்தடியை வந்தடைந்ததும் கல்லூரிக்கு எடுத்துச் செல்லாமல் ஊர்வலத்தைத் தொடர ஏற்பாட்டாளர்கள் முடிவு செய்தனர். இதனை அறிந்த ஆசிரியர் சபாலிங்கம் அவர்கள் மாணவர்கள் அனைவரையும் வீதியின் குறுக்கே விழுந்து படுத்துச் சத்தியாக்கிரகம் செய்யும்படி பணித்து தானும் அஸ்தியை சுமந்து வந்த வாகனத்தின்முன் விழுந்து படுத்துக் கொண்டார். ஊர்வலம் தொடர முடியாத நிலையில் ஏற்பாட்டாளர்களால் அண்ணலின் அஸ்தி பள்ளிக்கூட வளாகத்துக்கு எடுத்து வரப்பட்டு மக்களால் அஞ்சலி செய்யப்பட்டது.

1950ம் ஆண்டில் கல்லூரியில் நடைபெற்ற பிரமாண்டமான "லிங்கா லைற்ஸ்" (Linga Lights) கழியாட்ட விழா. இவ்விழாவில் பழம்பெரும் நகைச்சுவை நடிகர் திரு. என். எஸ். கிருஸ்ணன், நகைச்சுவை நடிகை ரி. ஏ. மதுரம், மற்றும் "இசைப்பேரரசி" சூரியகுமாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

1955ம் ஆண்டில் கல்லூரி விழா ஒன்றிற்கு முன்னாள் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல பிரதம விருந்தினராக வந்திருந்தார். அதிபர் ஹன்டி பேரின்பநாயகம் பிரதம விருந்தினரை வரவேற்றுப் பேசும்போது சிங்கள மொழிக்கும், தமிழ் மொழிக்கும் சமஅந்தஸ்து வழங்க அரசியல் அமைப்பில் மாற்றம் கொண்டுவர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். பிரதமரும் அதிபரின் வேண்டுகோளை ஏற்று இலங்கை அரசியல் மாற்றத்துக்கு இணங்கினார். இந் நிகழ்வே தென்னிலங்கை அரசியல்வானில் பூதாகரமாக வெடித்து இன்றைய முடிவுகாணா இனப்பிரச்சினைக்கு அடிகோலிற்றென்பர். (2008ம் ஆண்டு இலங்கையின் சுதந்திரதின விழாவின்போது ஜனாதிபதி திரு. ராஜபக்ஷ உரையாற்றும்போது திரு. ஹன்டி பேரின்பநாயகம் தலைமையில் இயங்கிய யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசே (Jaffna Youth Congress) இலங்கைக்கு முழுமையான சுதந்திரம் வேண்டுமென முதன் முதலாக குரல் கொடுத்ததாக குறிப்பிட்டிருந்தார்)

1987ம் ஆண்டில் இந்திய அமைதி காக்கும் படை என்ற பெயரில் இலங்கைக்கு வந்திருந்த இந்திய இராணுவத்தின் கொடிய தாக்குதலுக்கு கல்விக்கூடம் இலக்காயிற்று. இத்தாக்குதலின்போது புதுக்கோவிலின் வடக்குவீதி நோக்கியிருந்த மாடிக்கட்டிடத்தின் வகுப்பறையில் அகதிகளாகத் தங்கியிருந்தவர்களில் 27 அகதிகள் துடிதுடித்து மடிந்தனர். பின்னர் இவர்களின் சடலங்கள் கல்லூரியின் விளையாட்டு மைதானத்திலேயே அடக்கம் செய்யப்பட்டன. இதில் கல்லூரிக் கட்டிடங்கள், நூல்நிலையம், தளபாடங்கள் யாவும் பாரிய சேதத்திற்கு உள்ளாகின. இத்தகைய நெருக்கடியான சூழ்நிலையிலும் கல்விக்கூடத்தின் சிறந்த பாரம்பரியத்தை பாதுகாத்து நிமிரவைத்த பெருமை அதிபர் திரு. அ. பஞ்சலிங்கத்தையே சாரும்.

இன்று கல்லூரியில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பாண்ட் அணிகள், ஆசிரியர் கழகம், தமிழ் மன்றம், இந்துமா மன்றம்,

English Union, உயர்தர மாணவர் மன்றம், கணித விஞ்ஞான மன்றம், விவசாய விஞ்ஞான மன்றம், வணிக மன்றம், சித்திரக் கலா மன்றம், சேவைக்கழகம், இன்றரக்ட் கழகம், ஆண்கள் - பெண்களுக்கான சாரணியம், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு, சதுரங்கக் கழகம் என்பனவும் ஆசிரியர்களின் சிறந்த வழிகாட்டுதல்களின் கீழ் இயங்கி வருகின்றன.

பழைய மாணவர் சங்கங்கள்:

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் பழையமாணவர் சங்க கிளைகள் இருந்து அதன் வளர்ச்சிப் பாதைக்கு உதவிய போதும் 1990ன் பின் பிரித்தானியா, கனடா, ஜேர்மன், அவுஸ்திரேலியா, நோர்வே ஆகிய நாடுகளில் கிளைகள் ஆரம்பிக்கப்பட்டபின் கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் அளவிடமுடியா முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. குறிப்பாக இக் கிளைகள் பொருளாதார வசதியற்ற மாணவர்களுக்கான புலமைப் பரிசுத் திட்டங்களையும், நவீன காலத் தேவைக்கேற்ப கணனி அறிவை மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் பொருட்டு கணனி வசதிகளையும் செய்து கொடுத்திருப்பதுடன் விளையாட்டு மைதானத்தை விருத்தி செய்யும் பொருட்டு கல்லூரியைச் சுற்றிவர உள்ள காணிகளை கொள்வனவு செய்யவும், கல்லூரிக்கு ஓர் கேட்போர் கூடத்தை அமைக்கவும் பெருமளவில் நிதியுதவிகளைச் செய்துள்ளதுடன் தொடர்ந்து செய்தும் வருகின்றன. சுவிற்சலாந்து நாட்டில் பழைய மாணவர் சங்கம் இல்லாதபோதும் அங்கு வாழும் பழைய மாணவர்களும் கல்லூரியின் வளர்ச்சிக்கு நிதியுதவி செய்துள்ளனர். இவர்கள் சுவிற்சலாந்து பழைய மாணவர் சங்க கிளையை அமைத்து கல்லூரியின் வளர்ச்சிக்கு தொடர்ந்து உதவுவார்களென நம்புவோம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை கல்லூரியின் பெருமைக்குரியவர்களாக விளங்கிய திரு ஹன்டி பேரின்பநாயகம் அவர்களினதும், திரு சி. கே. கந்தசாமி அவர்களினதும் பிரியாவிடை வைபவங்களை வெவ்வேறு ஆண்டுகளில் நடாத்தி இருந்தன. அவ்வேளையில் இப்பெருமக்கள் இருவருக்கும் அவர்களது நண்பர்களினாலும், அவர்களின்மேல் பாசம் உள்ளவர்களினாலும், பிரபல முன்னாள் மாணவர்களினாலும் வழங்கப்பட்ட பிரிவு உபசாரப் பேருரைகள் அடங்கிய புத்தகங்கள்

(Brochure of Valedictory Tributes) வழங்கிக் கௌரவித்துள்ளது. மேலும் இக்கிளைச் சங்கத்தின் பொன்விழாவின்போது ஓர் அழகிய ஞாபகார்த்த மலர் வெளியிடப் பட்டது. அத்தினம் தென்னிந்திய நடிகைகளான பானுப்பிரியாவும், ஸ்ரீவித்தியாவும், கவிப்பேரரசு வைரமுத்து அவர்களும் வருகைதந்து விழாவை கௌரவித்திருந்தனர். 2004ம் ஆண்டு சங்கத்தின் வைரவிழாவை நினைவு கூருமுகமாக கல்லூரியின் பழைய மாணவர் செ. இரத்தினப்பிரகாசம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட "கொக்குவில் இந்துக் கல்லூரியின் கதை" என்னும் ஒரு நூலும் வெளியிடப்பட்டது.

செந்தமிழ், ஆங்கிலம், செழுங்கலை, விஞ்ஞானம் தேர்ந்து பயிற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் கொடி பட்டொளி வீசிப் பறக்க

"மிக்கு உயர் கலைகள் யாவும் மாணவர்க்கு உவந்தளித்துத்
தக்கவராக்கி வாழ்வில் தகமைபெற நல்கும் எங்கள்
கொக்குவில் இந்து நீதான் குறைதவிர்ந்து ஓங்கி வாழ்க
எக்குல மலையுந் தாழ எழுந்திடும் இமயம் போன்றே"

வளர்க என்று வாழ்த்துவோம்.

பாடசாலை விளையாட்டுத்துறையும் அரிய சாதனைகளும்

கொக்குவில் இந்து ஆங்கிலப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அதற்கென விளையாட்டு மைதானம் இருக்கவில்லை. மாணவர்கள் கோயில் வீதியிலேயே விளையாடி வந்தனர். ஆரம்பத்தில் பாடசாலையின் வளர்ச்சி கல்வித்துறை சார்ந்திருந்ததன்றி விளையாட்டுத்துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. காரணம் மாணவர்களுக்கு வகுப்பறைகளை ஏற்படுத்தி பாடநெறிகளை போதிப்பதே முதல் நோக்கமாக இருந்ததுடன் அதற்கான தேவைகளை நிறைவேற்ற வேண்டிய அவசிய தேவையும் இருந்தது என்றே கூறவேண்டும். தேகப்பயிற்சி (Drill) மற்றும் கரப்பந்தாட்டம் (Volley Ball), பூப்பந்தாட்டம் (Badminton) ஆகிய விளையாட்டுக்களும் புதுக்கோயில் வீதியிலேயே நடந்து வந்தன.

பாடசாலையின் படிப்படியான வளர்ச்சியின் பின் பாடசாலைக்கு

ஒரு விளையாட்டு மைதானம் வேண்டும் என்ற நோக்கில் அப்போது அதிபராக இருந்த திரு மு. கார்த்திகேசு அவர்கள் கொக்குவில் கலட்டியில், இந்துக் கல்லூரி சபைக்கு சொந்தமான பனைகள் நிறைந்த காணியின் ஒருபகுதியை குத்தகைக்கு எடுத்து விளையாட்டு மைதானம் ஒன்றை அமைத்தார். இம் மைதானத்திலேயே முதன் முதலாக 04-07-1941ல் இல்லங்களுக்கு இடையேயான மெய்வல்லுனர் போட்டிகள் நடைபெற்றன. இவ் இல்ல விளையாட்டுப் போட்டியில் கல்லூரியின் ஸ்தாபகரின் ஞாபகார்த்தமாக "செல்லையா இல்லம்" என்றும், இப் பாடசாலையை ஸ்தாபிப்பதற்கு முன்னின்று உழைத்த இந்துக் கல்லூரி சபையின் அங்கத்தவர்களான கொக்குவிலைச் சேர்ந்த சபாரத்தின முதலியாரினதும், தலையாழியைச் சேர்ந்த திரு. சபாபதி அவர்களினதும் ஞாபகார்த்தமாக "சபாரத்தினம் இல்லம்" என்றும் "சபாபதி இல்லம்" என்றும் இல்லங்களுக்குப் பெயர் சூட்டப்பட்டன. விளையாட்டுத்துறைக்குத் தலைவர் (Sports Captain) தெரிவு செய்யும் முறை ஆரம்பிக்கப்பட்டு முதலாவது விளையாட்டுத்துறைத் தலைவராக திரு. சு. நாகலிங்கம் இரகசிய வாக்கெடுப்புமூலம் தெரிவு செய்யப்பட்டார். இப் போட்டிகள் யாவும் சிரேஸ்ட, இடைநிலை, கனிஸ்ட (Senior, Intermediate, Junior) என மூன்று பிரிவுகளாக நடாத்தப்பட்டது. திரு. சு. நாகலிங்கம் (செல்லையா இல்லம்) Senior Champion ஆகவும், திரு. ஆர். நவரத்தினம் (செல்லையா இல்லம்) Intermediate Champion ஆகவும்: திரு. எஸ். சோமசேகரம் (சபாரத்தினம் இல்லம்) Junior Champion ஆகவும் வந்தனர். இவ் ஆண்டின் (1941ம்) பிற்பகுதியில் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும், காரைநகர் இந்துக் கல்லூரிக்கும் இடையே யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் திரு. சு. நாகலிங்கம் தலமையிலான கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 3:1 என்ற கோல் வித்தியாசத்தில் காரைநகர் இந்துக் கல்லூரியை வென்றது. இவ் உதைபந்தாட்ட அணியில் திரு. சு. நாகலிங்கம், திரு. A. நவரத்தினம், திரு. V. தேவராசா, திரு. M. நவரத்தினம், திரு. K. தர்மலிங்கம், திரு. S. அருட்பிரகாசம், திரு. K. செல்லையா, திரு. K. இராமலிங்கம் மற்றும் மூவர் இடம் பெற்றிருந்தனர். இப் போட்டியே கொக்குவில் இந்துக் கல்லூரி இன்னுமொரு கல்லூரியுடன் விளையாடிய முதலாவது உதைபந்தாட்டப் போட்டியும் ஆகும்.

1941ம் ஆண்டு என்பது கொக்குவில் இந்துக் கல்லூரி விளையாட்டுத்துறையின் மகத்தான ஆரம்ப காலம் என்பதுடன், திரு.

மு. கார்த்திகேசு அவர்களே கல்லூரிக்கான முதல் விளையாட்டு மைதானத்தையும், முதன் முதலில் விளையாட்டுத்துறைத் தலைவர், வயதுப் பிரிவுகள் என்பவற்றை ஏற்படுத்தியதுடன் இல்லங்களுக்கு இடையேயான மெய்வல்லுனர் போட்டிகளையும், கல்லூரிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டியிலும் பங்குபற்றச் செய்தார் என்ற வகையிலும் கொக்குவில் இந்துக் கல்லூரி விளையாட்டுத்துறையின் தந்தை என்று கூறுவதில் நாம் பெருமை கொள்ளலாம்.

திரு V. நாகலிங்கம் அதிபராக இருந்தபோது 1946ம் ஆண்டில் புதுக்கோவிலுக்கு வடக்காக இருந்த ஏறத்தாழ 47 பரப்பளவு கொண்ட (2.5 ஏக்கர்) நிலம் கொள்வனவு செய்யப்பட்டது. இவரை கௌரவப்படுத்தி இன்று இருக்கும் கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கு "நாகலிங்கம் விளையாட்டுமைதானம்" என பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டு வருகின்றது. இதனை கொள்வனவு செய்வதற்குத் தேவைப்பட்ட பணத்தில் (ரூபா 40,000) ஒரு பகுதியாகிய ரூபா 16,000ஐ கல்லூரி ஆசிரியர்களினால் உருவாக்கப்பட்ட கலைநிகழ்ச்சிக்குழு தன் கடின உழைப்பினால் பழைய மாணவர் சங்கக் கொழும்புக்கிளையின் ஒத்துழைப்புடன் செய்த இரு கலை நிகழ்ச்சிகள் மூலம் திரட்டிக் கொடுத்தது. இதில் திருமதி சரஸ்வதி பாக்கியராசா அவர்களினதும், பழையமாணவர் திரு. எஸ். ஞானசேகரம் அவர்களினதும் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. பின்னர் திரு. ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள் 1950ல் "லிங்கா லைட்ஸ்" என்னும் பெரும் களியாட்ட விழாவை ஏற்பாடு செய்தார். இவ் விழாவில் அப்போது இந்திய சினிமா துறையில் பெரும் புகழுடன் இருந்த நகைச்சுவை நடிகர் திரு. என். எஸ் கிருஸ்ணன், நகைச்சுவை நடிகை ரி.ஏ. மதுரம் ஆகியோரும், "இசைப்பேரரசி" சூரியகுமாரியும் கலந்து சிறப்பித்திருந்தனர். இவ்விழா நடைபெற்றபோது இத்திடலைக் கொள்வனவு செய்த திரு V. நாகலிங்கம் அவர்கள் உயிருடன் இல்லை என்பது மிகவும் வேதனைக்குரியதாகும்.

கல்லூரிக்குச் சொந்தமான இவ் விளையாட்டு மைதானத்தில் முதன் முதலாக 1951ம் ஆண்டில் இல்ல விளையாட்டுப்போட்டி நடைபெற்றது. 1946ம் ஆண்டில் கல்லூரியின் விளையாட்டுத்துறை ஆசிரியராக காலம் சென்ற திரு. A. பரமானந்தம் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார். 1960ம் ஆண்டு இறைவனடி சேரும்வரை கல்லூரியின் விளையாட்டுத்துறைக்குப் பெரும் பங்காற்றினார். இவரது மாணவனும், சிறந்த உதைபந்தாட்ட வீரனும் பின்னர் கல்லூரியின் விளையாட்டுத்துறை ஆசிரியராகவும், வடமாகாண

கல்வி இலாகாவில் விளையாட்டுத்துறை பரிசோதகராகவும் இருந்த திரு. V. கணேசலிங்கம் இவர்பற்றிக் கூறுகையில் "அமைதியே உருவானவர், சிறந்த அனுபவசாலி, உளவியல் மற்றும் உலக அறிவியல் நிறம்பப் பெற்றவர், விளையாட்டு ஆசிரியர் மட்டும் அல்லாது மிக இக்கட்டான சந்தர்ப்பங்களில் சிறந்த அறிவுரைகளை கூறுகின்ற ஒருவர், அவர் கல்லூரியில் கடமையாற்றியமையானது உண்மையிலேயே 'கொக்குவில் இந்துக் கல்லூரி கொடுத்துவைத்தது" எனக் குறிப்பிட்டுள்ளார். கல்லூரியின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்களாக அன்றிலிருந்து இன்றுவரை திரு. A. பரமானந்தம், திரு. C. பாலகிருஸ்ணன், திரு. V. கணேசலிங்கம், திரு. R. மகேந்திரன், திரு. T. வில்வராஜா, திரு. T. புவனசுந்தரராஜா, திரு. T. ஸ்ரீபற்குணம், திரு. T. தேவராஜா ஆகியோர் கடமையாற்றி உள்ளனர். இன்று திரு . S. உமாசுதன் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளராகக் கடமையாற்றி வருகிறார்.

தடகளம் (**Athletics**)

கல்லூரியின் விளையாட்டுத்துறையிலே தடகளத்தை நோக்குவோமாயின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளில் கடந்த பல வருடங்களாக பல புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டு வருவது கல்லூரியின் பதிவுகளில் காணக்கூடியதாக உள்ளது. இது தடகள (மெய்வல்லுனர்) துறையில் கல்லூரி மாணவர்களின் திறமைகள் மேம்பட்டு வருவதனை துல்லியமாகக் காட்டி நிற்கின்றது. தடகள விளையாட்டுத்துறையில் ஆரம்ப காலத்திலிருந்து இன்றுவரை பல வீரர்கள் யாழ் பாடசாலைகள் மட்டத்திலும், அகில இலங்கை ரீதியிலும் பலசாதனைகள் புரிந்து விருதுகளைப் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள். அந்த வகையில் 1950ல் காலம் சென்ற திரு. R. துரைசிங்கம், திரு. S. லட்சுமணன், திரு. P. இராஜரெட்ணம், திரு. S. வேல்தாசன் ஆகியோரும் 1970களில் திரு. P. விஜயராஜா நீளம் பாய்தலிலும், 1973ல் திரு. நா. ரஞ்ஜித்குமார் ஈட்டி எறிதலிலும் அகில இலங்கைப் பாடசாலைகள் மட்டத்திலும், யாழ் பாடசாலைகள் மட்டத்திலும் முதலிடத்தைப் பெற்றனர். யாழ் பாடசாலைகளுக்கு இடையேயான தடகள போட்டிகளில் திரு. S. சுவெந்திரராஜா, திரு. S. ஜெயராஜா, திரு. S. சோதிராஜா ஆகியோரும், 1960 மற்றும் 1970 களில் திரு. R. சண்முகராஜா, திரு. k. ரெட்ணசிங்கம், திரு. ந. இராஜகுலசிங்கம் திரு. A. மகாலிங்கம், திரு. V. பவானந்தன், திரு. கே. சிவராசா, திரு. ந. ரவிச்சந்திரன், திரு. நா. பாலகுமார், திரு. அ. முரளிதரன், திரு. அ. தயாபரன்,

திரு. அ. ரவிகரன், திரு. எஸ் கேதீஸ்வரன், திரு. அ. அருணன் ஆகியோரும், பெண்கள் பிரிவில் S. சரஸ்வதி, K. தனலட்சுமி, S. ரபீந்திரா, S. ரமா, ….. ஆகியோரும் விருதுகள் வென்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். 1973ம் ஆண்டில் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையேயான தடகளப் போட்டியில் 16 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் ஈட்டி எறிதலில் திரு. நாகலிங்கம் ரஞ்ஜித்குமார் புதிய சாதனை படைத்தார். அதேபோட்டியில் திரு நடராசா ரவிச்சந்திரன் மூன்றாம் இடம் பெற்றுக் கல்லூரிக்கும் தமக்கும் பெருமை சேர்த்தனர். அகில இலங்கைப் பாடசாலைகள் மட்டத்தில் திரு. K. சிவராஜாவும் பங்குபற்றியிருந்தார். 1975ம் ஆண்டு யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கு இடையேயான தடகள போட்டிகளில் 17 வயதுக்கு உட்பட்ட பிரிவில் ஈட்டி எறிதலில் நாகலிங்கம் பாலகுமார் 149’ 8.5” தூரம் எறிந்து புதிய சாதனை படைத்தார். திரு. நா. ரஞ்ஜித்குமார், திரு. நா. பாலகுமார் அகியோரும் கல்லூரியின் உதைபந்தாட்டம், துடுப்பாட்டம் ஆகிய அணிகளை தலைமைதாங்கி (Captain) நடத்திச் சென்ற திரு. நா. விஜயகுமாரும் கல்லூரியின் முதலாவது விளையாட்டுத்துறைத் தலைவராக இருந்த திரு. சுப்பையா நாகலிங்கம் அவர்களின் புதல்வர்களாவர்.

உதைபந்தாட்டம் (**Football or Soccer**)

முதலாம் பிரிவு (**1st Eleven**)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் விளையாட்டுத்துறை வரலாற்றில் கல்லூரிக்குப் பெரும் புகழை வாங்கிக் கொடுத்த விளையாட்டு உதைபந்தாட்டம் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. கொக்குவில் இந்துக் கல்லூரியானது 1941ல் கல்லூரிகளுக்கு இடையேயான தனது முதலாவது போட்டியில் காரைநகர் இந்துக் கல்லூரியை வென்று தன் வெற்றிப்பாதைக்கு வழிவகுத்துக் கொண்டது. 1934ம் ஆண்டிலிருந்து யாழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினால் யாழ் பாடசாலைகளுக்கு இடையே 19 வயதுக்கு உட்பட்ட 1ம் பிரிவுக்கான உதைபந்தாட்டப் போட்டி நடாத்தப்பட்டு வந்தது. கொக்குவில் இந்துக் கல்லூரி, கல்லூரிகளுக்கு இடையேயான போட்டிகளில் சிறப்பாக விளையாடி வந்த போதும் 1947ம் ஆண்டிலேயே முதன் முதலாக யாழ் பாடசாலைகளுக்கு இடையேயான சுற்றுப் போட்டியில் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. பின்னர் 1948, 1952, 1957, 1967, 1970, 1975 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சுற்றுப் போட்டிகளில் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது. 1955ம் ஆண்டிலும்

1980ம் ஆண்டிலும், 1982ம் ஆண்டிலும் அரை இறுதிப் போட்டிவரை முன்னேறி இருந்தது. 1947ம் ஆண்டுக்குப் பின் 1952, 1975ஆகி ஆண்டுகளில் சம்பியனாகவும், 1948, 1967, 1970 ஆகிய ஆண்டுகளில் இணைச் சம்பியனாகவும் வந்தது. 1967ம் ஆண்டிலிருந்து 1975ம் ஆண்டுவரை கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் மகாஜனா கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டிகள் யாவும் விறுவிறுப்பாகவும் போட்டி நிறைந்ததாகவும், பார்வையாளர்களை ஆவேசம் கொள்ள வைப்பதாகவும் இருந்தன. இவ் இரு கல்லூரிகளுக்கும் இடையே போட்டிகள் நடைபெறும்போது யாழ் துரையப்பா விளையாட்டரங்கு பார்வையாளர்களால் நிரம்பி வழிவதை காணக்கூடியதாக இருந்தது.

1948ம் ஆண்டு கல்லூரியின் அணிக்காக திரு. இராஜரெட்ணம், திரு. V. சண்முகராஜா, திரு. ஸ்ரீதரன், திரு. R. துரைசிங்கம், திரு. லட்சுமணன், திரு. செல்லையா கண்ணுத்துரை, திரு. சுந்தரராமலிங்கம், திரு. குமாரசாமி, திரு. முருகையா ஆகியோருடன் மேலும் பல வீரர்கள் இடம் பெற்றிருந்தனர். இவ் ஆண்டில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரியைச் சந்தித்தது. போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்ததால் இவ்வாண்டில் கொக்குவில் இந்துக் கல்லூரியும், யாழ் இந்துக் கல்லூரியும் இணைச் சம்பியனாகின.

1952ம் ஆண்டு கல்லூரியின் அணிக்காக திரு. கந்தையா சிவலிங்கம் தலைமையில் திரு. சுப்பிரமணியம், திரு. சிவசம்பு சிவனேசன், திரு. விக்னேஸ்வரா, திரு. வேல்தாசன், திரு. சோமசுந்தரம் கந்தசாமி, திரு. எஸ். பாலசுப்பிரமணியம், திரு. பொன்னம்பலம், திரு. நடராஜபிள்ளை, திரு. நாகலிங்கம் இராமநாதன் ஆகியோருடன் மேலும் பல வீரர்கள் இடம் பெற்றிருந்தனர்.1955ம் ஆண்டு கல்லூரியின் அணிக்காக திரு. பாலசுப்பிரமணியம் தலைமையில் திரு. V. கனேசலிங்கம், திரு. நடராசா, திரு. குமாரசாமி, திரு. சிவராசா, திரு. நடராஜா, திரு. வேலாயுதபிள்ளை, ஆகியோருடன் மேலும் பல வீரர்கள் இடம் பெற்றிருந்தனர். இவ் அணியானது அரையிறுதிப் போட்டிவரை முன்னேறியிருந்தது.

1957ம் ஆண்டு கல்லூரியின் அணிக்காக திரு. V. கணேசலிங்கம், திரு. இராமச்சந்திரா ஸ்ரீநிவாசன், திரு. சிவராஜா, திரு. A. சண்முகநாதன், திரு. தாமோதரம்பிள்ளை இராஜசிங்கம் ஆகியோருடன் மேலும் பல வீரர்கள் இடம் பெற்றிருந்தனர். இவ் ஆண்டு நடைபெற்ற இறுதிப் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரியுடன் மோதிய போதும் ரசிகர்களால் ஏற்பட்ட குழப்பம் காரணமாக போட்டி

ரத்துச் செய்யப்பட்டது. கல்லூரியின் அணிக்கு, 70 களில் கல்லூரியின் விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியராக இருந்து பல சிறந்த உதைபந்தாட்ட வீரர்களை உருவாக்கியவரும், பின்னர் வடபிராந்திய கல்வி இலாகாவில் விளையாட்டுத்துறை அதிகாரியாகவும் கடமை புரிந்த திரு. V. கணேசலிங்கம் தலைமை தாங்கினார். இந் நிகழ்வின் பின்னர் 1958ம் ஆண்டிலிருந்து 1962ம் ஆண்டுவரை யாழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினால் நடத்தப்பட்ட சுற்றுப் போட்டிகளில் கல்லூரி அணி கலந்து கொள்ளவில்லை.

1967ம் ஆண்டு நடைபெற்ற இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி தெல்லிப்பளை மகாஜனா கல்லூரியுடன் மோதியது. கொக்குவில் இந்துக் கல்லூரி அணியில் திரு. ப. சுந்தரானந்தா (தலைவர்), திரு. நமசிவாயம் மகேந்திரன் (உ.தலைவர்), திரு. தி. பாலசுந்தரம் (பந்துக்காப்பாளர்), திரு. A. ஸ்ரீஸ்கந்தராஜா, திரு. P. விஜயராஜா, திரு. N. ஸ்ரீகாந்தன், திரு. P. சத்தியநாதன், திரு. K. தனபாலசிங்கம், திரு. P. யோகலிங்கம், திரு. A. சுதந்திரன், திரு. N. சந்திரமோகன், திரு. R. செல்வராஜா, திரு. S. பவானந்தன் திரு. இ. இராசேந்திரம் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இறுதிப் போட்டியில் சமனிலை பெற்று இரு அணிகளும் இணைச் சம்பியனாகின.

1970ம் ஆண்டு நடைபெற்ற இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியை சந்தித்தது. ஆட்டம் ஆரம்பமாகி மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண்டு இருந்தது. முன்பாதி நேரத்தில் மகாஜனாக் கல்லூரி 1 கோல் போட்டு முன்னிலை வகித்தது. இடைவேளையின் பின் போட்டி ஆரம்பமாகி இரு தரப்பினரும் வேகம் கொண்டு விளையாடிக் கொண்டு இருந்தனர். பார்வையாளர்களது இருதயத் துடிப்பும் ஆதிகரிக்க அவர்களது ஆவேசக் கத்தல்களும் அதிகரித்து விண்ணைப் பிளந்து கொண்டு இருந்தது. போட்டி முடியும் நேரம் நெருங்கிக் கொண்டு வந்தது. ஒவ்வொரு நிமிடங்களாக கரைய கரைய கொக்குவில் இந்துக் கல்லூரி ரசிகர்கள் தங்கள் அணி தோல்வியுறுவதை தாங்க முடியாது துயரம் உள்ளத்தை வாட்ட கலங்கிய கண்களுடனும், கனத்த மனதுடனும் யாழ் துரையப்பா விளையாட்டரங்கை விட்டு வெளியேறத் தொடங்கினர். போட்டியின் இறுதி நிமிடம், ஆழியின் நடுவே மையம் கொண்ட புயலொன்று தரைதனை தாக்க புறப்பட்டது போல் மைதானத்தின் நடவே இருந்து சந்திரநாதன் என பெயர் கொண்டு புறப்பட்ட புயலானது தான் ஓடிச்சென்ற வேகத்திலே (on the run kick) எதிர் வந்த பந்தை உதைத்தது. உதைப்பால் விசை

கொண்ட பந்தானது துப்பாக்கியில் இருந்து புறப்பட்ட சன்னம்போல் கண்ணிமைக்கும் நேரத்தில் எதிரணியின் பந்துக் காப்பகத்தினுள் ஊடுருவிச் சென்றது. எதிரணியின் பந்துக்காப்பாளர் திகைத்து நிற்க, எதிரணி வீரர்கள் மலைத்து நிற்க, எதிரணியின் ரசிகர்களின் கூச்சலும், கும்மாளமும் மெதுமெதுவாக அடங்கியே உயிர் பிரிந்த உடல்போல் ஆகினர். செய்தி கேட்ட கொக்குவில் ரசிகர்கள் சந்தோஷ மிகுதியால் “இந்து இந்து கொக்குவில் இந்து” என்று சத்தமிட்டவாறு மீண்டும் மைதானத்தை நோக்கி ஓடிவர, போட்டி நடுவரும் போட்டி நிறைவுற்றதாக அறிவிக்க 1:1 என்ற நிலையில் போட்டி சமநிலையில் நிறைவுற்றது. கொக்குவில் இந்துக் கல்லூரி அணியில் திரு. ந. இராஜகுலசிங்கம் (தலைவர்), திரு. கைலாசபிள்ளை கருணாகரன் (உ. தலைவர்), திரு. K. இரத்தினசிங்கம், திரு. சீவரத்தினம் பவானந்தன், திரு. மு. சிவனேஸ்வரன், திரு. பரமானந்தம் தனஞ்சயன், திரு. வீரசிங்கம் புவனேசன், திரு. கைலாசபிள்ளை மனோகரன், திரு. சண்முகநாதன் சரவணபவான், திரு. பொன்னுத்துரை சந்திரநாதன், திரு. T. ஸ்ரீகாந்தன் (பந்துக்காப்பாளர்), திரு. R. பரராஜசிங்கம், திரு. S. சிவபாதசுந்தரம் ஆகியோர் இடம்பெற்று இருந்தனர். இவ் அணிக்கு திரு. இ. மகேந்திரன் பயிற்சியாளராக இருந்து வீரர்களுக்கு உந்து சக்தியாக இருந்தார் என்பது மிகையாகா. இவ் அணியானது இலங்கைத் தேசிய அணியில் விளையாடும் திரு. பிரான்சிஸ், திரு. கொன்சலஸ் ஆகிய வீரர்களை கொண்ட சென் பற்றிக் கல்லூரியுடன் ஓர் சினேகபூர்வ போட்டியில் சென்பற்றிக்ஸ் மைதானத்தில் விளையாடியது. இதனை சிங்கத்தின் குகையில் சிங்கத்துடன் முயல் பொருதுவது போன்றதென்றே கூறலாம். ஆயினும் திரு. கைலாசபிள்ளை மனோகரன் அடித்த கோல் முயலும் சிங்கத்தை வெல்லும் என காட்டியது. இப்போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி 1:0 என்ற கோல் எண்ணிக்கையில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியை வென்றது. இவ்வாண்டில் இந்த அணியானது எவராலும் வெல்ல முடியாத அணியாகவும் திகழ்ந்தது.

1971ம் ஆண்டு தை மாதத்தில் அகில இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கத்தினால் பிராந்தியப் பாடசாலைகளுக்கு இடையேயான சுற்றுப் போட்டி யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் நடாத்தப்பட்டது. இலங்கையின் பிரபல்யம் வாய்ந்த அனைத்துப் பாடசாலை அணிகளும் எல்லா பிராந்தியங்களில் இருந்தும் பங்குபற்றி இருந்தன. இப் போட்டியானது 20 வயது எல்லை கொண்டதாக இருந்தது. முதற் சுற்றில் திருகோணமலை சென்ஜோசெப் கல்லூரி அணியை வென்ற கல்லூரி அணியானது

இரண்டாம் சுற்றில் நாவலப்பிட்டி சென் மேரிஸ் அணியை வெற்றி கொண்டு இறுதிப் போட்டியில் மகாஜெனா கல்லூரி அணியுடன் மோதிக் கொண்டது. கொக்குவில் இந்துக் கல்லூரியின் 19 வயது எல்லை கொண்ட 1970ம் ஆண்டு அணியே இதில் மோதியபோதும், மகாஜனா கல்லூரி அணி 20வயது எல்லை கொண்ட முன்னாள் வீரர்களையும் அணியில் இணைத்து களத்தில் இறங்கியது. இவ் இறுதிப் போட்டியில் 3:0 என்ற அடிப்படையில் மகாஜன கல்லூரி வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொள்ள கொக்குவில் இந்துக் கல்லூரி இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டது. இதன் மூலம் அகில இலங்கைரீதியில் யாழ்ப்பாண அணிகளான மகாஜனா அணியும், கொக்குவில் இந்து அணியும் பலம்வாய்ந்த அணிகளாக விளங்கின என்பதில் நாம் பெருமை கொள்ளலாம்.

1975ம் ஆண்டு நடைபெற்ற போட்டிகளில் கல்லூரியின் உதைபந்தாட்டஅணி எல்லாப் போட்டிகளிலும் வெற்றி பெற்று ஏனைய பாடசாலை அணிகளினால் வெற்றிகொள்ள முடியாத அணியாக திகழ்ந்தது. இக் குழுவிற்கு பயிற்சியாளராக திரு. V. கணேசலிங்கம் இருந்தார். வீரர்கள்மீது அவர் வைத்திருந்த நம்பிக்கையும், அவர்மீது வீரர்கள் வைத்திருந்த நம்பிக்கையும் இவ் வெற்றிவாகைக்கு வழிகோலின என்றால் மிகையாகாது. மேலும் அனைத்து வீரர்களின் திறமைகளையும், குறைகளையும் இனம் கண்டு தகுந்த பயிற்ச்சிகளை அளிக்கக் கூடிய தகைமை ஆசிரியரிடம் இருந்ததுடன், வீரர்கள் ஆசிரியரிடம் தோழமையுடன் பழகக்கூடியதாகவும் இருந்ததும் மற்றொரு காரணமாகும். இக்குழுவில் திரு. கே. சிவராசா, திரு. அப்புத்துரை பாலசுப்பிரமணியம் (தலைவர்), திரு. அருள்பிரகாசம் பிரபாகரன் (பந்துக்காப்பாளர்), திரு. இரத்தினசோதி, திரு. நடராசா ரவிச்சந்திரன், திரு. நடராசா ரவிமோகன், திரு. நாகநாதன் செல்வநாதன், திரு. நாகலிங்கம் பாலகுமார், திரு. நாகலிங்கம் தெய்வேந்திரன், திரு. அப்புத்துரை கைலேஸ்வரன், திரு. நல்லையா சிவானந்தராசா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இறுதிப் போட்டியில், போட்டி ஆரம்பமாகி 7வது நிமிடத்தில் முதலாவது கோலை நாகலிங்கம் பாலகுமார் போட்டார். இதனைத் தொடர்ந்து போட்டி மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது. இடைவேளைக்குச் சற்று முன்னதாக மகாஜென கல்லூரி கோலைப் போட்டதன்மூலம் போட்டி இன்னமும் உத்வேகம் கொண்டது. போட்டி முடிவடையும் நேரமும் நெருங்கிக்கொண்டே வந்தது. போட்டி முடிவதற்கு ஏறத்தாள பத்து நிமிடங்களுக்கு முன்பாக பந்துக்காப்பகத்திற்கு இடப்புறமாக கிடைத்த தண்டனை உதைப்பை (Foul Kick) சிவராசா உதைக்க மேலெழுந்த பந்து சுற்றிச் சுழன்று வளைந்து பந்துக் காப்பகத்தின்

(Goal Post) வலப்புற மேல்மூலையினூடாக உட்சென்றது. இதன் மூலம் கொக்குவில் இந்துக் கல்லூரி 2:1 என்ற நிலையில் வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

1978ம் ஆண்டு உதைபந்தாட்ட அணியில் திரு. நாகலிங்கம் பாலகுமார் தலைமையில் திரு. நாகலிங்கம் இராஜேந்திரன், திரு. G. ரமேஸ், திரு. ரவீந்திரன், திரு. அருள்பிரகாசம் முரளிதரன், திரு. சங்கரப்பிள்ளை சச்சிதானந்தன், திரு. பொ. பத்மநாதன், திரு. அரசநாயகம் சந்திரகுமார் மற்றும் பல வீரர்கள இடம் பெற்றிருந்தனர்.

1979ம் ஆண்டு உதைபந்தாட்ட அணியில் திரு. நாகலிங்கம் இராஜேந்திரன் திலைமையில் திரு. G. ரமேஸ், திரு. பாலசிங்கம் குகதாஸ், திரு. இராமசாமி லோகன், திரு. சிவகுரு ஹரிமனோகரன், திரு. சங்கரப்பிள்ளை சச்சிதானந்தன், திரு. மாசிலாமணி கிருபானந்தன், திரு. அமிர்தலிங்கம், திரு. சோ. பாஸ்கரன், திரு. சுப்பிரமணியம் முரளிதரன், திரு. சுரேந்திரலிங்கம், திரு. தம்பிராசா சிவபாலன், திரு. சுப்பிரமணியம் சுதாகர், திரு. பாலசுப்பிரமணியம், திரு. T. கிருபாகரமூர்த்தி, திரு. ஜெகதீஸ்வரன், திரு. இராஜேந்திரம் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

1980ம் ஆண்டு உதைபந்தாட்ட அணியில் திரு. சங்கரப்பிள்ளை சச்சிதானந்தன் தலைமையில் திரு. இராமசாமி லோகன், திரு. சிவகுரு ஹரிமனோகரன், திரு. சோ. பாஸ்கரன், திரு. தம்பிராசா சிவபாலன், திரு. பாலசிங்கம் குகதாஸ், திரு. T. கிருபாகரமூர்த்தி, திரு. சண்முகம் அற்புதராசா, திரு. கிருபாகரன், திரு. T. புவனேஸ்வரன், திரு. குமாரசாமி மகேந்திரகுமார், திரு. பத்மசேகரம், திரு. ரவீந்திரன், திரு. ராஜகுலேந்திரன் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இவ் அணியானது மிகவும் பலம் வாய்ந்ததாகவும், வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிக் கொள்ளும் தகமை கொண்டதாக பலராலும் கணிக்கப்பட்டிருந்த போதிலும் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் மேலதிக நேரத்தின் இறுதியில் இடம்பெற்ற அவுட்கிக் தவறாக உதைக்கப்பட அது எதிரணிக்கு ஒரு கோல் போடும் சந்தர்ப்பத்தை வழங்கியது. இதன் காரணமாக அரை இறுதிப் போட்டியில் வெளியேறிய அணி இவ் ஆண்டு மூன்றாம் இடத்தைப் பெற்றது.

1981ம் ஆண்டு உதைபந்தாட்ட அணியில் திரு. தம்பிராசா சிவபாலன் தலைமையில் திரு. T. புவனேஸ்வரன், திரு. குமாரசாமி மகேந்திரகுமார், திரு. இராஜகுலேந்திரன், திரு. அருணாசலம்

பிரபாகரன், திரு. நந்தகுமார், திரு.லோகேந்திரன் நகுலேந்திரன், திரு. நாகநாதன் மனோகரன், திரு. சுந்தரேசசர்மா, திரு. நந்தகுமார் ஆகியோருடன் மற்றும் பல வீரர்கள இடம் பெற்றிருந்தனர். இவ் அணியானது சுற்றுப் போட்டியில் கால் இறுதிவரை முன்னேறியிருந்தது.

1982ம் ஆண்டு உதைபந்தாட்ட அணியில் திரு. T. புவனேஸ்வரன் தலைமையில் திரு. லோகேந்திரன் நகுலேந்திரன், திரு. நாகலிங்கம் விஜயகுமார், திரு. சுகுணகுமார், திரு. பாலகிருஸ்ணன் சிவபாலன், திரு. கைலாசபிள்ளை லாலாகரன், திரு. S. ஹரிசங்கர், திரு. கேதீஸ்வரன், திரு. நாகரெட்னம் நந்தகுமார், திரு. ரமேஸ், திரு. R. நந்தகுமார், திரு. அரவிந்தன் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இவ் அணியானது அரை இறுதிப் போட்டியில் நடேஸ்வரா கல்லூ ரியுடன் மோதியது. நடேஸ்வராக் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வென்றதன் மூலம் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி இறுதிப் போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பை இழந்தது.

1983ம் ஆண்டு உதைபந்தாட்ட அணியில் திரு. லோகேந்திரன் நகுலேந்திரன் தலைமையில் திரு. கைலாசபிள்ளை லாலாகரன், திரு. கேதீஸ்வரன், திரு. நாகலிங்கம் விஜயகுமார், திரு. பாலகிருஸ்ணன் சிவபாலன், நாகரெட்னம நந்தகுமார்,திரு. அருநாசலம் பிரபாகரன், திரு. ஜெயமோகன் ஆகியோருடன் மற்றும் பல வீரர்கள் இடம் பெற்றிருந்தனர்.

1984ம் ஆண்டு உதைபந்தாட்ட அணியில் திரு. நாகலிங்கம் விஜயகுமார் தலைமையில் திரு. குமாரசாமி சதீஸ்குமார், திரு. இராசையா சிவபாலன், திரு. கு. ஜெயரட்னம், திரு. ராஜ்மொகன், திரு. பாலகிருஸ்னன் சிவபாலன், திரு. சுப்பிரமணியம் சசிதரன் ஆகியோருடன் மற்றும் பல வீரர்கள் இடம் பெற்றிருந்தனர்.

முதல் பிரிவுக்கு(**First 11**) தலைமை தாங்கியோர்

திரு. சுப்பையா நாகலிங்கம் (1941), திரு. கந்தையா சிவலிங்கம் (1952), திரு. பாலசுப்பிரமணியம் (1955), திரு.V. கணேசலிங்கம் (1957), திரு. அப்பச்சிப்பிள்ளை கமலநாதன் (1965), திரு. P. சுந்தரானந்தா (1967), திரு. ந. இராஜகுலேந்திரன் (1970), திரு. அப்புத்துரை பாலசுப்பிரமணியம் (1975), திரு. நடராசா ரவிச்சந்திரன் (1976), திரு. நாகலிங்கம் பாலகுமார் (1978), திரு. நாகராசா இராசேந்திரன் (1979), திரு. சங்கரப்பிள்ளை சச்சிதானந்தன் (இம்ரான்) - 1980, திரு. தம்பிராசா சிவபாலன் (1981), திரு. T.

புவனேஸ்வரன் (1982), திரு. லோகேந்திரன் நகுலேந்திரன் (1983), திரு. நாகலிங்கம் விஜயகுமார், திரு. நல்லைநாதன் சத்தியநாதன் (1987)

இரண்டாம் பிரிவு (**2nd Eleven**)

1941ம் ஆண்டிலிருந்து யாழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினால் யாழ் பாடசாலைகளுக்கு இடையே இரண்டாம் பிரிவுக்கான (2nd Eleven) உதைபந்தாட்டப் போட்டி நடாத்தப்பட்டு வந்தது. கொக்குவில் இந்துக் கல்லூரி பலம்வாய்ந்த அணிகளை கொண்டிருந்த போதும் 1951ம் ஆண்டில் மட்டுமே வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

மூன்றாம் பிரிவு **(3rd Eleven)**

1966ம் ஆண்டிலிருந்து யாழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினால் யாழ் பாடசாலைகளுக்கு இடையே மூன்றாம் பிரிவுக்கான (3rd Eleven) உதைபந்தாட்டப் போட்டி நடாத்தப்பட்டு வந்தது. 1968ம் ஆண்டு நடைபெற்ற சுற்றுப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. இவ்வாண்டு கல்லூரி அணியில் திரு. K. மனோகரன் (தலைவர்), திரு.P. தனஞ்சயன் (உபதலைவர்), திரு. N. இராஜகுலேந்திரன், திரு. A. மகாலிங்கம், திரு. K. சிவராஜா, திரு. S. தம்பி, திரு. T. சந்திரகுமார், திரு. S. சிவகுமார், திரு. G. ஆனந்தா, திரு. S. அமிர்தலிங்கம், திரு. S. ஸ்ரீஸ்கந்தராஜா, திரு. N. செல்வகுமார், திரு. P. பரமேஸ்வரன் ஆகியோர் இடம்பெற்று இருந்தனர்.

1974ல் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியானது யாழ் இந்துக் கல்லூரியுடனான சினேகபூர்வ போட்டியில் (யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது) 2:1 என்ற கோல்களால் யாழ் இந்துக் கல்லூரி அணியை வெற்றி கொண்ட போதும், சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் 1:0 என்ற கோல்களால் யாழ் இந்துக் கல்லூரியிடம் தோல்வி உற்றது. இச் சுற்றுப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றது. கல்லூரியின் உதைபந்தாட்ட வரலாற்றில் அதன் உச்ச நிலையாக யாழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்க தெரிவு அணியில் திரு. V. கணேசலிங்கம் அவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியிலிருந்து தெரிவு செய்யப்பட்டு இருந்தார். இவரின் பின் 1968ம் ஆண்டில் இவ்

அணிக்கு திரு. P. விஜயராஜா, திரு. S. பவானந்தன், திரு V. பவசிங் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு இருந்தனர். இவ் யாழ் பாடசாலைகள் அணியின் பிரதி தலைவராக திரு. P. விஜயராஜா விளையாட்டுச் சங்கத்தினால் தெரிவு செய்யப்பட்டு இருந்தார். 1969ம் ஆண்டில் இவ் அணிக்கு திரு. S. பவானந்தன், திரு. N. இராஜகுலசிங்கம், திரு. S. புவனேசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு இருந்தனர். இவ் அணிக்கு உபதலைவராக திரு. S. பவானந்தன் செயற்பட்டார். 1970ம் ஆண்டில் இவ்வணிக்கு திரு. S. பவானந்தன், திரு. K. இரத்தினசிங்கம், திரு. K. கருணாகரன், திரு. K. சிவனேஸ்வரன், திரு. P. சந்திரநாதன், திரு. K. மனோகரன் அகியோர் தெரிவாகினர். யாழ் பாடசாலைகள் அணியின் தலைவராக திரு. S. பவானந்தன் செயற்பட்டார். 1971ம் ஆண்டில் திரு. தே. ஸ்ரீகாந்தன் (பாபு) அகில இலங்கைப் பாடசாலைகள் அணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியிலிருந்து தெரிவு செய்யப்பட்டு இருந்தார். 1977ம் ஆண்டு இந்தியாவில் உள்ள ஆக்ரா எனும் இடத்தில் நடைபெற்ற தெற்காசிய நாடுகள் பாடசாலைகளுக்கு இடையேயான எட்டாவது உதைபந்தாட்டப் போட்டியில் இலங்கைப் பாடசாலைகள் தேசிய அணியில் திரு. நாகலிங்கம் பாலகுமார் தெரிவு செய்யபட்டு இருந்தார். இவர்கள் அனைவரும் கொக்குவில் இந்துக் கல்லூரி உதைபந்தாட்ட வரலாற்றில் கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1968ம் ஆண்டிலிருந்து யாழ்பாடசாலைகள் விளையாட்டுச் சங்க அணியிலும், அகில இலங்கைப் பாடசாலை அணியிலும் விளையாடிய வீரர்களை திரு. V. கணேசலிங்கம், திரு R. மகேந்திரன், திரு. K. சச்சிதானந்தன் (சச்சி மாஸ்ரர்) ஆகியோர் பயிற்சி அழித்தனர் என்பது குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

துடுப்பாட்டம் (**Cricket**)

கொக்குவில் இந்துக் கல்லூரி விளையாட்டுத்துறையில் தடகளம், உதைபந்தாட்டம் என்பவற்றுடன் நின்றுவிடாது முதன் முதலாக 1950ம் ஆண்டில் துடுப்பாட்டத்திலும் கால்பதித்தது. துடுப்பாட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது அதற்கு பயிற்றுவிப்பாளராக காலம் சென்ற ஆசிரியர் திரு. எஸ். சுந்தரசிவம் அவர்கள் கடமையாற்றினார். அவரின் பின் உயிரியல்பாட ஆசிரியராகவும், விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியராகவும் கல்லூரியில் கடமையாற்றிய திரு. C. பாலகிருஷ்ணன் பயிற்றுவிப்பாளராக இருந்தார்.

திரு. C. பாலகிருஷ்ணன் அவர்களின் பயிற்றுவிப்பின்கீழ் கல்லூரியின் துடுப்பாட்ட விளையாட்டுத்துறை படிப்படியாக வளர்ச்சி கண்டு 1960களில் இவ் விளையாட்டுத்துறையில் பிரபல்யம் அடைந்திருந்த ஏனைய பாடசாலைகளுக்கு இணையான தரத்தை அடைந்திருந்தது. இவரின் பின்னர் 1970ம் ஆண்டு நடுப்பகுதியிலிருந்து இவரால் பயிற்றப்பட்டவரும், கல்லூரியின் முன்னாள் விளையாட்டு வீரனும், இவ் விளையாட்டுத் துறையில் யாழ்ப்பாணப் பாடசாலைகளிலே சிறந்த பந்து வீச்சாளராகவும், யாழ் பாடசாலைகள் தெரிவுக்குழுவில் விளையாடி பல சாதனைகள் படைத்தவருமாகிய காலம் சென்ற திரு வீரசிங்கம் பவசிங்கம் (பவசிங்) பயிற்றுவிப்பாளராகக் கடமையாற்றிப் பல சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கினார். இவரின் பின் இவரால் உருவாக்கப்பட்ட கல்லூரியின் பழைய மாணவர்களாகிய திரு. நாகலிங்கம் பாலகுமார், திரு. நாகநாதன் செல்வநாதன், திரு. சுப்பையா உமாசங்கர் ஆகியோர் பயிற்றுவிப்பாளர்களாக இருந்தனர். 1995ல் லண்டனில் இருந்து வருகைதந்திருந்த கல்லூரியின் முன்னாள் விளையாட்டுவீரர் திரு. நாகலிங்கம் ரஞ்ஜித்குமார் புதிய இளம் வீரர்களை உருவாக்கும் பொருட்டு பதின்மூன்று வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு பயிற்சி அளித்தார். அவர்களில் பலர் பின்னாளில் சிறந்த வீரர்களாக விளங்கினர். இன்று பயிற்றுவிப்பாளராக நா. பாலகுமார், சு. உமாசங்கர் ஆகியோரால் பயிற்றப்பட்டவரும் முன்னாள் வீரருமாகிய திரு. கோகுலன் கடமையாற்றி வருகின்றார். இவரின் பயிற்றுவிப்பின் கீழ் இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி துடுப்பாட்டக்குழு யாழ் பாடசாலைகளில் மிகவும் பலம்வாய்ந்த அணியாக திகழ்கின்றது.

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான 2ம் பிரிவிற்கான (Inter Collegiate Second Eleven Cricket Tournment) துடுப்பாட்ட சுற்றுப் போட்டி 1968ம் ஆண்டுவரை நடைபெற்று வந்தது. 1967ம்,1968ம் ஆண்டுகளில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியானது சம்பியனாக வந்தது. 1967ம் ஆண்டில் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரியை 6 இலக்குகளால் வெற்றி கொண்டதுடன், யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் யாழ் மத்திய கல்லூரியை வென்று சம்பியன் ஆகியது. இப்போட்டிகளில் திரு இராஜகுலசிங்கத்தினது துடுப்பாட்டமும், திரு. வீ. பவசிங்கத்தினது பந்துவீச்சும் வெற்றிக்கு வழிவகுத்தன என்றால் மிகையாகாது. இவ் அணியில் திரு மு. தெய்வேந்திரன் (தலைவர்),

திரு. S. பவானந்தன் (உபதலைவர்), திரு. N. இராஜகுலசிங்கம், திரு. K. சாந்தசொரூபன், திரு. T. தர்மகுலேந்திரன், திரு. வீ. பவசிங்கம், திரு. P. விஜயராஜா, திரு. T. சந்திரகௌரீசன், திரு. S. சிவராஜா, திரு. P. சந்திரநாதன், திரு. N. மகேந்திரன், திரு. M. ஜெயகுமார், திரு. P. சிவபாதசுந்தரமஆகியோர் இடம்பெற்றிருந்தனர். 1968ம்ஆண்டு கல்லூரி அணியில் திரு. S. பவானந்தன் (தலைவர்), திரு.. N. இராஜகுலசிங்கம (உபதலைவர்), திரு. P. சந்திரநாதன், திரு. K. கருணாகரன், திரு. P. யோகநாதன், திரு. P. விஜயராஜா, திரு. K. சாந்தசொரூபன், திரு. S. நாகராசா, திரு. S. ரவிவர்மா, திரு. S. சரவணபவான், திரு. T. சந்திரகௌரீசன், திரு. A. மகாலிங்கம், திரு. K. சிவனேஸ்வரன், திரு. M. ஆனந்தகுமார், திரு. S. பரமெஸ்வரன் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

1968ம் ஆண்டு யாழ்பாடசாலைகள் அணிக்குக் கொக்குவில் இந்துக் கல்லூரியிலிருந்து திரு. V. பவசிங்கம், திரு. P. விஜயராஜா, திரு. S. பவானந்தன், திரு. K. சாந்தசொரூபன் தெரிவாகியிருந்ததுடன், திரு. V. பவசிங்கம யாழ்மாவட்ட பாடசாலைகள் அணிக்கும் கொழும்பு மாவட்டப் பாடசாலைகள் அணிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் இரண்டு ஆட்ட நேரங்களிலும் (1st & 2nd Innings) தலா 5 இலக்குகளை வீழ்த்தி யாழ் பாடசாலைகள் தெரிவு அணி வெற்றிகொள்ள வகைசெய்தார்.

2008ம் ஆண்டு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூ ரியினால் நடத்தப்பட்ட 20/20 சுற்றுப்போட்டியில் கொக்குவில் இந்துக்கல்லூரி யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரியை 4 விக்கற்றுகளால் வெற்றி கொண்டு சம்பியன் விருதைத் தனதாக்கியது. மேலும் 2010ம் ஆண்டில் நூறாவது அகவையை அடையும் கொக்குவில் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, மகாஜனா கல்லூ ரி ஆகியவற்றிற்கு இடையே நடைபெற்ற 20/20 சுற்றுப் போட்டியில் மகாஜனா கல்லூரியை 6 விக்கட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி கொண்டு வெற்றி விருதை தனதாக்கிக் கொண்டது. இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி அணியானது யாழ் பாடசாலைகள் அணிகளிலேயே தலைசிறந்த அணியாக விளங்கி வருகின்றது.

முதல் பிரிவுக்கு(**First 11**) தலைமை தாங்கியோர்

திரு. பொன்னுத்துரை சந்திரநாதன் (1970), திரு. எஸ்.

தருமலிங்கம் (1971), திரு. சண்முகரட்னம் பிறேம்குமார் (1972), திரு. சந்திரகுமார் (1973), திரு. நடராசா ரவிச்சந்திரன் (1974), திரு. சதாசிவம் திருக்கேதீஸ்வரன் (1975), திரு. கே. சிவராஜா (1976), திரு. நாகநாதன் செல்வநாதன் (1977), திரு. நாகலிங்கம் பாலகுமார் (1978), திரு. நாகலிங்கம் இராஜேந்திரன் (1979), திரு. சங்கரப்பிள்ளை விஜயகுமார் (1980), திரு. லோகேந்திரன் நகுலேந்திரன் (1981), திரு. தேவசகாயம் நடனகுமார் (1982), திரு. நாகலிங்கம் விஜயகுமார் (1983/1984), திரு. குமாரசாமி சதீஸ்குமாா (1985), திரு. V. மதிதரன் (1986), திரு. சண்முகரெட்னம் கிருபானந்தன் (1987),திரு. லோகேந்திரன் நற்குனேந்திரன் (1988), போட்டி நடைபெறவில்லை (1989, 1990), திரு. லோகேந்திரன் நவீந்திரன் (1991)

வலைப்பந்தாட்டம் (**Net ball**)

திருமதி சரஸ்வதி ஏகாம்பரம் பெண்களுக்கான விளையாட்டுத்துறை ஆசிரியராக இருந்தபோது வலைப்பந்தாட்டம் ஆரம்பிக்கப்பட்டது. திருமதி சொரூபி இராமகிருஸ்ணன் தனது தந்தையார் பெயரால் பாடசாலைக்கு நன்கொடையாக வழங்கிய காணியில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டத்திடல் அமைக்கப்பட்டுள்ளது. இன்று கல்லூரியின் வலைப்பந்தாட்டக் குழுவானது மிகவும் திறமை வாய்ந்த குழுவாக வளர்ச்சி அடைந்துள்ளது.

2008ம் ஆண்டு கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை அமைப்பின் (WUSC) பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி அந்த அமைப்பு கல்வித் திணைக்களத்துடன் இணைந்து நடாத்திய வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் யாழ் இந்து மகளிர் கல்லூரியை 37:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிகொண்டு சம்பியன் விருதை தனதாக்கிக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இவற்றைவிட அண்மைக்காலமாக யாழ் கல்வித்திணைக்களத்தினால் நடாத்தப்பட்டுவரும் மென்பந்து துடுப்பாட்டம் (Softball Cricket), ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டம் (Basket Ball - Men), பெண்களுக்கான கூடைப்பந்தாட்டம் (Basket Ball- Women), ஆண்களுக்கான கரப்பந்தாட்டம்(Volly Ball- men), பெண்களுக்கான கரப்பந்தாட்டம் (Volly Ball- Women), உள்ளக விளையாட்டுக்களான (Indoor Games) சதுரங்கம் (Chess), மேசைப்பந்து

(Table Tennis), பூப்பந்து (Badminton) ஆகிய விளையாட்டுக்களிலும் பங்குபற்றி விருதுகளைப் கல்லூரியின் விளையாட்டுத்துறையானது கல்லூரிக்கு பெருமை சேர்த்து வருகின்றது.

குறிப்பு:-

கல்லூரியின் விளையாட்டுத் துறையின் வளர்ச்சியில் எம்மால் திரட்டப்பட்ட தகவல்களைக் கொண்டு எழுதப்பட்ட சிறு மணித்துளிகளே மேலே எழுதப்பட்டுள்ளன. தகுந்த ஆதாரங்களுடன் ஆண்டு, விளையாட்டுக்குழு, அதில் இடம் பெற்ற வீரர்கள் வீராங்கணைகளின் பெயர்கள், அவர்களின் சாதனைகள், குழுக்களின் படங்கள் எமக்கு அனுப்பி வைக்கப்படின் கல்லூ ரி வரலாற்றின் தமிழாக்கப் பதிப்பில் சேர்க்கப்படும். உங்கள் தகவல்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதுடன மிகவும் வரவேற்கப்படுகின்றன. உங்கள் தகவல்களை N. Balakumar,30 Hutcherson Square,Scarborough, Ontario, M1B 1C6 , Canada என்ற முகவரிக்கு அல்லது balashanthi@hotmail.com என்ற E.mailக்கு அனுப்பி வைக்கலாம்.

தொழில்நுட்பக் கல்லூரி
கொக்குவில் யாழ்ப்பாணம்

இலங்கையின் தமிழ் மாணவர்கள், தொழில்நுட்பக் கல்வியை தமிழ் மொழிமூலம் பயின்று அவற்றைப் பேணி முன்னேற வழிசெய்யும் வகையில் உருவானதே யாழ்ப்பாணத் தொழில்நுட்பக் கல்லூரியாகும். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 1957ம் ஆண்டளவில் கொக்குவில் பிறவுன் வீதியில் இலங்கை அரசு இக் கல்லூரியை நிறுவி அதற்குரிய முக்கிய தளபாடங்களையும் வழங்கியிருந்தது. இக் கல்லூரி அமைந்துள்ள நிலப்பரப்பு கொக்குவில் இந்துக் கல்லூ ரியின் முன்னைய விளையாட்டு மைதானமாகும். சில ஆண்டுகளுக்கு முன்னர் தென்கொரிய குடியரசு இக் கல்லூரியின் விரிவாக்கத்திற்கு பெருந்தொகை நிதியை அளித்து பல தளபாடங்களையும் இலவசமாக வழங்கியுள்ளது.

இக் கல்லூரியை இலங்கை அரசின் தொழில்நுட்ப பயிற்சித் திணைக்களம் நிர்வகித்து வருகின்றது. இதன் முதல் அதிபராகக் கடமை ஆற்றியவர் பருத்தித்துறை திரு. கிட்னபிள்ளை ஆவார். இவரைத் தொடர்ந்து திருவாளர்கள் நாகலிங்கம், ஜெயசிங்கம், இராஜேந்திரா ஆகியோர் அதிபர்களாகப் பணிபுரிந்து உள்ளனர். தற்போது திரு. யோகராஜா இக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி வருகிறார்.

தொழில்நுட்பக் கல்லூரியின் வினைத்திறன் பெருக்கும் பல துறைகளில் இங்கு வகுப்புகள் நடைபெற்று பயிற்சிகள் அளிக்கப்பட்டு வந்துள்ளன. 1963ம் ஆண்டளவில் புலமைத்துறைகளும் (Diploma Courses) ஆரம்பிக்கப்பட்டன. இக் கல்லூரியில் காலை நேரத்தில் நடைபெற்று வந்த தொழில் நுட்பக் கல்வி நெறிகளை ஆங்கிலத்தில் தருகிறோம்.

Wood Work, Metal Work, Machinery, Motor Mechanism, Electrical wiring, Draftmenship, Radio mechanism, Library science, Commerce, Short-hand and Type writing.

மாலைநேர வகுப்புகளாக பின்வருபவை நடைபெற்றன.

Mechanical Engineering, Electrical engineering, Civil Engineering, English and Tamil Diploma Cources.

இத் தொழில்நுட்பத் துறைகள் யாவும் அவ்வத்துறைகளில் பயிற்சி பெற்ற அனுபவம் முதிர்ந்த ஆசிரியர்களின் (**Senior Instructors**) மேற்பார்வையில் பயிற்சியாளர்களால் (**Instructors**) மாணவர்களுக்கு பயிற்றுவிக்கப்பட்டு வரப்பட்டுள்ளன. இப் பொறுப்பான பணியினை நன்முறையில் ஆற்றிப் பிள்ளைகளின் தொழில்நுட்பக் கல்வியறிவைப் பெருக்கிய பயிற்சியாளர்களில் திருவாளர்கள் ஸ்ரீகிருஷ்ணராஜா, இராசநாயகம், சிறீவிக்கினேஸ்வரன், மதியாபரணம், பூரணம்பிள்ளை, சிதம்பரநாதன், பரமேஸ்வரன், வின்சிலோஸ், அலோசியஸ், கிருபானந்தன், திருமதி. விமலா பாலசுந்தரம் போன்றோர் சிலராவர்.

இத் தொழில்நுட்பக் கல்லூரிக்கு யாழ்ப்பாண மாணவர்கள் மட்டுமல்லாது திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களில் இருந்தும் மாணவர்கள் வருகைதந்து தொழில் நுட்பக் கல்விப் பயிற்சியை பெற்றுள்ளனர். இங்கு பயிற்சி பெற்ற பலர் இக் கல்லூரியிலேயே பட்டமும் பெற்று, உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் உயர் பதவிகளில் கடமையாற்றி வருகின்றனர்.

வெகு சிறந்த முறையில் இயங்கிவந்த இவ் யாழ் தொழில்நுட்பக் கல்லூரி நாட்டில் ஏற்பட்ட அசாதரண சூழ்நிலையால் அதன் செயற்பாட்டில் ஓர் மந்தநிலையை அடைய நேரிட்டது. மாணவர் வருகையும் குறைந்து காணப்படவே சில துறைகள் மூடப்பட்டுள்ளன. மீண்டும் இக் கல்லூரி புத்துயிர் பெற்றெழுந்து தமிழர் தாயகத்து மக்களின் தொழில்நுட்ப அறிவைப் பூர்த்தி செய்ய கல்லூரி நிர்வாகம் ஆவன செய்யுமென எதிர்பார்க்கலாம்.

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை

புதுக்கோயில் வடக்கு வீதியில் சிறிய அளவில் இயங்கி வந்த கொக்குவில் இந்துப் பாடசாலை 1916ம் ஆண்டில் ஆலயத்தின் தெற்குவீதிப் பக்கம் அமைந்துள்ள காணிக்கு நகர்த்தப்பட்டபோது அங்கே இரு மண்டபங்கள் அமைக்கப்பட்டன. ஒரு மண்டபத்தில் ஆங்கிலப் பாடசாலை திரு. செல்லையா அவர்கள் தலைமையில் "கொக்குவில் இந்து ஆங்கிலப் பாடசாலை" என புதிய பெயர் பெற்று விளங்க அடுத்த மண்டபத்தில் தோற்றம் பெற்றது "கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை". இதன் முதல் தலைமை ஆசிரியராக திரு. பொன்னையா அவர்கள் பொறுப்பேற்றார். இப் பாடசாலையில் மூன்றாம் வகுப்பு சித்தி அடைந்த மாணவர்கள் ஆங்கிலப் பாடசாலைக்கு அனுமதிக்கப்பட்டு வந்தனர். திரு. பொன்னையா அவர்களைத் தொடர்ந்து 1930ம் ஆண்டளவில் திரு. கந்தையா அவர்கள் தலைமை ஆசிரியராக நீண்ட நாட்கள் கடமை ஆற்றியுள்ளார்.

திரு. கந்தையா அவர்களின் காலப்பகுதியில் இவருடன் பணியாற்றி, மாணவர்களின் உயர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த நல் ஆசிரியர்கள் சிலரை இங்கு குறிப்பிடுவது சிறப்பானதாகும். அந்த வகையில் நல்லூர் திரு. சம்பந்தர், கோண்டாவில் திரு. கனகசபை ஆகிய இருவரும் மாணவர்களிடையே தமிழ்ப் பற்றையும், சைவப் பற்றையும் வளர்த்து நவராத்திரி விழாக் காலங்களில் அவர்களை சிறப்புற வழிநடத்துவதில் கவனம் செலுத்தி வந்துள்ளனர். திருமதிகள் சங்கானை முத்தம்மாவும், மீசாலை சதாசிவமும் கொக்குவிலிலேயே தங்கி இருந்து மாணவர்களின் கல்வி, ஒழுக்கம், கட்டுப்பாடு, நன்நடத்தை போன்றவற்றை மேம்படுத்தி உள்ளனர். இவர்கள் நால்வரினதும் சேவைகள் இன்றும் கொக்குவில் மக்களின் நீங்காத நினைவுகளாக அமைந்துள்ளன.

திரு. கந்தையா அவர்கள் 1937ம் ஆண்டில் தமது பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். இவரின் இடத்திற்குத் திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இவர் கரவெட்டியை பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது கம்பீரமான தோற்றம், தேசிய உடை, உற்சாகமூட்டும் இனிய பேச்சு யாவும் மக்களைக் கவர்ந்தன. இவரும் கொக்குவிலில் வாழ்ந்து பாடசாலையின் வளர்ச்சிக்காக மட்டுமன்றி சமூகத்தின் வளர்ச்சிக்காகவும் தன்னை அர்ப்பணித்துக்கொண்டவர். திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் ஆரம்பப் பாடசாலையை ஆங்கிலப் பாடசாலையுடன் இணைத்துக்

கொள்ளச் சம்மதித்ததினால் 1950ம் ஆண்டிலிருந்து இரு பாடசாலைகளும் ஒன்றாக்கப்பட்டன. அன்றிலிருந்து முதலாம் தரம் தொடக்கம் பன்னிரண்டாம் தரம் வரை வகுப்புகள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் தொடர்ந்து 25 வருடங்கள் நடைபெற்று வந்தது. இக் காலப்பகுதியில் திரு. கனகசபை, திரு. ஆனந்தராஜா ஆகியோர் தலைமை ஆசிரியர்களாகக் கடமை ஆற்றி உள்ளனர்.

1976ம் ஆண்டு ஆரம்பப் பாடசாலை அதேவளாகத்தில் வேறாக்கப்பட்டு திருமதி. நாகலிங்கம் தலைமையில் தனித்து இயங்கத் தொடங்கியது. அந்நேரம் வகுப்புகள் ஐந்தாம் தரம் வரையில் நடந்தன. மாணவர் தொகை கூடி வரவே அவர்களையும் அரவணைத்துக் கொள்வதற்கு மாடிக்கட்டிடம் ஒன்று கட்டப்பட்டது. திரு. குலவீரசிங்கம் அவர்கள் 1978ம் ஆண்டு தலைமை ஆசிரியரானார். இவரைத் தொடர்ந்து திருவாளர்கள் குருசாமி, கணபதிப்பிள்ளை, அழகரெத்தினம், கணேஸ்வரன் ஆகியோர் இப்பதவியை வகித்தனர். திருமதி செல்வராணி சகாதேவன் 2003ம் ஆண்டிலிருந்து தலைமை ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவர் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1998ம் ஆண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. ஆடியபாதன் வீதியில் பாடசாலைக்கு அண்மையில் அமைந்துள்ள ஆறரைப்பரப்பு காணியொன்றும் இப் பாடசாலை பழைய மாணவர்களால் கொள்வனவு செய்யப்பட்டு பாடசாலையின் பாவனைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது. இக் காணியிலும் கல்லூரியின் பழையமாணவரும் தொழிலதிபரும், சமூகசேவையாளருமான திரு. சுப்பிரமணியம் அவர்களின் நிதிப் பங்களிப்பில் இரண்டுமாடிக் கட்டிடம் அமைக்கப்பட்டு வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. இப் பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்களின் பெரும் பகுதியினர் செயற்றிறன் மிக்கவர்களாக இருந்ததினால் இங்கு கல்வி கற்று வந்த மாணவர்கள் நல்ல பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்று விளங்கினர். காலத்துக்குக் காலம் ஆசிரியர்கள் பலர் ஓய்வு பெற்றும், வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றும் சென்றுள்ளனர். 2004ம் ஆண்டில் இவ் ஆரம்பப் பாடசாலையில் சேவைபுரிந்த ஆசிரியர்களின் தொகை 28 ஆகும். இவ் ஆரம்பப் பாடசாலையின் "பாடசாலை கீதம்" திரு. சண்முககுமரேசனால் இயற்றப்பட்டதாகும்.

கொக்குவில் மேற்கு
ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை.

ஆறுமுக நாவலர் காலத்தில் பிற மதத்தவரின் பாதிப்பினால் சைவப்பிள்ளைகளின் கல்விப்பாரம்பரியம், சைவசமய நூலறிவு, சைவப்பண்பாடு யாவற்றிலும் பற்றுக் குறைந்து காணப்பட்டது. இத் தளர்ச்சியைப் போக்கி, சைவத்தை நிலைநாட்ட கிராமங்கள் தோறும் சைவப் பாடசாலைகள் அமைக்கப்பட வேண்டுமென நாவலர் பெருமான் கிராமப் பெரியவர்களை வேண்டிக் கொண்டார். நாவலரின் கல்விப் பணியைத் தொடரும் வகையில் கொக்குவிலில் வாழ்ந்த பெரியார் சைவப்புலவர் திரு. த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் சைவப்பிள்ளைகள் கல்வி கற்பதற்கென 1923ஆம் ஆண்டளவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியா சாலையை ஆரம்பித்தார். இதன் தலைவராகவும், முதன்மை ஆசிரியராகவும் தானே பொறுப்பேற்று பாடசாலையை கவனித்து வந்தார். இவருக்கு உதவியாக திரு. மு. நடராசா அவர்களும் ஆசிரியராகச் சேர்ந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரிதும் உழைத்துள்ளார்.

இப் பாடசாலை கொக்குவில் மேற்கில் ஆடியபாதம் வீதியும் (இப்போது ஞானபண்டிதா வீதி என அழைக்கப்படுகிறது), நீதிராசா வீதியும் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ளது. வகுப்புகள் முதன் முதலில் "ட" வடிவில் அமைந்த கட்டிடம் ஒன்றில் நடந்தன. சிறார்களின் வகுப்புகள் சில சமயங்களில் அங்கு வளர்ந்திருந்த ஒரு பெரிய மாமரத்தின் கீழும் நடைபெறும். புலவர்ஐயா அவர்கள் சைவத்திலும், தமிழிலும் மிகவும் ஈடுபாடு கொண்டவர். இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் சமையாசார முறைப்படி வளர வேண்டும் என்ற பெருநோக்கில் வித்தியாசாலை வளாகத்தில் ஓர் சிறிய வைரவர் கோவிலையும் நிறுவியிருந்தார். மாணவர்களின் காலைப் பிரார்த்தனை இக் கோவில் முன்றலில் மிகவும் பக்தியுடன் நடைபெறும். அக் காலத்தில் இவ் வித்தியாசாலை "புலவர் பாடசாலை" யெனவே பலராலும் அழைக்கப்பட்டு வந்தது.

சில நாட்களின் பின்னர் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையை "சைவ வித்தியா விருத்திச் சங்கம்" (Hindu Board of Education) என்ற ஸ்தாபனம் பொறுப்பேற்றது. இதனால் வேறுவேறு பிரதேசங்களைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் பலர் இங்கு சேவையாற்றி உள்ளனர். இவ் வித்தியாசாலையில் கற்பித்தல் மற்றும் செயற்பாடுகளை நன்முறையில் நிர்வகித்து பாடசாலையை

வளர்த்தெடுத்த தலைமை ஆசிரியர்களில் புங்குடுதீவு திரு. சேதுபதி, சாவகச்சேரி திரு. சின்னத்துரை, கந்தர்மடம் திரு. சதாசிவம்பிள்ளை, கொக்குவில் திரு. தருமலிங்கம் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பாடசாலையில் ஆசிரியர்பணி புரிந்தவர்களில் முக்கிய இடத்தைப் பெறுபவர் முன்னர் குறிப்பிட்ட திரு. மு. நடராசா உபாத்தியாயர் ஆவர். இவர் பாடசாலைக்கு அண்மையில் வாழ்ந்து வந்தார். அமைதியான சுபாவம் உடையவர். எல்லோரது நன்மதிப்பையும் பெற்றவர். மக்களுடனும், மாணவர்களுடனும் மிகவும் அன்பாகப் பழகுவார். பாடசாலையில் முழுக்கவனத்தையும் செலுத்தி மாணவர்களின் தமிழ், சமய அறிவையும், ஒழுக்கத்தையும் மேம்படுத்தியவர். பாடசாலை ஆரம்ப காலத்திலிருந்து 37 வருட காலம் தொடர்ந்து தன்பணியை திறம்பட ஆற்றிய பின்னர் 1960 இல் ஓய்வு பெற்றார். அக் காலப்பகுதியில் மாணவர்களின் முன்னேற்றத்திற்கு பொறுப்பாக இருந்து பணியாற்றிய மற்றைய ஆசிரியர்கள் சிலரின் பெயர்களை மட்டும் இங்கு தருகிறோம்.

திரு. நடராசா உபாத்தியாயரின் பாரியார் திருமதி. சிவக்கொழுந்து, தலைமை ஆசிரியர் திரு. தருமலிங்கத்தின் பாரியார் திருமதி. கண்ணம்மா, திருமதி. தம்பு, பண்டிதர் திரு. நமசிவாயம், திரு. திருச்செல்வம், திரு. செல்வராசா, திரு. பூபாலசிங்கம், திரு. இளையதம்பி, திரு. இராசலிங்கம், திருமதி. மகேஸ்வரி, திரு. இராசா, திருமதி. யோகேஸ்வரி தாமோதரன். இப் பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் 1934 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்ட வடமாகாண ஆசிரியர் சங்கம் **(Nothern Province Teachers Association)** நடாத்திய பரீட்சைகளுக்கும் தோற்றி நல்ல பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். இங்கு பாடசாலைக் கல்வியுடன் திருமுறை வகுப்புக்கள், சமய விழாக்கள் மற்றும் பன்னவேலை (பனை மரத்தின் பாகங்களைக் கொண்டு செய்யப்படும் சிறு கைத்தொழில் வேலைகள்), நெசவு வேலை போன்ற செயற்பாடுகளும் நடைபெற்றுள்ளன. நவராத்திரி வழிபாட்டுடன் பத்தாம் நாள் விஜயதசமியும் சிறப்பாக நடைபெறும். மாணவர்களில் ஒரு குழுவினர் பெற்றோர், நலன்விரும்பிகள் இல்லங்களுக்குச் சென்று நவராத்திரிப் பாடல்களைப் பாடிக் கூட்டுப்பிரார்த்தனை செய்வதும் அந் நாட்களில் வழக்கமாக இருந்தது. பிரார்த்தனையின் இறுதியில் ஆசிரியர்களுக்கும், பிள்ளைகளுக்கும் பிரார்த்தனையில் தெய்வங்களுக்கு படைக்கப்பட்ட வடை, சுண்டல், அவல் போன்ற

படையல்கள் பரிமாறப்பட்டு இல்லத்து உரிமையாளர்கள் பாடசாலை நிதிக்கு அன்பளிப்பும் செய்வர்.

ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையில் ஓர் களியாட்டவிழா பாடசாலைக் கட்டிட நிதிக்காக 1953 ஆம் ஆண்டளவில் நடைபெற்றுள்ளது. அடுத்து 1955 இல் இந்தியாவில் நடனக்கலை பயின்று தேர்ச்சி பெற்று யாழ்ப்பாணம் திரும்பியிருந்த நடன ஆசிரியர் திரு. ஏரம்பு சுப்பையாவின் முதல் நடன நிகழ்ச்சியும் இங்கே நடைபெற்றது. அன்று அக் "கலைச் செல்வன்" திரு. ஏரம்பு சுப்பையா ஆடிய மயில் நடனம் பலரின் மனக்கண் இன்றும் நிலைத்து நிற்கின்றது.

****

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை.

பெரியார் திரு. இ. தம்பித்துரை அவர்களின் முழு முயற்சியினதும், இடையறா ஊக்கத்தினதும் பயனே கொக்குவிலில் அமைந்துள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை ஆகும். இப் பெரியார் கொக்குவில் மண்ணில் ஓர் சைவப் பாடசாலையை அமைத்து அதை இராமகிருஷ்ணமிஷன் தலைமையில் நடத்துவதற்கு ஆவல் கொண்டார். அந்நேரத்தில் சுவாமி விபுலாநந்த அடிகள் கிழக்கு மாகாணத்தில் சைவமும், தமிழும் தழைக்கும் வகையில் இளம் சிறார்களுக்கு பாடசாலை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருப்பது இவருக்குத் தெரியவந்தது. திரு. தம்பித்துரை அவர்களுக்கு இராமகிருஷ்ணமிஷன் சுவாமிமார்களிடம் வலுவான தொடர்பிருந்தது. இந்தத் தொடர்பு காரணத்தினால் தனது விருப்பத்தினை அவர்களில் சிலருக்குக் கூறி விபுலாநந்த அடிகளின் அனுமதி பெற்று பாடசாலை கட்டும் பணியைக் கொக்குவிலில் ஆரம்பித்தார்.

1936 ம் ஆண்டளவில் திரு. தம்பித்துரை அவர்கள், தொண்டர் திரு. கந்தையா போன்ற சில சமூக நலன் விரும்பிகளுடன் சேர்ந்து ஊரிலும், வெளிநாடுகளிலும் பணம் திரட்டி பாடசாலையின் பெயரில் எட்டரைப் (8.5) பரப்புக் காணியை வாங்கினார். அதில் முதன் முதலாக 84 அடி நீளமுள்ள கட்டிடமும், சுவாமி விபுலாநந்தர் வந்து தங்குவதற்கு ஏற்ற வகையில் சிறிய ஆச்சிரமமும் கட்டப்பட்டன. திரு. தம்பித்துரையின் அழைப்பின்பேரில் சுவாமி விபுலாநந்தர் மட்டக்கிளப்பிலிருந்து வருகைதந்து பாடசாலைக் கட்டிடத்தை 1938ம் ஆண்டு ஏப்பிரில் 21ம் திகதி திறந்து வைத்தார். சுவாமி விபுலாநந்தர் ஆசியுடன் பாடசாலை இராமகிருஷ்ண மிஷன் முகாமைத்துவத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு "ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை" எனப் பெயர் பெற்றது. பாடசாலைக்கான ஆசிரியர்களையும் சுவாமி அவர்களே தேர்ந்தெடுத்தார்.

சுவாமி விபுலாநந்தரின் அறிவு, ஆற்றல்களில் மிகுந்த மதிப்பு வைத்திருந்தவரும் சுவாமிகளுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றவருமாய் விளங்கியவர் திரு. இராசையா கந்தையா அவர்கள். இவர் இரண்டு வருட ஆசிரியப் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறிய காலப்பகுதியில் பாடசாலைத் திறப்புவிழா

நடந்தது. சுவாமி அவர்கள் திரு. இராசையா கந்தையா அவர்களை பாடசாலையின் அதிபராக நியமித்தார். பெண் ஆசிரியராகத் திருமதி. சொர்ணம்மாவையும் நியமித்தார். திரு. இ. கந்தையா அவர்கள் இளம் வயதிலிருந்தே மகாத்மா காந்தியின் கொள்கைகளைப் பின்பற்றி வந்தவர். கதர் வேட்டி, கதர் சட்டை, கதர் சால்வை அணிந்து காட்சியளிப்பார். இவருடைய பேச்சுத்திறன், நிர்வாகத்திறமை, பரந்தஅறிவு ஆகியவற்றால் மக்களும், மாணவரும் கவரப்பட்டனர். பாடசாலையின் ஒப்பற்ற அதிபராக 26 வருடங்கள் பதவி வகித்து, பாடசாலையை ஒரு முன்மாதிரிக் கல்விக்கூடமாக வளர்த்தெடுத்தார்.

ஆரம்பத்தில் பாடசாலையை ஒரு பூங்கா அமைந்த கலைக்கூடமாகத்திகழ வழிசெய்தார்.இங்கே சமய வழிபாடு, ஒழுக்கம் போன்றவை கடைப்பிடிக்கப்பட்டு 63 சைவநாயன்மார்களின் குருபூசை வழிபாடுகளும் சிறப்பாக நடந்து வந்தன. 30 மாணவச் சிறுவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை திரு. இ. கந்தையா அவர்களின் முயற்சியினால் பாரிய முன்னேற்றம் பெறவே 01.05.1939 இல் உதவி நன்கொடை பெறும் பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்டது. சங்கீத வகுப்பு, பாலபண்டிதர் வகுப்பு, காந்தியத் தத்துவப்படி நூல்நூற்றல் வகுப்பு ஆகிய இணைபாடவிதானச் செயற்பாடுகளும் இவரது காலத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. சுவாமி விபுலாநந்தர் பாடசாலையின் முகாமையாளர் என்ற முறையில் இடையிடையே கொக்குவிலுக்கு வந்து பாடசாலையின் முன்னேற்றத்தைப் பார்வையிட்டுச் சென்றுள்ளார்.

1954 ஆம் ஆண்டளவில் அதிபர் திரு. இ. கந்தையாவினாலும் ஊர்மக்களாகிய ஓவசியர் இராசதுரை, ஓவசியர் சபாரட்ணம், ஆ. சுப்பையா, ஆ. மயில்வாகணம், செ. காசிப்பிள்ளை, அ. சின்னத்தம்பி, சி. செல்லையா, மு. வ. இராசரத்தினம், செ. சிவசம்பு மேலும் அயலவர்களாலும் பாடசாலைக்குப் புதிய கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் பின்னர் சாதாரண கல்வித்தராதரப்பத்திர "G.C.E O/L" வகுப்புகள் நடத்தப்பட்டுமாணவர்கள் பொதுப் பரீட்சைக்கு தோற்றி நல்ல பெறுபேற்றினையும் பெற்றனர். பிரசித்திபெற்ற பிரமுகர்களான திரு.V.V. கிரி (பின்னர் இந்தியாவின் பிரதமராக இருந்தவர்), திரு. அவினாசிலிங்கம் (முன்னாள் சென்னை கல்வி மந்திரி), சிலம்புச் செல்வர் திரு. ஆ. சிவஞான கிராமணியார் போன்றோரை பாடசாலைக்கு வரவழைத்துக் கொண்டாடிய பெருமையும் அதிபர் இ. கந்தையா அவர்களைச்சாரும். இவரது

பதவிக் காலத்திலேயே ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை கல்வி அதிகாரிகளால் முதற்தரமான பாடசாலையாகக் கணிக்கப்பட்டது. இவ்வாறாக இக் கல்விக்கூடத்தின் ஆரம்ப காலத்திலிருந்து நீண்ட காலம் திறம்படச் சேவையாற்றி அனைவரதும் நன்மதிப்பைப் பெற்ற அதிபர் இ. கந்தையா அவர்கள் 1964ம் ஆண்டில் நாவற்குழி மகாவித்தியாலயத்திற்கு அதிபராக மாற்றம் பெற்றுச் சென்றார். இவரைத் தொடர்ந்து இப் பாடசாலை அதிபர்களாகக் கடமையாற்றியோரில் திருமதி. சரஸ்வதி கணேஸ்வரன், திருமதி. செ. நவரத்தினம், திரு. இ. சிவபாதசேகரம் சிலராவர். திருமதி. சரஸ்வதி கணேஸ்வரன் அதிபராக கடமையாற்றியபோது பாடசாலையின் மாடிக் கட்டிடம் ஒன்று G.T.Z நிறுவனத்தினரால் புனரமைக்கப்பட்டுள்ளது.

இக் கல்விக்கூடம் முன்னாள் நல்லூர்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்களின் உதவியுடன் பெண்கள் பாடசாலையாக மாற்றப்பட்டு "ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா மகளிர் வித்தியாசாலை" என்ற பெயரில் சிறிது காலம் இயங்கிற்று. இன்று மறுபடியும் "ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை"யாகவே விளங்கி வருகின்றது.

****

கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாசாலை

இலங்கையின் வடபுல நகரமாம் யாழ்ப்பாணத்தின் கொக்குவில் கிராமத்தில் உள்ள பொற்பதி வீதியின் மேற்காக "நாமகள் வித்தியாசாலை" அமைந்துள்ளது. அந்நாளில் இப்பகுதிச் சைவப்பிள்ளைகள் தங்கள் கல்வி வளர்ச்சிக்காக தூர இடங்களில் உள்ள கல்விக்கூடங்களுக்குச் சென்று வந்தனர். இதனால் பிள்ளைகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி இருந்தது. இப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் ஆர்வம் மேலிட்ட பெரியார்கள் திரு. ஆறுமுகம், வைத்தியர் திரு. சின்னத்துரை ஆகியோரின் பெருமுயற்சியின் பயனால் 1934ம் ஆண்டளவில் உருவானதே இப் பாடசாலை ஆகும். வைத்தியர் திரு. சின்னத்துரை தனது பரம்பரைக் காணிகளில் ஒன்றை இப் பாடசாலையை நிறுவுவதற்கு நன்கொடையாக வழங்கினார். திரு. ஆறுமுகம், ஊர்மக்களின் உதவியுடன் பாடசாலையை ஸ்தாபித்து, முதல் ஆசிரியராகவும் கடமையாற்றி இப்பகுதிப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு வழிவகுத்தார். கல்வித் தெய்வமாம் சரஸ்வதிதேவியின் நாமத்தில் இக் கல்விக்கூடம் "நாமகள் வித்தியாசாலை" என அழைக்கப்படடு வருகின்றது..

பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும், ஆலோசகராகவும் கடமை ஆற்றியவர் திரு. சி. முத்துவேலு ஆவர். **"L"** வடிவில் அமைந்த பாடசாலைக் கட்டிடத்தில் ஆரம்ப காலத்தில் கீழ்வகுப்புகள் மட்டுமே நடைபெற்று வந்தன. அந்நாளில் இங்கு கல்வி கற்று வந்த மாணவர்கள் தங்கள் உயர் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், திரு. பொன்னம்பலம் இராமநாதன் (சேர். பொன். இராமநாதன்) அவர்களால் ஆண்களுக்காகக் கட்டப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரியிலும் கற்றுக்கொண்டனர். (இவர் பெண்களுக்காக இணுவிலில் அமைந்துள்ள இராமநாதன் கல்லூரியை நிறுவியிருந்தார்) முன்னர் பரமேஸ்வராக் கல்லூரியாக விளங்கிய கல்விக்கூடமும் அதன் நிலப்பகுதிகளுமே இன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமாக விளங்குகிறது.

நாமகள் வித்தியாசாலைக்கு மாணவர்களின் வருகை அதிகரிக்கவே நடுத்தர வகுப்புகளும் ஏற்படுத்தப்பட்டன. இக் காலகட்டத்தில்

பாடசாலை சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டது. 1942ம் ஆண்டளவில் திருநெல்வேலியைச் சேர்ந்த திரு. கனகரத்தினம் தலைமை ஆசிரியராக நியமனம் பெற்றார். இவரைத்தொடர்ந்து திரு. ஆறுமுகம் தலைமை ஆசிரியரானார். பாடசாலையின் முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு பெற்றோர்-ஆசிரியர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. பொதுமக்களும், பெற்றோர்-ஆசிரியர் சங்கமும் இணைந்து விஞ்ஞானக்கூடக் கட்டிடத்தைக் கட்டினர். இதனால் கட்டிடம் "ப" வடிவம் பெற்றது. 1977ம் ஆண்டில் திரு. நவரத்தினம் தலைமை ஆசிரியராகக் கடமை ஆற்றிய நாட்களில் நல்லூர்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. அருளம்பலம் அவர்களின் உதவியுடன் பாடசாலைக் காரியாலயமும், பாலர் வகுப்பிற்கான கட்டிடமும் அமைக்கப்பட்டன.

திரு. நவரத்தினத்தைத் தொடர்ந்து திருவாளர்கள் சரவணபவான், திருநாவுக்கரசு ஆகியோரின் தலைமைக்குப் பின் தற்போது திரு. பொன்னையா பத்மநாபன் தலைமை ஆசிரியராகக் கடமை ஆற்றி வருகின்றார். பாடசாலையைச் சுற்றிவர அமைந்திருக்கும் எல்லைச் சுவர்கள் திரு. திருநாவுக்கரசு அவர்கள் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் கட்டப்பட்டனவாகும்.

நாமகள் வித்தியாசாலையில் இன்று முதல் வகுப்புத் தொடக்கம் பதினோராம் வகுப்பு வரை மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். பத்து ஆசிரியர்கள்வரை கடமை புரிவதாகவும் அறிகின்றோம்.

****

கொக்குவில் தலையாழி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அறநெறிப் பாடசாலை

சகல மாணவர்களும் சமய சிந்தனை, நல் ஒழுக்கம், பாரம்பரிய கலை கலாச்சாரம் போன்ற அறவாழ்வைப் பேணி வாழவேண்டும் என்ற உயரிய நோக்கில் அறநெறிப் பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. இவற்றை ஆலய நிர்வாகங்களும், சமய நிறுவனங்களும் அமைத்தும் பராமரித்தும் வருகின்றன. யாழ்ப்பாணத்தில் இயங்கும் பல அறநெறிப் பாடசாலைகளில் கொக்குவில் தலையாழி ஸ்ரீஞானவைரவர் ஆலய அறநெறிப் பாடசாலையும் ஒன்றாகும். இப் பாடசாலை 1999ம் ஆண்டு பங்குனி மாதம் ஞானவைரவர் ஆலய அன்றைய நிர்வாகச் செயலாளர் திரு. கதிரவேலு பரமசாமியினால் ஆரம்பிக்கப்பட்டது.

ஆலயத்தின் வடக்கு வீதியில் ஆலய உரிமையாளருக்குச் சொந்தமான இல்லம் நீண்ட காலமாக உரியவர்கள் வெளிநாட்டில் இருந்ததால் திருத்தப்படாது மிகப் பாழடைந்து இருந்தது. அவ் இல்லத்தை, பரிபாலனசபை ஒப்புதலோடு திரு. பரமசாமி அரும்பாடுபட்டு முழுமையாகப் புனரமைத்து அறநெறிப் பாடசாலையாக ஆக்கினார். மேலும் வைரவர் ஆலய உரிமையாளரும், ஆலய நிர்வாகப் போசகரும், அறப்பள்ளி நடைபெறும் இவ் வளவு உரிமையாளருமான திரு. ஆனந்தக்குமாரராஜா அவர்கள் தமது இல்லத்தில் பாடசாலையை தொடர்ந்து நடாத்த உரிமை வழங்கி உள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அறநெறிப் பாடசாலை ஆரம்பித்த நாள்முதல் அதனைக் கட்டிக்காத்து நன்முறையில் வளர்த்து வருபவர் பாடசாலை அதிபர் திருமதி. குணமணி சண்முகதாஸ் ஆவர். இவரின் செயற்திறன் பற்றி ஆலய முன்னாள் தலைவர் திரு. அ. இராமநாதன்:-

"ஆசிரியை திருமதி. குணமணி சண்முகதாஸ் சைவத்தையும், தமிழையும் ஆதரித்து செயல்படுவது மெச்சத்தக்கது. கற்றல் கற்பித்தலில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்திருப்பது நாம் எல்லோரும் செய்த பாக்கியம்" எனப் பாராட்டி உள்ளார்.

இவரைவிட வேறும் மூவர் இங்கு அறநெறிக் கல்வியின் பல்வேறு பிரிவுகளைப் போதிக்கிறார்கள். இங்கு கடமை ஆற்றும் ஆசிரியர்கள் அனைவரும் தொண்டர்கள் என்றே கூறவேண்டும். சிறு அன்பளிப்பைத் தவிர பெரிதாக அவர்களுக்குப் பணம் வழங்கப்படுவதில்லை.

இப்பாடசாலையில் இக்கிராமத்துப் பிள்ளைகள் மட்டுமன்றி அயல் கிராமங்களில் இருந்தும் பிள்ளைகள் வந்து கற்கிறார்கள். இங்கு பண்ணிசை, சைவசமய போதனை, குறள் மனனப் பயிற்சி, மிருதங்கப் பயிற்சி என வாரத்தில் வெள்ளி, சனி ஆகிய இரு நாட்களிலும் போதனைகள் இடம் பெறுகின்றன. வருடா வருடம் பரிசளிப்பு விழாவும் நடைபெறும். எழுத்துப் பரீட்சை, பண்ணிசைப் பரீட்சை, குறள் மனனப் போட்டி, பேச்சுப் போட்டி என நடாத்தி சித்தி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும், பரிசில்களும், தங்கப்பதக்கங்களும், கேடயங்களும் வழங்கப்படுகின்றன.

வாணிவிழா நாட்களில் எழுத்து, கணிதப் பரீட்சைகளோடு, தோரணம் கட்டுதல், மாலை கட்டுதல், கோலம் போடுதல் போன்ற போட்டிகளும் நடாத்தப்பட்டு சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படுகின்றன. மேலும் சமயகுரவர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரது குருபூசைகளும், நாவலர் குருபூசையும் தவறாது கொண்டாடப்பட்டு வருகின்றன. இவ் அறநெறிப் பாடசாலை ஆனது ஆரம்பித்து இரண்டு மாதங்களில் அதாவது 11.05.1999ல் இலங்கை இந்துக் கலாச்சாரத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டது. இங்கு நடைபெறும் பாடபோதனைகள் யாவும் திணைக்களத்தின் பாடவிதானத்துக்கு அமையவும், மேலதிகமாகவும் மேற்கொள்ளப்படுகின்றன. திணைக்களம் வழங்கிய நூல்களைக் கொண்டு நூல்நிலையம் ஒன்றும் உருவாக்கி உள்ளனர்.

இப் பாடசாலையின் வளர்ச்சிக்கும், அங்கு நடைபெற்று வரும் சேவைகளுக்கும் உதவியும், ஊக்கமும் அளித்து வருபவர்கள் பாடசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கமும், கிராமத்து நல் விரும்பிகளுமாவர். தலையாழி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அறநெறிப் பாடசாலை, அதிபர் திருமதி. குணமணி சண்முகதாஸ் அவர்களின் வழிகாட்டலாலும், அவரோடு ஒத்துழைக்கும் அன்பர்களின் முயற்சியாலும் வைரவப் பெருமான் துணை கொண்டு மேன்மேலும் சிறப்புற்று வளர வாழ்த்துகின்றோம்.

****

கொக்குவில் மேற்கு (CCTM) தமிழ்க் கலவன் பாடசாலை

ஆங்கிலேயரின் ஆரம்ப ஆட்சிக் காலத்தில், யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் மத்தியில் கிறிஸ்துவ சமயத்தைப் பரப்புவதில் திருச்சபை மிஷனரி சங்கத்தினர் (The Church missionary Trust Association) அதிக அக்கறை கொண்டு பல கிறிஸ்துவ தேவாலயங்களையும், பாடசாலைகளையும் நிறுவினர். அக்காலகட்டத்தில் 1865ம் ஆண்டு கொக்குவிலில் ஒரு கிறிஸ்தவ தேவாலயமும், அதனுடன் இணைந்தாற்போல் பாடசாலைகள் அமைப்பதற்கும் காணிகள் கொள்வனவு செய்யப்பட்டன. 1880ம் ஆண்டு கே.கே.எஸ் வீதி, கொக்குவிலில், இலங்கைத் திருச்சபையால் பரிசுத்த திரித்துவ தேவாலயம் ஒன்று கட்டப்பட்டது. அக்காலப்பகுதியில் கொக்குவிலில் மூன்றும், கோண்டாவிலில் ஒன்றுமாக நான்கு C.C.T.M ஆரம்பத் தமிழ்ப் பாடசாலைகள் இவ்வாலயத்தினரால் நிறுவப்பட்டனவென இத்தேவாலய வரலாற்றில் முன்னர் கண்டோம். கொக்குவிலில் நிறுவப்பட்ட மூன்று பாடசாலைகளில் இரண்டு செயலற்றுப்போக, இன்றும் இயங்கிக்கொண்டு இருப்பது கொக்குவில் மேற்கு C.C.T.M பாடசாலையாகும். இதுவே இன்று "கொக்குவில் மேற்கு C.C.T.M தமிழ்க் கலவன் பாடசாலை" எனப் பெயர்மாற்றம் பெற்று விளங்கி வருகின்றது.

கொக்குவிலில் அமைந்துள்ள கல்விக் கூடங்களில் மூத்த பாடசாலை இதுவாகும். இப்பாடசாலை கொக்குவிலில் குளப்பிட்டிச் சந்தியிலிருந்து ஆனைக்கோட்டை நோக்கிச் செல்லும் வீதியில் அமைந்துள்ளது. பரிசுத்த திரித்துவ திருச்சபையினரின் நிர்வாகத்தின் கீழ் இப் பாடசாலை இயங்கி வந்ததினால் நீண்ட காலமாக கிறிஸ்தவ ஆசிரியர்கள் இங்கு கல்வி கற்பித்து வந்தனர். அந் நாட்களில் இப் பிரதேசத்தில் வேறு பாடசாலைகள் இல்லாத காரணத்தால், கல்வி ஆர்வம் கொண்ட இப்பகுதிப் பிள்ளைகள் இப் பாடசாலையிலேயே எழுத்தறிவு பெற்றனர். இங்கு வாழ்ந்த சைவப் பிள்ளைகளும், கிறிஸ்தவப் பிள்ளைகளும் ஒரே குடும்பத்தினர்போல் சந்தோஷமாகக் கல்விகற்றுப் படித்தவர்களாகவும், பண்புள்ளவர்களாகவும் வளர்ந்தார்கள். இப் பாடசாலையின் அன்றைய மாணவர்கள் தமது உயர் கல்வியை அந்நாளில் யாழ்ப்பாணத்தில் சிறப்புற்று விளங்கிய Kilner கல்லூரியில் தொடர்ந்துள்ளனர்.

அரச உதவி பெறும் பாடசாலைகளை அரசாங்கப் பாடசாலைகளாக்கும் சட்டமூலத்தின்படி 1961ம் ஆண்டு கொக்குவில் மேற்கு C.C.T.M தமிழ்க் கலவன் பாடசாலையும் அரசாங்கத்தால்

பொறுப்பேற்கப்பட்டது. அரசாங்கத்தால் இப் பாடசாலை பெறுப்பேற்கப்படுவதற்கு முன்பு திரு. இராமுச் சட்டம்பியார், அதன் பின் திரு. ஆன்ரூ என்போர் இப் பாடசாலையின் அதிபர்களாகப் பதவி வகித்தனர். அரசாங்கம் பொறுப்பேற்றதன் பின்னர் திரு. ஆழ்வாப்பிள்ளை, திருமதி. சிவகாமி சுப்பிரமணியம் (தற்காலிகமான), திருமதி. பத்மாவதி சின்னராசா, திரு. கனகசபாபதி, திருமதி மாலினி வேதநாதன் ஆகியோர் பாடசாலையின் அதிபர்களாகக் கடமையாற்றி இப் பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்துள்ளனர். தற்போது திருமதி. மங்களகௌரி தயாளநேசன் என்பவர் அதிபராக, பாடசாலையின் வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்டு வருகிறார்.

இப் பாடசாலையில், முன்னர் 150 மாணவர்களுக்கு மேலாகக் கல்வி பயின்றனர். 1995ம் ஆண்டு இடப்பெயர்வுக்குப் பின் 120 மாணவர்களாகக் குறைந்து தற்போது 130 மாணவர்கள் வரையில் கல்வி பயில்கின்றனர். ஐந்தாம் வகுப்புவரை உள்ள இப் பாடசாலையில் 6 ஆசிரியர்கள் தற்போது கடமை ஆற்றுகின்றனர். இங்கு கல்வி கற்றுவரும் மாணவர்கள் தமது மேற்படிப்புக் கல்வியை பெரும்பாலும் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், யாழ் இந்துக் கல்லூரியிலும் பெற்று வருகின்றனர். இப் பாடசாலையில் வருடந்தோறும் நடைபெறும் புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்த பல மாணவர்கள் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளான கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி என்பவற்றிற்குப் பிரவேசிக்க அனுமதி பெறுவது பெருமைக்குரியதாகும்.

இப் பாடசாலையின் அதிபராக 16 வருடங்கள் தொடர்ந்து திருமதி. மாலினி வேதநாதனின் ஆற்றல்மிகு செயற்பாட்டால் பாடசாலையில் பல வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. கொக்குவில் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம், UNISEF, அரசாங்க நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் உதவியுடன் குளாய்க்கிணறு ஒன்று வெட்டப்பட்டது. மின்சாரம் பெறப்பட்டது, மலசலகூடம் கட்டப்பட்டது. விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன, மற்றும் சிறுவர் உபகரணங்கள் பெறப்பட்டன. இவையாவும் இவர் காலத்திலேயே நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இல்ல விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா போன்ற நிகழ்வுகள் வருடந்தோறும் நடைபெற்று வருகின்றன. இப் பாடசாலையின் கனடா வாழ் பழைய மாணவர்கள் பலர் இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக தம்மை நிலைநிறுத்தி உழைக்கும் பணியில் ஈடுபட்டு வருவது எதிர் காலத்தில் கொக்குவில் மேற்கு C.C.T.M தமிழ்க் கலவன் பாடசாலை சிறப்புற்று வளர வலுச்சேர்ப்பதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இயல் - 5

சனசமூக நிலையங்களும் அவற்றின் வளர்ச்சியும்

கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையம்

"கொக்குவில் சேவை சங்கம்" என்ற அமைப்பு செயல் அற்றுப் போக 1942ம் ஆண்டு திரு. இராசையா இராசநாயகம் தலைமையில் திரு க. தர்மலிங்கம், திரு செ. இராமர், திரு செ. சின்னத்துரை ஆகியோரினால் இவ் வாசிகசாலை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இது நந்தாவில் மனோன்மணி அம்பாள் ஆலயத்திற்கு தெற்கே ஆலயக்கேணிக்கு அருகாமையில் ஓர் ஓலைக்குடிசையில் அமைக்கப்பட்டிருந்தது. மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் அருகே இவ் வாசிகசாலை அமைந்தமையினால் இதற்கு மனோன்மணி வாசிகசாலை என பெயரிடப்பட்டது. இவ் நிலையத்திற்கென தனியான கொடி, இலட்சனை, கீதம் என்பன உண்டு. இதன் கொடியின் நிறம் சிவப்பு வெள்ளை ஆகும்.

இதன் நோக்கம் அப்பகுதி மக்களுக்கு உலகில் நடக்கும் சம்பவங்களை அறிந்து கொள்ளவும், சமயத்தைப் பேணவும், முதியவர்கள் இளைஞர்களிடையே நல்லுறவையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்தவும், இளைஞர்களிடையே ஒற்றுமையையும், உடல் ஆரோக்கியத்தையும் ஏற்படுத்துவதுமாகவே இருந்தது. அதன் அடிப்படையில் பத்திரிகைகள், சஞ்சிகைகள், சமய நூல்கள் என்பன அங்கு வைக்கப்பட்டு இருந்ததுடன், கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், மென்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களில் இளைஞர்கள் ஈடுபடுவதற்கான வசதிகளையும் செய்து கொடுத்திருந்தது.

காலப்போக்கில் இவ் வாசிகசாலையையும், அதன் செயற்பாடுகளையும் விரிவுபடுத்தும் நோக்குடன் ஆலயத்தின் கிழக்கு வீதியில் அமைக்கப்பட்ட புதிய கட்டிடத்திற்கு இடமாற்றம் பெற்றதுடன் இதுவரை வாசிகசாலையாக இயங்கி வந்த இவ் நிலையம் சனசமூக நிலையமாக மாற்றம் பெற்று இன்று "கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையம்" என அழைக்கப்பட்டு வருகின்றது. இதற்கான நிலம் ஆரம்பத்தில் ஒன்பது மக்களுக்கு சொந்தமானதாக இருந்ததுடன் இந்நிலத்தில் முழுமை செய்யப்படாது அத்திபாரம் மட்டுமே இடப்பட்ட நிலையில் கட்டிடம் ஒன்று ஆரம்ப நிலையிலேயே இருந்தது. இதனை நில உரிமையாளர்களிடம் இருந்து தொன்னூ

ற்று ஒன்பது வருட குத்தகைக்கு அப்போதிருந்த சனசமூக நிர்வாக சபையினர் பெற்றிருந்தனர். மேலும் நூறாவது ஆண்டில் அந் நிலம் சனசமூக நிலையத்திற்கு சொந்தமாக்கப்படும் என்ற உத்தரவாதமும் நில உரிமையாளர்களால் நிர்வாகத்தினரிற்கு வழங்கப்பட்டிருந்தது. இன்று இச் சனசமூக நிலையம் யாழ் பிரதேச சபையில் J/V/C/18/ CC/371 இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச் சனசமூக நிலையத்தின் அங்கத்தவர்களே ஆலயவளர்ச்சிக்கான தொண்டுகளிலும் ஆரம்ப காலமுதல் இன்றுவரை ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் செயற்பாடுகளில் ஒன்றாக வருடா வருடம் நடைபெறும் ஆலயத்தின் பதினொரு நாட்கள் உற்சவத்தில் கதாப்பிரசங்கங்கள், தேவார பாராயணங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு வந்தன. குறிப்பாக மகாபாரதம் பற்றிய விரிவுரை நடைபெறும் காலத்து இறுதிநாள் பட்டாபிஷேக வைபவம் சிறப்பாக நடைபெறும். விரிவுரைகளை மணிஐயர், சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு வினாசித்தம்பி, திரு பொன்னம்பலம் போன்றோர் நிகழ்த்தி வந்தனர். மேலும் நிலையத்தின் செயற்பாடுகள் ஆவன ...

1. உற்சவகாலத்தில் சனசமூக நிலையத்தின் முன்பாகத் தண்ணீப்பந்தல், மண்டகப்படி ஆகியன அமைத்தல்.
2. அம்பாளின் ஆலய வீதிகள், வெள்ளவாய்க்கால் ஆகியவை செப்பனிடுதல், மகோற்சவ காலத்தில் ஆலய வீதிகளுக்கு தண்ணீர் தெளித்தல்.
3. அம்பாளின் மகோற்சவ காலத்தில் துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு செய்தல்.
4. விளையாட்டுப் போட்டி, சமய அறிவுப்போட்டி நடத்துதல்.

முன்னர் மனோன்மணி அம்பாள் ஆலய மகோற்சவ காலத்தில் நடந்துவந்த சதுர்க் கச்சேரியை நடைபெறவிடாது தடுத்து சைவ அறிஞர்களால் அருளுரைகளும், கதாப்பிரசங்கங்களும் நிகழவைத்த பெருமையும் மனோன்மணி சனசமூக அன்பர்களையே சாரும்.

1995ல் யாழ் மண்ணில் ஏற்பட்ட மக்களின் இடப்பெயர்வு காரணமாக நிலையத்தின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைய நேர்ந்ததுடன் பெறுமதி மிக்க பல நூல்களையும், நிலைய சொத்துக்களையும் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எனினும் 1996ல் மக்களின் மீள்வருகையின் பின் நிலையத்தை மீண்டும் செயற்படுத்தும் நோக்குடன் நீண்டகால உறுப்பினர்களாகவும்,

முன்னாள் தலைவர்களாகவும் இருந்த திரு மு. சண்முகநாதன், திரு அ. இராசையா (ஐயாத்துரை) ஆகியோர் இளைஞர்களை ஒன்றுதிரட்டி இன்றும் இது செயற்படுவதற்கு காரணகர்த்தார்களாக இருந்தனர்.

சனசமூக நிலையத்தின் விஸ்தரிக்கப்பட்ட செயற்பாடுகளில் ஒன்றான சிறுவர் பாடசாலையும் இடப்பெயர்வின் காரணமாகச் செயற்படாது தடைப்பட்டு இருந்தது. ஆயினும் 1997ம் ஆண்டில் சிறுவர் பாடசாலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு இன்று அது முன்னாள் தலைவர் திரு இ. இராசையா அவர்களின் இல்லத்தில் மிகவும் சிறப்பாக செயற்பட்டு வருகின்றது. மேலும் இக் காலப்பகுதியில் ஆலயவீதிகள், வெள்ள வாய்க்கால்கள் என்பன நிலையத்தின் அங்கத்தவர்களால் செப்பனிடப்பட்டன. இக் காலப்பகுதியிலேயே மனோன்மணி விளையாட்டுக் கழகத்தை ஆரம்பித்து ஆர்வமிக்க இளைஞர்களை இணைத்து சுற்றுப்போட்டிகளில் கலந்து வெற்றிகளையும் ஈட்டி உள்ளது.

1999ம் ஆண்டில் விளையாட்டுக் கழகத்தையும், பாலர் பாடசாலையையும் புனரமைப்புச் செய்ததுடன் நிலையத்தால் சேகரிக்கப்பட்ட நிதிமூலம் மனோன்மணி அம்பாள் ஆலயத்திற்கு ஓர் ஒலிபெருக்கிக் கருவியையும் (Amplifier) அன்பளிப்புச் செய்துள்ளது. 12-02-2000ம் ஆண்டில் பாலர் பாடசாலையில் கல்வி பயிலும் சிறுவர், சிறுமியரின் உளவளர்ச்சியை மேம்படுத்தும் நோக்குடன் சிறுவர் பூங்கா ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது. இதனை நல்லூர்ப் பிரதேச சபைத் தலைவர் திரு செ. செல்வரட்ணம் அவர்கள் திறந்து வைத்தது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இக் காலப்பகுதியில் நல்லூர்ப் பிரதேச சபையின் நிதி ஒதுக்கல் மூலம் ரூபா இரண்டு இலட்சம் செலவில் கட்டிடப் புனர்நிர்மாணமும் செய்யப்பட்டுள்ளது. புனரமைக்கப்பட்ட புதிய கட்டிடத்தை 16-09-200ம் ஆண்டில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் திரு க. மணிபல்லவராஜன் அவர்கள் திறந்து வைத்தார்.

இவ்வாறு 1942ம் ஆண்டில் சிறு குடிசையில் மட்டுப்படுத்தப்பட்ட செயற்பாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்ட வாசிகசாலை பல தடைகளையும் தாண்டித் தன் செயற்பாடுகளை விஸ்தரித்து மனோன்மணி சனசமூக நிலையமாக வளர்ச்சி கண்டு தனது அறுபதாவது ஆண்டில் வைரவிழாவையும் கொண்டாடி, தொடர்ந்து காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப தனது சேவைகளை விஸ்த்தரித்து கிராம மக்களுக்கும், இளைஞர்களுக்கும், சிறுவர் சிறுமியர்களுக்கும், மனோன்மணி அம்பாள் ஆலயத்திற்கும் சேவைகளை செய்து வருகின்றது.

****

சனசமூக நிலையம் - பிரம்படி, கொக்குவில்

கொக்குவில் வாழ் மக்களிடையே நல்லெண்ணத்தையும், நட்புறவையும், சேவைமனப்பான்மையையும், அறிவையும், கலை கலாச்சாரப் பண்பாட்டையும், தமிழ் மொழியையும் ஒருங்கே வளர்க்க வேண்டும் என்ற நன்நோக்குடன் கிராமப் பெரியோர்களால் 1948ம் ஆண்டு ஆடித்திங்கள் 24ம் நாள் கொக்குவில் கிராமச்சங்கக் கட்டிடத்தில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் "கொக்குவில் சனசமூகச் சங்கம்" என்ற பெயருடன் உருவாக்கப்பட்டதே இந்நிலையமாகும். ஆரம்பத்தில் கிராமச் சங்கத் தலைவர் திரு. என். எஸ். சின்னத்துரை தலைமையில் இயங்கிய செயற்குழு இந்நிலையத்தை சிறப்பாக நிர்வகித்து வந்தது. சிறிது காலத்தின் பின் இந்நிலையத்தின் பெயர் "கொக்குவில் சனசமூக நிலையம்" என மாற்றப்பட்டு, உள்ளூராட்சி அமைச்சின்கீழ் பதிவு செய்யப்பட்டு, வருடந்தோறும் அரசாங்க நன்கொடைப்பணம் பெற்று வருகிறது. 1953ம் ஆண்டு இந் நிலையத்திற்கு ஓர் நிரந்தர கட்டிடம் அமைப்பதற்கு திரு. பொ. தர்மலிங்கம் அவர்கள் பிரம்படியில் அமைந்திருந்த தனது காணியில் அரைப்பரப்பு நிலத்தை நன்கொடையாக உறுதிப்பத்திரம் எழுதி வழங்கினார். இக் காணியில் 1954ம் ஆண்டு மாசித் திங்கள் 4ம் நாள் கட்டிடம் கட்டுவதற்கு அத்திவாரம் இடப்பட்டது. 1955ல் நிலையத்தின் மற்றுமொரு பிரிவான "கொக்குவில் சமூக சீர்திருத்த நாடக மன்றம்" 6.8.1955ல் மேடையேற்றிய "தூக்குமேடை" என்னும் சமூக நாடகத்தின் மூலம் சேர்ந்த பணம் முழுவதையும் கட்டிட நிதிக்கு அன்பளிப்புச் செய்திருந்தது. 1956ல் கட்டிடவேலை முடிவுற்று மார்கழித் திங்கள் 13ம் நாள் அப்போது கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபராக இருந்த திரு. எஸ். ஹண்டி பேரின்பநாயகம் அவர்கள் கட்டிடத்தை திறந்து வைத்தார். அன்றுமுதல் இன்றுவரை இக்கட்டிடத்திலேயே இந்நிலையம் இயங்கி வருகின்றது.

இந் நிலையமானது நூல் நிலையம், விளையாட்டுத்துறை, சமூகப்பணி, சமூக சீர்திருத்தத்தை பிரதான நோக்காகக் கொண்ட நாடக மன்றம் என பலபட செயற்பட்டு வந்தது. வாசகர்களின் தேவை கருதி ஈழத்தின் பிரபல தினசரிகளும், வார ஏடுகளும், வெளிநாட்டு வார, மாத சஞ்சிகைகளும் நூல் நிலையத்தில் கிடைக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. இந் நூல் நிலையம் யாழ் மாவட்டத்தில் உள்ள சனசமூக நிலையங்களால் நிர்வகிக்கப்பட்டு வரும் சிறந்த நூல் நிலையங்களுள் ஒன்றாகவும் விளங்கி வருகின்றது.

நிலைய அங்கத்தவர்கள் விளையாட்டுத்துறையில் போதிய ஆற்றல் உள்ளவர்களாகத் திகழ வேண்டும் என்ற நோக்குடன் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் போன்ற வெளியக விளையாட்டுக்களும், கரம் போன்ற உள்ளக விளையாட்டுக்களும் விளையாட்டுப் பிரிவினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தன. நிலைய விளையாட்டுக் குழுவினர் அவ்வப்போது பிற விளையாட்டுக் குழுக்களுடன் சிநேகபூர்வ போட்டிகளிலும், சுற்றுப்போட்டிகளிலும் பங்குபற்றி வெற்றிகளையும், வெற்றிக்கிண்ணங்களையும் பெற்றுள்ளனர்.

நிலையத்தின் பொதுப்பணிப் பிரிவானது சிரமதானமூலம் கிராமத்திற்கு பெருந் தொண்டாற்றி வந்தது. கொக்குவில் மயானத்தை சிரமதானமூலம் துப்பரவு செய்துள்ளது.

நாடக மன்றம் 1-7-1955ல் "கொக்குவில் சமூக சீர்திருத்த நாடக மன்றம்" என்ற பெயரில் ஆரம்பித்தது. இந் நாடக மன்றத்தின் நோக்கம் நாடகத்தின் மூலம் நம்சமுதாயத்திற்கு நல்வழியை, நல்ல கருத்துக்களை குறிப்பாக எம் தமிழ் சமுதாயத்தில் நிலவி வரும் சாதிமதபேதங்களையும், மூடநம்பிக்கைகளையும் முறியடித்து கலை. மொழி, பண்பாடு ஆகிய தமிழக் கலாச்சாரங்களை பின்பற்றச் செய்வதேயாகும். இந் நாடக மன்றம் 6-8.1955 ல் முதன் முதலாக "தூக்கு மேடை" என்ற நாடகத்தை கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் அரங்கேற்றி மக்கள் நல்லாசியையும், நன்மதிப்பையும் பெற்றது.

பின்னர் இதனைத் தொடர்ந்து 22-12-1956ல் "ஓரே ஆசை" என்ற நாடகத்தை கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்திலும், 20-5-1957ல் "சாக்ரடீஸ்" என்ற நாடகத்தை கொக்குவில் திறந்தவெளி அரங்கிலும், 18-5-1958ல் "தியாக வாழ்வு" என்ற நாடகத்தை கொக்குவில் திறந்தவெளி அரங்கிலும், 28-11-1960ல் "யார் குற்றம்" என்ற நாடகத்தை கொக்குவில் நாமகள் வித்தியாசாலையிலும், 28-5-1963ல் "சாக்கடைச் சமுதாயம்" என்ற நாடகத்தை கொக்குவில் திறந்தவெளி அரங்கிலும், 28-5-1964ல் "இலட்சியப் பாதையிலே" என்ற நாடகத்தை ஆனைக்கோட்டை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாசாலையிலும், 4-7-1964ல் "விடைகொடு தாயே" என்ற நாடகத்தை சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியிலும் அரங்கேற்றி ரசிகர்களின் அமோக வரவேற்பைப் பெற்றது. இதில் சாக்கடைச் சமுதாயம் நாடகத்தின்மூலம் திரட்டப்பட்ட நிதி ரூபா 1020/= இம்மன்றத்தின் மறைந்த கலைஞன் திரு. வ. முத்துலிங்கம்

அவர்களின் குடும்ப நல்வாழ்விற்காக அன்பளிப்புச் செய்யப்பட்டது. 1972ம் ஆண்டு ஆவணித்திங்கள் 18ம் நாள் இம்மன்றத்தின் பெயர் "நாடகக் கலாமன்றம்" என மாற்றம் பெற்று கொக்குவில் சனசமூக நிலையத்தின்கீழ் இயங்கி வருகின்றது. 30-9-1972ல் இம் மன்றம் கொக்குவில் இராமகிருஸ்ண மிஷன் பாடசாலை மண்டபத்தில் கலையரசு திரு. க. சொர்ணலிங்கம் அவர்கள் தலைமையில் "பணத்திற்கோர் குணமா" என்ற நாடகத்தையும், 24-5-1973ல் நிலையத்தின் வெள்ளிவிழா சிறப்பு நிகழ்ச்சியாக "யார் வாழலாம்" என்ற நாடகத்தையும் அரங்கேற்றியது.

சனசமூக நிலையத்தின் கடந்தகால செயற்பாடுகள்:-

01. பகிரங்க வேலைப் பகுதியினரால் கொக்குவில புகையிரத வீதியின் அருகே அமைந்துள்ள பெரும் வெள்ள வாய்க்காலின் ஒரு பகுதி தரைமட்டத்திற்கு சீமெந்தினால் கட்டப்பட்டு அதன்மேலாக பாதுகாப்புச் சங்கிலி தொடுக்கப்பட்டது.

02. ஏழைகளுக்காக ஒரு இலவச ஆயுள்வேத வைத்தியசாலை "கொக்குவில் சனசமூக நிலைய வாலாம்பிகை வைத்தியசாலை" என்ற பெயருடன் கொக்குவில் கிழக்கில் திறக்கப்பட்டு ஆயுள்வேத வைத்தியர் திரு. எஸ். சீனிவாசகம் முதலியாரால் நடாத்தப்பட்டது.

03. களவெடுத்தல், வழிப்பறி செய்தல் முதலிய குற்றச் செயல்கள் கொக்குவிலில் நடைபெற்ற காலத்தில் நிலையத்தின் ஆதரவில் குற்றஒழிப்புப் படையொன்று நியமிக்கப்பட்டு இரவு வேளையில் சுற்றுக்காவலில் ஈடுபட்டது. அதன் பயனாக மேற்கூறிய குற்றச் செயல்கள் கட்டுப்படுத்தப்பட்டன.

04. 1949ம் ஆண்டு நந்தாவிலில் பெருவெள்ளம் ஏற்பட்டபோது அரச உதவிஅதிபரின் அனுசரணையினால் ஒரு நீர் இறைக்கும் இயந்திரம் இரவலாகப் பெற்று வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வயல்களில் உள்ள நீரை வீதியின் குறுக்கே ஒரு வாய்க்கால் வெட்டி பெருவெள்ளவாய்க்காலுக்கு செலுத்தி வெள்ளம் கடலை சென்றடைய வகைசெய்யப்பட்டது. இதுவே நிலையத்தால் செய்யப்பட்ட முதல் சிரமதானச் செயலாகும்.

05. 1950ம் ஆண்டு யாழ்மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசத்தினால் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் எமது விளையாட்டுக்குழுவும் பங்குபற்றி வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

06. 1950ம் ஆண்டு நிலையம் மேற்கொண்ட முயற்சியின் பயனாக நிலையத்தின் ஆதரவில் இலவச பால் விநியோகம் நடைபெற்று வந்தது.

07. 1970 களில் இச்சுற்றாடலைச் சேர்ந்த இளைஞர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் க.பொ.த சாதாரண தரம், க.போ.த உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு மாலைவேளையில் இலவச வகுப்புகள் நடாத்தப்பட்டன.

08. இலங்கையில் இந்திய அமைதிகாக்கும்படை வந்திறங்கி யாழ்ப்பாணத்தில் போர்மூண்ட சமயம் கொக்குவில் மக்கள் பாதிப்புற்று கொக்குவில் இந்துக் கல்லூரியில் தஞ்சம் அடைந்திருந்தனர். அவ்வேளையில் கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்துடன் பொருளாதார, நிதி, சமூகசேவை ஆகிய விடயங்களில் ஒன்றிணைந்து செயற்பட்டது.

இச் சனசமூக நிலையம் சமய நிகழ்ச்சிகளாக தைப்பொங்கல், சரஸ்வதி பூஜை ஆகிய விழாக்களையும் நடாத்தி வருகின்றது. காலத்தின் கோலமாக நாட்டில் நடைபெறும் உள்நாட்டுப் போரால் பெரும்பாலான இளைஞர்கள் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டதாலும், தற்போது நிகழும் சமூக, அரசியல், பொருளாதார தாக்கங்களினாலும் இதன் செயற்பாட்டில் சில தாக்கங்கள் ஏற்பட்டுள்ளது. நாட்டில் சுமுக நிலை ஏற்படும் காலத்தே மீண்டும் தன் செயற்பாட்டில் வீறுநடை போடுமென நம்பலாம்.

****

கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம்

இலங்கையின் வடபகுதியான யாழ்ப்பாணத்தில் பல வழிகளிலும் சிறப்புற்று விளங்கும் கொக்குவில் கிராமத்தின் கிராம சேவகர் பிரிவுகளில் ஒன்றான கொக்குவில் மேற்கு பிரிவில் இச் சனசமூக நிலையம் அமையப் பெற்றமையால் இந் நிலையம் கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம் என பெயர் பெறலாயிற்று. 1948ம் ஆண்டளவில் இக் கிராமத்தில் வாழ்ந்த சில இளைஞர்களின் முயற்சியால் இச் சனசமூக நிலையம் புது வீதி, கொக்குவில் மேற்கு எனும் முகவரியில் தனியாருக்குச் சொந்தமான காணியில் ஒரு சிறு கொட்டில் அமைத்து ஆரம்பித்து வைக்கப்பட்டது. அப்பொழுது பொதுமக்கள் வாசிப்பதற்கு செய்திப் பத்திரிகைகள் மட்டுமே ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

சிறிது காலத்தின் பின் அதாவது 1948ம் ஆண்டின் பிற்பகுதியில் குளப்பிட்டி-ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு எனும் முகவரியில் ஒரு பரப்புக் காணி பொதுமக்களின் பங்களிப்புடன் வாங்கி அக் காணிக்குள் ஒரு கிணறும் வெட்டி எஞ்சிய நிலப்பகுதி முழுவதிலும் அத்திவாரமிட்டு கட்டிடம் கட்ட முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனாலும் அந் நேரத்தில் ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாக சில காலம் கட்டிட நிர்மாணம் செய்யப்படாது இருந்தது. அதன் பின்னர் புதிய நிர்வாகத்தினர் எடுத்த பெரு முயற்சியின் பலனாக கட்டிடம் சிறிது சிறிதாக கட்டி முடிக்கப்பட்டது.

1970களில் சன சமூக நிலையத்தின் நிர்வாகச் செலவை ஈடுசெய்யும் முகமாக ஊர் மக்களால் நடாத்தப்படும் வைபவங்களின் போதும், பொது வைபவங்களின் போதும் கொட்டகைகளை வாடைக்கு கொடுத்தல், மின்விளக்குகளை வாடகைக்கு கொடுத்தல், தேநீர் பரிமாறுவதற்கான கண்ணாடிக் குவளைகளை வாடகைக்கு கொடுத்தல், மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்த உற்சவத்தின் போது சமய சொற்பொழிவுளை நடாத்த தென்னிந்தியாவிலிருந்து சமய சொற்பொழிவாளர் கிருபானந்தவாரியார் அவர்கள் வருகைதரும் காலங்களில் துவிச்சக்கர பாதுகாப்பு மையம் அமைத்தல் என்பன மூலம் நிதி திரட்டப்பட்டன.

சன சமூக நிலையத்தின் செயற்பாடுகளாக பொது மக்கள் வாசிப்பதற்காக செய்திப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், சிறுவர்களுக்கான இலவச பால் விநியோகம், இளைஞர்களுக்கான உள்ளக விளையாட்டு வசதிகள், முதியவர்களுக்கான இரவு நேரப் பாடசாலை என்பவற்றுடன் பொங்கல் விழா போன்ற கலாச்சார விழாக்களும், மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்த உற்சவத்தின் போது வீதிகளை துப்பரவு செய்தல் போன்ற ஆலய தொண்டுகளையும், தண்ணீர்ப்பந்தல் அமைத்தல் போன்ற சமூகப் பணிகளையும் காலாகாலத்தில் நிலையத்தின் விரிவாக்கம் பெற்ற செயற்பாடுகளாக இடம்பெற்று வருகின்றன. இத்தோடு கொக்குவில் மேற்கு கிராம முன்னேற்றச் சங்கமும் இக்கட்டிடத்தில் இயங்கி கிராமத்தின் வளர்ச்சிக்கு உதவி புரிந்தார்கள்.

இவ்வாறாக வளர்ச்சி அடைந்து வந்த சன சமூக நிலையச் செயற்பாடுகளுக்கு இடவசதி போதாமையினால் இக் கட்டிடத்தை மாடிக் கட்டிடமாக மாற்றியமைக்க எண்ணி நிர்வாகத்தினரின் ஆலோசனைப்படி செயலாளர் செ. சண்முகசுந்தரம், இந் நிலையத்தின் வளர்ச்சிக்காக சிறுவயது முதற்கொண்டு அக்கறை காட்டியவரும் பிரபல வர்த்தகருமான திரு மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களைத் தொடர்பு கொண்டு கேட்ட போது அவரும் தன் நிறைந்த மனதுடன் ஒப்புக்கொண்டு குறுகிய காலத்தில் 75 இலட்ச ரூபாவிற்குமேல் செலவு செய்து சகல வசதிகளும் கொண்ட மாடிக்கட்டிடத்தை அமைத்து சன சமூக நிலையத்தின் செயற்பாடுகளுக்கென அன்பளிப்புச் செய்துள்ளார். இந் நிலையத்தில் தற்பொழுது சுகாதாரப் பகுதியினரால் தாய்-சேய் நலன் காக்கும் பிரிவு, நல்லூர் பிரதேச சபையினரால் இலவச சித்த ஆயுர்வேத வைத்திய சேவை, நூல் நிலையம், வாசிகசாலை, முன்பள்ளி போன்ற நற்பணிகள் இடம் பெறுகின்றன. அத்துடன் இச் சனசமூக நிலையமானது யாழ் அரச நிர்வாகப் பிரிவில் பதிவுசெய்யப்பட்டு **J/VC/18/CC/370** எனும் பதிவு இலக்கம் கொண்டு ஒரு பதிவு செய்யப்பட்ட நிலையமாக இயங்கி வருகின்றது.

இவ்வாறான சமூக சேவைகளை இன்று இந்நிலையம் செய்வதற்கு புதிய மாடிக்கட்டிடத்தை உருவாக்கித் தந்த கொக்குவில் மேற்கின் மைந்தன் திரு. மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களையும் அவரது குடும்பத்தினரையும் கௌரவிக்கும் பொருட்டு ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு மற்றும் முன்பள்ளி ஆகிய பிரிவுகளுக்கு "சுப்பிரமணியம் மாலதி ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு, முன்பள்ளி நிலையம்" என பெயரிடப்பட்டுள்ளது. இன்று இச் சன

சமூக நிலையமானது "கொக்குவில் மேற்கு சன சமூக நிலையம்-சுப்பிரமணியம் மாலதி ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு, முன்பள்ளி நிலையம்" என பெயர் கொண்டுள்ளது.

இப்போதைய நிர்வாகத்தில் தலைவராக டாக்டர். வி. வேதநாதனும், செயலாளராக சமாதான நீதிவான் திரு. செ. சண்முகசுந்தரம் அவர்களும், பொருளாளராக திரு. அ. சண்முகநாதனும் மேலும் பன்னிரண்டு நிர்வாக உறுப்பினர்களும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

****

கொக்குவில் மத்திய சனசமூக நிலையம்

1940ம் ஆண்டளவில் கொக்குவில் புதுக்கோவிலடி இளைஞர்கள் ஒன்றுகூடித் தங்கள் சமூக, அரசியல் பொதறிவை மேம்படுத்த "கொக்குவில் மத்திய வாசிகசாலை" என்று ஓர் நிலையத்தை உருவாக்கினர். இது புதுக்கோவில் வெளிவீதியின் வடகிழக்கு மூலையில் ஓலையால் வேயப்பட்ட ஒரு சிறிய கட்டிடத்தில் அமைந்திருந்தது. இந் நிலையத்தில் நாட்டின் அன்றைய இரண்டொரு பத்திரிகைகளும், வாரஏடுகளும் ஒழுங்காக கிடைக்கும். பின்னர் இவ் வாசிகசாலை புதுக்கோவில் மேற்கு வீதியில் கோயிலுடன் சேர்ந்திருந்த இரு கட்டிடங்களில் ஒன்றில் "கொக்குவில் சனசமூக நிலையம்" என்ற பெயருடன் இயங்கிவந்தது. திரு. க. தேவராசா என்பவர் இந் நிலயத்திற்கு பொறுப்பாக இருந்து கவனித்து வந்தார்.

அன்று இந் நிலையம் வாசிகசாலையை நடத்திவந்ததுடன் புதுக்கோவில் வடக்கு வீதியில் கரப்பந்தாட்டத்தையும் ஆரம்பித்து வைத்தது. இந் நிலையத்தின் கரப்பந்தாட்ட விளையாட்டு அணியானது அயற்கிராமத்து விளையாட்டு அணிகளுடன் சினேகபூர்வமான போட்டிகளிலும், சுற்றுப் போட்டிகளிலும் பங்கு பற்றி பல வெற்றிகளை பெற்றதுடன், தானும் பல சுற்றுப்போட்டிகளை நடாத்தியும் இருந்தது. மழைக்காலத்தில் கோவிலின் வடக்கு வீதி வெள்ளம் நிரம்பி நிற்கும் நிலமாக இருந்ததால் பின்னர் கரப்பந்தாட்டம் தெற்கு வீதியில் இடம் பெற்றது. இந் நிலையத்தின் இன்னொரு செயற்பாடாக புதுக்கோவில் மகோற்சவ நிறைவு விழாவான பூங்காவன உற்சவம் மிக விமரிசையாக நடாத்தப்பட்டு வந்தது. ஆர்வம் கொண்ட இளைஞர்கள் வேலை நிமித்தம் வேறு இடங்களுக்கு சென்றதனால்

காலப்போக்கில் இந் நிலையம் செயற்படாமற் போயிற்று.

1970 களிலும் 1980ன் ஆரம்பத்திலும் கொக்குவில் இந்துக் கல்லூரியில் சகல துறைகளிலும் சிறந்து விளங்கிய மாணவர்கள் பலர் கல்லூரியின் வளர்ச்சியில் குறிப்பாக விளையாட்டுத் துறையில் ஆர்வம் கொண்டவர்களாக இருந்தனர். இவர்களில் திரு. வீ. பவசிங்கம், திரு. நா. செல்வநாதன், திரு. சு. உமாசங்கர், திரு. நா. பாலகுமார் ஆகியோர் கல்லூரியின் விளையாட்டுத்துறையில் பயிற்றுவிப்பாளர்களாகவும் இருந்தனர். கல்லூரி விளையாட்டு அணிகளில் இடம்பெறும் வீரர்கள் அவர்களது திறமைகளை மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டுமாயின் அவர்கள் திறமையும் அனுபவமும் கொண்ட விளையாட்டுக் கழகங்களுடன் விளையாடுவதன் மூலம் அவர்களுக்கு அந்த வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுக்க முடியும் என இவர்கள் கருதினர். காரணம் இக் காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் சிறந்து விளங்கிய பாடசாலை அணிகளின் வீரர்கள் பலர் அப்பாடசாலைகளுடன் இணைந்த விளையாட்டுக் கழகங்களில் பங்குகொண்டு தமது திறமையை வளர்த்திருந்தனர். எனவே நாமும் கல்லூரியுடன் இணைந்த ஒரு விளையாட்டுக் கழகத்தை ஆரம்பிப்பதன் மூலம் இதனை நிறைவேற்ற முடியுமென எண்ணினோம். மேலும் புதுக்கோயிலின் மேற்கு வீதியில் இயங்கி வந்த கொக்குவில் சனசமூக நிலையமானது ஏறக்குறைய இரண்டு தசாப்த காலங்களாக இயங்காமையினால் இப்பகுதியில் ஒரு சனசமூக நிலையமும் அமைக்க வேண்டிய தேவையும் இருந்தது. எனவே இவற்றை நிறைவேற்றுவதற்கு எமக்கு ஒரு நிரந்தர கட்டிடம் தேவைப்பட்டது.

திரு. சு. வரதராஜேஸ்வரமுதலி, திரு. வீ. பவசிங்கம், திரு. ச. இராசநாயகம் ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் இளைஞர்கள் அனைவரும் சேர்ந்து புதுக்கோவிலின் வடக்கு வீதியில் இராஜன் கூல்பார் கட்டிடத்திற்கும் (முன்னர் வள்ளியாச்சி கடை), மாதர் முன்னேற்றச் சங்க கட்டிடத்திற்கும் இடையே அமைந்திருந்த புதுக்கோயில் ஆலயத்திற்கு சொந்தமான நிலத்தை குத்தகைக்கு எடுப்பதென தீர்மானித்தோம். இதற்கமைய திரு. சு. வரதராஜேஸ்வரமுதலி, திரு. நா. பாலகுமார், திரு. சு. உமாசங்கர், திரு. நா. இராஜேந்திரன், திரு. வீ. பத்மநாதன் ஆகியோர் அடங்கிய ஸ்தாபிதகால நிர்வாகக்குழு அமைக்கப்பட்டது. இக்குழுவானது தமது நோக்கங்களுடன், ஆலய நிர்வாகத்துடன் இணைந்து இயங்கும் நோக்குடன் இக் கட்டிடத்திலேயே கொக்குவில் மத்திய இந்து இளைஞர் மன்றத்தையும் அமைக்கும் தமது எண்ணத்தையும்

கடிதமூலம் ஆலய நிர்வாகசபைக்கு கையளித்தது. அதற்கமைய அப்போதய ஆலய நிர்வாகசபைத் தலைவர் திரு. மு. ஜெயரட்னம் அவர்களும், நிர்வாகசபைச் செயலாளரும் கையொப்பம் இட்டு எமக்கனுப்பிய கடிதத்தில் நாம் கேட்டுக்கொண்ட நிலப்பகுதியை 20 வருட குத்தகைக்கு தரச் சம்மதித்தனர்.

இதற்கமைய எமது நோக்கத்தில் அக்கறை கொண்ட கொக்குவில் வாழ் மக்கள் மற்றும் வெளிநாடுகளிலும் இலங்கையிலும் தொழில் செய்யும் நண்பர்களின் நிதிப்பங்களிப்புடன் 1981ம் ஆண்டு ஆடி மாதம் 23ம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட கட்டிட வேலைகள் யாவும் இளைஞர்களின் உடல் உழைப்பினாலும், பலரது கட்டிட நிர்மாணபொருட்கள் அன்பளிப்பினாலும், திரு. பொ. கமலநாதன் அவர்களது சேவையினாலும் (இலவச மின்சார இணைப்பு) நிறைவுற்று "கொக்குவில் மத்திய சனசமூக நிலையம்" என்ற பெயரில் 1982ம் ஆண்டு தை மாதம் 1ம் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணியை சேர்ந்த நல்லூர்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந் நிலையமானது யாழ் அரச நிர்வாகப்பிரிவில் பதிவு செய்யப்பட்டு J/VC/18/CC/540 எனும் பதிவிலக்கம் கொண்டு வாசிகசாலை, நூல் நிலையம், விளையாட்டுக்கழகம், கொக்குவில் மத்திய இந்து இளைஞர் மன்றம் என்பவற்றை தன்னகத்தே கொண்ட ஒரு பதிவு செய்யப்பட்ட நிலையமாக இயங்கி வருகின்றது. சங்கத்தின் இலடச்சனையானது கொக்குவில் இந்துக் கல்லூரியின் இலட்ச்சனையைப்போல் வடிவம் பெற்றும், இடப்பக்கத்தில் சக்கரத்தினுள் சங்கும், வலப்பக்கத்தில் பாடநூலும், நடுவே KCCC, Kokuvil என்ற வாசகமும், அதன் கீழே பந்து, துடுப்பாட்ட மட்டைகள் மற்றும் உதைபந்து என்பன பொறிக்கப்படடு இலட்ச்சனையின் மேற்புறத்தே அன்பு, அறிவு, ஆற்றல் என்ற வாசகங்களும் கீழ்ப்புறத்தே உயர்ச்சி தரும் என்ற வாசகத்துடன் நிலையம் ஆரம்பிக்கப்பட்ட 1982 ஆண்டையும் கொண்டு விளங்குகிறது. 1982ம் ஆண்டு திரு. ந. சிவானந்தராஜாவை தலைவராகவும், திரு சு. வரதராஜேஸ்வரமுதலியை உபதலைவராகவும், திரு. சு. உமாசங்கரை செயலாளராகவும், திரு. நா. பாலகுமாரை பொருளாளராகவும் கொண்ட நிர்வாகசபையானது ஏனைய பதினொரு நிர்வாகசபை உறுப்பினர்களதும், நிரந்தர மற்றும் சாதாரண அங்கத்தவர்களினதும் ஒத்துழைப்புடனும், திரு. அ. பஞ்சலிங்கம், திரு. மு. ஜெயரெட்னம், திருமதி. ச. கந்தவனம் ஆகியோரை போசகர்களாகக் கொண்டு திறம்பட இயங்கி வந்தது.

இந் நிலையத்தில் வாசகர்களது தேவையை நிறைவேற்றும் பொருட்டு செய்திகள், கட்டுரைகள், நகைச்சுவை, விளையாட்டுத்துறை ஆகியன அடங்கிய தினசரி, வாராந்த, மாதாந்த தமிழ், ஆங்கில பத்திரிகைகளும், மாணவர்களின் நன்மைகருதி பொருளியல்நோக்கு, மத்தியவங்கி அறிக்கை, வணிகம், கணக்கியல், விஞ்ஞானம் சார்ந்த புத்தகங்களும் அங்கத்துவ அடிப்படையில் புத்தக இரவல் பகுதியினூ டாகவும் வழங்கப்பட்டு வந்தன. இரவல் பகுதிக்கான நூல்களை நிலைய அங்கத்தவர்கள் பலர் நன்கொடையாக வழங்கியிருந்தனர்.

விளையாட்டுப்பிரிவானது உதைபந்தாட்டம், துடுப்பாட்டம், பூப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் போன்ற வெளியக விளையாட்டுக்களிலும், கரம், சதுரங்கம், மேசைப்பந்து போன்ற உள்ளக விளையாட்டுக்களிலும் தமது அங்கத்தவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தது. விளையாட்டுக்கழகமானது போட்டிகளுக்கு அணிகளைத் தேர்வு செய்யும்போது அவற்றிற்கான வீரர்களை தனது அங்கத்தவர்களில் இருந்து மட்டுமல்லாது ஏனைய சனசமூக நிலையங்களான வளர்மதி சனசமூக நிலையம், பிரம்படி சனசமூக நிலையம், பொற்பதி விளையாட்டுக் கழகம் ஆகியவற்றிலிருந்தும் சிறந்த வீரர்களை தேர்வு செய்து போட்டிகளில் பங்குபற்றி வந்தது. இதன் மூலம் சகோதர சனசமூக நிலையங்களுடன் நல்லுறவையும் பேணிவந்தது. அத்துடன் தனது நோக்கான பாடசாலை அணிவீரர்களின் திறனை மேம்படுத்தும் பொருட்டு அவர்களையும் தனது அணிகளில் இணைத்து போட்டிகளில் பங்குபற்றச் செய்தது. இன்று கல்லூ ரியின் விளையாட்டு அணிகள் யாழ் பாடசாலை அணிகளிடையே திறமைவாய்ந்ததாகக் காணப்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்துள்ளது என்பதில் நாம் பெருமை கொள்ளலாம். ஆரம்ப காலத்தில் விளையாட்டுக் கழகத்திற்கான உபகரணங்களை திரு. தே. ரகு, திரு. கு. தருமதேவா, காலம் சென்ற திரு. நா. தெய்வேந்திரன், திரு. நா. பாலகுமார், காலம் சென்ற திரு. வீ. பவசிங்கம், திரு. வ. ரவீந்திரன், திரு.சு. உமாசங்கர், திரு. மா. ஜெகன்மோகன், திரு. க. கதிர்வேல் (துடுப்பாட்ட உபகரணங்கள்) ஆகியோர் வழங்கியிருந்தனர். உதைபந்தாட்ட அணிகளுக்கான சீருடைகளை திரு. ச. பிரேம்குமார், திரு. மா. ஜெகன்மோகன், திரு. V. ரூபன், திரு. G. பிரபாகரன், திரு. G. உதயமூர்த்தி, திரு. V. உருத்திரலிங்கம், காலம் சென்ற திரு. G. ரவிமூர்த்தி, காலம் சென்ற திரு. V. பவசிங்கம் ஆகியோர் அன்பளிப்புச் செய்திருந்தனர்.

நிலைய விளையாட்டுக் கழகமானது சுற்றுப்போட்டிகளில் பங்குபற்றுவதுடன் பல சுற்றுப்போட்டிகளையும் நடாத்தியுள்ளது.

1980 களில் எமது கழகத்தின் துடுப்பாட்ட அணியானது பதினொருபேர், மற்றும் ஆறுபேர் கொண்ட அணிகளுக்கிடையிலான சுற்றுப்போட்டிகளில் விளையாடி பல வெற்றிகளையும். சாதனைகளையும் படைத்து மிகவும் பலம்வாய்ந்த அணியாகத் திகழ்ந்தது. 1998ல் முரசொலி பத்திரிகையினால் நடாத்தப்பட்ட பதினொருபேர் கொண்ட அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியில் யாழ் உதயன் பத்திரிகையின் அணியான சப்றா விளையாட்டுக்கழகத்தை நா. பாலகுமார் தலைமையிலான நிலைய அணி வென்று சம்பியன் விருதைப்பெற்றது. இவ் வெற்றிக்குச் சகல வீரர்களினதும் பங்களிப்பும், நிலைய அணியின் ஆதரவாளர்களது பங்களிப்பும் பெரும் பங்காற்றியது குறிப்பிடத்தக்கது. நிலைய அணியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியின் வீரர்கள் பலர் இடம்பெற்றிருந்தனர். அவர்களது திறமையான விளையாட்டு நிலையத்திற்கு பெரும் புகழையும் பெற்றுத்தந்தது குறிப்பிடத்தக்கது. இன்று நாட்டில் நிலவும் அரசியல் சூழ்நிலையினால் முன்னரைப்போல் அதிக அளவில் கழகங்களுக்கு இடையேயான போட்டிகள் இடம் பெறுவதில்லை. எனினும் நாட்டில் சுமூக நிலை ஏற்பட்டபின் மீண்டும் அதிக அளவிலான போட்டிகள் நடைபெறுமென நம்புவோம்.

சங்கத்தின் இந்து இளைஞர் மன்றமானது ஆலய வருடாந்த உற்சவத்தின் இறுதி விழாவான பூங்காவனத் திருவிழாவில் வெளிப்புற அலங்கார திருவிழாவைச் செய்து வந்ததுடன், 1990களில் சப்பறத்திருவிழாவையும் செய்து வந்தது. மேலும் திருவிழாக் காலங்களில் தண்ணீர்ப்பந்தல் அமைத்தல், மடைவைத்தல், வீதிக்கு தண்ணீர் தெளித்தல் ஆகியவற்றையும் செய்து வந்தது. மேலும் கந்தசஷ்டியில் வரும் சூரன்போர்த் திருவிழாவையும் செய்து வந்தது.

இன்று இச் சனசமூக நிலைய நிர்வாகமானது தலைவர் திரு. ஆ. சத்தியமூர்த்தியின் தலைமையின் கீழ் காங்கேசன்தறை வீதியில் கல்லூரிவாசலுக்கு வடக்காக அமைந்துள்ள நிலப்பரப்பை வெளிநாட்டில் வாழும் நிலையத்தின் நிரந்தர அங்கத்தவர்களின் நிதிப்பங்களிப்புடன் சொந்தமாக வாங்கி அதில் புதிய இரண்டுமாடிக் கட்டிடத்தை அமைத்துள்ளது. இக்கட்டிடத்தின் கீழ்த்தளத்தில் சிறுவர்களுக்கான ஆரம்பப்பாடசாலையும், மேல்தளத்தில் விளையாட்டுப்பிரிவும் இயங்கி வருவதுடன் கோயிலின் வடக்கு வீதியில் அமைந்துள்ள கட்டிடத்தில் வாசிகசாலையும் இயங்கி வருகின்றன. இச் சிறுவர் பாடசாலையில் இரு ஆசிரியைகள் ஏறக்குறைய இருபத்திஐந்து சிறுவர் சிறுமியர்களுக்குக் கல்விபுகட்டி வருகின்றனர்.

ஆரம்ப காலத்தில் நிர்வாகமானது நிலையத்தின் நிர்வாகச் செலவிற்கான நிதியினை வெளிநாட்டில் மற்றும் இலங்கையில் வாழும் அங்கத்தவர்களின் நன்கொடை மூலமும், வருடாந்த அங்கத்துவ சந்தா மூலமும், தேனீர்குவளைகளை வாடகைக்கு விடுவதன் மூலமும் பெற்றுக் கொண்டது. பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பன பல அங்கத்தவர்களால் நன்கொடையாக வழங்கப்பட்டு வந்ததுடன் நிர்வாகம் தனது வங்கி வைப்பிலிருந்து பெற்ற வட்டிமூலம் சில பத்திரிகைகளை வாசகர்களுக்கு வழங்கி வந்தது. இன்றும் அங்கத்தவர்கள் பலர் நன்கொடையாகப் பத்திரிகைகளை வழங்கி வருகின்றனர். மேலும் பூர்த்தி செய்யப்படாத கட்டிட வேலைகளை நிறைவேற்றும் பொருட்டு சனசமூக நிலைய நிர்வாகசபைத் தலைவர் திரு. ஆ. சத்தியமூர்த்தியின் வேண்டுகோளிற்கு இணங்க கனடாவிலிருந்தும், லண்டனிலிருந்தும் சங்கத்தின் நிரந்தர அங்கத்தவர்கள் நிதியுதவி செய்து வருகின்றனர்.

இன்று இச் சனசமூக நிலையமானது நாட்டில் நிலவும் அரசியல் சூழ்நிலை காரணமாக வரையறுக்கப்பட்ட சேவைகளையே சமூகத்திற்கு வழங்கக்கூடியதாக உள்ளது. நாட்டில் இயல்பு நிலை ஏற்பட்டபின் வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் வாழும் நிரந்தர அங்கத்தவர்கள், சாதாரண அங்கத்தவர்கள், நிலைய நலன்விரும்பிகள் ஆகியோரின் பூரண ஒத்துழைப்புடன் திறம்பட எமது சமூகத்திற்கு சேவையாற்ற உறுதி கொண்டுள்ளது.

*****

கொக்குவில் கிழக்கு பொற்பதி சனசமூக நிலையம்.

1967 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திரு. அ.இராமநாதன், திரு. சி.சுப்பிரமணியம், திரு.மு. தியாகராசா ஆகியோரின் முயற்சியால் பொற்பதிவாழ் இளைஞர்கள் ஒன்றுதிரட்டப்பட்டு பொற்பதி சனசமூக நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு சட்டதிட்ட அமைப்புகள் அடங்கிய யாப்பும் தயாரிக்கப்பட்டது. இச்சனசமூக நிலையமானது பொற்பதி இந்து இளைஞர் சங்கம் மற்றும் விநாயகர் படிப்பகம் என இரு அமைப்புகளைக் கொண்டதாக இயங்கி வந்தது.

இந் நிலையம் இயங்குவதற்கான இடம் வாடகை அடிப்படையில் திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம் ஆசிரியையிடம் பெறப்பட்டது. நிலைய நிர்வாகச் செலவிற்காக அங்கத்தவர்களிடமிருந்து வருடாந்த அங்கத்துவப்பணமும், ஊர்மக்களிடமிருந்து நன்கொடைகளும் பெறப்பட்டு வந்தன. நிலைய தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவிற்காக ஒரு நிதியுதவிக் காட்சியும் நடாத்தப்பட்டு நிதி திரட்டப்பட்டது.

படிப்பகத்திற்கான நூல்கள் சஞ்சிகைகள் என்பன ஊர் மக்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டு வந்தன. இந் நிலையத்தில் ஊர்ப் பிரமுகர்கள் ஆயுள் அங்கத்தவர்களாகவும், ஏறக்குறைய 200 அங்கத்தவர்கள் சாதாரண அங்கத்தவர்களாகவும் இருந்தனர்.

ஆரம்ப காலத்தில் தனியார் காணியில் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், மென்பந்துக்கிறிக்கட் ஆகியன நடைபெற்று வந்தன. பின்னர் பனைகளும், பற்றைகளும் நிறைந்து காணப்பட்ட கொக்குவில் கிராம சபைக்கு சொந்தமான காணி பெறப்பட்டு இளைஞர்களின் அயராத உழைப்பினால் சீர்திருத்தப்பட்டு நிலையத்துக்கான விளையாட்டு மைதானமும் அமைக்கப்பட்டு அதில் மேற்கூறிய விளையாட்டுக்கள் நடைபெற்று வந்தன.

இந்து இளைஞர் மன்றத்தால் சமய விழாக்களும், குருபூசைகளும் வருடாவருடம் சிறப்பாக நடாத்தப்பட்டு வந்தன. ஒவ்வொரு ஆண்டும் வருடப்பிறப்பன்று பகலில் வருடாந்தப்

பொதுக்கூட்டம் நடைபெற்று புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்படுவதுடன், மாலையில் பல கலைநிகழ்ச்சிகளும் சிறப்பாக நடாத்தப்பட்டு வந்தன.

சங்கத்தின் இளைஞர்கள் உதைபந்தாட்டத்தில் அதிக ஆர்வம் கொண்டவர்களாகக் காணப்பட்டதுடன் அவர்களில் பலர் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், பரமேஸ்வரா கல்லூரியிலும் சிறந்த உதைபந்தாட்ட வீரர்களாகவும் விளங்கினர். இவர்களது ஆர்வத்திற்கு உந்து சக்தியாக திரு. சிவகுரு அவர்கள் (முறிவுதறிவு சிகிட்சையாளர்,யாழ் போதனா வைத்தியசாலை) விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது வழிகாட்டுதலினாலும், அயராத முயற்சியினாலும் பொற்பதி விளையாட்டுக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் தலைசிறந்த விளையாட்டுக் கழகமாக திகழ்ந்தது. திரு. சிவகுரு அவர்களின் முயற்சியினால் இக் கழகத்தின் உதைபந்தாட்டக் குழுவில் இப்பகுதி இளைஞர்கள் மட்டுமல்லாது கொக்குவில் இந்துக் கல்லூரியில் சிறந்து விழங்கிய வீரர்களும், யாழ் இந்துக் கல்லூ ரியில் சிறந்து விழங்கிய வீரர்களும் இடம் பெற்றிருந்ததுடன் அன்று யாழ்ப்பாணத்தில் இயங்கிய எல்லா உதைபந்தாட்ட கழகங்களாலும், உதைபந்தாட்ட ரசிகர்களாலும் பெரிதும் மதிக்கப்பட்ட விளையாட்டுக் கழகமாகவும் திகழ்ந்தது. குறிப்பாக பாஷையூர் விளையாட்டுக் கழகம், குருநகர் விளையாட்டுக் கழகம், கோண்டாவில் குமரன் விளையாட்டுக் கழகம், காங்கேசன்துறை யங்றோயல் விளையாட்டுக் கழகம், அரியாலை விளையாட்டுக் கழகம், குரும்பசிட்டி விளையாட்டுக் கழகம், மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாண விளையாட்டுச் சங்கம் ஆகியன நடாத்தும் சுற்றுப்போட்டிகளில் பொற்பதி விளையாட்டுக் கழகம் பங்குபற்றும் போட்டிகளுக்கு ரசிகர்கள்கூட்டம் அலைமோதுவது சிறப்பம்சமாகும்.

இக் கழகத்தின் வீரர்கள் ஏனைய கழக வீரர்களுடன் ஒப்பிடுகையில் சிறியவர்களாகவும், தமக்கிடையே விரைந்து பந்தை பரிமாறி கோல்களைப்போடுவதும் உதைபந்தாட்ட ரசிகர்களை மிகவும் கவர்ந்த அம்சமாகும். ஆண்டுதோறும் நிகழும் எல்லாச் சுற்றுப்போட்டிகளிலும் பங்குபற்றி அதிகமான போட்டிகளில் சம்பியன் விருதைத் தமதாக்கிக் கொள்வது கழகத்தினதும், வீரர்களதும் திறமைக்கு கிடைத்து வந்த பரிசுகளாகும். நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழலினால் ஆர்வமும், திறமையும் கொண்ட இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டதாலும், விளையாட்டுக் கழகத்தின் முதுகெலும்பாக

விளங்கிய மதிப்பிற்குரிய திரு. சிவகுரு அவர்கள் இறையடி எய்தியதாலும் இவ் விளையாட்டுக் கழகமும், சனசமூக நிலையமும் இன்று இயங்காமல் உள்ளது என்பது மிகவும் வேதனைக்குரியதே.

இன்று இப்பகுதியில் வாழும் இளைஞர்கள் வெளிநாடுகளில் வாழும் முன்னைநாள் அங்கத்தவர்கள், விளையாட்டு வீரர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி மீண்டும் இச் சனசமூக நிலையத்திற்கும், விளையாட்டுக் கழகத்திற்கும் உயிரூட்டுவார்களென நம்புவோம்.

****

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும், சனசமூக நிலையமும்

விளையாட்டு விளையாட்டாக விளையாட்டுக்கென ஆரம்பிக்கப்பட்ட ஓர் விளையாட்டுக் கழகமே, படிப்படியாக முன்னேறி இன்று கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும், சனசமூக நிலையமுமாக வளர்ச்சி கண்டுள்ளது. இதற்கு வித்திட்டவர்கள் அன்று இளைஞர்களாக இருந்த சின்னத்துரை குகனேந்திரன், திருச்செல்வம், செல்வகுமார், பரஞ்சோதி, ஜெகநாதன், சின்னத்துரை சிதம்பரநாதன் ஆகியோராவர். விளையாட்டுக் கழகத்திற்கு "வளர்மதி" என்ற பெயரும் இவர்களாலேயே இடப்பட்டது. 1963ம் ஆண்டளவில் திரு. நடராசா (Man Nadarasa) அவர்களின் காணியில் ஆடிய கிரிக்கட் ஆட்டத்துடன் இக் கழகம் உதயமானது. பின்னர் இக்கழகத்தினரால் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களோடு "சாக்கிரட்டீஸ், கண்கள் திறந்தன" ஆகிய நாடகங்களும் நடாத்தப்பட்டுள்ளன. பல விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகளை ஈட்டிய இக்கழகம், பலராலும் பாராட்டப்பட்டு முன்னேறி 1973ம் ஆண்டில் தனது பத்தாவது ஆண்டு நிறைவையும் சிறப்பாகக் கொண்டாடியது.

சனசமூக நிலையம் உருவாக உதவியவர் திரு. சி.பொ. வேலாயுதபிள்ளை. இப் பெரியார் சனசமூக நிலையம் நடாத்த தனது கட்டிடம் ஒன்றை இலவசமாக உதவி, பத்திரிகை ஒன்றையும் தாமே பொறுப்பேற்று நிலையத்திற்கு வழங்கி வந்துள்ளார். இந்நிலையம் சிவநெறிச் செல்வர் திரு க. கனகராசா (Milk

White Soap) அவர்களால் 12.09.1975 இல் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. நிலையச் செயற்பாடுகளை விரிவாக்க இக் கட்டிடத்தில் இடம் போதாமையினால் 10.08.1976 இல் அருகமைந்திருந்த ஓவசியர் திரு. வி. இராசதுரை அவர்களின் கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

தற்போதைய நிரந்தரக் கட்டிடம் திரு. இளையதம்பி இராசரத்தினம் அவர்கள் மனமுவந்து அன்பளிப்புச் செய்த 2 பரப்புக் காணியில் இப் பெருமகன் வழங்கிய பண உதவியோடு வளர்மதி அங்கத்தவர்களின் அயரா உழைப்பையும் சேர்த்து நிர்மாணிக்கப்பட்டதாகும். இக் கட்டிட வேலைகளில் பெரும் பங்கு அங்கத்தவர்களின் சிரமதானத் தொண்டாகும். இக் கட்டிடக்காணி அமைந்துள்ள நிலப்பிரதேசத்தில் பல ஆண்டுகளுக்கு முன்னர் ஓர் விநாயகர் ஆலயம் இருந்ததாகவும் அதன் இடிபாடுகளில் கிடைத்த கற்களும் இக்கட்டிடம் கட்டப் பாவிக்கப்பட்டுள்ளதாகவும் அறிகிறோம். கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும், சனசமூக நிலையமும் அமைந்துள்ள கட்டிடத்திற்கு தெற்கே பிரசித்திபெற்ற மாத்தனை முருகன் ஆலயம் உள்ளதால் இச் சூழல் ஓர் புனித பிரதேசமாகக் கருதப்படுகிறது.

1988 ஆம் ஆண்டிற்கு பிந்திய காலப்பகுதியில் வளர்மதிக்குப் பின்புறமாக இருந்த 2.5 பரப்பு நிலமும், மேற்குப்பக்க ஒழுங்கைக்கு அப்பால் உள்ள நிலமும் கழகப் பாவனைக்காகக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இதில் ஒரு நிலப்பரப்பில் அமரர் திரு. சி. பொ. வேலாயுதபிள்ளையின் நினைவாக "சி.பொ. வேலாயுதபிள்ளை ஞாபகார்த்த மண்டபம்" அன்னாரின் மகன் திரு. சி.பொ.வே.கருணாமூர்த்தியினால் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் வளர்மதிக்கு அருகே அமைந்திருந்த இன்னொரு காணியும் கொள்வனவு செய்யப்பட்டு, சிறார்களின் உடல், உள ஆரோக்கியத்திற்காக சிறுவர் பூங்காவும், சிறுவர் விளையாட்டு மைதானமும் அமைக்கப்பட்டுள்ளன.

வளர்மதி கழகம் ஐந்து ஆறு அங்கத்தவர்களுடன் ஆரம்பித்து வெள்ளிவிழாக் கண்ட காலமாகிய 1988ம் ஆண்டில் நூற்றுக்கு மேற்பட்ட உள்நாட்டு மேல் நாட்டு அங்கத்தவர்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கிற்று. இன்று இவ்வெண்ணிக்கை நூற்றுஐம்பதிற்கும் மேலாகும். வருடாவருடம் தெரிவு செய்யப்படும் நிர்வாகக்குழு அங்கத்தினர் வளர்மதி கழகத்தையும், சனசமூக நிலையத்தையும் திறம்பட நடாத்தி வருகின்றனர். 2009 ஆம் ஆண்டின் நிர்வாகக்குழுவில்

திரு.அ.பஞ்சலிங்கம், திரு. சி.குகனேந்திரன், திரு.வை.சிவனேசன் ஆகியோர் போஷகர்களாகவும், வே.கருணாமூர்த்தி, என்.தவநாதன், கே.குகபாலன், பத்மநாதன் ஆகியோர் ஆலோசகர்களாகவும் உள்ளனர். ப. பகீரதன் தலைவராகவும், ப. அன்பரசன் செயலாளராகவும், திரு. பாலேஸ்காந்தன் பொருளாளராகவும் கடமையாற்றி வருகின்றனர்.

இந்நிறுவனம் நூல்நிலையம், விளையாட்டுத்துறை, கலைமன்றம், சிறுவர்பகுதி, சிரமதானப்பகுதி, முன்பள்ளித்துறை, மகளிர் அமைப்பு எனப் பல துறைகளில் செயற்பட்டு சமய, மத, மொழி, அறிவு, உடல்வளர்ச்சி ஆகியவற்றைப் பேணிக் காப்பதுடன் சமூக, சமுதாயத் தொண்டுகளையும் நல்ல முறையில் முன்னின்று நடாத்தி வருகின்றது. அந்தவகையில் இந் நிறுவனம் சமுதாயத்திற்கு ஆற்றிவந்துள்ள சேவைகள் சிலவற்றை இங்கு தருகிறோம்.

01. ஆரம்பத்தில் கழக அங்கத்தவர்கள் பல விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகளை ஈட்டியதனால் கழகம் பிரபல்யப்படுத்தப்பட்டது.

02. பொ. குமாரதாஸ், ச. விஜயகுமாரன், ச. மயில்வாகனம் போன்ற இளைஞர்களின் சிரமதான சேவைமூலம்

அ. நந்தாவில் குளம் ஆழமாக்கல்
ஆ. காலத்திற்கு காலம் வெள்ளவாய்கால் துப்பரவாக்குதல்
இ. வீதிகளில் உள்ள பற்றைகளை வெட்டிச்செப்பனிடுதல்
ஈ. பாடசாலைக் காணிகளை துப்பரவு செய்தல்

03. கழகத்தின் கலைமன்றத்தினர் " கண்கள் திறந்தன " , " இதயம் மறப்பதில்லை ", "சாக்கடையா? சமுதாயமா?", "முத்தழகி", " சங்கமம் ", " நக்கீரர் ", "றொக்கற் கந்தப்பு "ஆகிய நாடகங்களை கொக்குவிலிலும், அயற்கிராமங்களிலும் பலர் பாராட்ட மேடையேற்றினர். இவற்றை முன்னின்று நடாத்தியவர் திரு. பொ. செல்வராசா ஆவர்.

04. இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு மாத்தனைப் பகுதிக்கு வந்த மக்களுக்கு உணவுப்பொருட்கள், உடுபுடவைகள், என்பவற்றை சேகரித்து வழங்கி வருகின்றனர்.

05. இப்பகுதி மக்கள் கள்வர்களின் அட்டகாசத்தால் அல்லலுற்றபோது இரவுரோந்து மேற்கொண்டு மக்கள் துயர் துடைத்துள்ளனர்.

06. இப்பகுதியில் இடம்பெற்ற பொதுக்காரியங்களில் கழக இளைஞர்களும் ஈடுபட்டு தம்மால் இயன்ற உதவிகளைப் புரிந்து வந்துள்ளனர்.

07. வாசிகசாலைக்கு எக்காலத்தும் தடங்கல் இல்லாமல் பத்திரிகைகள், சஞ்சிகைகள் கிடைக்கஒழுங்கு செய்துள்ளனர். சிறிது காலம் " உள்ளம் " என்ற வெளியீடும் நிலையத்தால் வெளியிடப்பட்டது.

08. தைப்பொங்கல், சிவராத்திரி, நவராத்திரி என்பவற்றுடன் அருகிலுள்ள மாத்தனை முருகன் ஆலய உற்சவ காலங்களில் மண்டகப்படி வைத்தும், அடியார்களுக்கு தாகசாந்தி, அன்னதானம் முதலியன செய்தும் வந்துள்ளனர்.

09. நிலையத்தின் நூலகப்பகுதி 1984 இல் புத்தகம் இரவல் கொடுக்கும் சேவையையும் ஆரம்பித்துள்ளது.

10. 1985ஆம் ஆண்டிலிருந்து சிறுவர் பாடசாலையும் 1986இல் இருந்து நடன சங்கீதப் பயிற்சி வகுப்புகளையும் சிறப்பாக நடாத்தி வருகின்றனர்.

11. 1987ல் இந்திய அமைதிகாக்கும் படையினரால் கொக்குவிலில் சில வீடுகள் எரித்து நாசமாக்கப்பட்டன. அச்சமயம் ஒரு வீடமைப்புத் திட்டத்தை உருவாக்கி யாழ் றொட்டறிக் கழகம், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஆகியவற்றோடு இணைந்து மூன்று வீடுகள் கட்டிக் கொடுத்துள்ளது.

12. இதேகாலப்பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களினால் இடர்ப்பட்ட மக்கள் வளர்மதி சனசமூக நிலையத்திலும் அருகமைந்த மாத்தனை முருகன் ஆலயத்திலும் தஞ்சம் புகுந்தனர். அப்போது கழகம் தம்மால் இயன்ற உதவிகளை அவர்களுக்கு அளித்து உதவியது மட்டுமல்லாமல் ஓர் தற்காலிக வைத்திய சாலையையும் அமைத்துக் காயமுற்றோருக்கும், நோயுற்றோருக்கும் சிகிச்சை அளித்து அரும்பணி ஆற்றியுள்ளது.

13. யாழ்ப்பாணத்தில் பொருட்கள் தட்டுப்பாடாக இருந்த நேரத்தில் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துடன் ஒத்துழைத்து பொருட்களை நிதானவிலையில் வாங்கி அகதிமுகாமிற்கு

ஒருதொகைப் பொருட்களை இலவசமாகவும் வழங்கியுள்ளது.

14. கழகத்தின் வெள்ளிவிழாவையொட்டி மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டி, உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி, கரம் சுற்றுப்போட்டி என்பவற்றோடு, கழக ஸ்தாபகர் அமரர் திரு. இ. இராசரத்தினத்தின் ஞாபகார்த்தமாக பொதுஅறிவுப் போட்டியும் நடாத்தப்பட்டு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கியுள்ளது.

15. யாழ்ப்பாணம் வடமாராட்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்கள் சுனாமியால் பாதிப்படைந்த நேரத்தில் அப்பகுதி மக்களுக்கும் கழகம் உரிய சேவைகளை ஆற்றத் தவறவில்லை.

இப்படியாக அந்தந்த காலநேரங்களுக்கு ஏற்றவகையில் சேவையாற்றிவரும் வளர்மதி நிறுவனம் மாணவர்களின் கணனி அறிவை வளர்க்க கணனி வகுப்புகளையும் நடாத்தி வருகின்றது. மேலும் 2002ஆம் ஆண்டளவில் முதியோர் பராமரிப்பிற்காக "நிறைவாழ்வகம்" என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தி வெளிநாட்டு, உள்நாட்டு அங்கத்தவர்களின் பேருதவியும் ஆதரவும் கொண்டு முதியோர் தேவைகளையும் கவனித்து வருகின்றது. மறைந்த இளைஞர்களான விக்கிரமன், இராஜன், கங்கு ஆகிய மூவரின் ஞாபகார்த்தமாக ஆண்டுதோறும் நடைபெற்று வரும் துடுப்பாட்டப்போட்டி இவ்வருடமும் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

வளர்மதி நிறுவனத்தினரால் நடாத்தப்பட்ட முக்கிய நிகழ்சிகளின் வரிசையில் முதலில் இடம்பெறுவது முன்னர் குறிப்பிட்ட பத்தாவது ஆண்டு நிறைவு விழாவாகும். இது 1973 இல் நடைபெற்றது. 9.10.1976 தினத்தன்று ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரியில் வளர்மதியின் பதின்மூன்றாவது ஆண்டு நிறைவு விழா நடந்தேறியது. புதிய கட்டிடத்திற்குரிய அடிக்கல்நாட்டு வைபவம் 29.06.1978ம் நாள் நடைபெற்றது. அன்றைய தினம் அத்திவாரக்கல் திருவாளர்கள் சி.பொ.வேலாயுதபிள்ளை, இ.இராசரத்தினம், சு.சிவனேசன், சுங்க இலாகா அதிகாரி சேனாரட்னா, திருமதி. சரஸ்வதி கணேஸ்வரன் ஆகியோரால் வைக்கப்பட்டு கட்டிடவேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. பத்தொன்பதாவது நிறைவு விழாவும், கட்டிடத்திறப்பு விழாவும் 1982 இல் கொண்டாடி "வளர்மதி" என்ற பெயரில் மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. இதேபோல் மீண்டும் ஒரு மலர் 1988இல் நடைபெற்ற வெள்ளிவிழாக் காலத்தும் வெளிவந்துள்ளது. 2004 ஆம் ஆண்டளவில் கொக்குவில் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களுக்கு "சேவை நலம் பாராட்டு விழா" எடுத்துக் கௌரவித்துள்ளது. நல்லூர்

பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவரும் சிறந்த சமூக சேவையாளருமாகிய திரு.கனகசபாபதி அவர்களின் சேவையைப் பாராட்டியும் 2008 இல் விழாவொன்று எடுத்துள்ளனர்.

நாட்டின் சூழ்நிலையால் வளர்மதி முன்னேற்றக் கழகத்தினதும் சனசமூக நிலையத்தினதும் வளர்ச்சியில் அவ்வப்போது மந்தநிலை ஏற்பட்டிருந்தும் அதன் பெருமைக்குரிய சேவைகள் வழமைபோல் தொடர்ச்சியாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

வளர்மதி மேன்மேலும் பிரகாசமாக வளர வெளிநாடுகளில் வதியும் அதன் அங்கத்தவர்கள் வழங்கிய வாழ்த்துப்பாவின் சில வரிகளுடன் வளர்மதியின் ஒளிவீச்சை நிறைவு செய்கிறோம்

"தமிழொடு சைவம் தழைத்தினி தோங்கும்
எமதரும் பதியாம் கொக்குவில் கிழக்கில்
இளைஞர் பலரின் இடைவிடா முயல்வில்
விளைந்த வளர்மதி சனசமூ கம்தான்
....
....

ஊரின் ஏற்றம் உள்ளத் திருத்தி
நாளும் பணிசெயும் நமது இளைஞர்
வருங்கா லத்தும் வளர்மதி வாயிலாய்
அரும்பணி ஆற்றித் தமிழும் சைவமும்
தண்டமிழ்க் கலைகளும் வளர்த்திட
எம்முள மாா வாழ்த்திடு வோமே."



தகவல் தந்துதவிய பெருமக்களினதும் வெளியீடுகளினதும் அட்டவணை.

கொக்குவில் கிழக்கு சைவ ஆலயங்கள்

01. கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியர்
தேர்த்திருப்பணிமலர்,
(புதுக்கோயில்)
பிரபந்தத்திரட்டுகள்
உதவியோர்: த. செ. நடராசா
02. காட்டுப்பலம் முருகமூர்த்தி கோயில்
உதவியோர்: திருமதி. சேனாதிராசா
03. மாத்தனை கந்தசுவாமி கோயில்
மகாகும்பாபிஷேகமலர்-2005
உதவியோர்: திருமதி. இந்திரராசா, திரு. கு. செல்வராசா
04. நந்தாவில் மனோன்மணி அம்பாள் ஆலயம்
உதவியோர்: திரு. பொ. பரராஜசிங்கம் (கனடா)
05. பொற்பதி அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயம்
மகோற்சவ கும்பாபிஷேக மலர், விஞ்ஞாபனங்கள்
உதவியோர்: சிவஸ்ரீ நடராசக்குருக்கள், திருமதி. சீனித்துரை
06. கோணாவளை வைரவர் ஆலயம்
உதவியோர்: திரு. ஐ. சண்முகம்
07. தலையாழி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்
ஆலய அறநெறிப்பபாடசாலை 6வது ஆண்டுமலர் - 2005
உதவியோர்: திரு. பா.பத்மநாதன் (அமெரிக்கா)
08. ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம்
"உதயன்" 02.07.1999
உதவியோர்: திரு.அ.சத்தியமூர்த்தி(கொக்குவில்)
தேவஸ்தானம்

கொக்குவில் மேற்கு சைவ ஆலயங்கள்

09. மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்
மகாகும்பாபிஷேகமலர் - 2002
உதவியோர்: திரு. ச. சண்முகரத்தினம்
10. வீரமா பிடாரி அம்பாள் அலயம்
உதவியோர்: திரு. இ. புஸ்பராசா

11. சொர்ணசித்தி விநாயகர் ஆலயம்
உதவியோர்: கலாநிதி செல்வநாயகம் (நியூசிலாந்து)

12. ஸ்ரீ வராகி அம்பாள் ஆலயம்
உதவியோர்: திருமதி. நல்லையா

13. மணியர்பதி முருகன் ஆலயம்
உதவியோர்: திரு. மகாராஜா (மொன்றியல்)
தேவஸ்தானம்

14. முதலி கந்தசுவாமி கோயில்
உதவியோர்: திரு. சோமசுந்தரம்

15. வேம்படி முருகமூர்த்தி கோயில்
உதவியோர்: தேவஸ்தானம்

கொக்குவிலில் அமைந்துள்ள திருத்துவ தேவாலயம்

16. கொக்குவில் பரிசுத்த திரித்துவ ஆலயம்
125 வது ஆண்டு மலர்(கொக்குவில்) (1881-2005)
உதவியோர்: திரு.அ.சத்தியமூர்த்தி

கொக்குவிலில் அமைந்துள்ள கல்விக் கூடங்கள்

01. கொக்குவில் இந்துக் கல்லூரி
உதவியோர்: திரு. த. செ. நடராசா
திரு. நாகலிங்கம் பாலகுமார்

02.தொழில் நுட்பக் கல்லூரி, கொக்குவில்
உதவியோர்: திரு. ஸ்ரீகிருஷ்ணராஜா (யு.எஸ்.ஏ)
திரு. ஜெயசிங்கம் (கனடா)

03. கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
உதவியோர்: திரு. த. செ. நடராசா

04. ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை
உதவியோர்: திரு. தெய்வேந்திரன்

05. ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியாசாலை
திரு. இ. கந்தையா நினைவு அஞ்சலிமலர்,
திரு. இ.தம்பித்துரை நூற்றாண்டு மலர்.
உதவியோர்: திரு. குமரேந்திரன்

06. நாமகள் வித்தியாசாலை
உதவியோர்: திரு. பொ. பரராஜசிங்கம்

07. ஸ்ரீ ஞானவைரவர் அலய அறநெறிப் பாடசாலை

ஆலய அறநெறிப்பபாடசாலை, 6வது ஆண்டுமலர் - 2005

உதவியோர்: திரு. பா. பத்மநாதன்(அமெரிக்கா)

08. கொக்குவில் மேற்கு C.C.T.M. தமிழ்க் கலவன் படாசாலை

உதவியோர்: செ. கிருபாகரன் (கனடா)

இராஜா மகேந்திரன் (கனடா)

கொக்குவிலில் உள்ள சனசமூக நிலையங்கள்

01. மனோன்மணி சனசமூக நிலையம்

உதவியோர்: திரு. பொ. பரராஜசிங்கம்

02. சனசமூக நிலையம் - பிரம்படி

வெள்ளிவிழா மலர் (24.05.1973)

உதவியோர்: திரு. ந. சிவானந்தராஜா(U.K)

03. கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம்

உதவியோர்: நிர்வாகம், (2008)

04. கொக்குவில் மத்திய சனசமூக நிலையம்

உதவியோர்: திரு. நாகலிங்கம் பாலகுமார்

திரு. ந. சிவானந்தராஜா(U.K)

05. பொற்பதி சனசமூக நிலையம்

உதவியோர்: திரு. அ. நித்தியானந்தன் (கனடா)

திரு. நாகலிங்கம் பாலகுமார்

06. வளர்மதி சனசமூக நிலையம்

வளர்மதி மலர் 1982, 1988.

உதவியோர்: திரு. சி. குகனேந்திரன்

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் (புதுக்கோவில்)

நந்தாவில் ஸ்ரீ கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

கொக்குவில் அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்

கொக்குவில் அருள்மிகு பிடாரி அம்பாள் ஆலயம்

அருள்மிகு ஸ்ரீ வராஹி அம்பாள் ஆலயமும்,
அம்பாளின் தோற்றமும்

கொக்குவில் பரிசுத்த திரித்துவ ஆலயம்

கொக்குவில் இந்துக்கல்லூரி வட பகுதி

கொக்குவில் இந்துக்கல்லூரி தென் பகுதி

சி.சி.த.க பாடசாலை
T/ KOKUVIL WEST C.C.T.M SCHOOL

திரு.த.செ.நடராசா

திரு.க.நா.பாலகுமார்

இந்நூலைப்பற்றி.....

"இருவரது கூட்டு முயற்சியினால் எழுதப்பட்டுள்ள கொக்குவில் நம் ஊர் என்ற நூல் கொக்குவில் பதியின் சமய, சமூக, பண்பாட்டு வரலாற்றை ஆவணப்படுத்தும் ஒரு பதிவேடாக விளங்குகிறது."

பேராசிரியர் இளையதம்பி பாலசுந்தரம்

"This book is a homage to the great men, a gift to the younger generation who are not born in Kokuvil nor have ever been there and seen it themselves. Reading this book will surely kindle in them a desire to see and enjoy the happy and free life there and know about their roots."

Mrs. Sukirthalakshmy Subramaniam
(Former Vice Principal K.H.C.)